



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

சி.கா. செந்திவேல்

புதிய நீதி வெளியீட்டகம்





# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

சி.கா. செந்திவேல்

புதிய நீதி வெளியீட்டகம்

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை


| | |
|---|---|
| பதிப்பு | : 2017 ஜீலை. |
| வெளியீடு | : புதிய நீதி வெளியீட்டகம். |
| அச்சு | : வந்தனம் பிரைவட் லிமிட்டெட்<br>சில்லாலை வீதி<br>பண்டத்தரிப்பு |
| விலை | : 300/= |


# Vaddukodayil Irunthu Mullaithivu Varai


| | |
|---|---|
| First Edition | : 2017 July |
| Published By | : Puthiya Neethi Publiction |
| Printed By | : Vanthanam pvt (ltd)<br>Sillalai Veethi<br>Pandetherippu |
| Price | : 300/= |

# சமர்ப்பணம்

போராட்டத்திலும் போரிலும் தம் இன் உயிர்களை இழந்த
அனைத்து மக்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

# பதிப்புரை

இலங்கையின் தேசிய இன முரண்பாடும் தேசிய இனங்கள் மீதான அடக்குமுறையும், 2009 இல் ஆயுதப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து புதிய நிலவரமொன்றுக்குள் நுழைந்திருக்கிறது. இதனை எதிர் கொண்டு சுமக்கப்போகும் அடுத்த தலைமுறை, இதுவரைகால ஒடுக்குமுறையினையும் அதற்கெதிரான போராட்டங்களையும் வரலாறாகத் தான் அறிந்துகொள்ளப்போகிறது. அவ்வாறு அத்தலைமுறை அறிந்துகொள்ளப்போகும் வரலாறு எந்த வரலாறாக இருக்கப்போகிறது? எவருடைய வரலாறாக இருக்கப்போகிறது?

தமிழ்க் காங்கிரசு - தமிழரசுக் கட்சி - விடுதலைப்புலிகள் - தமிழர் விடுதலைக் கூட்டணி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றவாறான ஆழமற்ற ஒரு கதையாக, வீரதீரச் சம்பவங்களின் தொகுப்பாக, துரோகத்தால் அழிந்தோம் எனும் மிக மேலோட்டமான முழக்கமாக, குறுந்தேசியவாதத்தின் உணர்ச்சியூட்டும் தேர்தற்கால உரைகளாக, வெற்று இனப் பெருமையாக மட்டுமே தேசிய இன விடுதலைப் போராட்டத் தின் வரலாறு அடுத்த தலைமுறைக்குச் சொல்லப்படப் போகிறதா?

குறுந்தேசியவாதிகள் தமது அரசியல் இலாபத்துக்காக இவ்வரலாற்றை வெறும் உணர்ச்சி முழக்கங்களாகவே வைத்திருக்க விரும்புகிறார்கள். இந்த உணர்ச்சி அரசியல் எமைப் பயன்படுத்திக்கொள்ளவும் ஆளவும் நினைக்கும் அதிகாரங்களுக்கும் வல்லரசுகளுக்கும் கூட உவப்பானதாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலிலேதான், வட்டுக்கோட்டை முதல் முல்லைத்தீவு வரையான வரலாற்றை, நேர்மையான அரசியற்

பகுப்பாய்வுக்குட்படுத்தி உரிய விமர்சனங்களூடாக அடுத்த தலைமுறைக்கு மீள் அறிமுகம் செய்ய வேண்டிய தேவை அதிகமாக இருக்கிறது.

தோழர் சி. கா. செந்திவேல், வெகுஜனன் எனும் புனைபெயரில் புதிய பூமி-புதிய நீதியில் எழுதிவந்த "வட்டுக்கோட்டை முதல் முல்லைத்தீவு வரை" எனும் அரசியற் தொடர், மார்க்சிச-லெனினிசக் கண்ணோட்டத்தில், மார்க்சிச லெனினிசக் கட்சி ஒன்றின் நோக்கு நிலையில் இவ்வரலாற்றினைப் பகுப்பாய்வு செய்கிறது. பணபலமும் அதிகாரமும் கொண்ட தமிழ்த் தேசிய அரசியற் சக்திகளால் ஒருபுறமும் அதிகார வர்க்கத்தைச் சார்ந்து நிற்கும் நேர்மையற்ற "புலியெதிர்ப்புக்"குழுக்களால் இன்னொருபுறமும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவரும் இம் மார்க்சிச-லெனினிசப் பார்வையைப் பரந்த அளவில் அறிமுகம் செய்துவைக்கும் நோக்கத்துடனேயே புதியநீதி வெளியீட்டகம் தோழர் சி. கா. செந்திவேலின் கட்டுரைத் தொடரினை நூலுருவாகக் கொண்டு வருகிறது.

போராட்ட வரலாறு நெடுகிலும் தேசிய இன ஒடுக்குமுறை மீதும் மக்களுக்கெதிரான குறுந்தேசியவாத அரசியல் மீதும் கூர்மையான விமர்சனங்களை முன்வைத்து எதிர்த்து நின்று மக்களைச் சார்ந்த போராட்டத்தில் தன்னை இணைத்து நின்ற புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அவர் பதிவு செய்யும் இவ்வரலாறு மிகுந்த முக்கியத்துவமுடையது.

உழைக்கும் வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் சார்ந்து நிற்கும் நேர்மையான அரசியற் கண்ணோட்டமொன்றினூடாகவே எந்தவொரு விடுதலைப் போராட்டத்தையும் முன்கொண்டு செல்ல முடியும் என்று நம்பும் அனைவரும் இந்நூலுக்குத் தங்கள் ஆதரவினை வழங்குவர் என புதியநீதி வெளியீட்டகம் உறுதியாக நம்புகிறது.

**புதியநீதி வெளியீட்டகம்**
**23-07-2017**

# ஆசிரியருரை

தமிழீழக் கோரிக்கை வட்டுக்கோட்டைத் தீர்மானமாகப் பிரகடனப்படுத்தி இறுதிப் போரில் தோற்கடிக்கப்பட்டது வரையான முப்பத்தி மூன்று வருடகாலத்தை ***(14-05-1976 - 18-05-2009)*** இந்நூல் அரசியல் மதிப்பீட்டிற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்குகிறது. கடந்தகாலம் நிகழ்காலத்திற்குப் படிப் பினையாக அமையவேண்டும். நிகழ்காலம் எதிர்காலத்திற்கான வழிவகைகளைக் காட்டவேண்டும். போரின்போது, குறிப்பாக அதன் இறுதிக் கட்டத்தில், மக்கள் பேரழிவுகளையும் அவலங்களையும் அனுபவித்தனர். இன்றுவரை அவற்றின் கொடிய தாக்கங்களிலிருந்து விடுபடமுடியாத நிலையிலேயே மக்கள் இருந்துவருகின்றனர். ஆனால் வடக்குக்-கிழக்கின் தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் போராட்டத்திலும் அதன் இறுதிக் கட்டமான முள்ளிவாய்க் கால் அழிவு வரையும் அழைத்துச் சென்றவர்கள் எவரும் கடந்தகாலம் பற்றிய ஒரு நேர்மையான விமர்சனத்தையோ சுய விமர்சனத்தையோ இதுவரை மக்களிடம் முன்வைக்கவில்லை. அதேவேளை, இழப்புகளையும் அழிவுகளையும் வைத்துத்

தமது பதவி வேட்டைக்கான பாராளுமன்ற அரசியலை முன்னெடுத்து வருகிறார்கள். அவ்வாறு விமர்சனமோ மதிப்பீடோ முன்வைப்பது போரில் உயிர்த் தியாகம் செய்தவர்களின் அர்ப்பணிப்பை அவமதிப்பதாகும் எனும் மொட்டை நியாயத்தையே தீவிர தமிழ்த் தேசியவாதிகள் முன்வைத்தார்கள். அதன் நோக்கம் யாதெனில், பழைமைவாதத் தமிழ் குறுந்தேசியவாதத்தை எச்சந்தர்ப்பத்திலும் விமர்ச்சிக்கக் கூடாது என்பதாகும். இந் நிலைப்பாட்டை மறுத்து, எந்த வொரு கொள்கையும் நடைமுறையும் மக்கள்-சார்பு நிலை நின்று அரசியல் மதிப்பீட்டிற்கும் விமர்சனத்திற்கும் சுய விமர்சனத்திற்கும் உட்பட வேண்டும் என்பதே மாக்சிச லெனினிச நிலைப்பாடாகும். இந் நிலை நின்றே இந் நூலின் ஒவ்வொரு அத்தியாயமும் எழுதப்பட்டுள்ளது. போர் முடிந்து ஒரு மாதத்தின் பின், புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் புரட்சிகர வெகுஜன மாத இதழான புதிய பூமியில் வெகுஜனன் என்ற எனது புனைபெயரில் எழுதிய கட்டுரைத்தொடரின் செம்மைப்பட்ட தொகுப்பே இந்நூலாகும்.

இந் நூலின் அத்தியாயங்கள் மாக்சிச உலகநோக்குடன் வர்க்கப்போராட்ட அடிப்படையில் எழுதப்பட்டவை. பழைமைவாதத் தமிழ்க் குறுந்தேசியவாதக் கருத்தியற் சிந்தனை வழிநடத்தி வந்த தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை விமர்சிக்கவும் மதிப்பிடவும் மாக்சிச லெனினிசவாதிகளான எமக்குத் தகுதியும் உரிமையும் உண்டு. ஏனெனிற் போராட்டத்தையும் போரையும் முன்னெடுத்த சூழலிற், பரந்துபட்ட உழைக்கும் மக்கள் சார்பான அரசியலை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தோம். அதுமட்டுமன்றி, இழப்புகளையும் துன்ப துயரங்களையும் அனுபவித்த தமிழ் மக்களுடன் பயணித்து அவர்கள் பட்ட துன்பங்களிற் பங்குகொண்டதோடன்றி, தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம் எனப்படுவது ஆயுதப் போராட்ட மாக உருவெடுப்பதற்கு ஒரு தசாப்த காலம் முன்பாகவே தமிழ் மக்கள் மத்தியில் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்த அனுபவமுடையவர்கள் நாம். பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்குச் சோரம்போகாத மாக்சிச

லெனினிச மாஓ சேதுங் சிந்தனை அடிப்படையிலான அரசியல் நிலைப்பாட்டின் வழிநடந்த நாம், மூன்று தசாப்தங்களிலாக ஆயுதப் போராட்டம் இழைத்துவந்த தவறுகளை அவ்வப்போது கடுமையாக விமர்சித்தும் வந்துள்ளோம். அதேவேளை, எச் சந்தர்ப்பத்திலும் நாம் ஆளும்வர்க்கச் சக்திகளுடனோ ஆட்சியாளர்களுடனோ அரசின் ஆயுதப் படைகளுடனோ இணங்கி நின்றவர்களல்ல. அதனாற், போராளிகளின் தரப்பாலும் ராணுவத் தரப்பாலும் எமக்கு அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் உயிராபத்தும் ஏற்பட்ட போதிலும், நாம் அரசியல் நிதானத்துடன் மக்கள் பக்கத்தில் நின்று செயற்பட்டோம். அதுவே இன்றுவரை நமது அரசியல் பலமாகத் தொடர்கிறது.

இந்நூலிற் கூறியுள்ளவற்றின் விரிவை வரலாற்று அடிப்படையில் காண்பது அவசியமாகும். இந் நூலின் அத்தியாயங்களை எழுத ஒரு உந்துதலாக சி. சிவசேகரத்தின் "இலங்கை: தேசிய இனப் பிரச்சினையும் தீர்வுக்கான தேடல்களும்" எனும் நூல் அமைந்தது. அதைச் சார்ந்து, மேலும் வரலாற்று விவரங்களுடன் எனது நீண்ட தொடர் கட்டுரை ஆக்கப்பட்டது.

வரலாற்றை இயங்கியல் பொருள்முதல்வாத அணுகுமுறை மூலம் நோக்கின் மனிதகுல வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறாக அமைவதை மாக்சிசம் விளக்குகிறது. அதன்வழி, மாக்சிச லெனினிசவாதிகள் சமூக முரண்பாடு ஒவ்வொன்றையும் அது தோற்றுவிக்கும் பிரச்சினைகளையும் வளர்ச்சிகளையும் வர்க்க நிலைப்பாட்டில் நோக்குகிறார்கள். அதன்மூலம், ஒவ்வொரு தேசியப் போராட்டமும் சாராம்சத்தில் வர்க்கப் போராட்டம் தழுவியே இருந்தமையைக் காணுகிறார்கள். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் பிரதான பாத்திரம் வகித்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதத்திடமும் தமிழ்க் குறுந் தேசிய வாதத்திடமும் பிரபுத்துவ சமூக வழிவந்த மேட்டுக்குடி உயர்சாதி, உயர்வர்க்க, முதலாளிய நிலைப்பாடு விடாது நிலைத்துள்ளது. எனவே சிங்கள மக்கள் மீது சுமையாக நீடித்துள்ள பேரினவாதப் பாறாங்கல்லும் தமிழ் மக்களை இறுக அழுத்தியிருக்கும் குறுந்தமிழ் தேசியம் என்னும் பாறாங்கல்லும் ஏனைய தேசியவாத, மத, பிரதேச அடையாளங்கள் சார்ந்த

குறுகிய அரசியற் தடைகளையும் உடைத்து அகற்றாவிடின், இலங்கையின் ஏகப் பெரும்பாலோரான உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் விடுதலை கிடைக்காது.

எனவே, இன்றைய சூழலில், தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் தூர நோக்கிலும் யதார்த்த உணர்வுடனும் சிந்திக்கக்கூடிய இளந் தலைமுறையினர் மக்கள் நலன் சார்ந்த அரசியலை முன்னெடுக்கத் துணியவேண்டும். கடந்த நூற்றாண்டின் தமிழ்த் தேசியவாத அரசியல் அரங்கில் ஆளும்வர்க்கச் சக்திகளுடன் இணங்கியும் பாராளுமன்றப் பாதையிற் பயணித்தும் அகிம்சைவழி எதிர்ப்பில் ஈடுபட்டும் இறுதியில் ஆயுதப் போராட்டப் பாதையில் சென்றும், எந்த முயற்சியுமே வெல்லவில்லை. இறுதிப் போரில் பல்லாயிரம் மக்களைப் பலியிட்ட பின்பும் பழைமைவாதத் தமிழ்த் தேசியவாத சக்திகள் ஒரு குற்ற உணர்வுமின்றிச் சுயவிமர்சனத்தையும் தவிர்த்து, இணக்க-அரசியலா எதிர்ப்பு நிலைப்பாடா என விவாதித்தவாறு தமிழ்த் தேசியப் பிற்போக்கும் சந்தர்ப்பவாதமும் மிக்க அரசியலையே முன்னெடுக்கிறார்கள். இவற்றை உற்றுநோக்கின் உயர்வர்க்க சக்திகளின் ஆதிக்க அரசியலாகவே தமிழ்த் தேசிய அரசியல் தொடர்வது தெளிவாகிறது. எனவே சமூக மாற்றத்திற்கான மாற்று அரசியலாக இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளின் வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் முன்னெடுப்பது அவசியம். பழைமைவாதமும் பிற்போக்குத்தனங்களும் அந்நிய சக்திகளை எதிர்பார்த்து நிற்கும் அடிமைத்தனமும் மிகுந்த இன்றைய தமிழ்ச் சூழலில் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் முன் செல்லும் மக்களுக்கான அரசியல் அவசியம். ஏகப் பெரும்பாலோரான உழைக்கும் மக்களை அடிப்படையாகக் கொண்ட அந்த அரசியல் மார்க்கத்திற்கு இந்நூல் பங்களிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எனவே, இந்நூலில் கூறியுள்ளவை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை மிகவும் வரவேற்கிறேன்.

இந்நூல் சற்றுக் காலந்தாழ்த்தி வருகிறதாயினும், இன்றைய சூழல் இந்நூலுக்குப் பொருத்தமாகவே காணப்படுகிறது. முக்கியமான

வரலாற்றுத் திருப்புமுனைகளிற் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் நிலைப்பாட்டைச் சுட்டுமாறு இந்நூலிற் கூறியவற்றுக்கு ஆதாரங்கள் பின்னிணைப்புகளாக உள்ளன. இந்நூலின் அத்தியாயங்களைத் தொகுக்கவும் திருத்தவும் ஒழுங்குபடுத்தவும் முன்னின்று உதவிய தோழர்களான சி. சிவசேகரம், மு. மயூரன், தெ.ஞா. மீநிலங்கோ, வெ. மகேந்திரன் ஆகியோருக்கும் அட்டைப்படத்தை வடிவமைத்துப் பக்க அமைப்பையும்ங் செய்துதவிய தி. அனோஜனுக்கும் என் அன்பான நன்றிகள் உரியன. மேலும், அச்சு வடிவாக்குதற்குப் பொறுப்பேற்ற தோழர் ச. தனுஜனுக்கும் நூலை வெளிக்கொணர்வதில் முன்னின்ற தோழர்கள் என். பிரதீபன், செல்வம் கா. கதிர்காமநாதன் ஆகியோருக்கும் நன்றிகள் உரியன. சிரமமான பொருளாதாரச் சுமைகளிடையே, இந்நூலின் வரவிற்குத் தங்களாலான நிதியை உதவிய தோழர்களும் நண்பர்களும் நன்றிக்குரியவர்கள். இந்நூலினை நேர்த்தியாக அச்சிட்ட வந்தனம் பதிப்பகத்திற்கும் வெளியிடும் புதிய நீதி வெளியீட்டகத்திற்கும் நன்றிகள் உரியன.

**சி.கா. செந்திவேல்**
**"தாயகம்"**
**சிறுப்பிட்டி வடக்கு**
**நீர்வேலி**
**10-07-2017**

**0779774427**

# முன்னுரை

## வரலாற்றைச் செவ்வையாகப் பதிதல்

தமிழ்த் தேசியம் தன்னை மாறிமாறி இக்கட்டுகளில் மாட்டியுள்ளது. தமிழ்த் தேசியத்தின் தொடக்கம், கொலனி எசமானர்களின் விருப்புக்குரியோராகத் தம்மைப் பேண விழைந்த மேட்டுக்குடிகளின் நலன்கள் சார்ந்தது. எனவே பட்டம் பதவிகட்கான போட்டி முதலில் தமிழ், சிங்கள மேட்டுக்குடிகளிடையும் பின்னர் முஸ்லிம் மேட்டுக்குடிகளுடனுமான போட்டியானது. தேர்தல் அரசியலின் வரவின் பின் அதற்கு ஒரு சனநாயக முகமூடி தேவைப்பட்டது. தமிழ்த் தேசியம் போன்று சிங்களத் தேசியமும் அன்று தனது சமூகத்தினுள் இருக்கும் உயர்வு தாழ்வுகளையும் அநீதிகளையும் பேசாதிருந்தது. அப் பணியை முற்போக்கான சிந்தனையுடைய சிலர் ஏற்றனர். மேட்டுக்குடிகளிடையிலும், சமூக ஏற்றத்தாழ்வுகள் பற்றிய அறிவும் சொற்ப அக்கறையும் இடையிடை இருந்தபோதும், அவற்றை ஒரு எல்லைக்கப்பால் அழுத்த இயலாமல் அவரவர் வர்க்க நலன்கள் மறித்தன.

படித்த நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சியோடு மேட்டுக்குடி நலன்களை நடுத்தர வர்க்க நலன்களுடன் இணக்கி அடையாளப்படுத்தும் போக்குத் தெற்கிலும் வடக்கிலும் வளர்ந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பேசியோர் மீண்டும் முற்போக்கான சிந்தனையுடையோராக - குறிப்பாக இடதுசாரிகளாக - இருந்தனர். தெற்கிற் பாராளுமன்றப் பொறிக்குள் வீழ்ந்த இடதுசாரிகள் படிப்படியாகச் சிங்கள தேசிய முதலாளியத்துடன் சமரசம் செய்தனர். ஆனால், தெற்கின் சிங்களத் தேசிய முதலாளியத்துக்குச் சமாந்தரமாக ஏகாதிபத்தியத்துடன் முரண்பட்ட ஒரு தமிழ்த் தேசியம் வடக்கில் எழாததால், தமிழ்த் தேசியம் இடதுசாரிகளின் நட்பை நாடவில்லை. எனினும், தமிழரசுக் கட்சி அதற்கு முந்திய தமிழ்த் தேசியக் கட்சியான தமிழ்க் காங்கிரஸினின்று இரு முக்கிய வழிகளில் வேறுபட்டது. அது தமிழ் பேசும் மக்கள்

என்ற கருத்தாக்கத்தை முன்வைத்துத் தன் செயலெல்லையைக் கிழக்கிலங்கைக்கு விரித்தது. அரசாங்க ஊழியர்கள் போன்ற நடுத்தர வரக்கத்தினரின் நலன்களை வலியுறுத்தும் கட்சியாகவும் அது தெரிந்தது. இத் தோற்றங்கள் நிலைக்கவில்லை.

தமிழரசுக் கட்சி சடங்கிற்காகவே தமிழ்ப்பேசும் மக்கள் பற்றிப் பேசியதென்பதும் அதற்கு முஸ்லிம்களதோ மலையகத் தமிழர்களதோ பிரச்சனைகள் பற்றிய அறிவோ தெளிவோ போதாது என்பதும் 1956இல் அது தமிழ்க் காங்கிரஸைத் தேர்தலில் வீழ்த்திச் சில ஆண்டுகளிலேயே தெளிவானது. அது கோரிய 'சமஷ்டி ஆட்சி' எவ்வாறு வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெளியே வாழ்ந்த தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனைகட்குத் தீர்வாகும் என அதற்கு விளக்கமில்லை. அதன் முக்கிய தலைவர்கள் தமக்கு முந்திய தலைவர்கள் போற் கொழும்பை மையப்படுத்தித் தென்னிலங்கையில் முதலீடுகளுடன் வாழ்ந்தனர். எனவே ஏட்டிக்குப் போட்டியான தனிமனித அரசியலை விட்டால் தமிழ்க் காங்கிரசுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் வர்க்க நிலைப்பாட்டிலோ ஏகாதிபத்தியச் சார்பிலோ அடிப்படை வேறுபாடு இல்லை. இரு கட்சிகளும் 1965இல் யூ.என்.பி.யுடன் கூட்டரசாங்கத்தில் இணைந்ததன் பின், தோற்றப்பாடான வேறுபாடுகளும் மங்கின.

சமஷ்டிக் கோரிக்கையை வெல்லத் திட்டமின்றித் தமிழுணர்வை உசுப்பி ஏழைச் சிங்கள மக்களையும் பகையாக நோக்கும் அரசியலை மேற்கொண்ட தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களை அணிதிரட்டும் ஆற்றலோ தமிழ் மக்களுக்கு நட்பான சிங்கள அரசியல் சக்திகளுடன் நட்புறும் நாட்டமோ இன்றித் தனித்தது. தனது தோல்விகளை மழுப்பவும் வடக்கிலோ கிழக்கிலோ தனக்கு மாற்றாக ஒரு அரசியற் சக்தி எழுவதைத் தவிர்க்கவும் அது குறுகிய தமிழ்த் தேசியவாதத்திலும் இடதுசாரி எதிர்ப்பிலும் புகலிடந் தேடியது. அவ்வழியில் அதன் வர்க்க நலனையொட்டிய ஏகாதிபத்தியச் சார்பும் வலுப்பட்டது. இப் பின்புலத்தை விளங்கின், குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் பல்வேறு அக முரண்களிடையே முறிவின்றி இயங்கும் பொதுவான சரடாகப் பழமைவாத, பிரபுத்துவ, பிற்போக்கு அரசியலையும்

கொலனியச் சிந்தனை வழிவந்த மேற்குலக விசுவாசத்தையும் இந்தியாவுடனான தொப்புள்கொடி உறவு எனும் மாயையையும் விளங்கலாம்.

இப் பலவீனங்களுடன் தமிழ்த் தேசிய சந்தர்ப்பவாத அரசியல் தமிழீழக் கோரிக்கைக்குள் விழுந்தது. வட்டுக்கோட்டைப் பிரகடனமென ஆரவாரத்துடன் தொடங்கிய திசைதெரியாப் பயணம் முள்ளிவாய்க்காலில் அவல முடிவு கண்ட பின்பு, செல்வநாயகம் மனம்விரும்பாமல் மிகுந்த கட்டாயத்துக்குட்பட்டே தமிழீழக் கோரிக்கையை அறிவித்தாரெனவும் ஜி.ஜி. பொன்னம்பலமும் அதை மனதார ஏற்கவில்லை எனவும் சிலர் சொல்வர். ஆயினும் அது ஆபத்தான ஒரு அரசியற் பாதையிற் தமிழ் மக்களை நடத்துஞ் செயலென அறிந்தோர் அதை ஏன் தடுக்கவில்லை? அறியாராயின், அவர்களை முதுபெருந் தலைவர்களாகக் கொண்டாட நியாயமுண்டா?

1976இல் வட்டுக்கோட்டையிலிருந்து 2009இல் முள்ளி வாய்க்கால் வரை தமிழருக்கும் இந்த நாட்டின் பிற சமூகத்தினருக்கும் நடந்ததை ஆராயும் இந்நூல், குறுந் தமிழ்த் தேசிய அரசியலின் தவறுகள் தமிழ்ச் சமூகத்தை மிகப் பாதித்த ஒரு காலத்தின் நேர்மையான வரலாற்றுப் பதிவு. அதற்கு நடுநிலைப் பாசாங்கு இல்லை. ஏனெனில் உலக நோக்குகள் முரண்படும் ஒரு சூழலில் நடுநிலை என ஒன்றில்லை. எவரும் வரலாற்றை எழுதும் நோக்கம் ஆவணப்படுத்தல் மட்டுமல்ல. நேற்றைய வரலாற்றை அறிவதனூடே நாளைய வரலாற்றைத் தீர்மானிக்கலாம். வரலாற்றாசிரியரின் உலக நோக்கு அவரெழுதும் வரலாறு எதை எவ்வாறு பதிகிறது எனத் தீர்மானிக்கிறது. எனினும், நேர்மையென ஒன்றுண்டு. நம் அகச்சார்பு, விடயங்களை நாம் காணும் விதத்தைத் தீர்மானிக்கும். ஆயினும் அதுவே தகவல்களைத் திரிக்கக் காரணமாயின், அது நேர்மை குன்றிப் பொய்கட்கு வழிகோலும்.

தமிழ்த் தேசியவாதிகள் பலரும் தமிழின வரலாறெனவும் தமிழர் அரசியல் வரலாறெனவும் நூல்களைப் படைத்துள்ளனர். பொதுவாக, அவற்றிற் பொய்கள் மிகுதி. அவை

வரலாற்றாசிரியரின் புனைவுகளல்லவெனின், மீளமீளக் கேட்ட பொய்களின் மறுவார்ப்புகளாகின்றன. இத்தகைய பொய்களினின்று விடுபட்டு நிகழ்வுகளைச் செம்மையாகப் பதியும் மெச்சத்தக்க தேசியவாத முயற்சிகள் உள்ளன. எனினும் வரலாற்றை எழுதல் நிகழ்வுகளைப் பதிதல் மட்டுமல்ல. அதிலும் முக்கியமாக அது நிகழ்வுகளின் விளங்கலாகும். அவ்வாறற்ற பதிவுகள் வரலாற்றின் பாடங்களை வேண்டியோ வேண்டாமலோ தவிர்ப்பன.

இந் நூல், வட்டுக்கோட்டைப் பிரகடனத்திற் தொடங்கி முள்ளிவாய்க்காலில் முடிந்த பேரழிவை மட்டும் பதியவில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் அதிபெரிய வரலாற்றுத் தவறான தமிழீழக் கோரிக்கையின் பின்புலத்திற் தொடங்கிய தமிழ்ப் பிற்போக்குத் தேசியவாத அணுகுமுறை அடுத்தடுத்து ஒரேவாறான தவறுகளுக்கு வழிகோலிப் பேரழிவை விளைத்த காரணங்களையும் விசாரிக்கிறது.

குறித்த சிலரின் அருஞ்செயல்களின் திரட்டாக வரலாற்றை நோக்காது, மனித இருப்புச் சார்ந்த மனித இயக்கத்தின் அடிப்படையில் வரலாற்று நிகழ்வுகளை அறியும் முயற்சியாயுள்ளமை இந் நூலின் வலிமை. எவரையும் ஒரு காவிய நாயகனாகவோ கொடியோனாகவோ சித்தரிப்பதை விடச் சில வரலாற்றுச் சக்திகளின் கருவியாக நோக்குவது வரலாற்றைச் செவ்வனே விளங்க உதவும். அதிமானுடர் பற்றிய கதைகள் தேசியவாதத்துக்குத் தேவை. சாதாரண மானுடர் எதைச் சாதிப்பர் என்பது மாக்சிய நோக்கிலான விசாரணை.

எனவே, இந் நூல், தனிமனித வீரப் பிரதாபங்களையும் உன்னதங்களையுங் கூறும் காவியத் தன்மையான வரலாற்றுக் கதைகளை விடச் செம்மையாக 1976-2009 கால இடைவெளியில் இந்த நாட்டில் எது, ஏன், எவ்வாறு நடந்தது என நாமறிய உத வும். இந் நூல் தவறுகளைக் கண்டிக்கிறது. அதனிலும் முக் கியமாக, அவை ஏன் நிகழ்ந்தன என ஆராய்ந்து அவற்றை எதிர்காலத்திற் தவிர்ப்பதையுங் கவனிக்கிறது.

இந் நூல் சில மாத நீள இடைவெளிகளிற் கட்டுரைத் தொடராக

வந்தமையால் நிகழ்வுகள் சில, வெவ்வேறு தொடர்புகளில், மீளக் கூறப்படுகின்றன. சில விடயங்கள் பின்னோக்கிய பார்வையிற் சொல்லப்படுகின்றன. வரையறைக்குட்பட்டுச் சில திருத்தங்களைச் செய்துள்ளபோதும், அவற்றை மீறிக் குறைபாடுகள் இருக்கலாம். எனினும், நூலின் வாசிப்பிற்கு அவை பாரிய இடையூறுகளாகா. நூலிலுள்ள சில தகவல்களை மேலும் முழுமைப்படுத்தவும் அரிதாக வரக்கூடிய தகவற் தவறுகளைத் திருத்தவுந் தேவையுண்டு. அதைச் செய்ய வாசகர்களும் திறனாய்வாளர்களும் உதவவேண்டும்.

மொத்தத்தில், இந் நூல் தமிழ்த் தேசிய இனத்தின் முக்கிய அரசியல் வரலாற்று ஆவணங்களுள் ஒன்றென்பேன். எனவே இதைச் சமூக அக்கறையுடைய யாவரும், குறிப்பாகப் போரைப் பற்றி அதிகம் அறியாத இளந் தலைமுறையினர், ஊன்றி வாசிப்பதோடு ஆழ்ந்த ஆய்வுக்கும் விரிவான கலந்துரையாடலுக்கும் உட்படுத்துவது தமிழ்ச் சமூகத்தின் முழுமையான விடுதலை நோக்கிய பயணத்துக்கு மிக உதவும்.

**சி. சிவசேகரம்**

**கொழும்பு**

**20 ஜூலை 2017**

# உள்ளடக்கம்...


| | | |
|---|---|---|
| 01 | பின்புலம் | 01 |
| 02 | தமிழீழச் சிந்தனையை நோக்கி | 15 |
| 03 | தமிழ் மக்களின் அல்லல்கள் | 29 |
| 04 | தமிழீழத்திற்கான பிரகடனம் | 42 |
| 05 | பிரகடனத்தின் உடனடித் தாக்கங்கள் | 54 |
| 06 | வலுக்கும் அரச ஒடுக்குமுறை | 66 |
| 07 | அரசின் கொலைவெறி வன்முறை | 77 |
| 08 | இளைஞர்களும் இந்திய அரவணைப்பும் | 83 |
| 09 | இந்தியப் படையெடுப்பு | 91 |
| 10 | இந்தியாவின் போர் | 98 |
| 11 | மாகாணசபை எனும் மாயை | 105 |
| 12 | பிரேமதாசவின் நிழலிற் புலிகள் | 113 |
| 13 | புலிகளின் எழுச்சி | 121 |
| 14 | கலையும் போராளி வேடங்கள் | 130 |
| 15 | புலிகளின் பின்வாங்கல் | 137 |
| 16 | சந்திரிகா: எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் | 145 |
| 17 | அமைதிக்கான போரும் தீர்வுக்கான பொதியும் | 152 |
| 18 | உரையாடும் அரசும் புலிகளும் | 159 |

| | | |
|---|---|---|
| 19 | முன்னேறமாட்டாப் பேச்சுகள் | 170 |
| 20 | இன்னொரு ஆட்சி மாற்றம் | 179 |
| 21 | போரை நாடிய நகர்வுகள் | 185 |
| 22 | கிழக்கின் வீழ்ச்சி | 191 |
| 23 | புலிகளின் சுருங்கும் நிலப்பரப்பு | 199 |
| 24 | புலிகளின் தோல்விக்கான அறிகுறிகள் | 208 |
| 25 | புலிகளின் முடக்கம் | 217 |
| 26 | பேரழிவில் முடிந்த இறுதிச் சமர் | 224 |
| 27 | புலிகளின் அவல முடிவு | 230 |
| 28 | இங்கிருந்து எங்கு? | 236 |
| | பின்னிணைப்புகள் | 243 |

# 01

# பின்புலம்

**2009** மே *18ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்ததையும் அத்துடன் போர் முடிவுக்கு வந்ததையும் இலங்கை இராணுவம் முல்லைத்தீவின் இறுதிப் போர்க்களத்திலிருந்து அறிவித்தது. அதற்கு முதல்நாள் தமது துப்பாக்கிகளை மௌனித்துவிட்டதாக அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகத்திற்கும் மேற்குலகிற்கும் புலிகள் இயக்கம் அறிவித்துத் தனது தோல்வியை ஒப்புக்கொண்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் ஏனைய உயர் மட்டத் தலை வர்கள் அனைவரும் கொல்லப்பட்டதை இராணுவம் உறுதிப்படுத்தியது. மே 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் நாட்டு மக்களுக்குச் சிறப்புரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முப்பது வருடகாலப் போர் முடிவுற்றதையும் "பயங்கரவாதம்" அழிக்கப்பட்டதையும் உத்தியோக பூர்வமாகப் பிரகடனஞ்செய்தார். இது கடந்த மூன்று தசாப்தகாலப் போர்-போராட்டம் என்பதன் பாரிய திருப்புமுனையானது.*

*தமிழீழப் பிரகடனம் செய்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் ஒரே வயதாகும். 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வென்றெடுக்க ஆயுதம் தூக்கிய புலிகள் இயக்கமும் அதன் போராட்டமும் 33 வருடங்களுக்குப் பின்பு*

முல்லைத்தீவில் முடிவுக்கு வந்துள்ளன. இதுவரை "ஈழப் போர்" என அவர்களால் அழைக்கப்பட்ட மூன்று-கட்டப் போர்களில் படைவலுவின் மூலமும் உயிர்ப்பலிகள் ஊடாகவும் தம்மைப் பாதுகாத்து நிலைநிறுத்திவந்த புலிகள் இயக்கம் 'நாலாவது ஈழப் போர்' என்றதன் இறுதிச் சமரான முல்லைத்தீவுச் சமரில் முறியடிக்கப்பட்டது. அன்று பெரும் எழுச்சி முழக்கங்களுடன் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய தமிழீழத்திற்கான தீர்மானம், வரலாறு காணாத மக்கள் அழிவுகளுடன் முல்லைத்தீவில் சோக முடிவுக்கு வந்தது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பதாக முடியும் என்ற வரலாற்றின் பாடத்தையும் இத் தோல்வியின்போது காணமுடிந்தது. மேலும், **1975**ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தொகுதியின் பொன்னாலைக் கடலோரம் அமைந்துள்ள கிருஷ்ணன் கோவில் முன்றலில் வைத்து அன்றைய யாழ் மாநகரசபை முதல்வர் அல்பிரட் துரையப்பாவின் படுகொலையாக முதலாவது வேட்டுத் தீர்க்கப்பட்டது. வரலாற்று விநோதம் என்னவெனில், **34** வருடங்கட்குப் பின் அந்த முதல் வேட்டைத் தீர்த்த வேலுப்பிள்ளை பிரபாகரன் முல்லைத்தீவின் நந்திக் கடலோரம் உள்ள முள்ளிவாய்க்காலில் இராணுவ எதிர்வேட்டின் மூலம் கொல்லப்பட்டமையாகும். படுகொலையில் ஆரம்பித்துப் படுகொலைகளின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தாரக மந்திரம் தாங்கிய அவர்களின் தமிழ் ஈழத்திற்கான போர் மக்களையும் அழித்துத் தங்களையும் அழித்துத் தமிழ் தேசிய இனத்தை அந்தகார இருள் சூழ்ந்த அரசியல் வனாந்தரத்தில் விட்டுள்ள அவலத்தையே இன்று காணமுடிகிறது.

இத்தகைய அவலங்களும் அந்தகார அரசியற் சூழல்களும் உருவாகியுள்ள இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலம் பற்றித் தூரநோக்கு மிக்க அரசியற் பாதையையும் அதன் பயணத் திசையும் தேர்ந்தெடுப்பது அவசியமாகிறது. அவற்றுக்கு முன்தேவையாக அமைவன கடந்த காலம் பற்றிய மறுமதிப்பீடும் சுயவிமர்சனமுமாகும். கடந்தகாலம் பற்றிய சமகால மதிப்பீடும் விமர்சனமுமே எதிர்காலத்திற்குரிய தெளிவான பாதையைக் காட்ட வல்லன. அவ்வாறு

நோக்கும்போது, கடந்த முப்பது வருட கால இன ஒடுக்குமுறைப் போரையும் அதற்கெதிரான தமிழ்த் தேசியவாத நிலைநின்று முன்னெடுத்த இன விடுதலைப் போராட்டத்தையும் பற்றிய அரசியல் விமர்சனத்தை மாக்சிச லெனினிசக் கண்ணோட்டத்தில் அணுகி முன்னெடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய அணுகு முறை நாம் இப்போதுதான் முன்வைக்கும் ஒன்றல்ல. கடந்த முப்பது வருடங்கட்கு மேலான காலப் பகுதியில் மாக்சிச லெனினிசவாதிகளாகிய நாம் எமது கட்சியின் மூலம் இப் போராட்டம் பற்றியும் அதன் எண்ணக்கரு-கருத்தியல்-கொள்கை-நடைமுறை-போராட்டத் தந்திரோபாயம் போன்றன பற்றியும் எமது நிலைப்பாட்டையும் விமர்சனங்களையும் அவ்வப்போது முன்வைத்திருக்கிறோம். போர்-போராட்டம் என்பதில் அடக்கி ஆளும் வர்க்கத்தின் பக்கத்திலன்றி ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பக்கத்திலேயே நாம் எப்போதும் உறுதியாக நின்றுள்ளோாம். அதே வேளை, தவறான பாதையில் செயற்பட்டுவந்த அல்லது தமது நிலைப்பாட்டை மாற்றி ஆளும் வர்க்கச் சக்திகளுடன் இணைந்த எந்தவொரு இயக்கத்துடனும் கட்சியுடனும் குழுவுடனும் சேர்ந்ததுமில்லை, அவற்றின் பின்னால் இழுப்பட்டுச் சென்றதுமில்லை. எமது மாக்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை நிலைப்பாட்டின் தனித்துவத்துடன் மக்கள் மத்தியிற் செயலாற்றியிருக்கிறோம். அதன் காரணமாகக் கடந்த முப்பது வருட காலத்தில் பேரினவாத ஆளும் வர்க்க அரசாங்கப் பக்கத்திலிருந்தும் தமிழ் தீவிரவாத இயக்கங்களிடமிருந்தும் பல்வேறுபட்ட நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் இழப்புகளையும் சிறை சித்திரவதைகளையும் கட்சி அனுபவித்துள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் நாம் எவற்றைச் சாத்தியமற்றவையென்றும் தவறானவையென்றும் மக்களுக்கு விரோதமானவையென்றும் கூறிவந்தோமோ அவை தீங்கானவை என இன்று மக்களின் பேரழிவுகட்கு மத்தியில் நடைமுறையில் நிரூபணமாகி உள்ளது. இது மகிழ்ச்சிக்குரியதல்ல, மக்களுக்கும் அவர்கள் மத்தியில் உள்ள நேர்மையான அரசியல் ஈடுபாட்டாளர்கட்கும் வேதனை தருவதாகும். அதற்காக அழுது புலம்பியோ அல்லது வெறுமனே குற்றம் சுமத்திவிட்டோ இருக்கமுடியாது. ஒன்றுக்குப்

பதிலாக இன்னொரு தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியலை நிலைநிறுத்தவும் முடியாது, நியாயப்படுத்தி முன் செல்லவும் இயலாது.

கடந்த முப்பது வருடப் போரின் வளர்ச்சிப் போக்கில், மூன்று வர்க்க - அரசியல் ஆதிக்க சக்திகள் பிரதான பங்காற்றியுள்ளன என்பது தெளிவு. முதலாவது, பௌத்த சிங்களப் பேரினவாத முதலாளிய ஆளும் வர்க்க சக்திகள். இரண்டாவது, பழைமைவாதத் தமிழ்க் குறுந்தேசியவாத ஆதிக்க அரசியல் சக்திகள். மூன்றாவது, இந்திய-அமெரிக்க-மேற்குலக மேலாதிக்கச் சக்திகள். இம் மூன்றில் முதலாவதையும் மூன்றாவதையும் பற்றிய பன்முகப்பட்ட விடயங்களை ஆராய்ந்து அவ்வப்போது மாக்சிச லெனினிசக் கண்ணோட்டக் கருத்துகளாகவும் விமர்சனங்களாகவும் முன்வைத்து வந்துள்ளோம். இரண்டாவது விடயமான பழைமைவாதத் தமிழ்க் குறுந்தேசியவாத நிலைப்பாடு பற்றிக் கூறிவந்த அதே வேளை, தமிழீழக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஆயுத நடவடிக்கைகள் பற்றியும் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளோம். அதுபற்றி முழுமையாக விவாதிப்பது இன்றைய சூழலில் அவசியமானது.

இன்று இருபது முப்பது வயதளவான ஒரு தமிழ் இளைஞனுக்கோ யுவதிக்கோ, தமிழீழக் கோரிக்கை உருவான சூழல் பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் மட்டுமன்றி தமிழர் மத்தியில் அதனை முன் வைத்த வர்க்க சக்திகள் பற்றியும் தெரிய நியாயமில்லை. "தந்தை செல்வா, அண்ணன் அமிர்தலிங்கம், தம்பி பிரபாகரன்" என்ற தமிழ்த் தேசியவாத மகுடங்கள் பற்றி மிக அறிந்தவர்கட்கும் அவர்கள் எந்த வர்க்கத்தின் சார்பாக எத்தகைய ஆதிக்க சக்திகளின் பின்புலத்துடன் அரசியலை முன்னெடுத்தார்கள் எனத் தெரியாது.

எனவே, இன்று முல்லைத்தீவில் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும், வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றிய தமிழீழக் கோரிக்கையும் அதன் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய அரசியல் பாடத்தையும் படிக்க வேண்டியுள்ளது. அந்த நோக்கில் வெளிவருவதே "வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு

வரை" எனும் இக் கட்டுரைத் தொகுதியாகும்.

*1976* மே மாதத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைந்துள்ள பண்ணாகம் வடக்கம்பரை அம்மன் கோவில் வீதியில் அமைந்த அரங்கில் இடம்பெற்ற மாநாட்டிலே தனித் தமிழீழக் கோரிக்கை பிரகடனமானது. அதை வென்றெடுக்கவென்று தமிழர் கூட்டணி எனப் பரவலாக அறியப்படும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் அங்கேயே தோற்றுவிக்கப்பட்டது. இத் தமிழீழக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்து புதியதொரு அரசியற் சூழலை உருவாக்கும் தேவை அன்று தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினருக்கும் ஏற்பட்டிருந்தது.

*1965-70* காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி (யூ.என்.பி.) ஏழு கட்சிகளின் கூட்டு அரசாங்கமொன்றை அமைத்து நடத்தியது. டட்லி சேனநாயக்க தலைமையிலான அவ் அரசாங்கத்தில் பச்சை இனவாதிகளான கே.எம்.பி. ராஜரத்ன, ஆர்.ஜி. சேனநாயக்க, சி.பி. டி சில்வா, பிலிப் குணவர்தன போன்றோருடன் தமிழரசுக் கட்சியும் பங்கு பற்றியது. செனட்டராக்கப்பட்ட மு. திருச்செல்வம் அமைச்சர் பதவி பெற்றிருந்தார். அவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நெருங்கிய சகாவும் தமிழரசுக் கட்சியின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவருமாவார். ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் அவ்வரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெறாது அங்கம் பெற்றிருந்தது. அதன் பராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் உப-சபாநாயகராகப் பதவி பெற்றிருந்தார். இவ்விரு கட்சிகளும் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கவையும் பிற அமைச்சர்களையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துக் கூட்டங்கள் நடத்திக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய டட்லி-தமிழரசு அரசாங்கத்தால் உழைக்கும் மக்களுக்கு எதையும் வழங்க முடியாமற் போனதைப் போன்றே தமிழ் மக்களின் உரிமைகளையும் வழங்க முடியவில்லை. குறிப்பாக டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பதன் ஊடாகச் சில உரிமைகளைப் பெறத் தமிழரசுக் கட்சி முனைந்த போது, வழமை போன்று, யூ.என்.பி. அரசாங்கத்துள் இருந்தும் எதிர்க் கட்சியான

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் (ஸ்ரீல.சு.க.) இருந்தும் டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்குத் தீவிர இனவாதங்கொண்ட எதிர்ப்புக் காட்டப்பட்டது. பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஸ்ரீல.சு.க.வுடன் இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின. ஆனால், தம்மைப் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியாகத் தகவமைத்த தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான கட்சியும் அதன் இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனத்தில் இணைந்திருந்த தொழிற்சங்கங்களும் மேற்படி இனவாத நிலைப்பாட்டை மிகக் கடுமையாக எதிர்த்தன. அதனால் 1966 ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான ஊர்வலத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ளவில்லை. அவ்வேளை, கட்சி வாலிபர் இயக்கத்தில் இணைந்திருந்த ரோகண விஜேவீரவும் சில வாலிபர்களும் அந்த ஊர்வலத்திற் கலந்துகொண்டமைக்காக அவர்கள் கட்சி வாலிபர் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அன்றே விஜேவீரவினது இனவாத அரசியல் தன்னை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

1965-1970இன் போது தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மத்தியில் கடுங் கண்டனத்திற்கும் அதிருப்திக்கும் ஆளானது. இதே காலகட்டத்தில் வடபுலத்தில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சாதியத் தீண்டாமைக்கு எதிரான வெகுஜன எழுச்சியும் போராட்டங்களும் வேகத்துடன் இடம்பெற்றன. 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி உருவாக்கிய பாதையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அப் போராட்டங்களின் வன்முறை புரட்சிகரமாகவும் மக்கள் விரோதமின்றியும் மக்களால் முன்னெடுக்கப்பட்டது. இதனால் அப் போராட்டங்கள் தமிழ் மக்கள் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களை ஐக்கியப்படுத்தியும் உயர் சாதியினர் எனப்பட்டோரின் மத்தியிலிருந்த ஜனநாயக நல்லெண்ண சக்திகளின் ஆதரவைப் பெற்றும் முன்சென்றன.

தமிழரசு-தமிழ்க்-காங்கிரஸ் கட்சியினர், மக்கள் முன்னெடுத்த அவ் வெகுஜனப் போராட்டங்கட்கு எதிராகவும் மௌனமாகவும் இருந்தனர். இது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கடும்

எதிர்ப்பைத் தோற்றுவித்தது. அதேவேளை, வடபுலத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்கப் போராட்டங்களில் தொழிலாளர் அணிதிரண்டனர். இவற்றிலும், தமிழரசுக் கட்சி, தனது முதலாளி வர்க்க நிலைப்பாட்டுடன், முதலாளிகள் சார்பாகத் தொழிலாளர் விரோதமாகவே நடந்தது. அதேவேளை, வளர்ந்துவந்த பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கும், அது காலூன்றி நின்ற நிலவுடைமை வழிவந்த முதலாளிய ஏகாதிபத்திய ஆதரவு சக்திகட்கும் எதிராகத் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வென்றெடுப்பதற்கு உரிய கொள்கையை தமிழரசு-காங்கிரஸ் கட்சிகளால் சரியான தளங்களில் நின்று முன் வைக்க முடியவில்லை. அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் மீனவர்களும் அன்றாட உழைப்பாளர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பெண்களும் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றியோ அவைசார்ந்த கோரிக்கைகள் பற்றியோ அவர்கள் அக்கறை காட்டவில்லை. யாவற்றையும் தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழர் பழம் பெருமை என்பவற்றுள் வைத்தே நோக்கினர். அந் நோக்கு பழைமைவாதக் கருத்தியல் வழிக் குறுந்தேசியவாதத்தையே தனது அடிப்படை நிலைப்பாடாகக் கொண்டிருந்தது. அது சார்ந்த கொள்கை, வெறும் பாராளுமன்ற வெற்றிகட்குரியதாக இருந்ததே தவிர, பரந்துபட்ட தமிழ் மக்களின் வாழ்வுரிமைகளை வென்றெடுப்பதாக ஒருபோதும் இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவர்களது மேட்டுக்குடி உயர் வர்க்க உள்ளடக்கமும் இனத்துவப் போர்வையுமாகும்.

இத்தகைய அரசியற் சூழலிலேயே 1970ஆம் ஆண்டின் ஜூலைப் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தலில் வடபுலத்தின் மூன்று முக்கிய தமிழரசு-தமிழ்க்-காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தொகுதிகளிற் படுதோல்வி கண்டனர். ஒருவர் "தமிழரசுத் தளபதி" என வர்ணிக்கப்பட்ட, தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம். இவர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோற்றார். இரண்டாமவர், "இரும்பு மனிதர்" எனக் கூறப்பட்ட, தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டொக்டர் ஈ.எம்.வி. நாகநாதன். இவர்

நல்லூர் தொகுதியில் தோற்றார். மூன்றாவமவர், “உடுப்பிட்டிச் சிங்கம்” என்று கூறப்பட்ட, தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மு. சிவசிதம்பரம். இவர் உடுப்பிட்டித் தொகுதியில் தோற்றார். மேலும், “தனிப்பெரும் தலைவர்” எனப்பட்ட, தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் நின்று தனது இறுதித் தோல்வியைக் கண்டார். இவ்வாறு 1970ஆம் ஆண்டின் ஜூலைப் பொதுத்தேர்தல் தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கட்குப் பெரும் அதிர்ச்சியையும் தாங்கமுடியா அரசியல் அவமானத்தையும் கொடுத்தது. அதிலிருந்து மீள்வது அவர்கட்குப் பெரும் சவாலாகியது.

தென்னிலங்கையில், இத் தேர்தலில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்த ஸ்ரீல.சு.க. பெரு வெற்றி பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் அமைத்தது. தமிழரசு-தமிழ்க் காங்கிரசின் தென்னிலங்கைச் சகாவான யூ.என்.பி. பெருந் தோல்வி கண்டது.

சிரிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம், தனது மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு, தான் நினைத்ததையெல்லாம் செயற்படுத்தும் நோக்குடன் இருந்தது. புதிய அரசியலமைப்பை வரைவதற்கான முயற்சிகளை முன்னெடுத்த அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைகளையோ மலையகத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையோ கவனத்திற் கொள்ளாது புறந்தள்ளி வந்தது. தமிழரசுக் கட்சியும் அதன் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் முன்வைத்த தமிழ் மக்கள் சார்பான ஆறு அம்சக் கோரிக்கைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிராகரித்தது. அக் கோரிக்கைகளை முன்வைத்த தமிழரசுக் கட்சியைப் பழிவாங்கும் விதமாக நடந்துகொண்ட அவ் அரசாங்கம் அக் கோரிக்கைகளில் அடங்கியிருந்த தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும் அபிலாட்சைகளையும் காணத் தவறியது. இந் நிலையில், ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் பெற்றிருந்த பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டோர், தமிழ் மக்களின் உரிமைக்காக எதையும் செய்யாது தமது முன்னைய

நிலைப்பாடுகட்கு நேர்விரோதமாக நடந்து, வரலாற்றுப் பழியையும் தேடினர். ஐக்கிய முன்னணி அரசின் இத்தகைய பேரினவாதப் போக்கு எதிர் நிலையில் பாராளுமன்ற அரசியலில் பலவீனமடைந்திருந்த தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் கட்சிகட்கு ஊட்டமளித்தது.

தமிழ்த் தேசியவாதப் பாராளுமன்றத் தலைமைகள் எப்பொழுதும் தெற்கின் நிலவுடைமை முதலாளிய ஏகாதிபத்தியச் சார்புடைய தரகு முதலாளிய யூ.என்.பி.யுடன் உள்ளாரவும் வெளிப்படையாயும் பிணைப்புடன் இருந்துவந்தன. இது இனத்துவத்திற்கு அப்பாலான வர்க்க ஐக்கியமாக நீடித்தது. இத்தகைய சிங்கள-தமிழ் மேட்டுக் குடி உயர் வர்க்க அந்நியோன்யம் கொலனித்துவக் காலத்தில் நிலைபெற்ற பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. அதேவேளை, யூ.என்.பி.யில் இருந்து வெளியேறிய மற்றொரு நிலவுடைமை வளவுக்கார குடும்பத்தவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, ஐம்பதுகளின் ஆரம்பத்தில் ஸ்ரீல.சு.க.வை அமைத்தார். 1956ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்பாக, ஐந்து சக்திகளை (தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், பௌத்த பிக்குகள், ஆயுர்வேத வைத்தியர்கள்) உள்ளடங்கிய தேசியவாதக் கொள்கையை பண்டாரநாயக்க முன்வைத்து அரசியலில் எழுச்சி பெறலானார். அதற்கு ஏற்கனவே பண்டாரநாயக்க முன்வைத்த எல்லைக்குட்பட்ட தேசியக் கொள்கைகளும் கொலனிய ஏகாதிபத்திய சார்பற்ற நிலைப்பாடும் இடதுசாரிகளுடன் நெருக்கத்திற்கு வழிவகுத்தது. இருப்பினும் அவர் உயிருடன் இருந்தவரை இடதுசாரிகள் ஸ்ரீல.சு.க.வுடன் முழுமையான நெருக்கங் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர் வெற்றிகொள்ள முடியாத பாராளுமன்ற இடதுசாரிகளை அவரது துணைவியாரான சிரிமாவோ பண்டாரநாயக்க வெற்றிகொண்டதோடு மட்டுமன்றி, அவ் இடதுசாரிகளின் தனித்துவங்களையும் படிப்படியாக இல்லாமற் செய்தார். ஆனால் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் ஸ்ரீல.சு.க.- இடதுசாரிகள் கூட்டிணைவைக் கடுமையாக எதிர்த்து வந்தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1970ஆம் ஆண்டின் தோல்வியிலும் அரசியல் பலவீனத்திலும் இருந்து தம்மை மீட்டெடுத்துத் தொடர்ந்தும் பாராளுமன்ற அரசியலில் புதிய வேகத்துடன் முன்செல்லும் தேவையும் நிர்ப்பந்தமும் தமிழ்த் தேசியவாதத் தலைமைக்கு இருந்தது. அதற்குரிய சந்தர்ப்பங்களை அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொள்ள ஆரம்பித்த இனவாத நடவடிக்கைகள் வழங்கின. **1971**ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி.பி.) முன்னெடுத்த இளைஞர் ஆயுதக் கிளர்ச்சி நடவடிக்கை தெற்கில் இடம்பெற்றது. தவறான தலைமைத்துவத்துடன் தவறான வழிமுறைகள் மூலம் முன்னெடுத்த அக் கிளர்ச்சியை ஐக்கிய முன்னணி அரசு முறியடித்தது. இந்தியாவின் மட்டுப்பட்ட ஆதரவுடன் அடக்கிய அக் கிளர்ச்சியில் இருபதாயிரம் சிங்கள இளைஞர்கள் வரை கொல்லப்பட்டனர். தலைவர்களும் ஊழியர்களும் சிறைகளிலும் தடுப்பு முகாங்களிலும் அடைபட்டனர். வடக்கு-கிழக்கில் இக் கிளர்ச்சிக்கு ஆதரவு இல்லாதபோதும் தமிழ் இளைஞர்கள் இக் கிளர்ச்சியை உற்றுநோக்கினர். அத்துடன் ஏற்கனவே சாதிய தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் சிந்தனை ஓட்டங்கள் தீவிரமடைந்தன. அப் போராட்டங்கள் போன்று ஏன் இன விடுதலைக்குத் தமிழ் இளைஞர்கள் போராட முடியாது என்றவாறான வினாக்கள் எழுந்து விவாதிக்கப்பட்டன. தமிழின விடுதலையைப் பரந்துபட்ட புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையில் முன்னெடுப்பதா அன்றிக் குறுகிய இனத்துவ நிலைப்பாட்டினின்று முன்னெடுப்பதா என்பதே விவாதத்தின் சாரம்சமாக இருந்தது.

தமிழ் இளைஞர்களைத் தமிழ்த் தேசியவாதத்தின் பழைமைவாதக் கருத்தியலின் ஊடான குறுந் தேசியவாத எல்லைக்குள் வைத்திருப்பதையே தமிழரசுக் கட்சித் தலைவர்களும் ஏனையவர்களும் விரும்பினார்கள். தமிழ் இளைஞர்கள் தேசியவாதத்தின் முற்போக்கான கூறுகளையோ அல்லது இடதுசாரிச் சிந்தனைப் போக்குகளையோ பற்றாமற் பார்த்துக்கொள்வதில் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் கண்ணுங்கருத்துமாக இருந்தன. ஏற்கனவே ஏகாதிபத்திய

விசுவாசமும் கம்யூனிச விரோதமும் கொண்டிருந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இரண்டும், புதிய நிலைமைகளால் தமிழ் இளைஞர்கள் ஈர்க்கப்பட்டு விடுவார்களோ என்றும் தமிழ் உழைக்கும் மக்கள் இடது பக்கம் சென்று விடுவார்களோ என்றும் அச்சம் கொண்டிருந்தனர். எனவே இப் புரட்சிகர இடதுசாரி அபாயத்திலிருந்து தமிழ் மக்களதும் இளந்தலைமுறையினரதும் கவனத்தைத் திசைதிருப்பும் கட்டாயத்தில் தமிழரசுத் தலைமை கவனத்தோடு இருந்தது. இதில் அந்நிய சக்திகளின் வழிகாட்டலும் இருந்தது.

இக் காலகட்டத்தில், **1970-71**இல் இடம்பெற்ற கிழக்குப் பாகிஸ்தான் தனிநாடாகும் போராட்டம் உச்ச நிலைக்கு வந்தது. அங்கு கம்யூனிஸ்டுக்களும் முற்போக்கான தேசியவாதிகளும் ஆட்சி அதிகாரத்தை நிறுவவும் பங்ளாதேஷ் உருவாகவுங்கூடிய சூழல் காணப்பட்டது. அதனை விரும்பாத இந்திய ஆளும் வர்க்கம் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான பிற்போக்கான தேசியவாதஇயக்கத்தைவிடுதலைப்போராட்டத்தின்முன்னணிச் சக்தியாகக் காட்டி கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்தியப் படைகளை அனுப்பியது. அங்கு பாகிஸ்தானின் இராணுவம் இந்திய இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டதுடன் தேச பக்தர்களும் கம்யூனிஸ்டுக்களும் மட்டுமன்றிச் சாதாரண மக்களும் கொன்றழிக்கபட்டனர். இந்திய மேலாதிக்க விசுவாசிகள் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் ஆட்சி அமைத்த பங்களாதேஷ் என்ற நாடு உருவானது. அதை இயலுமாக்கியவர் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியாவார். **1971**இல் இடம்பெற்ற கிழக்கு பாக்கிஸ்தான் பிரிவினையும் அது பங்ளாதேஷ் எனும் தனிநாடானமையும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமிழ்க் குறுந்தேசியவாத அரசியல் நடத்திவந்த தமிழரசுக் கட்சிக்கு உற்சாகந்தரும் நம்பிக்கையானது. “அன்னை” இந்திராவையும் “தாய்நாடு” இந்தியாவையும் தமிழரசுக் கட்சித் தலைமை தமிழீழக் கனவுடன் வணங்கி நின்றது.

**1970** வரை, தமிழரசுக் கட்சித் தலைவர்கட்குப் பிரிவினை மூலம் இலங்கையில் தமிழர்க்கான தனிநாடு அமைக்கும் எந்த எண்ணமும் கொள்கைரீதியாக எழவில்லை. அவர்கள் சமஷ்டி

அமைப்புப் பற்றியே உரத்துப் பேசிவந்தனர். தென்னிலங்கையில் சிங்கள இனவாதிகள் அதைப் பிரிவினை என்று சித்தரித்தனர். 1957இல் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டுத் தேசிய இனப் பிரச்சினைக்குப் பிரதேச சபைகள் மூலமான தீர்வு வழங்கும் முன்மொழிவையும் பிரிவினையாகச் சிங்கள மக்களுக்குக் காட்டும் போக்கு நீடித்துள்ளது.

தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சி முறையை முன்வைத்துவந்த அதேவேளை, மத்திய கிழக்கில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டமை பற்றியும் அதற்கான எண்ணக்கரு பற்றிய அவதானிப்பும் அக்கறையும் அதன் சில தலைவர்களிடம் இருந்துவந்தது. இஸ்ரேல் எனும் முன்னுதாரணத்தை மெச்சிச் சிலர் அங்கு பயணம் மேற்கொண்டு திரும்பிவந்து சிலாகித்துப் பேசினர். அவர்களில், தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்ட, ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினராயிருந்த வி. நவரத்தினம் முக்கியமானவர். அவர் அறுபதுகளின் பிற்கூற்றில் தமிழரசுக் கட்சிக்குள் உருவான ஒரங்கட்டல் முரண்பாட்டால் கட்சியை விட்டு வெளியேறி, தமிழர் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கினார். அவரது முன்மொழிவாகவே தமிழீழம் என்ற எண்ணக்கரு வெளிப்பட்டது. ஏற்கனவே அடங்காத் தமிழன் என்று வர்ணிக்கப்பட்ட சி. சுந்தரலிங்கம் போன்ற சிலரும் தனித் தமிழ் இராச்சியம் பற்றிக் கூறியிருந்தனர். அவற்றையெல்லாம்-குறிப்பாக வி. நவரத்தினம் முன்வைத்த தமிழீழத்தை -நிராகரித்த எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் சகாக்களும் 1970ஆம் ஆண்டிற்குப் பின் தனித் தமிழீழக் கோரிக்கையை வந்தடைந்தனர். அதற்கு ஏற்கனவே நடந்த வடக்கு-கிழக்கு அரசியல் முன்னிகழ்வுகள் காரணமாகின. அத்துடன் 1970 முதல் சிரிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இனவாத முடிவுகளும் நடவடிக்கைகளும் 1970ஆம் ஆண்டுத் தேர்தல் தோல்விகளும் தமிழரசுக் கட்சியின் தமிழீழக் கோரிக்கைக்கான பிரசாரத்திற்கு வலுச்சேர்த்தன.

1970இல் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது. சமசமாஜக் கட்சியின் என்.எம். பெரேரா நிதி அமைச்சராகவும் கொல்வின்

ஆர். டி சில்வா அரசியலமைப்பு அலுவல் அமைச்சராகவும் பதவி வகித்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் பீற்றர் கெனமன் வீடமைப்பு அமைச்சரானார். ஸ்ரீல.சு.க.வின் பதியுத்தின் மஹ்முட் கல்வி அமைச்சராகப் பதவிவகித்தார். ஸ்ரீல.சு.க.வின் நியமன உறுப்பினரான செல்லையா குமாரசூரியர் அஞ்சல், தொலைத்தொடர்பு அமைச்சரானார். மேலும் குறிப்பிடக்கூடிய ஒரு விடயம் உண்டு. ஏற்கனவே யாழ்ப்பாணத் தொகுதியில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தைத் தோற்கடித்துப் பராளுமன்ற உறுப்பினராகிய அல்பிரட் துரையப்பா 1970 தேர்தலில் தோல்வி கண்டார். அவர் ஏற்கனவே ஸ்ரீல.சு.க.வில் இணைந்திருந்தார். அவரது தோல்விக்குப் பின் மீண்டும் அவர் யாழ் மாநகர சபையின் முதல்வரானார். அதனால் அவரது யாழ்ப்பாணத் தொகுதி மீதான செல்வாக்கு வளர்ந்ததால் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் விரல்-சுட்டிய பாராளுமன்றத் "துரோகிகள்" பட்டியலில் முதல் ஆளாக்கப்பட்டும் இருந்தார்.

இத் துரோகப் பட்டியல் நீளலானது. அமிர்தலிங்கத்தைத் தோற்கடித்த முன்னாள் பாடசாலை அதிபர் எஸ். தியாகராசவும் ஈ.எம்.வி. நாகநாதனைத் தோற்கடித்த சி. அருளம்பலமும் அன்றைய அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்ற குமாரசூரியரும் துரோகிப் பட்டியலில் அடங்கினர். தமிழ்த் தேசியவாத அரசியல் அரங்கில் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளின் காலத்திலிருந்தே "துரோகிகளை" அடையாளங்காட்டித் தத்தமது பாராளுமன்ற வெற்றிக்குப் பிரசாரம் செய்யும் போக்கு இருந்தது. 1970 வரை எதிர்ப் பிரசாரமாகப் பயன்பட்ட இப் போக்கு, துரோகிகளை ஒழிக்கும் நடைமுறையாகியது. "ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் நாமதைச் சொன்னால் பாவம்" என்ற முதுமொழி போன்று, தமிழரசுக் கட்சியின் குறிப்பிட்ட தலைவர்கள் "துரோகிகள்" என்போரை அடையாளமிட்டனர். அத்தகைய துரோகிகட்கு இயற்கை மரணம் வராது என்று பகிரங்கமாகக் கூறவும் அமிர்தலிங்கம் போன்றோர் பின்னிற்கவில்லை. அத் தொடக்கம் எங்கே போய் முடியும் என்ற அபாயத்தை அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோர் தூர நோக்குடன் உணர்ந்திருக்கவில்லை.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் ஒரு கொடுக்கல்வாங்கலுக்கும் தயாராய் இருக்கவில்லை. தன்னை ஆதரித்த வட்டுக்கோட்டை உறுப்பினர் அ. தியாகராஜா, நல்லூர் உறுப்பினர் சி. அருளம்பலம், தபால் அமைச்சர் செ. குமாரசூரியர், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என நியமன உறுப்பினரான எம்.சி. சுப்பிரமணியம் ஆகியோர் மூலம் அரசாங்கம் வடக்கில் சலுகைகள் அபிவிருத்திகள் போன்றவற்றைச் செயற்படுத்தி வந்தது. அவற்றை அவ்வப்போது எதிர்த்துப் பகிஷ்கரிப்பு, கறுப்புக் கொடிகாட்டல் போன்றவற்றைத் தமிழரசுக் கட்சியினர் முன்னெடுத்தனர். தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் ஆறு அம்சக் கோரிக்கைகளைக் கொண்டதொரு மனுவை அனுப்பியபோது, அரசாங்கம் அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இந் நிலையிலேயே ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியது. பௌத்த மதத்திற்கு விசேட இடம் வழங்கியதாலும் ஏற்கனவே சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினர் பாதுகாப்பிற்கெனப் பெயரளவிலேன் இடம்பெற்ற 29வது சரத்தை நீக்கியதாலும் தமிழ் மக்களின் கோரிக்கைகட்குரிய ஏற்பாடு எதுவும் இடம் பெறாமையாலும், புதிய அரசியலமைப்பு தமிழர்கட்கு எதிரானது என்ற நிலைக்குள்ளானது. மேலும், தமிழரசுக் கட்சி அதை எதிர்த்து நிராகரித்தமையும் அரசியலமைப்புப் பற்றிய அதிருப்தி வளரக் காரணமானது. அதேவேளை, அவ்வரசியலமைப்பு, இலங்கையைச் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட நாடாக்கும் வகையில், பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் இருந்துவந்த அரசியலமைப்புத் தொடர்புகளைத் துண்டிக்க வழி செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1972ஆம் ஆண்டின் பின்னான நிகழ்வுகளையும் தமிழீழக் கோரிக்கைப் பிரகடனத்தையும் அதன் தாக்கத்தையும் அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

# 02

# தமிழீழச் சிந்தனையை நோக்கி

*சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆண்ட 1970 தொடக்கம் 1977 வரையான காலப்பகுதி, இன முரண்பாடு மேலும் விரியவும் பகை முரண்பாடாக வளரவும் பெரும் பங்களித்தது. பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டவர்கள் அங்கம்வகித்த அவ்வரசாங்கம் முன்னெடுத்த பேரினவாத நோக்குடைய நட வடிக்கைகள் தமிழ்த் தேசியவாதப் பரப்பில் எதிரலைகளைத் தோற்றுவித்தன. பாராளுமன்றத் தலைமைகள் தமக்குரிய வாய்ப்புக்களைத் தேடலாயின. அதே வேளை, தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக்களும் வன்முறைக்கான வழிமுறைகளும் தோன்றின. 1970இல் அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதிக்கான க.பொ.த. (உயர்தர) பரீட்சைப் புள்ளிகளை மொழி அடிப்படையில் தரப்படுத்தும் திட்டத்தைக் கொண்டுவந்தது. இதனால் தமிழ் மாணவர்கள், குறிப்பாகக் கல்வித் துறையில் முன்னிலை*

வகித்த யாழ். குடாநாட்டு மாணவர்கள், பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, நகர்-சார் மத்திய, மேல்மட்டக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மத்தியிலிருந்து கடும் எதிர்ப்புகள் வந்ததுடன், தரப்படுத்தல், முழுத் தமிழ் மாணவர்களதும் பிரச்சினையாக வடிவம் பெற்றது. தமிழ்த் தேசியவாத அரசியல் சக்திகளின் பின்புலத்தில் தமிழ் மாணவர் பேரவை தோன்றியது. ஆரம்பத்தில் இதனூடாகவே பிற்காலத் தீவிர இளைஞர் இயக்கங்களில் முன்னணியில் நின்ற பலர் அரசியலிற் பிரவேசித்தனர். இத் தரப்படுத்தலுக்கு எதிராகக் குடாநாடு தழுவிய மாணவர் எழுச்சி ஊர்வலத்திற்குத் தமிழ் மாணவர் பேரவை அழைப்பு விடுத்தது. **1970** நவம்பர் **24**ஆம் திகதி கொக்குவிலிருந்து ஆரம்பித்து யாழ் முற்றவெளிவரை செல்ல ஏற்பாடாகியிருந்த அம் மாணவர் ஊர்வலத்திற்கு பொலிசார் ஆரம்பத்தில் அனுமதி மறுத்தனர். தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள் ஊர்வலத்தைக் கைவிடும்படி வற்புறுத்தியும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் மாணவர் தொகையையும் எழுச்சியையும் கண்ட பொலிஸ் அனுமதி வழங்கியது.

இவ் ஊர்வலத்தில் மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பு கலந்துகொள்வதா இல்லையா எனும் விவாதத்தின் பின், தரப்படுத்தல் இன ஒடுக்குமுறை சார்ந்தது என்ற காரணத்தால் அதை எதிர்க்கும் அடிப்படையிற் கலந்துகொள்ள முடிவானது. அதனால் அவ்வமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இடதுசாரி மாணவர்கள் ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். இக் கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பானது **1969**இல் தமிழரசு-காங்கிரஸ் இணைந்திருந்த யூ.என்.பி.யின் கல்வி அமைச்சர் ஈரியகொல்ல அறிமுகப்படுத்திய "சியவச" மாணவர் சீட்டிழுப்பை எதிர்த்த இயக்கத்தினூடே தோன்றிய மாணவர் அமைப்பாகும். அப்போது, இவ்வமைப்பு "தீ" என்னும் மாணவர் பத்திரிகையை நடத்திப் பாடசாலை மாணவர்களின் ஆதரவைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் காரணமாகவே, அன்றைய தமிழ் மாணவர் பேரவையினர் தமது பொது மாணவர் ஊர்வலத்திற் கலந்து கொள்ளுமாறு கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பினைக் கேட்டிருந்தனர்.

ஊர்வலத்தின் ஆரம்பத்தில், நிதானமான அரசாங்க எதிர்ப்பு, தரப்படுத்தல் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பிய போதிலும், ஊர்வலம் குறிப்பிட்ட தூரம் வந்த பின், அன்றைய கல்வியமைச்சரான பதியுதீன் மஹ்மூத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் இனத் துவேஷ முழக்கங்களும் எழுப்பப்பட்டன. இது தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான நிலைப்பாட்டின் வழியிலேயே நிகழ்ந்தது. இம் முழக்கங்கள் யாழ் முஸ்லிம் வட்டாரத்தின் ஊடாக ஊர்வலம் சென்றபோது உச்சத்தை அடைந்ததுடன் சில மாணவர்கள் தாம் அணிந்திருந்த தொப்பிகளைக் கழற்றிப் புரட்டி எறிந்தும் அணிந்தும் முஸ்லிம்களை ஏளனப்படுத்தும் பாவனை செய்தனர். இத்தகைய இழி நடத்தையைக் கம்யூனிஸ்ட் மாணவர்கள் எதிர்த்தனர். முஸ்லிம் மாணவர்களும் கலந்துகொண்ட அவ்வூர்வலத்தில் அத்தகைய துவேஷ முழக்கங்களை நிறுத்த வேண்டும் எனக் கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பினர் வற்புறுத்தினர். அதனால் மாணவர் மத்தியில் முறுகல் ஏற்பட்டது. தமிழ்த் தேசியவாதத்தின் அசிங்கத்தை அவ்வூர்வலத்தில் காண முடிந்தது.

அதன் பின், முற்றவெளியில் இடம்பெற்ற கூட்டத்தின்போது, தரப்படுத்தலுக்கு எதிராக முன்கூட்டியே அச்சிட்ட கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பின் துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தபோது கைகலப்பு இடம்பெற்றது. அன்றைய நிகழ்வு, தமிழ்த் தேசியவாதத்தின் படு பிற்போக்கான கூறுகளின் வழியிலேயே சகல போராட்டங்களும் பயணிக்குமே ஒழிய முற்போக்கான கூறுகட்கு அங்கு இடம் இராது என்பதை எடுத்துக்காட்டியது. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பது போன்று அன்று கிளப்பிய முஸ்லிம் விரோதம் பிற்காலத்தில் எத்தகைய வளர்ச்சியைக் கண்டது என்பதைக் கடந்த முப்பது ஆண்டுகளில் எல்லோருங் காண முடிந்தது.

இத்தகைய மாணவர் பேரவை, படிப்படியாக இளைஞர் பேரவையாக மாற்றம் பெற்றது. ஆனால் அதன் போக்கிற் புதிய கொள்கைகளாகவும் நடைமுறைகளாகவும் எதுவும் தென்படவில்லை. தமிழரசுக் கட்சியினர் பேசிய அதே தொனியிலேயே இளைஞர் பேரவையினர் பேசினர். இருப்பினும்

அப் பேரவையில் அணிதிரண்ட இளைஞர்கள் மத்தியில் தமிழரசுக் கட்சித் தலைமை மீதான அதிருப்தியும் கண்டனமும் காணப்பட்டன. அவை, தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டை மிதவாதப் போக்கிலும் வெறுமனே பாராளுமன்றத்திற்குப் போகும் பாதையிலும் முன்னெடுக்கிறது எனுங் குற்றச்சாட்டை மட்டுமே கொண்டிருந்தன. அதற்கப்பால், வடக்கு-கிழக்கின் தமிழ் மக்களிடையே நிலவிய அடிப்படைப் பிரச்சினைகட்குத் தீர்வுகளையோ வர்க்க, சாதிய, பிரதேச, மத, பால்நிலை முரண்பாடுகட்கான தீர்வுகளையோ உள்ளடக்கியதாக, முழுத் தமிழ் மக்களையும் அணிதிரட்டக் கூடிய முற்போக்கான வெகுஜனப் போராட்டப் பாதையிலான, கொள்கைகளையோ நடைமுறைகளையோ அவற்றுக்கான சாயல்களையோ இத் தமிழ் இளைஞர் பேரவையினர் கொண்டிருக்கவில்லை.

இளைஞர்கள் என்போர் என்றும் ஒரு வர்க்கமாக இருப்பதில்லை. அவர்கள் பல்வேறு வர்க்கப் பின்புலங்களிலிருந்து வருவோராவர். அவர்களுடைய சிந்தனைகளும் செயற்பாட்டு முயற்சிகளும் பெருமளவிற்குத் அவரவரது வர்க்கத்தின் சார்பாகவும் அதன் நலன்களை மீறாதவாறுமே இருக்கும். ஒரு சில இளைஞர்கள் தமது சூழலாலும் முன்நோக்கிய பரந்த உலகநோக்குச் சிந்தனையாலும் மாற்றுக் கருத்துகளையும் நடைமுறைகளையும் வந்தடைவர். தமிழ் இளைஞர் பேரவையில் ஒன்றிணைந்த இளைஞர்கள் தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான கூறுகளைத் தம்மகத்தே கொண்டிருந்தனர். அத்துடன் தமிழரசுக் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை உள்ளாரப் பெற்றுமிருந்தனர். இவ் இளைஞர் பேரவையினரில் ஒரிருவர் மட்டுமே தாழ்த்தப்பட்ட சமூக இளைஞர்களாக இருந்தனர். பெரும்பாலானவர்கள் உயர்சாதி மத்தியதர, கீழ்-மத்தியத்தர தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தோராவர். வன்முறையை நாடுவதும் அதன் மூலம் பௌத்த-சிங்கள மேலாண்மை அரசாங்கத்தை எதிர்ப்பதும் அவர்களது பிரதான நோக்கமாக இருந்ததோடு கருத்தியல் சிந்தனை நடைமுறைத் தளங்களில் தமிழ்த் தேசியவாதத்தின் குறுந்தேசியவாத நிலைப்போக்கே முனைப்புக் காட்டியது. சாதியத்தை அடிப்படையில் எதிர்த்து முறியடிக்கமுடியாத

தமிழ்த் தேசியம் வெறும் தமிழ் உணர்வால் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களை இணைக்க முன்னின்றது. சில கல்விகற்ற, அல்லது மேநிலையாக்கம் பெற்ற தாழ்த்தப்பட்டோர் அதற்கு ஆதரவளித்துப் பங்குகொண்டனர். அப்படியானோருக்கும் தமிழ்த் தேசியவாத அரசியலில் வரையறுக்கப்பட்ட இடமே இருந்துவந்தமை நடைமுறை உண்மையாகும்.

இவ்வாறான சூழலிலேயே, 1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை அன்றைய ஐக்கிய முன்னணி அரசு கொண்டுவந்தது. அவ் அரசியலமைப்பு, பிரித்தானிய முடியாட்சியுடன் இலங்கையைச் சட்டப்படி தொடர்புபடுத்திய அனைத்தையும் அறுத்துச் முழுச் சுதந்திர இலங்கையைப் பிரகடனம் செய்தது. அதையடுத்து, அரசாங்கம் இலங்கையின் தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களை பிரித்தானிய முதலாளிகளிடமிருந்து பொறுப்பேற்றுத் தோட்டங்களைத் தேசியமயமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்வாறு குறிப்பிடத்தக்க முற்போக்கான செயற்பாடுகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்ற இடதுசாரிகளின் ஆதரவுடன் முன்னெடுத்தபோதும், தேசிய இனப் பிரச்சினையை நியாயமான வழிகளில் தீர்ப்பதற்கு அவ் அரசியலமைப்பில் எந்த ஏற்பாடும் புகுத்தப்படவில்லை. மேலும், அவ் அரசியலமைப்பு பௌத்த மதத்திற்கு முதலிடம் அளித்ததுடன் சோல்பெரி அரசியலமைப்பில் சிறுபான்மையோர் பாதுகாப்பிற்கெனப் பெயரளவில் இருந்த 29வது சரத்தை விலக்கியது. அது இருக்கக் கூடியதாகவே, 1948இல் பிரசாவுரிமைச் சட்டம் நிறைவேறியது. அவ்வாறே 1956இல் தனிச்சிங்கள மொழிச் சட்டமும் கொண்டுவரப்பட்டது. ஏற்கனவே கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் செயலாக்கப்பட்டன. அப்போதெல்லாம் இந்த 29வது சரத்தின் மூலம் எத் தடையையும் விதிக்க ஏன் முடியவில்லை என்பதற்கான விடை, மேற்படி சரத்து வெறும் பெயரளவிலானது என்பதேயாகும். இப் புதிய, குடியரசு அரசியலமைப்பைக் கொண்டுவந்ததன் சோகம் என்னவென் றால், அதைக் கொண்டுவந்த அரசியலமைப்பு அமைச்சர் ட்ரொட்ஸ்கிய இடதுசாரியும் சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான கொல்வின் ஆர். டி சில்வா

என்பது தான். 1956இல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்திற் பேசும்போது "இரு மொழிகள் ஒரு நாடு, ஒரு மொழி இரு நாடுகள்" எனத் தனது சிம்மக் குரலில் கர்ச்சித்தவர் அவரே. அவ்வாறே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான டொக்டர் எஸ்.ஏ. விக்ரமசிங்க, அன்றைய பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான பொன். கந்தையா ஆகியோரும் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துக் கடுமையாக உரையாற்றினர். அன்று அச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையைவிடச் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை அதிகமாகும். ஆனாற் பாராளுமன்றச் சந்தர்ப்பவாதமும் அமைச்சுப் பதவிகளிற் தணியாத மோகமும் ட்றொட்ஸ்கிவாதிகளை ஓர் அந்தலையில் இருந்து மறு அந்தலைக்குப் பாயவைத்தது. அதுவே அவர்களது நிரந்தரச் சீரழிவுக்கும் அவர்கள் மீது படிந்த- தமிழ் மக்களுக்கு எதிரான -கறையாகவும் அமைந்தது.

இன்று வரை, தமிழ்த் தேசியவாதம் பேசும் அத்தனை கனவான்களும் தமது துரோகம், பிற்போக்கு நிலை என்பவற்றை மறைக்கவும் பொத்தம்பொதுவாக இடதுசாரி விரோதத்தைக் கக்கவும் வசதியாக, மேற்கூறிய இடதுசாரிகள் முன்னின்று நிறைவேற்றிய அரசியலமைப்பைப் பிரதானப்படுத்திக் காட்டுவர். இவ் வழியில், தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் தலைமைகள் தமது பாராளுமன்றத் தேர்தல் தோல்விகளை முழு அளவிலான வெற்றிகளாக்க இச் சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு பயன்படுத்த ஆரம்பித்தன. அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கை போதாது என்றும் மிதவாதமானது எனவும் தமிழ் இளைஞர் பேரவையினர் அடிக்கடி தமிழரசுத் தலைமையுடன் முரண்பட்டனர். ஆனால், அமிர்தலிங்கம் போன்றோருடன் இளைஞர்கள் முரண்பட்ட போதிலும், அவ் இளைஞர்களைத் தமக்கு விசுவாசமான இளைஞர்கள் மூலம் கட்டுப்படுத்தவே தமிழரசுக்கட்சி முயன்றது. அதன்படி, அமிர்தலிங்கம்போன்றோர் இரண்டு வழிமுறைகளைப் பின்பற்றினர். ஒன்று, தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டில் சகலரும் ஐக்கியப்பட வேண்டும் என்பதும் அதன் மூலம் தமது ஒற்றுமையை அரசாங்கத்திற்கும்

உலகிற்கும் காட்டவேண்டும் என்பதுமாகும். மற்றது, வடக்கு-கிழக்கில் தமக்கு மாறாகவுள்ள பாராளுமன்ற எதிராளிகளைத் துரோகிகளாக அடையாளப்படுத்தி அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதாகும். தீவிரமாக நிற்கும் இளைஞர்களை அதற்குப் பயன்படுத்தத் தமிழரசுக் கட்சி தயங்கவில்லை. இத்தகைய குறுக்கு வழிக்குத் திசைகாட்டியவர்கட்கு அதன் எதிர்கால விளைவுகள் எப்படியிருக்கும் என உணரவோ ஊகிக்கவோ இயலவில்லை.

மறுபுறத்தில் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தித் தமது தலைமைத்துவ ஆதிக்கத்தைத் தொடர்ந்து கைகளில் வைத்திருக்கும்அரசியற்காய்நகர்த்தல்களைச்செய்தனர். 1972இல் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டத்தை நடத்தி, தமிழரசும் தமிழ்க் காங்கிரசும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்த "தமிழர் ஐக்கியக் கூட்டணி" என்ற பெயரில், இயங்கலாயினர். இக் கூட்டணியில் தமிழ்க் காங்கிரஸ் முழு ஈடுபாடு காட்டவில்லை. ஆயினும் 1970இல் தமிழ்க்காங்கிரசில்நின்று தோற்றவேட்பாளர்களான உடுப்பிட்டி மு. சிவசிதம்பரமும் காங்கேசன்துறை திருநாவுக்கரசும் வவுனியா த. சிவசிதம்பரமும் தமிழரசுக் கட்சியுடன் கூட்டணி அமைத்து வேலை செய்ய ஆரம்பித்தனர். ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரோடு இணைந்த தமிழ்க் காங்கிரஸ்காரரும் இக் கூட்டணிக்குச் சம்பந்தப்படாதோராக இருந்தனர். இருப்பினும் தமிழ்க் காங்கிரசின் பொதுச்செயலாளராக மு. சிவசிதம்பரம் இருந்தமையால், உருவாக்கப்பட்ட கூட்டணி ஓர் ஐக்கியத் தோற்றத்தைக் காட்டியது.

தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பத்தில் பெயரளவில் இக் கூட்டில் இணைந்திருந்தாலும், விரைவாக அதிலிருந்து கழன்றது. தமிழீழக் கோரிக்கையைத் தான் ஆதரிக்கவில்லை எனத் தொண்டமான் பகிரங்க அறிக்கை மூலம் தெரிவித்தார். மேற்படி கூட்டணி அமைந்ததால் தமிழரசு, காங்கிரஸ் கட்சிகள் மீது விரக்தியோடிருந்த தமிழ் இளைஞர்கள் சற்று ஆறுதல் பெற்றனராயினும் தீவிர எண்ணங்கொண்ட இளைஞர்களின்

அழுத்தம் தொடர்ந்து அதிகரித்தது. ஆனால், கூட்டணி அமைத்த பின்பும், கறுப்புக் கொடிப் போராட்டம், துக்கதினம் கடைப்பிடித்தல், உண்ணாவிரதம் இருத்தல் போன்ற தமிழரசுக் கட்சியின் வழமையான நடவடிக்கைகளே தொடர்ந்தன. **1972** மே **22**ஆம் திகதி புதிய அரசியலமைப்பும் குடியரசுப் பிரகடனமும் இடம்பெற்றபோது, கூட்டணி வடக்கு-கிழக்கில் துக்கதினத்தையும் கறுப்புக்கொடி பறக்கவிடுவதையும் முன் னெடுத்தது. அதே வேளை தமிழ் மாணவர், தமிழ் இளைஞர் பேரவைகளின் வழிவந்த இளைஞர்கள் சிலர் வன்செயல்களில் இறங்கினர். தனிமனிதப் பயங்கரவாதத்தின் ஆரம்ப வடிவங்கள் ஆங்காங்கே தெரிந்தன.

இச் சூழலில், அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த **1972** மே **22**ஆம் திகதி கடந்து நான்கு மாதங்களின் பின் எஸ்.ஜே. வி. செல்வநாயகம் தனது காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்றப் பதவியைத் துறந்தார். நிரந்தரமாக அன்றிப், புதிய குடியரசு அரசியல் யாப்பிற்குக் கண்டனமாகவும் எதிர்ப்பாகவும் இப் பதவித் துறப்பு இடம்பெற்றது. ஆனால் அரசாங்கம் அத் தொகுதிக்கான இடைத் தேர்தலை இரண்டரை வருடங்கள் சுணக்கி **1975**ஆம் ஆண்டு முற்பகுதியில் நடத்தியது. அரசங்கம் வேண்டுமென்றே இடைத் தேர்தலை இழுத்தடித்தது. இவ்வாறு, பாராளுமன்றப் பதவி துறப்பைப் பெரும் அரசியல் நடவடிக்கையாகவும்தியாகமாகவும்காட்டிச்செல்வநாயகத்தைச் சூழக் கட்டியெழுப்பிய "தமிழரசுத் தந்தை" "ஈழத்துக் காந்தி" போன்ற படிமங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

மேலும், கூட்டணியினருக்கு, குறிப்பாகத் தமிழரசுக் கட்சியினருக்குத், தமது தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டை ஊக்குவிக்க இன்னொரு வாய்ப்பும் காத்திருந்தது. அது, நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடாகும். இலங்கையில் நடைபெறவிருந்த அம் மாநாட்டை நடத்துவது கொழும்பிலா யாழ்ப்பாணத்திலா என்பது ஆரம்ப முதல் அரசாங்கக் காப்பாளர்கட்கும் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கட்குமிடையில் இழுபறியாகவும் வாக்குவாதமாகவும் இருந்தது. இறுதியில் யாழ்ப்பாணத்தில் அதை நடத்த முடிவானது. யாழ்ப்பாணப்

பாராளுமன்றத் தொகுதியில் சுயேச்சை உறுப்பினராகத் தெரிவான பின்பு ஸ்ரீல.சு.க.வில் இணைந்ததால் தமிழரசுக் கட்சியினருக்குத் துரோகியான அல்பிரட் துரையப்பா அவ்வேளை யாழ் மாநகர சபை முதல்வராயிருந்தார். இந்நிலையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வு மண்டப முன்றலில் நடக்கவிருந்தது. யாழ் முற்றவெளிக்கு முன்பாக இடம்பெற்ற இந்நிகழ்விற் பல்லாயிரக்கணக்கான மக்கள் விழாக் காணக் கூடினர்.

அதன்போது, இந்தியாவிலிருந்து களவாகக் கொண்டுவந்த ஒரு பிரமுகரைக் கைதுசெய்யும் பெயரில் உட்புகுந்த பொலிஸ் படையினர் அந் நிகழ்வைக் குழப்பும் விதமாகக் கலகத்தில் ஈடுபட்டனர். இளைஞர்கள் அவர்களை எதிர்த்துச் செருப்புகளாலும் கற்களாலும் தாக்கினர். அதனால், ஆகாயம் நோக்கிப் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் மக்கள் சிதறியோடியவேளை, அறுந்துவிழுந்த மின்சாரக் கம்பிகளில் இடறிய ஒன்பது பொதுமக்கள் இறந்தனர். தமிழாராய்ச்சி மாநாட்டின் மேற்படி துயர நிகழ்வு தமிழர் கூட்டணிக்கு ஒரு அரசியல் வரப்பிரசாதமானது. தமிழர்களின் தலைநகரில் தமிழர் மீது சிங்கள இனவாதப் பொலிசார் நடத்திய தாக்குதல் என்ற பிரசாரம் துரிதமாகத் தமிழ் மக்கள் மத்தியிற் பரவியது. இதிற் தமிழர் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை போன்றவை முன்னின்றன. இத் துயர நிகழ்வை நியாய சிந்தனை உள்ள எவரும் ஏற்கவியலாது. தமிழாராய்சி மாநாட்டில் பொலிசாரின் அத்துமீறலை வன்மையாகக் கண்டித்த மாக்சிச லெனினிச (மா. லெ.) கம்யூனிஸ்ட் கட்சி, உரிய நீதிவிசாரணையைக் கோரியது. ஆனால் தமிழ்த் தேசியவாத அரசியல் சக்திகள் குறுகிய இனவாத நோக்கில் அந் நிகழ்வைப் பிரசாரப்படுத்தினர். அத்துடன் தாம் பரப்பமுனைந்த தமிழீழக் கோரிக்கையை மக்கள் மத்தியில் நியாயப்படுத்தவும் அந் நிகழ்வைப் பயன்படுத்தினர். தமிழர் கூட்டணியினதும் தமிழ் இளைஞர் பேரவையினதும் குறுந்தேசியவாதப் பரப்புரைகள் தமிழ் மக்கள் மத்தியிற் பரவிய சூழலில், தமிழீழம் என்ற பிரிவினவாத எண்ணக்கருவும் வளர்ந்தது. "தமிழனைத் தமிழன் ஆள்வது" "ஆண்ட பரம்பரை

மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" "உலகில் பலகோடித் தமிழர்கள் வாழ்ந்தும் தமிழருக்கென ஒரு நாடு இல்லை" "இனிமேலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் வாழமுடியாது" என்றவாறான கருத்துகள் தீவிர இனவாதத்துடன் தமிழ் மக்கள் மத்தியிற் பரப்பப்பட்டன.

இக் கட்டத்திலேயே 1975ஆம் ஆண்டின் இரண்டாம் மாதம் நடந்த காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலிற் செல்வநாயகம் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வி. பொன்னம்பலம் (வி.பி.) போட்டியிட்டார். அத் தேர்தலில் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி அக்கறை கொள்ளவில்லை. வி.பி. இடதுசாரியாயினும், பாராளுமன்றச் சந்தர்ப்பவாத கம்யூனிஸ்ட் கட்சியையோ வி.பி. என்ற சந்தர்ப்பவாதியையோ நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகள் ஆதரிக்கவில்லை. அதேவேளை, செல்வநாயகத்தை ஆதரித்தோர் தமிழீழம் பற்றிய வேகமான பரப்புரைகளைச் செய்தனர். அதன் போதே, செல்வநாயகம் தமிழீழம் பற்றி மனவிருப்பின்றி ஒரு பிரசார மேடையில் அரைகுறைச் சத்தத்தில் பேசினார் என்றும் அதை அமிர்தலிங்கம் வழமையினும் உரத்த குரலில் தந்தை சொல்கிறார் என விரித்துப் பேசினார் என்றும் கூறுவர். எவ்வாறாயினும், அன்றும் பின்னரும் செல்வநாயகத்தின் வாயால் தமிழீழத்தைச் சொல்லவைத்தவர் தளபதி அமிர்தலிங்கம் என்றே தமிழ்க் கூட்டணி வட்டாரங்கள் பேசின. அத் தேர்தலிற் செல்வநாயகம் 29,927 வாக்குகளுடன் பெருவெற்றி பெற்றார். அது தமிழீழத்திற்கான முதலாவது அங்கீகாரம் எனத் தமிழர் கூட்டணி மகிழ்ந்தது. வி.பி. 9,450 வாக்குகளைப் பெற்றார். முன்னது தமிழீழ ஆதரவு வாக்குகள் எனின் பின்னது தமிழீழ எதிர்ப்பு வாக்குகள் என்றே கொள்ளவேண்டும். இதில் வேடிக்கை ஏதெனில், அதே வி.பி., அதிக காலம் செல்லுமுன், "செந்தமிழர் இயக்கத்தைத்" தோற்றுவித்துத் தமிழர் கூட்டணியுடன் இணைந்தார். அதைவிட மோசமான ஒரு விடயத்தைக் கூட்டணி நடத்திய மே தின மேடையிற் பேசும்போது வி.பி. கூறினார். அதாவது, காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலில், மனச்சாட்சிப்படி தந்தை செல்வாவிற்கே தனது வாக்கை

அளித்தேன் என்றார். அதன் மூலம் தனக்கு வாக்களித்த 9,500 வாக்காளர்களை மனச்சாட்சியற்ற முட்டாள்கள் ஆக்கினார். அதுவே வி.பி. என்ற பிரபல "கம்யூனிஸ்ட் மனிதரின்" அரசியற் சாவாகவும் அமைந்தது.

இடைத் தேர்தல் வெற்றி தமிழ்த் தேசியவாத அரங்கில் தமிழர் கூட்டணிக்குச் செல்வாக்கு விரிய வழிவகுத்தது. அதேவேளை, இளைஞர் பேரவையைச் சேர்ந்த தீவிரவாத இளைஞர்களின் வன்முறைவரைமுறையற்றுவளரலானது. உயர்பொலிஸ்அதிகாரி ஒருவரையும் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவையும் கொல்ல இளைஞர்கள் பன்முறை முயன்று அது இயலவில்லை. இறுதியாக, வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கத்தின் இல்லத்திற்கு அருகாக அமைந்த பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடியில், வழிபட வந்த இடத்தில் அல்பிரட் துரையப்பா 1975 யூலை 27ஆந் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். இக் கொலையை முன்னின்று நிறைவேற்றியவர் விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பது யாவரும் அறிந்ததே. இக் கொலைக்கு முன்பாக, நல்லூர் கிராமசபைத் தலைவர் குமாரகுலசிங்கத்தைத் துரோகியெனக் கூறி இளைஞர் பேரவையைச் சேர்ந்தோர் சுட்டுக்கொன்றனர். 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இரும்பு மனிதரெனப்பட்ட ஈ.எம்.வி. நாகநாதனை நல்லூர்த் தொகுதியில் தோற்கடித்த சி. அருளம்பலத்தின் வெற்றிக்குப் பிரதான ஆதரவாக அவர் இருந்தார் என்பதே அதன் காரணமாகும்.

யாழ் மாநகர முன்னாள் முதல்வரைச் சுட்ட அன்று, மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சியின் வடமராட்சிக் குழு வல்வெட்டித்துறைச் சந்தியில் அமைந்த சனசமூக நிலையத்தில் ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது. அதற்கு வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் ஒருவர் தலைமை தாங்கவும் அதிற் கட்சிப் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன் உரையாற்றவும் ஏற்பாடாகியிருந்தது. காலையில் துரையப்பாவின் கொலைச் செய்தி குடாநாட்டில் பரபரப்பாகிய சூழலிலும் அக் கருத்தரங்கு தீர்மானித்தபடி குறித்த இடத்தில் அன்று மாலை நடந்தது. பெருந்தொகையான மக்களும் இளைஞர்களும்

கலந்துகொண்டனர். தோழர் சண், வர்க்க நிலைப்பாட்டினின்று, தமிழர் பிரச்சினையின் வளர்ச்சி பற்றியும் போராட்டம் பற்றியும் விரிவாகப் பேசினார். ஒரு கட்டத்தில், அன்று நடந்த துரையப்பா கொலையைச் சுட்டிக்காட்டி, அது தனிமனிதப் பயங்கரவாதம் என்றும் அதன் மூலம் விடுதலை பெற முடியாது என்றும் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்தார். உதாரணத்திற்குத், தோழர் லெனினின் மூத்த சகோதரர் தனிமனிதப் பயங்கரவாதத்தில் ஈடுபட்டு ஜார் மன்னனைக் கொல்லமுயன்று அதற்காகத் தூக் கிற் தொங்கிய நிகழ்வையும் சுட்டிக்காட்டினார். அன்று வல்வெட்டித்துறையில் அப் பேச்சைக் கேட்ட இளைஞர்கள் அதன் அரசியற் சாராம்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றே கொள்ளவேண்டும்.

மேலும், தனித் தமிழீழம் என்ற எண்ணக்கருவில் அடங்கியிருந்த பிற்போக்கான அம்சங்களையும் அதன் எதிர்கால வளர்ச்சியின் அபாயத்தையும் சுட்டிக்காட்டிய அதே நேரம், உரிய அரசியல் தந்திரோபாய போராட்ட வழிமுறையையும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியது. அத்துடன், பேரினவாத ஒடுக்குமுறையின் வளர்ச்சிப் போக்கு வடக்கு-கிழக்கு மக்களை நசுக்குவதையும் கட்சி எடுத்துரைத்தது. எதிரி யார், நண்பன் யார் என்று தீர்மானித்து இனவாதமற்ற வர்க்கப் போராட்டப் பாதையில் வெகுஜன அடிப்படையில் மக்கள் அணிதிரண்டு போராடுவதைத், தனது தலைமையிலும் வழிகாட்டலிலும் நடந்த சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான வெகுஜனப் போராட்ட அனுபவத்தின் ஊடாகக், கட்சி விளக்கியது.

அதன் அடிப்படையில், வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனம் செய்யுமுன்பே "தமிழீழம் சாத்தியம்-சாத்தியமில்லை" என்ற முரண்கருத்துகள் கூட்டணியினதும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் பலமேடைகளிற் பேசப்பட்டன. அது சார்ந்த பகிரங்க மேடை விவாதங்கள் இரண்டு 1975ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் நடுப்பகுதியிலும் இடம்பெற்றன. முதலாவது, ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தினர் ஒழுங்குசெய்த விவாதமேடையில், தமிழீழம் சாத்தியம் என்றும் மறுத்துச் சாத்தியம் இல்லை என்றும்

விவாதித்த நிகழ்வாகும். சாத்தியம் என வலியுறுத்தித் தமிழர் கூட்டணி சார்பில் மா.க. ஈழவேந்தன் தலைமையிலான குழுவும் சாத்தியமில்லை என வலியுறுத்தி மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.கா. செந்திவேல் தலைமையிலான குழுவும் கடுமையாக விவாதித்தன. பெருந்தொகையான மக்களும் இளைஞர்களும் அதிற் பங்குகொண்டனர். இலங்கையின் வரலாற்று, பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுச் சூழலில் பிரிவினை சாத்தியமற்றதென்றும், மாறாகச் சாத்தியமாவது அந்நிய சக்திகளின் தலையீட்டால் மட்டுமே என்றும் அதன் மூலம் நாடு முழுதும் அந்நியப் பிடிக்குள் அமிழும் என்றும் தோழர் செந்திவேல் எடுத்துரைத்தார். அவ் விவாதத்திற், தமிழீழம் சாத்தியமில்லை என்ற கருத்தே வென்றதாக நடுவர் தீர்ப்பளித்தார்.

இரண்டாவது விவாதம் அப்போதைய உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கத்திற்கும் தோழர் நா. சண்முகதாசனுக்கும் இடையில் இடம்பெற்றது. அவ் விவாதத்திற்கு முன்னாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் தலைமைதாங்கினார். சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடந்த இவ் விவாதத்திலும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். தமிழீழத்தின் சாத்தியமின்மைக்கான தர்க்க நியாயங்களை முன்வைத்த தோழர் சண்முகதாசன், தமிழீழம் சிறுபிள்ளைகளுக்கு நிலாக் காட்டுவது போன்றதெனவும் அதன் மூலம் வாக்குகள் பெற முடியுமே தவிர அதற்கப்பால் வெற்றி பெறமுடியாது என்றுங் கூறித், "தமிழீழத்தைப் பெற உங்கள் வழிமுறை என்ன?" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு விடையாக, "அது எங்கள் இரகசியம்" என்று தர்மலிங்கம் பதிலளித்தார். இரு விவாதங்களிலும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சியினர், தமிழீழம் என்ற எண்ணக்கருவில் அடங்கியிருந்த பிற்போக்கு அம்சங்களையும் அதன் மூலம் ஏகப்பெரும்பாலான மக்களுக்கு விடுதலை கிடைக்க இயலாமையையும்தமிழீழம்அடிப்படையில்மேட்டுக்குடி உயர்-வர்க்க உயர்-சாதி ஆண்ட பரம்பரைச் சக்திகட்கே சேவைசெய்யக் கூடியமையையும் விளக்கினர். அத்துடன், இலங்கையின் வரலாற்று வளர்ச்சியும் சமகால அரசியல் யதார்த்தச் சூழலும்

அந்நிய ஏகாதிபத்தியச் சக்திகளின் தலையீட்டு முயற்சிகளும் தமிழீழத்திற்குப் பாதகமானவை என்றும் சுட்டிக்காட்டினர். தமிழீழத்தின் ஒட்டுமொத்தச் சாத்தியமின்மை பற்றியும் எதிர்கால அழிவுகளும் அபாயங்களும் பற்றியும் அக் கட்சி தூரநோக்கில் எடுத்துக்கூறியது. குறுந்தேசியவாத நோக்கிற் பழம் பெருமையையும் உணர்ச்சி வேகத்தையும் தனிமனித வீரதீரத்தையும் பேசிவந்தோர் மாக்சிச லெனினிசவாதிகளின் கருத்துகளில் எதையும் செவிமடுக்கவில்லை. இளைஞர்கள் தீவிரவாத வழியிலும் கூட்டணித் தலைமை பாராளுமன்றப் பாதையிலும் தமிழீழத்தை வெல்ல முன்னின்றனர். எனவே, 1976 மே மாதம் வட்டுக்கோட்டைத் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் பல்வேறு அம்சங்களை அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 03

# தமிழ் மக்களின் அல்லல்கள்

அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் (1970-77) இனத்துவ அடிப்படையிற் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய எப் பிரச்சினைக்கும் உரிய தீர்வை முன்வைக்கவில்லை. அத்துடன் அரசாங்கத்தில் முழுமையாக இணைந்திருந்த பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் முக்கிய அமைச்சுப் பதவிகள் பெற்றுச் செல்வாக்குடன் இருந்தும் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு முயற்சியையும் மேற்கொள்ளாத அதேவேளை, அரசாங்கம் எடுத்துவந்த இனவாத நடவடிக்கைகட்கு மௌன அங்கீகாரம் வழங்குவதுபோல நடந்தனர். இதுவே இன்றுவரை அந்த இடதுசாரிகள் எனப்பட்டோரின் வரலாறாகவும் அவர்கள் மீதான பழியாகவும் இருந்து வருகின்றமையை மறுக்க இயலாது. அன்று தமிழர் கூட்டணியினர் அரசாங்கத்திற்கு முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கைகள் தூரநோக்கின்றிப் புறந்தள்ளப்பட்டன. அவற்றுள் அடங்கியிருந்த தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாட்சைகளையும்

அரசு கருத்திற் கொள்ளவில்லை. கூட்டணித் தலைமையைப் புறக்கணிப்பதாகக் கூறி, அதற்கு எதிராகச் செயற்படுவதாக எண்ணி, அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் முழுத் தமிழ் மக்களையும் பகைக்கும் செயல்களாகின. அவை அரசியற் காழ்ப்புணர்வால் மட்டும் நிகழவில்லை. பேரினவாத முதலாளியப் போக்கின் வெளிப்பாடாகவும் அவை அமைந்ததைக் கவனிக்கவேண்டும்.

இந் நிலையிற், தமிழர் கூட்டணியினர் சாத்வீகப் போராட்டங்கள் எனக்கூறித் தமது வழமையான வழியிற் செயற்படுகையில், தமிழ் மாணவர் பேரவையாக இயங்கினோர் தமிழ் இளைஞர் பேரவையாக மாறித் தீவிரவாதச் செயற்பாடுகளில் இறங்கினர். இதிற் குறிப்பாகக் காணப்பட்டவை துரோகிகளை அழித்தலில் ஆரம்பித்த செயற்பாடுகளாம். பிற்கால வளர்ச்சிகளுடன் பொருத்திப் பார்த்தாற், தனிமனிதப் பயங்கரவாத நடவடிக்கைகளின் தோற்றுவாயாக இது அமைந்தமையைத் தெளிவாகக் காணலாம். இவ்வாறு இளைஞர் பேரவையினர் எடுத்துவந்த நடவடிக்கைகளின் எதிர்காலப் பாரதூரத் தன்மையைத் தமிழர் கூட்டணித் தலைமை எவ்வாறுந் தூர நோக்கிற் காணவில்லை. மனதுள் அவற்றை அங்கீகரித்து வெளியில் மௌனம் பேணினர். அவ்வாறான தமிழ் இளைஞர்களின் செயற்பாட்டினால் பொலிஸ் தேடுதல்கள், கைதுகள், விசாரணைகள், சித்திரவதைகள், நீண்ட பொலிஸ் மறியல்கள் போன்றவற்றுக்கு இளைஞர் பேரவையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களுமான இளையோர் உட்பட்டதைத், தேர்தல் வெற்றிக்கான வாக்கு வங்கி முதலீடாகத் தமிழர் கூட்டணி பயன்படுத்தியதே தவிர, ஓர் அரசியல்மயப்பட்ட வெகுஜன இயக்கமாக அதை மாற்ற ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

அதேவேளை, எந்தத் தனிமனித வன்முறையையும் தமிழர் கூட்டணித் தலைமை கண்டிக்கவில்லை. மாறாக வன்முறையை ஊக்குவிக்குமாறான மறைமுகப் பேச்சுகளும் அறிக்கைகளும் விடப்பட்டன. எந்த நிகழ்வையும் இனவாதமாகவும் குறுந்தேசிய நிலைப்பாட்டிலும் நோக்குவதுடன் அதைமீறி இடதுசாரிச்

சிந்தனையோ வர்க்கப் போராட்ட அணுகுமுறையோ தமிழ் இளைஞர் பேரவையினர் நடுவே புகாதவாறும் தமிழர் கூட்டணித் தலைமை கவனமாகக் கண்காணித்துத் தடுத்தது. தமிழர் கூட்டணித் தலைமைக்கும் இளைஞர் பேரவையின் தீவிரவாதத் தலைமைக்குமிடையில் அடிக்கடி கருத்து மோதல்கள் நிகழ்ந்தன. அவை பொது இடங்களிலும் இடம்பெற்றன. பாராளுமன்றப் பாதையாலும் மிதவாதப் போராட்டங்களாலும் தமிழர் உரிமையைப் பெறமுடியாது என்ற கருத்தைத் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள் முன்வைத்த வேளைகளில் "தமிழ் இளைஞர்கள் மத்தியில் பீக்கிங்-சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஊடுருவிவிட்டனர்" என்றும் "இது ஓர் அபாயம்" என்றும் 'தளபதி' அமிர்தலிங்கம் இளைஞர் கூட்டங்களில் பன்முறை பகிரங்கமாக அறிவித்துக் கண்டித்துவந்தார். இதன் நோக்கம் தமிழ்க் கூட்டணியினதும் அவர்கள் பிரசாரப்படுத்திய தமிழீழம் என்பதன் பின்னால் மறைந்திருந்த உயர்வர்க்க நலன்களே. இத்தகைய மேட்டுக்குடி வழிவந்த உயர்-வர்க்க, உயர்-சாதிக் கருத்தியற் சிந்தனைப் போக்கை அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இறுகப்பற்றித் தமிழ்த் தேசியவாத அரங்கிற் தமது ஊடுருவல்களைச் செயலாக்கினர் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமிழ் இளைஞர் பேரவையினரின் தீவிரவாதச் செயல்களும் தனிமனிதப் பயங்கரவாத நடவடிக்கைகளும் இளைஞர் மத்தியில் ஒருவகை ஈர்ப்பைப் பெற்றன. இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டோரில் ஒருசிலரைத் தவிர ஏனையோர் இனத்துவத் தேசியவாத அடிப்படையிலேயே சிந்தித்துச் செயலாற்றினர். அத்தகையோரின் செயற்பாட்டைத் தமது மூலதனமாக மாற்றுவதிற் தமிழர் கூட்டணித் தலைமையும் அந்நிய சக்திகளும் கவனமாயிருந்தன. பொன். சிவகுமாரன், தமிழ் மாணவர் பேரவையிலும் பின்பு தமிழ் இளைஞர் பேரவையிலும் முன்னின்று தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரு இளைஞராவார். பல சந்தர்ப்பங்களில் அவர் தனது துணிச்சல், அர்ப்பணிப்பு, வீரதீரம் என்பனவற்றை வெளிக்காட்டித் தமிழ்த் தேசியவாத அரங்கில் தமிழ் இளைஞர்கட்கு எழுச்சியூட்டினார். முற்போக்கான சமூகக் கருத்துகள் பலவற்றை அவர்

தன்னளவிற் கொண்டிருந்த போதும், அவை பிற்போக்கான தமிழ்த் தேசியவாதக் கருத்துகளை மேவி முன்செல்லவோ ஏனைய தமிழ்த் தேசியவாதிகள் ஏற்க இயன்றனவாகவோ இருக்கவில்லை. அத்துடன் அவர் தமிழ்த் தேசியவாத இளைஞர் அரங்கில் முழுமையானதொரு இடத்தைப் பெறுமுன்பே, வங்கிக் கொள்ளை ஒன்றின் தொடர்பிற் பொலிசாரிடமிருந்து தப்புவதற்கு, **1974** யூன் **5**ஆம் திகதி நஞ்சருந்தித் தற்கொலை செய்தார். இதுவே ஈழப் போராட்டத்தின் முதலாவது தற்கொலைப் போராட்ட நடவடிக்கை எனப் பிற்காலத்தில் பிரசாரமானது.

இதற்கு முன்பும் பின்பும் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் தேடுதல்கள் கைதுகள் சித்திரவதைகள் சிறையிடல் போன்றவற்றுக்கு ஆளாகினர். ஒவ்வொரு நிகழ்வையொட்டியும் பல இளைஞர்கள் கைதாகி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கடும் வதைகள் மூலம் விசாரிக்கப்பட்டனர். இவற்றில் தமிழ்ப் பொலிசாரும் இரகசியப் பொலிசாருமே அதிகம் சம்பந்தப்பட்டிருந்தனர். ஆளும் வர்க்க அரசு - இயந்திர விசுவாசத்துடன், தமது கடமையெனக் கூறி அவர்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் இன, மொழி, பிரதேச உணர்வு கடந்தவை என்பதைக் காணத் தவறலாகாது. தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த **42** இளைஞர்கள் நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டனர். இதைத் தமிழர் கூட்டணி தனக்கேற்ற பிரசாரமாக முன்னெடுத்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது பொலிஸ் அடக்குமுறையை உச்சமாக முன்னெடுத்த போதும், தனது ஆட்சிக் காலத்தில் அதனை இராணுவ அடக்குமுறையாக உயர்த்தாமை கவனிக்க வேண்டியதாகும். அதேவேளை, வடபுலத்தைச் சேர்ந்த செல்லையா குமாரசூரியரை அமைச்சராக்கிய ஐக்கிய முன்னணி அரசாங்கம், வடக்கு-கிழக்கிற்கான சலுகைகள், அபிவிருத்திகள் போன்றவற்றை எஸ். தியாகராசா, சி. அருளம்பலம், எம்.சி. சுப்பிரமணியம் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தமிழ் உயர் அரசாங்க அதிகாரிகளுடனும் இணைந்து முன்னெடுத்தது. அவற்றைத் தமிழர் கூட்டணியின்

எதிர்ப்புக்கட்கு மத்தியிலேயே முன்னெடுக்க நேர்ந்தது. அவற்றின் மூலம் தமிழ் மக்களிடையே ஆதரவைப் பெற அரசாங்கம் எத்தனித்தது. அந் நடவடிக்கைகட்கு அரசாங்கத்தை ஆதரித்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்ற இடதுசாரிகளதும் ஆலோசனைகளும் ஆதரவும் இருந்தது. ஆனால் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி எச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை "சோசலிச" அரசாங்கம் என்றோ முழுமையான "ஏகாதிபத்திய விரோத" அரசாங்கம் என்றோ கூறவுமில்லை, ஆதரிக்கவும் இல்லை. அந்த அரசாங்கத்தைப் பதவிக்கு கொண்டுவந்த **1970**ஆம் ஆண்டுத் தேர்தலை மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாக நிராகரித்துப் பகிஷ்கரித்தது. அதன் எதிர்வினையாகவே, மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி ஜே.வி.பி.யை ஆரம்பம் தொட்டு எதிர்த்துவந்தும், **1971**இல் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது, அரசாங்கம் அக் கட்சியின் தலைவர்களையும் ஊழியர்களையும் மாதக்கணக்காகவும் வருடக்கணக்காகவும் சிறையில் அடைத்தும் தேடுதல் நடத்தியும் அடக்குமுறையை ஏவியது. கட்சியின் அன்றைய பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் பதினொரு மாதங்களும் ஏனைய சிங்கள, தமிழ்த் தோழர்கள் இரண்டு மூன்று வருடங்களும் சிறையில் இருந்தனர். வடபகுதித் தலைமைத் தோழர்களும் ஊழியர்களும் ஒரு வருடத்திற்கு மேலாகத் தலைமறைவாக வாழ்ந்தனர். மலையகத்தின் தொழிற்சங்க, அரசியல் தலைமைத் தோழர்கள் சிறையிடப்பட்டனர். அன்று, ஒரு தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினராவது மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதைக் கண்டித்துப் பாராளுமன்றத்திலோ வெளியிலோ எதிர்ப்பையோ கேள்வியையோ எழுப்பவில்லை. மாறாக, **42** தமிழ் இளைஞர்களையும் விசாரி அல்லது விடுதலை செய் என அரசாங்கத்தை வற்புறுத்துவதில் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி உறுதியோடிருந்தது என்பது இவ்வேளை குறிப்பிடத்தக்கது.

முற்கூறியவாறு, அரசாங்கம் வடக்கு-கிழக்கில் தனது நிகழ்ச்சிநிரலை அபிவிருத்தியாகவும் மக்களுக்கு உதவுவதாகவும் பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தது. அவற்றில் ஒன்று, யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகத்தை

நிறுவியமையாகும். இதற்கு ஒரு சுவாரசியமான பின்புலம் உள்ளமை புதிய தலைமுறையினரிற் பலருக்குத் தெரியாது. தமிழர் தேசியவாதக் தலைமைகள், தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி எனத் தமிழ் மக்கள் மத்தியில் கன்னைகட்டிப் பாராளுமன்ற அரசியலில் போட்டியிட்டுவந்ததுடன் யூ.என்.பி.யுடன் வர்க்க உறவும் பேணின. அவ்வேளைகளில் தமிழ் மக்களுக்கான ஒரு பல்கலைக்கழகம் என்ற எண்ணக்கரு கற்ற தமிழர்களிடையும் அறிஞர்களிடையும் தோன்றிவளர்ந்து ஒரு கோரிக்கையானது. அதனை மேற்படி இரண்டு கட்சிகளும் தத்தமது அரசியலாக்கினர். தமிழ்க் காங்கிரஸ் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என்றனர். தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும் என வற்புறுத்தினர். அதைத் திருகோணமலையில் அமைக்கக் காணியும் பெறப்பட்டது. இவ்விரு தலைமைகளதும் போட்டி, தமிழ் மக்களுக்கான பல்கலைக்கழகம் என்ற விடயத்தை அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இலகுவாக ஒதுக்கிவைக்க வழிசெய்தது. இருப்பினும், தமிழ் மக்களுக்கான பல்கலைக்கழகத்திற்கென அரசாங்கங்கள் வருடாவருடம் வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு ரூபாவை குறித்தொதுக்கி வந்தன. இது தமிழர் தலைமைகட்கு ஓர் அவமானமாயிருந்த போதும் பாராளுமன்றப் போட்டி அரசியலில் அதையெல்லாம் கணக்கில் எடாது தத்தம் நிலைப்பாட்டிலேயே நின்றனர்.

இச் சூழலிலேயே ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடபுலத்தில் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை நிறுவ முடிவெடுத்து, அதை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தது. அப்போதிருந்த கட்டிட வளம் போதாமையால், விஞ்ஞான பீடக் கட்டிடங்கள் ஆயத்தமாகும்வரை, குறுகியகாலத்திற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சில பகுதிகளும் யாழ்ப்பாண வளாகத்திற்குப் பயன்பட்டன. வளாகத்தின் முதலாவது தலைவராகப் பேராசிரியர் க. கைலாசபதி நியமிக்கப்பட்டார். கைலாசபதி ஐக்கிய முன்னணி அரசாங்கக் கொள்கைகளை ஏற்ற அறிஞரோ கல்வியாளரோ அல்லர். மிகுந்த தயக்கத்துடன், தனது நெருங்கிய அரசியல் கட்சித் தோழர்களுடன் கலந்தாலோசித்த பின்பே அவர் அப் பதவியை ஏற்றார். சமூகச் சிந்தனையின்

அடிப்படையில் தனது ஆற்றல்களைத் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கும் சமூக வளர்ச்சிக்கும் பயன்படுத்தும் ஒரே நோக்கிலேயே வளாகத் தலைவராகப் பொறுப்பேற்ற கைலாசபதியை அவரது கல்விப் புலமை, நிர்வாகத் திறமை, மனச்சாட்சி நிறைந்த நேர்மை என்பனவற்றையும் அவருடைய வடபுலத்து இடதுசாரி அரசியற் பின்புலத்தையும் கருத்திற்கொண்டே அரசாங்கம் அப் பதவியில் அமர்த்தியது. அன்றைய உயர்கல்விப் புலத்திற் சமூகச் சிந்தனையுடன் செயற்பட்ட பல கல்வியாளர்கள் அவருடன் இணைந்து வளாகத்தைப் பொறுப்பேற்று வழிநடத்த முன்வந்தனர்.

ஆனால் “வைக்கற் பட்டடை நாய்” போன்று, தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் பல்கலைக்கழக வளாகத்தைக் கடுமையாக எதிர்த்தனர். யாழ்ப்பாணம் சிங்களமயமாகப் போகிறது என்றும் சிங்களவர்கள் ஊடுருவப் போகிறார்கள் என்றும் கூக்குரலிட்டனர். இது அவர்களது வழமையான இனவாதப் பரப்புரைகட்கு உட்பட்டே இருந்தது. மேற்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தைத் திறந்துவைக்க அன்றைய பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணம் வந்தவேளை, அவருடைய வரவை எதிர்க்க வேண்டும் எனக் கூட்டணியினர் கூறினர். திறப்பு விழாவிற்கு முதல் நாள் இரவு, யாழ்நகர் மானிப்பாய் வீதியிலிருந்த கைலாசபதியின் தந்தையாரின் வீட்டிற்குக் கைக்குண்டுகள் வீசப்பட்டன. இத்தகைய தடைகளையும் அச்சுறுத்தல்களையும் மீறிக், குறித்தபடி வளாகத் திறப்பு நிகழ்வு இடம்பெற்றதுடன், வளாகத்தைச் சூழவுள்ள மக்களின் பூரண ஆதரவோடு நிர்வாக வளர்ச்சி முன்சென்றது. ஆரம்பத்திலிருந்தே தமிழ், முஸ்லிம், சிங்கள, மலையக மாணவர்கள் உரிய முறைகளின் ஊடாக வளாகத்திற் சேர்க்கப்பட்டனர். அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடக்கிவைத்துக், கைலாசபதியின் தலைமையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோரும் மக்களும் வலுவான அடித்தளமிட்ட அன்றைய வளாகம், பின்னர் வந்த அரசியற் புயல்களால் அழிவுறாது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இன்றுவரை திகழ்கிறது. தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் எந்த நிலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்திலும்

வளர்ச்சியிலும் அற்ப உரிமையும் கோரத் தகாதவர்கள் என்பதைக் கடந்த முப்பத்தைந்து வருட வரலாறு உணர்த்தும். ஆனாற் பல்கலைக்கழகத்தை அதன் கல்வி நோக்கங்கட்குப் புறம்பாகத் தமிழ்த் தேசியவாதப் போராட்டங்களின் பெயரால் சீரழிக்கும் செயல்கள் அவ்வப்போது இடம்பெற்றன. யாழ்ப்பாண வளாகம் தொடங்கி மூன்று வருடங்களின் பின் 1977இல் யூ.என்.பி. ஆட்சி வந்தது. அவ் அரசாங்கம் யாழ்ப்பாண வளாகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக்கியது. தமிழர் கூட்டணித் தலைமை ஒரு வெட்கமுமின்றி யாழ். பல்கலைக்கழக உபவேந்தராகத் தமது வர்க்கத்திற்கும் மேட்டுக்குடிப் பழைமைவாதத்திற்கும் உகந்த பேராசிரியர் சு. வித்தியானந்தனை நியமிக்குமாறு பிரதமராக வந்த ஜே.ஆர். ஜயவர்தனவை வேண்டினர். ஜே.ஆர். தனது தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்க சகாக்களின் வேண்டுகோளை ஏற்று அந் நியமனத்தை வழங்கினார். இது, தமிழர் கூட்டணி முன்னெடுத்த தமிழீழப் பிரசார இயக்கத்தின் மத்தியில் இடம்பெற்ற நடவடிக்கையென்பது கவனிக்கத்தக்கது.

1970-77 காலப்பகுதியில், அன்றைய அரசாங்கம் பேரினவாதத்தை முன்தள்ளும் காரியங்களைச் செய்த அதேவேளை, அதன் தேசியப் பொருளாதாரக் கொள்கையால் விவசாயிகளும் தொழிலாளர்களும் தத்தமது சுய முயற்சிகளால் எழுந்துநிற்க முடிந்தது. இறக்குமதிகட்குக் கடுங் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் விவசாயிகளும் உள்ளூர்ச் சிறு கைத்தொழிலாளர்களும் நன்மைபெற்றனர். உப-உணவு உற்பத்தியில் ஈடுபட்ட தமிழ் விவசாயிகள் ஏனைய பிரதேச விவசாயிகள் போன்று பல்வேறு நன்மைகளைப் பெற்றனர். வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்குப் பயிரிடலை விவசாயிகள் பரந்த அளவில் மேற்கொண்டனர். வன்னிப் பிரதேசத்தில் இவ்வாறான விவசாய முயற்சிகளில் தமிழ் மக்கள் ஊக்கங் காட்டினர். அக் காலத்தில், இவ் விவசாய முயற்சிகளைப் பற்றிக் கூறும்போது “வெளிக்கிடு விசுவமடுவிற்கு” என்றொரு சொற்றொடர் இருந்தது. வன்னிப் பகுதியில் விவசாயம் சிறப்பாக இருந்தமையையே இது குறித்தது. இதே சொற்றொடர் பின்பு ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் தமிழ்த் தேசியவாதத்தின் தீவிரப் போராட்டத்தாலும்

உலகமயமாதலாலும் "வெளிக்கிடு வெளிநாட்டிற்கு" என மாறியதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அன்றைய உப உணவு உற்பத்தியும் நெல் உற்பத்தியும், ஓரளவிற்கு தன்னிறைவு நோக்கிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத்தக்க பொருளாதாரத்தைத் தோற்றுவித்தது. அக் காலத்தில் வடபுலத்து விவசாயிகள் அதுவரை பயிரிட்டிராத பீற்றூட், கரட், போஞ்சி, லீக்ஸ் போன்ற குளிர்ப் பிரதேசப் பயிர்களையும் திராட்சை போன்றவற்றையும் பயிரிட்டு நல்ல விளைச்சல்களைப் பெற்றனர். இதனால் விவசாயிகளின் முக்கியத்துவம் மேலோங்கியதுடன் அவர்களது வாழ்க்கை நிலைமையிற் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் நிகழ்ந்தமையை மறுக்கவியலாது.

அதுபோன்றே, சிறு கைத்தொழில்களிலும் மக்கள் ஈடுபட்டனர். உள்ளூர் நெசவுத்தொழில் குடிசைக் கைத்தொழிலாகவும் நடுத்தரத் தொழிற்சாலை அளவுகளிலும் அன்று நாடு முழுதும் நிலைபெற்றது. வடக்கு-கிழக்கிலும் அவை வளர்ச்சி கண்டன. சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் தொடக்கம் அலுமினியப் பாத்திர வார்ப்பு வரை, சிறிய-நடுத்தரத் தொழிற்சாலைகளின் வாயிலாக உள்ளூர்த் தொழிலாளர்களையும் மூலப்பொருட்களையும் கொண்டு உற்பத்திகள் செய்யப்பட்டன.

மேலும், அவ் அரசாங்கத்தின் காலத்திலேயே, தாழ்த்தப்பட்ட மக்கள் மேற்கொண்ட பனை-தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்கும் தொழிலுக்கு இருந்துவந்த மரவரி முறை நீக்கப்பட்டு அத் தொழில் கூட்டுறவுச் சங்க முறைமைக்குள் கொண்டுவரப்பட்டது. இதனாற் பல ஆயிரக்கணக்கான கள்ளிறக்கும் தொழிலாளர்கள் புதிய நிலைமைகளின் கீழ் நல்ல மாற்றங்களையும் சாதகமான விளைவுகளையும் பெற வாய்ப்பு ஏற்பட்டது. பனை, தென்னை வள அபிவிருத்தி சபை முறைமையும் நடைமுறைக்கு வந்தது. இவை தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார வாழ்வில் உப உணவு விவசாயம் போன்ற புதிய சூழல்களைத் தோற்றுவித்தது. அதுபோன்று, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அதனால் மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றனர்.

அத்துடன், வலுவற்றதாக இருந்த, சாதியத் தீண்டாமையை மறுக்கும் "சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை" ஓரளவுக்கு வலுப்படுத்துமாறு திருத்தவும் அரசாங்கம் முன்வந்தது. அவ் அரசாங்கத்தில் நியமன உறுப்பினராகச் சேர்க்கப்பட்ட எம். சி. சுப்பிரமணியத்தின் முன்முயற்சியால் அது நடந்தது. இதில் வினோதம் யாதெனில், அச் சட்டம் வலுவற்றதாக இருந்த சூழலிலேயே **1966** முதல் **1971** வரையான சாதிய தீண்டாமையை எதிர்த்து வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெற்றன. எவ்வாறாயினும் தமிழரசு, காங்கிரஸ் கட்சிகள் யூ.என்.பி. யுடன் இணைந்து ஆட்சி நடத்திய **1965-1970** காலத்தில் தீவிரமான சாதியத் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தபோது, இத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் அச் சட்டத்தை வலுவுள்ளதாக்க முன்வரவில்லை. அந் நிலையோடு ஒப்பிடும்போது பின்னைய அரசாங்கத்தின் சட்ட மாற்றியமைப்பு பெயரளவிலேனும் முன்னேற்றமான நடவடிக்கை எனலாம். மேலும், ஈழத்து இலக்கியப் பரப்பில் புதிய உத்வேகம் உருவாகி வளர்ந்தது. இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள், சினிமா போன்றவற்றுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடு விதித்தமையால் ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் ஆக்க முயற்சிகள் மேலோங்கின. இது ஈழத்து இலக்கியப் பரப்பை பல நிலைகளிலும் செழுமைப்படுத்தியது. ஆனால், தாய்நாட்டுடன் பண்பாட்டுப் பாலம் உடைபடுவதாகக் கூட்டணியினர் குரல் வைத்தனர்.

மேலும், அன்றைய அரசாங்கமே நாடு முழுவதும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் செயற்பாட்டை அறிமுகப்படுத்தியது. அதன் மூலம் மக்கள் பலநிலை நன்மைகளை அடைய வழியேற்பட்டது. அதைத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் ஆதரிக்கவில்லை. இவைபோன்று தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் இணைந்த பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்ற போதிலும் விவசாயிகளும் தொழிலாளர்களும் மீனவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பல்வேறு சமூக அரசியல் பொருளாதார நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டனர். ஆனால் தமிழர் கூட்டணித் தலைமை அவற்றுக்கும் இன முத்திரை குத்தியது. தமிழீழம் விடுதலை

பெற்றுத் தனிநாடாகிய பின் சகல பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்ற பொத்தாம் பொதுவான இனத்துவ விடுதலை பற்றியே அவர்கள் பேசினர். தமிழனைத் தமிழன் ஆண்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீரும் என்றனர்.

தமிழீழப் பிரகடன நாளை நோக்கித் தமிழர் கூட்டணித் தலைமை வேகமாக வழிநடக்கலானது. அதற்கான பிரசாரங்கள் வடக்கிலும் கிழக்கிலும் முடுக்கப்பட்டன. இத் தமிழீழ எண்ணக்கருவைத் தமதாக்கிப் பிரசாரப் படுத்திய கூட்டணித் தலைமை 1975ஆம் ஆண்டில் இடம்பெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலில் செல்வநாயகத்திற்குக் கிடைத்த பெருவெற்றியைத் தமிழ் மக்கள் முதல் முறையாகத் தமிழ் ஈழத்திற்குத் தந்த அங்கீகாரம் என்று உரத்துக் கூறினர். அதனாற், தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றிச் சராசரித் தமிழ் மக்களிற் பெரும் பகுதியினரும் இத் தமிழீழ முழக்கங்களால் ஈர்க்கப்பட்டனர். தமிழீழக் கோரிக்கையை முன்வைத்ததில் தமிழர் கூட்டணிக்கு ஒரு நோக்கமும் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கட்கு இன்னொரு நோக்கமும் இருந்தன. முன்னையோர் அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெறுதற்கான ஒரு கருவியாகத் தமிழீழக் கோரிக்கையைப் பயன்படுத்த முன்னின்றனர். முன்பு சமஷ்டியைக் கூறிப் பாராளுமன்ற அரசியல் நடத்தியது போன்று, தேர்தலுக்குப் பின்பும் தமிழீழத்தை வைத்துப் பாராளுமன்ற அரசியலை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதையே பொத்தம்பொதுவாகத் தமிழீழத்தை வென்றெடுப்போம் என்று கூறினர். பின்னையோர் ஓர் ஆயுதப் போராட்ட மூலம் தமிழீழத்தைப் பெறமுடியும் என்ற முழு நம்பிக்கையிற் செயற்பட்டனர். எவ்வாறாயினும் இரு தரப்பினரும் பிரிவினை மூலமான தமிழீழம் என்ற பகற்கனவைத் தமிழ் மக்கள் மத்தியிற் பரப்புவதில் மும்முரமாயினர்.

இத் தமிழீழக் கோரிக்கை பற்றிய பரப்புரைக் கருத்தரங்குகள் தமிழர் கூட்டணியினராலும் தமிழ் இளைஞர் பேரவையாலும் அவற்றுக்கும் அப்பாற் சனசமூக நிலையங்களாலும் முன்னெடுக்கப்பட்டன. பொது அமைப்புகள் ஏற்பாடு செய்யும்

கருத்தரங்குகளில் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களை அழைத்துக் கருத்துரைக்க வைப்பார்கள். ஏனெனில் அன்றைய நிலையில் வடபுலத்தில் இடதுசாரி அரசியற் பலத்தோடும் தெளிவான அரசியற் கருத்தோடும் இக் கட்சி மட்டுமே இருந்தது. இதன் அடிப்படையில் "தமிழ் மக்களின் பிரச்சினையும் தமிழீழக் கோரிக்கையும்" எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் இரண்டாந் தடவையாக நிகழ்ந்தது. இம்முறை அது கருத்தரங்கு மேடையாக நடத்தப்பட்டது. சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடந்த அக் கருத்தரங்கில் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. தருமலிங்கம், முன்னாள் ஊர்காவற்துறை உறுப்பினரும் சுயாட்சிக் கழகத் தலைவருமான வி. நவரத்தினம், மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.கா. செந்திவேல், சுயாட்சிக் கழகத்தைச் சேர்ந்தவரும் 2009ஆம் ஆண்டிற் பாராளுமன்ற உறுப்பினராயிருந்தவருமான என். ஸ்ரீகாந்தா ஆகியோருடன் பெருந் தொகையான மக்களும் இளைஞர்களும் கருத்தரங்கிற் கலந்துகொண்டனர். இக் கருத்தரங்கில் மூவர் தமிழீழக் கோரிக்கையை நியாயப்படுத்தித் தமது கருத்துகளை வற்புறுத்தினர். சி.கா. செந்திவேல் தமிழீழம் சாத்தியமற்றது என முன்னர் வலியுறுத்திய நிலைப்பாட்டைத் தெளிவும் தூர நோக்கும் கொண்ட கொள்கை விளக்கமாக முன்வைத்தார். தமிழீழக் கோரிக்கையாலோ அதற்கான எவ்வகைப் போராட்டத்தாலோ தமிழ் மக்கள் விடுதலை பெறமுடியாது என்றும் இலங்கையின் வரலாற்று ரீதியானதும் பூகோள அரசியல் நிலைப்பட்டதுமான யதார்த்தம் அதற்கு இடமளியாது என்றும் தோழர் செந்திவேல் தனது கருத்துரையில் எடுத்துரைத்தார். மேலும், சகலவற்றையும் கடந்து தமிழீழம் அமைவதானால் அது ஓர் அந்நிய வல்லரசின் தயவாலும் அதன்மீது தங்கியிருத்தலாலும் மட்டுமே இயலும். அத்தகைய தமிழீழம் யாருக்குத் தேவை எனவும் அது தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் எனப் பரந்துபட்ட உழைக்கும் தமிழ் மக்களுக்காகவா அன்றி ஆண்ட பரம்பரையில் வந்த ஆளும் வர்க்கத் தமிழர்க்காகவா என்பதே பிரதான கேள்வியும் பிரச்சினையுமாகும் எனவும் தோழர் செந்தில் அக் கருத்தரங்கில்

உறுதிபடக் கூறினார். மேலும், ஏகாதிபத்தியத்தின் கருவியாகச் செயற்படும் ஒரு தமிழீழத்தால் இலங்கையில் இரத்த ஆறு ஓடவும் சிங்கள மக்களுடன் நிரந்தரப் பகையும் அழிவுச் செயற்பாடுகளும் இடம்பெறவுமே நேருமன்றித் தமிழ் மக்களுக்கு விமோசனம் வராது என்றும் எடுத்துக் காட்டினார்.

இத்தகைய கருத்துகள் அன்று இன உணர்வுச் செவிகளில் ஏறவில்லை. ஏனெனிற் தமிழ் மக்களது கருத்தியல் பழைமைவாத மேட்டுக்குடி உயர்வர்க்க அரசியல் தலைமைக்குத் தலையாட்டிச் செல்லும் போக்குடையதாக இருந்தது. ஆனால் மாக்சிய லெனினிசவாதிகளது கருத்துகளை ஏற்று உறுதியாக நின்ற தமிழ் மக்கள் இன்றும் தமது நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளார்கள். கருத்தாகவும் கோரிக்கையாகவும் கனவாகவும் இருந்த அன்றைய பிரிவினை இலக்கு, நடைமுறையில் எவ்வாறு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தது என்பதை அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 04

# தமிழீழத்திற்கான பிரகடனம்

1975ஆம் ஆண்டின் இரண்டாம் மாதத்திற் காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடந்தது. அதற்கான பிரசாரத்தின் மூலமும் அதன் அமோக வெற்றியாலும் தமிழீழக் கோரிக்கை அதன் சாதக பாதகக் கணிப்புகட்கும் அப்பால் தமிழின உணர்ச்சியைத் தூண்டியது. ஆங்காங்கே வன்செயல்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர் பேரவைக்குள் தமிழரசுக் கட்சி இளைஞர்களும் கட்சியின் தலைமையுடன் திருப்தியற்ற இளைஞர்களும் இருந்தனர். தீவிரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்கள் தமிழீழத்திற்கான தனியான இளைஞர் இயக்கம் ஒன்றைக் கட்டும் நோக்குடன் செயற்பட்டனர். அவ்வாறான ஒரு நிலை உருவாவதைத் தமிழரசுத் தலைமை விரும்பவில்லை. இளைஞர்களின் வற்புறுத்தலை நிராகரியாமலும் அடுத்து வரவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் அதை வைத்தே தமது

பாராளுமன்ற ஆசனங்களை அதிகரிக்கவும் தமிழர் கூட்டணி மேற்படி தீர்மானத்தைப் பிரகடனமாக்க முடிவெடுத்தது. அதிற் தமிழரசுக் கட்சியினர் மும்முரமாயிருந்தனர். தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்திற்கு முழுமையான உடன்பாடு இல்லாதபோதும், தன் வாழ்வின் இறுதிக்காலத்தில் அமிர்தலிங்கம் போன்றவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க நேர்ந்தது. செல்வநாயகத்துக்குத் தமிழரசுத் தந்தை என்ற படிமம் இருந்ததாலும் அதிகம் பேசாதவராயும் பதவிகளை நாடாதவராயும் இருந்ததாலும் "தமிழரசுத் தந்தை" தமிழ் மக்கள் மத்தியில் ஈழத்துக் காந்தியாகக் காணப்பட்டார். அத்துடன் அவர் கிறிஸ்தவராக இருந்ததால் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து பீடங்களிலும் அவருக்குத் தனிமதிப்புத் தரப்பட்டது. ஏனெனில், தப்பித் தவறியேனும் செல்வநாயகம் ஏகாதிபதிவாதிகட்கும் அவர்களது நலன்கட்கும் எதிராக ஒருசொற் பேசியவரல்லர்.

அவ்வேளை, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சைவ-வேளாள மேட்டுக்குடிகளைப் பெயராண்மை செய்த கட்சியாயும் சேர் பொன். இராமநாதன் வழிவந்த தமிழர் பழைமைவாதக் கட்சியாகவும் இருந்தது. ஆனாற் தமிழரசுக் கட்சியோ சைவ, கிறிஸ்தவ, வேளாள மேட்டுக்குடித் தலைமையைக் கொண்டதாயும் சாதியத்தில் ஓரிரு படியிறங்கிய நெகிழ்ச்சித் தோற்றங் காட்டுவதாயும் இருந்தது. எனவே, பரவலான ஆதரவும் மதிப்பும் பெற்று விளங்கிய செல்வநாயகத்தின் தலைமையில், அவர் வாயாலேயே தமிழீழக் கோரிக்கைத் தீர்மானத்தை முன்மொழிவதைத் தமிழ்த் தேசியவாதத் தரப்பினர் விரும்பினர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிற்கு இதில் ஒத்த கருத்தில்லை. அதன் பொதுச் செயலாளரும் உடுப்பிட்டி வேட்பாளருமான மு. சிவசிதம்பரமும் காங்கேசன்துறை வேட்பாளர் தா. திருநாவுக்கரசும் வவுனியா வேட்பாளர் த. சிவசிதம்பரமும் கூட்டணியில் இணைந்தனர். ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது மகன் குமார் பொன்னம்பலமும் அவர்களது விசுவாசிகளும் அதற்கு ஒப்பவில்லை. ஆயினும், அதைப் பகிரங்கமாக எதிர்க்காமல், தமிழரசுக் கட்சி வழங்கிவந்த துரோகிப் பட்டத்தைத் தவிர்த்தனர். அகில இலங்கைத் தமிழ்க்

காங்கிரஸைச் சட்டப்படி தமதாக்க அவர்கள் பொறுமைகாக்க வேண்டியாயிற்று.

இச் சூழலில், **1976** மே **14**ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியின் பண்ணாகத்தில் அமிர்தலிங்கத்தின் வீட்டுக்கு அருகாமையில் தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு நடந்தது. மெய்கண்டான் பாடசாலையிலும் வடக்கம்பரை அம்மன் கோவில் வீதியிலும் தமிழ் உணர்ச்சி வேகத்துடன் மாநாடு இடம்பெற்றது. சிரிமாவோவின் ஆட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத நோக்குடைய இன வன்ம நடவடிக்கைகளின் நடுவே, மக்கள் அவற்றுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாகவும் அம் மாநாடு அமைந்தது. இம் மாநாட்டில், மலையகத் தமிழ் மக்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பங்குகொண்டது. எனவே தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) என்பன இணைந்தே தமிழீழப் பிரகடனத்தை வெளியிடுகின்றன என்றவாறு பிரசாரங்கள் அமைந்தன. ஆனாற் தொண்டமான் அதிலிருந்து விடுபடுவதாக விரைவாகவே பகிரங்கமாகத் தெரிவித்தார். சிறிது காலத்தின் பின், ஜி.ஜி. பொன்னம்பலமும் தனது செயல்களாற் தன் உடன்பாடின்மையை வெளிப்படுத்தினார்.

தமிழர் கூட்டணியின் **1976** மே **14**ந் திகதிய வட்டுக்கோட்டை மாநாட்டின் தமிழீழப் பிரகடனத்தின் முதல் வாசகம் பின்வருமாறு அமைந்தது: “இத் தீவில் உள்ள தமிழீழ நாட்டினத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு நாட்டினத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு சுதந்திர இறைமையுள்ள மத சார்பற்ற சோசலிசத் தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது”. இத் தீர்மானத்தின் ஆறு அம்சங்களும் தமிழீழக் குடியுரிமை, மத பிரதேச சமத்துவம், சாதி ஒழிப்பு, மதச்சார்பற்ற அரசு, அரச மொழியாகத் தமிழ் மொழி, சோஷலிச அமைப்பு என்பவற்றை வற்புறுத்தின.

“இத்தகைய தமிழீழத்தை வென்றெடுக்கத் தயங்காது

உழைக்குமாறு பொதுவாகத் தமிழ் இனத்திற்கும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கட்குச் சிறப்பாகவும் இம்மாநாடு அறைகூவல் விடுகிறது." எனத் தீர்மானம் கோரியது. அத்துடன் அடுத்து வரும் யூலை மாதம் திருகோணமலையில் நடைபெறவிருந்த தமிழர் கூட்டணி மாநாட்டில் அதற்கான செயற் திட்டத்தை முன்வைத்து விரைவில் போராட்டத்தை ஆரம்பிக்குமாறும் மேற்படி தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவிற்கு அம் மாநாடு பணிப்புரை வழங்கியது. அதே வேளை, இம் மாநாடு தமிழர் ஐக்கியக் கூட்டணி என்ற பெயரை, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என மாற்றியது. அதே பெயரில் கட்சிப் பதிவு பெற்று, உதய சூரியன் சின்னத்தைத் தன் தேர்தல் சின்னமாகப் பெற்றது. இவ் உதய சூரியன் தமிழீழத்தின் உதயத்தைக் குறிப்பதாகப் பரப்புரை செய்யப்பட்டது.

ஓர் இனமோ சமூகமோ ஆளும் வர்க்கத்தாலோ ஆதிக்க அதிகார சக்திகளாலோ அடக்கப்படும் போது, மக்களிடையே எதிர்ப்புணர்வும் போராட வேண்டும் என்ற போர்க் குணமும் எழுவது இயல்பானது. ஆனால் அத்தகைய சூழலில் அவ் இனத்தின் அல்லது சமூகத்திடையே உள்ள தலைமைத்துவச் சக்திகள் எவ்வாறான தலைமையை- குறிப்பாகக் கொள்கைசார்ந்த வழிகாட்டலை -வழங்கி மக்களை வழி நடத்துகின்றன என்பது மிக முக்கியம். அவ் வகையில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்த தமிழர் தலைமையான தமிழர் கூட்டணி, நிலவுடைமை வழிவந்த பழைமைவாதம் போற்றும் கருத்தியல், சிந்தனை, நடைமுறைகளையுடைய மேட்டுக்குடி உயர்வர்க்கத் தலைவர்களைக் கொண்டிருந்தது. இத்தகைய தலைமையை நம்பிக்கை விசுவாசத்துடன் ஏற்பதில் நிலவுடைமையையும் அந்நியக் கொலனிய மேலாதிக்கத்தையும் போற்றும் மத்தியதர வர்க்கத்துக்குச் சிரமம் இருக்கவில்லை. பெருமளவும் யாழ்ப்பாண மையப்பட்ட இச் சிந்தனைமுறை, வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் மீது இன மேன்மை, ஆண்ட பரம்பரை, வீரம், தன்மானம் ஆகிய வழிகளிற் திணிக்கப்பட்டது. இது பாராளுமன்ற அரசியலிலும் பின்பு ஆயுதப் போராட்டத்திலும் பயன்பட்டது. இன, மொழி, பிரதேச, பண்பாட்டு அடிப்படைகளில் அநீதிக்கும் புறக்கணிப்புக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்ட தமிழ்

மக்கள், தம் முன்னிருந்த தமிழ்த் தலைமைகளின் உண்மையான வர்க்கத்தன்மை பற்றியோ தம் முன் வைக்கப்பட்ட சாத்தியமற்ற, வெல்லமாட்டாத மண்குதிரைக் கொள்கைகள் பற்றியோ சீர் தூக்கிப் பார்க்கவில்லை. அவ்வாறு சீர்தூக்கிக் கொள்கை சார்ந்து கருத்துகளை முன்வைத்த மாக்சிச லெனினிசவாதிகளையும் பிற இடதுசாரிகளையும் பற்றித் தர்க்கநியாயமற்ற அவதூறுகள் பேசப்பட்ட சூழலில், அவர்கள் கூறியவற்றில் பொதிந்திருந்த உண்மைகளைப் பெரும்பாலோர் உணர மறுத்தனர் அல்லது மறுக்குமாறு பிரசாரங்கள் திணிக்கப்பட்டன.

"யார் கருத்துரைத்தவர் என்று பார்ப்பதை விட உரைத்த கருத்தில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதே சிறந்ததாகும்" எனத் தமிழ் முதுமொழிகள் கூறும். தமிழ் மேட்டுக்குடித் தலைமை தமிழீழத்திற்கான பிரகடனத்தை முன்வைத்த போது, அதன் கருத்துகளும் கொள்கைகளின் சாத்தியம், யதார்த்தம், எதிர்காலம் போன்றனவும் கவனத்தில் எடுபடவில்லை. தலைவர்கள் மீதான விசுவாசமும் நம்பிக்கையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றப்பட்டன. இன்று அதன் பின்விளைவுகளைக் காண அன்றைய தலைவர்கள் பலர் நம்மிடை இல்லை. அன்று இளைஞர்களாக இருந்தவர்களிற் சிலர் இன்று குற்ற உணர்வோடு ஏதாவது சாக்குப்போக்குக் கூறிப் பாராளுமன்றப் பாதையிற் பயணிக்கிறார்கள். அன்று முன்னின்ற பலர் புலம்பெயர்ந்து விட்டனர். **1976** மே **14**ந் திகதி தமிழீழக் கோரிக்கையைப் பிரகடனம் செய்து எட்டு நாட்களில், இலங்கையின் **4**வது குடியரசு தினம் மே **22**ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அத் தினத்தைப் பகிஷ்கரிக்குமாறும் குடியரசு யாப்பை நிராகரிக்குமாறும் தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்க ஒத்துழைக்குமாறும் கோரும் துண்டுப்பிரசுரங்களைத் தமிழர் கூட்டணி விநியோகித்தது. முக்கிய தலைவர்கள், யாழ்நகரில் பிரதான பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் புதிய சந்தைக் கட்டிடத்திற்கு முன்பாக அவற்றை விநியோகித்தனர். இளைஞர்கள் அவற்றைச் சுவரொட்டிகளாக ஒட்டினர். பொலிஸ் அவர்களில் முக்கிய தலைவர்களைக் கைது செய்தது. அவசரகாலச் சட்டத்தின் கீழ், குடியரசு யாப்பிற்கு எதிராகச் செயற்பட்டுத் தேசத்துரோகக் குற்றம் புரிந்ததாக அவர்கள் மீது

வழக்குத் தொடரப்பட்டது. தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்கள் க. துரைரத்தினம், க.பொ. இரத்தினம், வி.என். நவரத்தினம் ஆகியோர் எதிரிகளாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

அவர்கள் மீதான குற்றச்சாட்டை, மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட (யூரிமார் அற்ற) நீதிமன்றம் 1976 யூன் 18ஆந் திகதி கொழும்பில் விசாரணைக்கு எடுத்தது. இராணி வழக்கறிஞர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் ஆகியோர் உட்பட அறுபத்தொரு வழக்கறிஞர்கள் இவ் வழக்கிற் தோன்றினர். இந் நிகழ்வைத் தமிழ்த் தலைமைகள் பரபரப்பாக்கித் 'தமிழனின் மூளைத் திறனைப் பார்' என்ற விதமான பரப்புரைகளைச் செய்தன. ஊடகங்கள் தமிழ்ச் சட்ட மூளைகளை விதந்துரைத்தன. இதில் முக்கியமான வாதங்களைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார். அவர் ஏற்கனவே பெருஞ் சட்ட வல்லுனர் எனப் பெயர் பெற்றவர். ஜி.ஜி.-செல்வா பிளவு, 1948 முதல் இருந்துவந்தது. தமது அரசியல் தலைமைப் போட்டியால், இருவரும் பாராளுமன்ற அரசியலில் ஒருவரை ஒருவர் நிராகரித்தவாறு இருந்தமையை யாவரும் அறிவர். அதன் நடுவே, மேற்படி வழக்கில் தமிழரசு, காங்கிரஸ் தலைவர்கள் இணைந்து தோன்றியமை ஒருவகை ஐக்கியம் என்று கூறப்பட்டது. அதன் மூலம் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மீது தமிழரசுக் கட்சியினர் சுமத்திவந்த அரசியற் குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன. அதே வேளை, இவ் வழக்கின் வழி தமிழீழத்தை உருவாக்கும் தமது கோரிக்கையைப் பலப்படுத்தும் வாதங்கள் வலுவடையும் என்று சிலர் நம்பிக்கையூட்டினர். ஆனால் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சட்ட வாதம் தமிழீழம் பற்றியதாயிருக்கவில்லை. அதை விலக்கித், 'தொடுக்கப்பட்ட வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றத்திற்கு இல்லை' என்றவாறே அமைந்தது.

இவ் வழக்கில் வேறொரு சுவையான அம்சமும் இருந்தது. வழக்கைத் தொடுத்த சட்டமா அதிபர் சிவா பசுபதி ஆவார். நீதிபதிகள் மூவரில் ஒருவராக சிவா செல்லையா இருந்தார்.

அரசின் தரப்பில் இலங்கையின் முன்னணி வழக்கறிஞர்களாக மேலே கூறியவர்களுடன் குற்றஞ்சாட்டப்பட்டோர்க்கான வழக்கறிஞர்கள் அறுபத்தொருவரும் சுத்தத் தமிழர்களாவர். விசாரணை முடிவில், அவசரகால விதிகளின் கீழான இவ் வழக்குச் செல்லாது என நீதிமன்றம் 1976 செப்டெம்பர் 10ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. அத்துடன் சட்டமா அதிபர் வழக்கை மீளப்பெற்றார். இவற்றையெல்லாம் பெருமையாகவும் புகழாகவும் பேசியதுடன், இதுபோன்ற நடவடிக்கைகளால் தமிழீழம் கிடைக்கும் எனவும் மக்கள் அப்பாவித்தனமாக நம்பவைக்கப்பட்டனர். ஏற்கனவே 1975ஆம் ஆண்டின் நடுக்கூற்றில் தமிழ் இளைஞர் பேரவையில் பிளவு ஏற்பட்டுத் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (TPLF) தொடக்கப்பட்டது. இதில் இளைஞர்கள் பலர் இணைந்தனர். ஆனால், ஏலவே, 1974இல் தமிழ்ப் புதிய புலிகள் (TNT) என்ற பெயரில் ஓர் இயக் கம் தொடக்கப்பட்டு அதில் வே. பிரபாகரன், இன்பம், பற்றிக் போன்ற இளைஞர்கள் சேர்ந்திருந்தனர். பொன்னாலையில் யாழ் மாநகர முதல்வர் கொல்லப்பட்ட இடத்தில் டி.என்.டி. (TNT) என்ற எழுத்துகள் பொறித்த கடதாசி அட்டை இருந்தமை கவனிக்கத்தக்கது. இப் பெயர், வட்டுக்கோட்டை மாநாடு நடைபெற ஒன்பது நாட்கள் முன்பாக 5.5.1976 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் என மாற்றப்பட்டது. அது முற்றிலும் ஆயுத நடவடிக்கைகளை முன்னெடுத்துத் தமிழீழத்தை வெல்லுதற்கான தமிழ் இளைஞர்களின் அமைப்பாக நிறுவப்பட்டது.

அப்போதும் முன்னிலை வகித்த இளைஞர்கள் மத்தியில் முரண்பாடுகள் இருந்தன. அதனால் ஒருவரை ஒருவர் தீர்த்துக்கட்டும் முயற்சிகளும் இடம்பெற்றன. இவ்வமைப்பின் ஊடாகவே வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது ஆற்றல்களைப் பயன்படுத்தியும் அழிக்க வேண்டியவர்களை அவ்வப்போது அழித்தும் அணைக்க வேண்டியவர்களை அணைத்தும் பயணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை, 33 வருடங்கட்குப் பின் கடுமையான போரின் முடிவில் இலங்கை இராணுவத்தால் முல்லைத்தீவு நந்திக் கடல் அருகில் அழிக்கப்பட்டது. 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக தமிழீழக் கோரிக்கையை

முன்மொழிந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அதைப் பிரகடனப்படுத்திய பின் பத்து மாதங்களே உயிர்வாழ்ந்தார். அவ் வகையில், அவர் தனக்குச் சூட்டப்பட்ட தமிழரசுத் தந்தை என்ற பெயரைப் பாதுகாத்து, **1977** ஏப்பிரல் **27**ஆம் திகதி உயிர்நீத்தார். உடல் நலிந்த நிலையிற் தெற்கின் பேரினவாத வெறித்தனம் அதிகரித்த சூழலில் அவர் இறுதியாகக் கூறிய அரசியல் 'தீர்க்கதரிசன' வசனம் "தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்பதாகும். இது தமிழீழத்தைப் பற்றிய இயலாமையின் கூற்றா அல்லது வென்றெடுக்க முடியாமையின் தீர்க்கதரிசனமான வசனமா என்பதை அவரைத் தீர்க்கதரிசி எனக் கொண்டாடுவோர் தான் தீர்மானிக்க வேண்டும்.

செல்வநாயகத்தின் மறைவுடன் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ. அமிர்தலிங்கம் அதிகாரமும் ஆதிக்கமும் மிக்க தலைவரானார். தமிழ்க் காங்கிரசில் இருந்து சென்ற மு. சிவசிதம்பரம், திருநாவுக்கரசு, ஆனந்தசங்கரி போன்றவர்கள் கூட்டணியில் உச்ச மட்டத்துக்கு உயர முடியவில்லை. இது தமிழர் கூட்டணிக்குள் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததைச் சுட்டியது. அதே வேளை, செல்வநாயகத்தின் மகனான சந்திரகாசன் தந்தைக்குப் பின் வாரிசுரிமை கோரிக் கட்சிக்குள் வளர்ந்து தலைமைத்துவத்தை அடைவதையும் அமிர்தலிங்கம் ஆரம்ப முதலே தவிர்த்து உரியவாறு காய்நகர்த்தினார். அதில் ஒரு முக்கிய நகர்வு அவர் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட எடுத்த முடிவாகும். தான் தோற்ற (தனது சொந்த தொகுதியான) வட்டுக்கோட்டையில் மீளவும் ஒருபோதும் நிற்கமாட்டேன் என்ற அமிர்தலிங்கத்தின் சூளுரையின் பின்னால் சந்திரகாசனை ஓரங்கட்டும் நோக்கமும் இருந்தது.

செல்வநாயகத்தின் மறைவுக்கு முன்பின்னாக ஜி.ஜி. பொன்னம்பலம், மு. திருசெல்வம் ஆகியோர் இறந்தனர். கொழும்புவாசியான, திருச்செல்வத்தின் மகன் நீலன் திருச்செல்வம் அமிர்தலிங்கத்தின் தலைமையை அச்சுறுத்தும் போட்டியாளராக இருக்கவில்லை. ஆனால் தமிழரசு-காங்கிரஸ் போட்டியின் நீட்சியாகத் தந்தையின் இடத்திற்கு வந்த

குமார் பொன்னம்பலத்தை உள்வாங்குவதில் அமிர்தலிங்கம் எச்சரிக்கையாயிருந்தார். 1977ஆம் ஆண்டுத் தேர்தல் வேட்பாளர் தெரிவு அதைத் தெளிவாகக் காட்டியது. இவ்வாறான சூழலிலும் தமிழீழத்திற்கான பரப்புரைகள் வேகமடைந்தன. அதேவேளை, தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகள் முன்தள்ளப்பட்டன. காட்டிக் கொடுப்போர், உளவாளிகள் எனப்பட்டோரும் இரகசியப் பொலிசார் போன்றோரும் கொலைகட்கும் கொலை முயற்சிகட்கும் உட்பட்டனர். ஏற்கனவே சந்தேகத்தின் பேரிற் பொலிசாராற் சிறைவைக்கப்பட்டோருடன் மேலும் பல இளைஞர்கள் விசாரணையின் பேரிற் தடுத்து வைக்கப்பட்டனர். அத்தகைய சூழலில் இன உணர்வுக்கும் போராட்டத் திடசங்கற்பத்திற்கும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் முன்வந்தமை, ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வின்பாற்பட்டதாகும். அக் காலத்தில் அவ்வாறான இளம் ஆண்களும் பெண்களும் சிறை, சித்திரவதை போன்றவற்றை அனுபவித்தமையை எவ்வாறும் மறுப்பதோ கொச்சைப்படுதுவதோ தகாது. அவர்கள் தமிழீழ இலட்சியத்தைக் கொண்டிருந்தனர். அதற்கான தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் தந்தனர். மாணவர் பேரவை, இளைஞர் பேரவை, இயக்கங்கள் ஆகியவற்றிற் செயற்பட்டு இறுதியில் பிரான்சில் புகலிடம் பெற்று அங்கேயே இறந்த காங்கேசன்துறை மயிலிட்டியைச்சேர்ந்தசி. புஷ்பராஜாஅத்தகைய இளைஞர்களில் ஒருவராவார். அவர் "ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்" எனும் தனது நூலில் தமிழ் இளைஞர்களும் தானும் அனுபவித்த சிறை சித்திரவதைகளைப் பதிவுசெய்துள்ளார். அவர் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களின் இரத்தமும் வியர்வையும் சிறைவாழ்வும் சித்திரவதைகளும் சாவுகளுமெல்லாம் இன்று புறக்குடத்து நீராகிவிட்டன என உணர்த்தவே இதை இங்கு கூறுகிறேன். இது வேதனை தரும் விடயம்.

இவ்விடத்திற் தான், யாருக்காகத் தியாகஞ் செய்வது என்ற முக்கியமான கேள்வியை அன்றுமுதல் கம்யூனிஸ்டுகள் கேட்டுவருகிறார்கள். மக்களுக்காகவா, அன்றி ஒரு சில தலைவர்கட்காகவும் அவர்கள் முன்னெடுத்த சாத்தியமற்ற வெறும் உணர்ச்சியூட்டும் பிற்போக்குக் கொள்கைகட்காகவுமா?

சீனப் புரட்சியின் போது மாஓ சேதுங் கூறினார்: "மக்களுக்காக இறப்பது டாய் மாமலையினுங் கனமானது. பிற்போக்குவாதிகட்காக இறப்பது இறகினும் இலேசானது".

தமிழீழக் கோரிக்கையால் இரத்த வெள்ளத்தில் மூழ்கி இளம் ஆண்களும் பெண்களும் அடங்கலான மூன்று லட்சம் மக்களளவிற் கொன்றழிக்கப்பட்ட நிலையில், எத்தகைய கொள்கைக்காக, எந்த இலட்சியத்துடன் எவ்வாறான தலைவர்கட்காகப் போராளிகளும் மக்களும் தமது இன்னுயிரை ஈந்தனர் என்ற கேள்வி ஒவ்வொரு நேர்மையான தமிழரையும் சிந்திக்க வைக்கும். இவ்வாறு கூறுதல், பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகவும் அநீதி அட்டூழியங்கட்கு எதிராகவும் போராடியது தவறென்று சொல்வதாக யாருங் கூறமுடியாது. எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கும். எனினும், போராட்டத்தைப் பரந்துப்பட்ட மக்களின் நலன்களும் தேவைகளும் சார்ந்து உண்மையான விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கும்போதே, அதற்குப் பொருளும் பெறுமதியும் இறுதியில் வெற்றியும் கிடைக்கிறது என்பதே பட்டறிவாகும்.

1977இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்திருந்தது. டட்லி சேனநாயக்கவின் மறைவுக்குப்பின் யூ.என்.பி.யின் தலைமைக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தன அடுத்து வரவிருந்த தேர்தலை வெல்லும் வகையிற் பிரசாரத்தை முடுக்கினார். அதில் இ.தொ.கா.வின் சௌ. தொண்டமானும் முஸ்லிம் தலைவர்கள் சிலரும் இணைந்தனர். ஆனால், தமிழர் கூட்டணியினர் ஏற்கனவே தமிழீழப் பிரகடனத்தைச் செய்து அதற்கான பிரசாரத்தை வேகப்படுத்தியமையால் பேரினவாத முதலாளிய ஜே.ஆர். அதன் மீது மனதுள் வெறுப்புடன் இருந்துவந்தார். ஏற்கனவே, தமிழரசுக் கட்சியின் 1975 மாநாட்டின் போது பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட ஜே.ஆர். மல்லாகத்திலிருந்து காங்கேசன்துறை வரை ஊர்திப் பவனியில் செல்வநாயகத்துடன் அழைத்துச் செல்லப்பட்டமை இங்கு நினைவுகூரத் தக்கது.

இத்தகைய ஜே.ஆர். 1977ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் சென்றார். யாழ் முற்றவெளியில் யூ.என்.பி. சிகரம் கட்டிக் கூட்டம் நடத்தியது. ஜே.ஆர். பேச ஆரம்பித்துச் சற்று நேரத்திற் கூட்டம் குழம்பியது. ஒரு புறத்தில் தமிழ் இளைஞர் பேரவையினரும் மறுபுறத்தில் இடதுசாரி இளைஞர்களும் குழப்பம் ஏற்படுத்தத் தருணம் பார்த்திருந்தனர். ஜே.ஆர்., தனது உரையின்போது, "நான் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் அமர்ந்து தமிழரசுக் கட்சி மாநாட்டு ஊர்வலத்தில் இரண்டு மணி நேரம் ஊர்திப் பவனியிற் சென்றேன். ஆனால், கண்டி யாத்திரை பற்றி ஒரு சொல்லேனும் செல்வநாயகம் என்னிடம் கூறவில்லை" என்றார். அத்துடன் கூச்சல், குழப்பம், செருப்பெறி, என இரு புறத்திலிருந்தும் மேடையை நோக்கி இளைஞர்களும் மக்களும் திரண்டனர். கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாது போகவே, கூட்டம் இடைநடுவிற் கைவிடப்பட்டது. கூட்டத் தொடக்கத்தில் தனது பேச்சை முழுமையாகப் பேசிய காமினி திசாநாயக்க கொழும்புக்குத் திரும்பிவிட்டார். அன்று ஜே.ஆருக்கு கிடைத்த அவமானம் கண்டி யாத்திரை சென்றமைக்கான தமிழ் மக்களின் முறையான கண்டனமாகும். தமிழர் கூட்டணியின் விருப்பத்தை மீறி இளைஞர்கள் அதை வெளிப்படுத்தினர். அதில் இடதுசாரி இளைஞர்களும் தமது பங்களிப்பைச் செய்திருந்தனர். ஆனால் ஜே.ஆர். தனது பதவி ஏற்பிற்குப் பின்பும் அந் நிகழ்வை மறக்காது பேரினவாதப் பழிவாங்கலைச் செய்தமை நோக்க வேண்டியதாகும்.

தமிழர் கூட்டணி, தனது தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து, வரவிருந்த 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிடச் சகல ஆயத்தங்களையும் செய்தது. எனினும், 1970-77 காலத்தில் பல்வேறு தொழிற்சங்க அரசியல் இயக்கங்களையும் சாதியத்திற்கு எதிரான தொடர் செயற்பாட்டையும் முன்னெடுத்துவந்த மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி, தமிழர் கூட்டணி பிரகடனப்படுத்திய தமிழீழத்திற்குக் கொள்கைரீதியான எதிர்ப்பைத் தெரிவித்துவந்தது. துண்டுப் பிரசுரங்களையும் சுவரெழுத்துக்களையும் வெளியிட்டுக், கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தியது. தமிழ் முதலாளிகளைக் கொண்ட தனியார் துறையிலும் கூட்டுத்தாபன

உள்ளூராட்சி மன்றங்களிலும், தொழிலாளர்களும் ஊழியர்களும் தமது பிரச்சினைகளைப் போராட்டங்களாக முன்னெடுத்தனர். குறிப்பாக, யாழ். மாநகர சபைத் தொழிலாளர்களும் ஊழியர்களும் இன்று அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகள் பலவும் அக் கால-இடைவெளியிற் போராடிப் பெற்றவையே என்பது குறிப்பிட வேண்டியதாகும். அதேவேளை, ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஒவ்வொரு மக்கள் விரோத, தொழிலாளி வர்க்க விரோத, தமிழ்-முஸ்லிம்-மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கையையும் எதிர்த்துப் போராடுவதிலும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தன் புரட்சிகர நிலைப்பாட்டுடன் இருந்துவந்தது.

இச் சூழலிலே, **1977** யூலை **21**ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றமான தேசிய அரசுப் பேரவைக்கான பொதுத் தேர்தல் இடம்பெற்றது. மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலை முற்றாகப் புறக்கணித்தது. அதே வேளை, தமிழர் கூட்டணி தமிழீழத்திற்கான மக்களின் ஆணையைப் பெறும் தேர்தல் நீரோட்டத்தில் நீச்சல் அடித்தது. அனைத்து வடக்கு-கிழக்குத் தொகுதிகளிலும் தமிழர் கூட்டணி வெற்றி பெறுவதன் மூலம் உலகிற்குத் தமிழீழ கோரிக்கையின் நியாயத்தை எடுத்துக்காட்டி அதனை வென்றெடுப்போம் என்றனர். ஆனால் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலை முற்றாக புறக்கணித்ததுடன் தமிழீழக் கோரிக்கையின் சாத்தியமின்மை பிற்போக்குத்தனம் போன்றவற்றை மக்களுக்குப் பல்வேறு கூட்டங்களும் கருத்தரங்குகளும் மூலம் எடுத்துரைத்து விளக்கிவந்தது. ஆனால் தமிழ்த் தேசிய இன உணர்வுப் பிரசாரமே மேலேங்கியது.

# 05

# பிரகடனத்தின் உடனடித் தாக்கங்கள்

தனித் தமிழ் ஈழத்திற்கான பிரகடனம் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேறியபின் அதற்கான கடும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தின் மூலம் அதனை வெல்வது எனப் பொதுப்படையாகக் கூறியதன் பின்னால், அகிம்சை வழி, ஆயுதப் போராட்ட வழி எனும் இரண்டு நிலைப்பாடுகள் செயற்பட்டன. முன்னதைத் தமிழர் கூட்டணித் தலைமையும் பின்னதைத் தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து வந்த இளைஞர்களும் தீவிரமாக ஊக்குவித்தனர். அதையறிந்தே வரவிருந்த பாராளுமன்றத் தேர்தலை இலக்குவைத்துத் தமிழர் கூட்டணித் தலைமை செயலாற்றியது. தமிழ் இளைஞர்களைப் பயன்படுத்தி ஏகப் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றுவதில் அவர்கள் குறியாக இருந்தனர்.

இத்தகைய சூழலிலேயே 1977 யூலையில் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தல், அதிமுக்கியமான

திருப்புமுனையாயும் இலங்கையின் எதிர்காலத்தை ஓர் இருண்ட காலத்துக்குள் இழுத்துச் செல்வதாகவும் இருந்தது. தெற்கிலே ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான யூ.என்.பி. தனது தேர்தல் பிரசாரத்தைப் புதிய அரசியல் வியூகங்களுடன் முன்னெடுத்தது. ஏழு வருடங்கள் முன்பிருந்து இடதுசாரிகள் எனப்பட்டவர்களும் ஸ்ரீல.சு.க.வும் இணைந்து ஆண்டு, 1975இல் பிளவுண்ட அரசாங்கத்தைத் தோற்கடிப்பதில் ஜே.ஆர். கவனஞ் செலுத்தினார். அவருக்கு மலையகத்தின் தலைவரான தொண்டமான் பக்கபலமாக இருந்தார். ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழான பொருளாதாரக் கொள்கைகளும் மக்கள் மீதான பெருஞ் சுமைகளும் வெறுப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தன. தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதற்கென முன்னெடுத்த நடவடிக்கைகள் மக்களைப் பசி பட்டினிக்கு ஆளாக்கியிருந்தன. குறிப்பாக, 1973-75இல் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். தெற்கிற் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் விரக்தியுற்றனர். வடக்கு-கிழக்கில் இன முரண்பாடு வளர்ந்து அடக்குமுறையாகத் தன்னை வெளிப்படுத்தியது. மேற்படி நாடளாவிய நெருக்கடிச் சூழலை தெற்கில் ஜே.ஆரும் வடக்கு-கிழக்கில் தமிழர் கூட்டணியும் மலையகத்தில் தொண்டமானும் தத்தமது பாராளுமன்ற அரசியல் நிலைப்பாடுகட்குச் சாதகமாக்கினர். குறிப்பாக வடக்கு-கிழக்கில், தமிழர் கூட்டணி 1977ஆம் ஆண்டுத் தேர்தலை தமிழ் ஈழத்திற்குத் தமிழ் மக்களின் ஆணையைப் பெறும் தேர்தலெனப் பிரசாரம் செய்தது. தோழர் சண்முகதாசன் தலைமையிலான மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலைப் புறக்கணித்தது. பாராளுமன்றப் பாதையால் நாட்டைப் பொருளாதார ரீதியில் வளப்படுத்தவோ தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கவோ இயலாது எனவும் தமிழீழத்தை அடையமுடியாது எனவும் சுட்டிக்காட்டி, மக்கள் தேர்தலை நிராகரிக்க வேண்டும் எனக் கோரித் தேர்தல் காலத்தில் பரந்த பிரசாரத்தை மேற்கொண்டது.

ஸ்ரீல.சு.க.வுக்கு மோசமான தோல்வியாயமைந்த பொதுத் தேர்தல் முடிவுகள் ஸ்ரீல.சு.க.வுக்கு எட்டுப் பாராளுமன்றத்தில் ஆசனங்களை மட்டுமே வழங்கின. யூ.என்.பி. ஆறில் ஐந்து

பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது. இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்து ஒருவரேனுந் தெரிவாகவில்லை. தமிழர் கூட்டணி பதினெட்டு ஆசனங்களைப் பெற்றதோடு, பாராளுமன்ற வரலாற்றில் முதல் முறையாகத் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வர முடிந்தது. தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். தமிழர் கூட்டணிக்குப் பதினெட்டு ஆசனங்கள் கிடைத்தபோதும், அவர்கள் கோரிய தமிழீழத்திற்கான ஆணைக்குக் கிடைத்த வாக்கு விகிதம் ஐம்பத்திரண்டு சதவீதமாக மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இப் பதினெட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு எதிர்க் கட்சித் தலைமையைப் பெற்ற போதும், உரிய அரசியல் தந்திரோபாய வழிகளில் முன்செல்வதில் தமிழர் கூட்டணி பெரும் இடர்பாடுகளைச் சந்தித்தது. ஏனெனில், பெறப்பட்டது தமிழீழத்திற்கான ஆணையாயினும் வகித்தவை பாராளுமன்றப் பதவிகளும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியுமே. இது ஒரு முரண்நகையாகும்.

ஜே.ஆர். தலைமையில் யூ.என்.பி. அபரிமிதமாக ஆறில் ஐந்து பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றது. ஜே.ஆர். இலங்கையின் மிக மோசமான பேரினவாத முதலாளியவாதியாகவும் அரசியலில் நரிக்குணம் கொண்ட பிற்போக்குவாதியாகவும் இருந்தார். "முகத்திற்குக் குத்துவது போற் பாவனை காட்டி வயிற்றில் குத்த வேண்டும் என்பது அரசியலுக்கும் பொருந்தும்" என ஒருமுறை கூறிய ஜே.ஆர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூரண விசுவாசியாயிருந்தார். சேனநாயக்க குடும்பம் பிரித்தானிய ஏகாதிபத்திய வழிபாட்டாளர்களாக இருக்க, ஜே.ஆர். அதற்கும் அப்பால் அமெரிக்காவின் பாதந்தாங்கியாகவும் நேரடி முகவராகவும் விளங்கினார். இத்தகைய மனிதர் 1977இல் யூ.என்.பி.க்குத் தலைமைதாங்கி வென்றபோது அவ் வெற்றி "ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி" என்றும் "அவர் மிகச்சிறந்த ஜனநாயகவாதி" என்றும் அமிர்தலிங்கம் தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

இத்தகைய ஜே.ஆர். பிரதமர்பதவி ஏற்று ஒரு மாதம் முடியுமுன்பே,

1977 ஒகஸ்ட் 14ஆம் திகதி நாடு தழுவிய முதலாவது இன வன்செயல்கட்கு வழிவகுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் புனித பத்திரிசியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஒரு களியாட்ட நிகழ்வில் சிவில் உடையில் இருந்த சிங்களப் பொலிசாருக்கும் பொதுமக்கள் சிலருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாகி விரிவு பெற்றது. அந் நிகழ்வுக்கு இனவெறிச் சாயம் பூசிய பொலிசார் யாழ் நகரத்தில் பொதுமக்களையும் கடைகளையும் கடுந் தாக்குதலுக்கு உட்படுத்தினர். நிகழ்வுக்கு மறுநாள் கொழும்பு சென்ற இரவுப் புகையிரதத்தில் பயணித்த சிங்கள மக்கள் சிலரைத் தமிழ் இளைஞர்கள் சிலர் திட்டமிட்டுத் தாக்கினர். புகையிரதம் அனுராதபுரத்தை அடைந்தபோது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து தரித்த புகையிரதத்திற் பயணித்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். இரு தரப்பினதும் பொறுப்பற்ற தாக்குதல்களை ஜே.ஆர். நாடளாவிய இன வன்முறையாக்கினார். தமிழர்களுக்கும் தமிழீழக் கோரிக்கைக்கும் முதலாவது பதிலடியாகவும் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது தன்னைப் பேசவிடாது தடுத்துக் கூட்டத்தைக் கலைத்தமைக்குப் பழிவாங்கலாகவும் அது அமைந்தது. இவ் இன வன்முறையில் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் மட்டுமன்றி மலையகத் தமிழர்கள் சிலரும் அவர்களது தொழில்களும் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டன. உயர் வர்க்கத் தமிழர்கள் பாதுகாப்பாக இருந்தனர். சாதாரண தமிழர்கள் தாக்கப்பட்டு அழிவுகட்கும் உயிரிழப்புகட்கும் உள்ளாகினர். வழமைபோன்று சிங்களக் காடையர்கள் பொலிஸ்-இராணுவ அரசு இயந்திர உதவியுடன் தமது கைவரிசையைக் காட்டிக் கொலை கொள்ளைகளிலும் ஈடுபட்டனர். அதேவேளை, வடக்கில் தமிழ் இன உணர்வுகொண்ட இளைஞர்கள் சிங்கள மக்கள் மீதும் அவர்களது தொழில், வர்த்தக நிலையங்கள் மீதும் வெறித்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர். தமிழர் கூட்டணி திகைத்தது. தூரநோக்கற்ற தமிழ் இளைஞர்கள் இன உணர்ச்சி வசப்பட்டனர்.

இவ்வாறு 1977 ஒகஸ்ட்டில் இன வன்முறை நடந்த வேளை, அதனை உடனடியாகவே தடுத்துநிறுத்த மனமின்றிப் பரவும் வன்முறையை விட்டுப்பிடிப்பதனூடு ஜே.ஆர். தனது

பழிவாங்கும் நரித்தனத்தைக் கடைப்பிடித்தார். எதிர்கட்சித் தலைவராயிருந்த அமிர்தலிங்கம் இவ் இன வன்முறை பற்றிப் பாராளுமன்றத்தில் ஆக்கிரோசமாகப் பேசினார். ஜே.ஆர். அதற்குத் தனது பாணியிற் கூறிய பதிலே அவரது உள்ளக்கிடக்கையாகவும் இருந்தது. "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்பதே அப் பேர்பெற்ற வாசகமாகும். இச் சிங்கள பௌத்த பேரினவாத முதலாளிய மகுட வாசகத்தின் கீழேயே அன்றிலிருந்து முப்பத்திரண்டு வருடங்களாகப் போரும் போராட்டமும் இருந்துவந்ததை மீட்டுப் பார்க்கத் தகும்.

1977ஆம் ஆண்டுத் தேர்தலின் போது ஜே.ஆர். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற பொத்தாம் பொதுவான வாக்குறுதியை வழங்கிக் கொழும்பிலும் மலையகத்திலும் கிழக்கிலும் தமிழ் வாக்குகளைப் பெற்றார். யூ.என்.பி.யின் இயல்பான நேச சக்தியான மேட்டுக்குடி உயர் வர்க்கத் தமிழர்கள் ஜே.ஆரின் காலடியில் இருந்தனர். அது இன உறவுக்கு மேலான வர்க்க உறவின் வழியானதாகும். ஜே.ஆர். தமிழ் மக்களுக்கு மட்டுமன்றிச் சிங்கள உழைக்கும் மக்களுக்கும் அவர்களது வாழ்க்கைச் செலவு உயர்வை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் எட்டு இறாத்தல் தானியம் தருவதாகவும் வாக்குறுதியளித்தார். ஆனாற் பதவிக்கு வந்த பின் ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. அதனால், இனரீதியில் தமிழர்களும் வர்க்கரீதியில் சிங்களவர்களும் ஏமாந்தனர் என்பதற்கு மேலாக ஒன்றுமில்லை. இதனை அவரது ஆட்சிக்காலத்திலும் அவரைத் தொடர்ந்தவர்களின் ஆட்சிகளின் போதும் காணமுடிந்தது.

1977இல் ஆறில் ஐந்து பாராளுமன்றப் பெருபான்மையுடன் பிரதமராகிய ஜே.ஆர்., அரசியலமைப்பை மாற்றினார். புதிய அரசியலமைப்பு மூலம் "ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிரத் தன்னால் அனைத்தையும் செய்யமுடியும்" என்று அகங்காரத்துடன் கூறினார். அவ்வாறு கூறும்போது தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து திகதியிடாத பதவித் துறப்புக் கடிதங்களைப் பெற்றுத் தன்வசம் வைத்திருந்தார் என்பது நினைவு

கூரத்தக்கது. புதிய அரசியலமைப்பின் மூலம் கேடும் கேவலமும் மிக்க ஜனநாயக-விரோத நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்தது. அதன் வழி, அவர் தன்னைத் தானே ஜனாதிபதியாக நியமித்துக் கொண்டார். இந்த அரசியல் அமைப்பும் அதிகாரமிக்க ஜனாதிபதி முறையும் மேற்கின்-குறிப்பாக பிரான்சின் -அரசியலமைப்பை ஒத்ததாகும். இத்தகைய அரசியலமைப்பை வரைவதில் தமிழரசுத் தந்தை எனப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகனும் கனடாவாசியுமான பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் முக்கிய பாத்திரம் வகித்தார். இது இன உறவு கடந்த வர்க்க உறவைச் சுட்டுகிறது. இதன் ஊடாகத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் மேட்டுக்குடி வர்க்க உறவு எவ்வாறு தெற்குடன் இணைந்திருந்தது என்பதை விளங்கலாம்.

இவ்வாறு, ஜே.ஆர். கொண்டுவந்த புதிய அரசியலமைப்பு தூர நோக்குடன் ஆளும் வர்க்கப் பிடியை இலங்கை மக்கள் மீது திணித்து இறுக்கும் தன்மையோடிருந்தது. அதேவேளை, நிறைவேற்று அதிகாரத்தைத் தனிமனித விருப்புவெறுப்பிற்கு ஏற்றவாறு பயன்படுத்தலையும் அவ்வரசியலமைப்பு இயலு மாக்கியது. 1978 பெப்ரவரி 14ஆம் திகதி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ஜே.ஆர். தன்னைத் தானே நியமித்துப் பதவியேற்றதிலிருந்து இன்று வரை, அத்தகைய ஜனாதிபதியின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து நாடு விடுபட முடியாதுள்ளது.

தமிழர் கூட்டணி, பாராளுமன்றத்தில் 18 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்த போதும், எதுவும் இயலாத கையறு நிலையிலேயே இருந்தது. வடக்கு-கிழக்கில் தமிழீழக் கோரிக்கையின் உணர்ச்சி அலையால் கூட்டமைப்புக்கு வாக்கு வங்கியைப் பெருக்க முடிந்தது. ஆனால் அக் கோரிக்கையின் பிரதிபலிப்புகள் தெற்கிலும் பாராளுமன்றத்திலும் பாதகமான சூழலையே வளர்த்தன.

இவற்றின் மத்தியில், ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகளை ஆங்காங்கே விரிவுபடுத்துவதில் தமிழ் இளைஞர்கள் முனைப்புற்றனர். இளைஞர் பேரவைக்கு ஊடாகவும் அதற்கு அப்பாலும் தமிழ் இளைஞர்கள் பல்வேறு வழிகளில்

ஆயுதங்களைச் சிறு அளவிற் சேகரிக்கவும் கையாளவும் தொடங்கினர். அவர்களில் வே. பிரபாகரன், உமா மகேஸ்வரன், குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் முதலில் ஒன்றாகவும் பின்பு தனித்தனியாகவும் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்திற்கு அணிதிரட்டும் நோக்குடன் தீவிரமாகச் செயற்பட்டனர். அத்துடன் தனிமனிதக் கொலைகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபடலாயினர். இவற்றை அவர்கள் சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடனேயே முன்னகர்த்தினர். தமிழீழத்தை வென்றெடுக்க ஆயுத நடவடிக்கையை விட்டால் வழியில்லை என்ற முடிவின் அடிப்படையிற் செயற்பட்ட அவர்களிடையே முரண்பாடுகளும் குரோதமும் இருந்தன. அதனால் ஒருவரையொருவர் தீர்த்துக்கட்டும் நிலைமைகள் உருவாகின. இவற்றையெல்லாம் வெறுமே பார்த்திருந்த கூட்டணித் தலைமை, தூரநோக்குடன் எந்த வழிகாட்டலையும் வழங்கும் நிலையில் இருக்கவில்லை.

இவ்வாறு இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகள் வலுத்ததால், சில தமிழ்ப் பொலிசாரும் இரகசிய பொலிசாரும் தீவிரவாத இளைஞர்களை வேட்டையாடுவதில் மும்முரமாயினர். இன, மத, மொழிச் சார்பு என்பவற்றுக்கு மேலாகச் சொத்துடைய உயர்வர்க்கச் சக்திகளையும் ஆளும் வர்க்கத்தினரையும் பாதுகாப்பதேஅரசுஇயந்திரத்தின்அடிப்படைப்பொறுப்பாகும். அதனால் தமிழ்ப் பொலிசார் இத் தமிழ் இளைஞர்களைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்தும் நோக்கிற் தீவிரமாகச் செயற்பட்டனர். அதில், பஸ்தியாம்பிள்ளை என்ற இரகசியப் பொலிஸ் அதிகாரியின் தலைமையிலான இரகசியப் பொலிசார் புலி வேட்டையில் இறங்கினர். அதில் அவர்கள் மும்முரங் காட்டியதாலேயே **1978** ஏப்ரல் மாதம் பஸ்தியாம்பிள்ளையும் அவருடனிருந்த இரண்டு பொலிசாரும் புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களாற் கொல்லப்பட்டனர். இந்நிகழ்வு ஜே.ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கத்திற்குப் பெருஞ் சவாலாகியது. எனவே அரசாங்கம், **1979**ஆம் ஆண்டு **48**ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. பதவியேற்று இரண்டு ஆண்டுகளில் ஜே.ஆர். அரசாங்கம் நிறைவேற்றிய இப் பயங்கரவாத தடைச்சட்டம்

(PTA), மிகக் கொடூரமான சட்டமாக இன்றுவரை நீடிக்கிறது. இச் சட்டத்தின் கீழ்க் கைதாகும் ஒருவரைப் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுப்படி விசாரணையின்றி ஒன்றரை வருடங்கட்கு (18 மாதங்கள்) தடுத்து வைக்கவும், தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்து விசாரிக்கவும் முடியும். எந்த நீதிமன்றமும் அதைக் கேள்விக்குட்படுத்தவோ அதிற் தலையிடவோ முடியாது. மேலும், அதன் கீழ்க் கைதான ஒருவர் சுயமாக வழங்கும் வாக்குமூலத்தையும் அவரை நிர்ப்பந்தித்துப் பெறும் வாக்குமூலத்தையும் முக்கிய சாட்சியமாக நீதிமன்றத்தில் கொள்ளக் கூடியவாறும் அச் சட்டம் வரையப்பட்டது. மனித உரிமை ஆர்வலர்களும் ஜனநாயகவாதிகளும் இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் அதன் நிறைவேற்றத்தை வன்மையாக எதிர்த்தபோதும், அதில் எதுவும் அரசாங்கத்தின் காதுகளில் விழவில்லை. இதன்முரண்நகையாதெனில், தமிழ்இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளை அடக்க அச் சட்டத்தைத் தற்காலிகமாகக் கொண்டுவருவதாக ஜே.ஆர். விளக்கம் அளித்தபோதும், அது, விரைவாகவே தமிழ் இளைஞர்களைக் கடந்து பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களையும் சாதாரண சிங்கள மக்களையும் வேட்டையாடியது. இன்றும் அக் கொடிய சட்டத்தின் கீழ்த் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் இளைஞர்கள் நீண்டகாலமாக விசாரணையின்றிச் சிறையில் இருந்துவருகின்றமையை இவ்வேளை நினைவுகூர வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, 1979 யூலை 11ஆம் திகதி முதல் வடக்கில் அவசரகாலச் சட்டம் பிரகடனமானது. பிரகடனஞ் செய்து மூன்று நாட்களுள், யூலை 14ந் திகதி, வட பகுதிக்கான இராணுவ-பொலிஸ் கூட்டுப்-படைத் திட்டத்தின் கீழ் விசேட படையணி அமைக்கப்பட்டது. அதன் தலைமைப் பதவி ஜே.ஆருக்கு மருமகன் முறையான பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க எனும் இராணுவ உயரதிகாரிக்கு வழங்கப்பட்டது. அவரை யாழ்ப்பாணம் அனுப்பிய வேளை "சென்று வா, வென்று வா" என ஜே.ஆர். வாழ்த்தி அனுப்பினார். அதனைத் தொடர்ந்து இளம் ஆண்களையும் பெண்களையும் தேடிப்பிடித்துக் கொல்வதும் விசாரணை என்ற

பெயரில் சித்திரவதை செய்வதும் வேகம்பெற்றன. தீவிரவாத இளைஞர்களான இன்பம், செல்வரத்தினம் ஆகிய இருவரைக் கடத்திச் சித்திரவதைக்குட்படுத்திக் கொன்று பண்ணைக் கடலுக்கு அப்பால் வீசியமை அதன் முதல் நடவடிக்கையாகவும் வடபகுதியின் அதிர்ச்சி தரும் முதலாவது இளைஞர் கொலை நிகழ்வாகவும் அமைந்தது. அதைச் செய்தவர்கள் இராணுவத்தையும் பொலிசையும் சேர்ந்தவர்களை விட வேறெவரும் அல்லர் என மக்கள் அறிந்திருந்தனர். அதனால் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் ஆத்திரமும் மேலெழுந்தன. அதைத், தமிழ் இளைஞர்கள் தமது ஆயுத நடவடிக்கைக்கான நியாயமாக்கவும் போராட்டத்தின் அவசியத்தை வற்புறுத்தவும் தகுந்த ஏதுவாக்கினர்.

இவ்வாறு இராணுவ ஒடுக்குமுறை வடக்கில் அப்பட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. “எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கும். எங்கு போராட்டம் உண்டோ அங்கு தியாகங்களும் இருந்தே தீரும். ஆனால் அனாவசியமான தியாகங்களைத் தவிர்க்க வேண்டும்” என்பது தோழர் மாவோவின் அறிவுறுத்தல். இத்தகைய ஒழுங்குபட்ட போராட்ட வழிகாட்டல் தமிழ் இளைஞர்கட்கு இருக்கவில்லை. முற்றிலும் சிறு முதலாளியத் தலைமையிலான இராணுவக் கண்ணோட்டம் மிகுந்த செயல்களாகவே விடயங்கள் விருத்திபெற்றன. சுருங்கக்கூறின், இராணுவ அடக்குமுறை போராட்டத்திற்கு உந்துதல் கொடுத்தது. ஆனாற் போராட்டம் தவறான தலைமைகளின் கீழ் திசையற்றுப் பயணித்தது.

இத்தகைய சூழலில், 1979ஆம் ஆண்டில், ஜே.ஆர். அரசாங்கத்தின் கீழ் இரண்டாவது தடவையாக இன வன்முறை ஏவப்பட்டு ஆங்காங்கே தமிழர்கள் தாக்கிக் கொல்லப்பட்டனர். பல வர்த்தக நிலையங்களும் கடைகளும் எரிக்கப்பட்டன. இவ் இன வன்முறையில் மலையகத் தமிழ் மக்கள் கணிசமாகப் பாதிக்கப்பட்டனர். இரத்தினபுரி மாவட்டத்தில் சிங்கள இனவெறிக் காடையர்களின் தாக்குதலுக்குட்பட்ட தோட்டத் தொழிலாளர்களையும் தோட்ட லயன்களையும் பார்வையிட ஜனாதிபதி ஜே.ஆர். சென்றபோது, தமக்கு இழைக்கப்பட்ட

அநீதிகளையும் அட்டூழியங்களையும் பற்றித் தொழிலாளர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டனர். அவ்வேளை, ஒரு நாட்டின் ஜனாதிபதி என்பவர் நடக்கவேண்டிய குறைந்தபட்சப் பண்புடனோ மனிதாபிமானத்துடனோ நடவாது, மிகத் தாழ்ந்த இனவாதியாகவே தொழிலாளர்களுடன் ஜே.ஆர். உரையாடினார். "இப்போது தெரிகிறதா தமிழீழம்? கோழி தருவோம், முட்டை தருவோம், தமிழீழம் மட்டும் தரமாட்டோம். விளங்குகிறதா?" எனப் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து கிண்டலாகவும் நக்கலாகவும் ஜே.ஆர். கேட்டமை மறக்க முடியாததாகும். யாழ்ப்பாணத்தை அறியாத சாதாரண தோட்டத் தொழிலாளர்களைத் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இன வன்முறைக்கு உள்ளாக்கி அவர்களது லயன்களை எரித்த சிங்களக் காடையர்களின் ஈனச்செயலை ஊக்குவித்த ஜே.ஆரின் பேச்சு மேலும் இனவெறி உணர்வேற்றியது. ஆனால் இத்தகைய ஜே.ஆரை ஜனநாயகத் தலைவராக ஏற்று, இ.தொ.கா. தலைவர் தொண்டமான் அவரது யூ.என்.பி. அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார். யூ.என். பி.யின் இருண்டகாலம் (1977-1994) முழுவதும் அவ் அமைச்சர் பதவி அவர் வசம் இருந்தது.

பாராளுமன்றத்தில் 18 ஆசனங்களுடனும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியுடனும் இருந்த தமிழர் கூட்டணி, ஏதாவது வகையில் பேச்சுவார்த்தை நடத்திக் குறைந்தபட்சமாக எதையேனும் பெற்றுத் தமிழ் மக்களையும் தமிழ் இளைஞர்களையும் தாக்காட்டலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தது. ஆனால் ஜே.ஆரினதும் யூ.என்.பி.யினதும் முழுக் கவனமும் எவ்வாறு தமிழீழக் கோரிக்கையை இல்லாமற் செய்யலாம் என்பதிலேயே இருந்தது. வடக்கு-கிழக்குக்கு வெளியே தமிழீழக் கோரிக்கையை அடக்கிவாசித்த கூட்டணி, வடக்கு-கிழக்கில் அதை நீட்டி முழக்கியது. வருடாவருடம் இடம்பெறும் மே தினக் கூட்டத்தின் போது, குறிப்பாகத் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் உரத்துப் பேசும்போது, "அடுத்த மே தினம் தமிழீழத்தில் தான் நடைபெறும்" எனச் சூளுரைத்த நிகழ்வுகள் மீளமீள நடந்து, வெறும் பேச்சாகத் தொடர்ந்தன.

அதே வேளை, தமிழீழம் என்பது, அதிகபட்சம் கேட்டுக் குறைந்த பட்சமாவது பெறும்ஒருவகைத்தந்திரோபாயம்எனக்கூட்டணித் தலைமை ஒரு வியாக்கியானத்தையும் கொடுக்கலானது. அதன் அடிப்படையில் இரு தமிழ் அரசியல் விற்பன்னர்கள் சேர்ந்து ஜே.ஆரிடம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பெற மிகவும் முயன்றனர். ஒருவர் ஜே.ஆருக்கு மிக நெருக்கமானவரும் ஏற்கனவே ஜே.ஆரின் அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு உதவி புரிந்தவரும் கனடா வாழ் மேட்டுக்குடித் தமிழருமான ஏ.ஜே. வில்சன். மற்றவர் முன்னர் தமிழரசுக் கட்சியின் சார்பில் டட்லி சேனநாயக்க அரசாங்கத்தில் அமைச்சராயிருந்த மு. திருச்செல்வத்தின் மகனான நீலன் திருச்செல்வம். தமிழர் கூட்டணிக்கும் ஜே.ஆருக்குமிடையில் இவர்கள் அரசியற் தரகர்களாகச் செயற்பட்டதால், மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைக்கவும் அவற்றுக்கு அற்ப சலுகை அதிகாரங்கள் கொடுக்கவும் இணக்கங் காணப்பட்டது. தமிழீழம் முடிந்த முடிவெனக் கோலாகலமாக வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழர் கூட்டணியினர், அதிகாரமேதுமற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகட்கு இணங்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இம் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தீர்வைத் தமிழ் இளைஞர் போராட்ட அமைப்புகள் நிராகரித்து, அதற்குரிய தேர்தலை முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டின. தேர்தலுக்கு முன் நடந்த கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கித் தாக்குதல் நிகழ்ந்தது. 1981இல் நடந்த மாவட்ட சபைத் தேர்தலின்போதும் ஆங்காங்கே துப்பாக்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன. அவற்றில் பொலிசார் உட்படச் சிலர் கொல்லப்பட்டனர். இத் தேர்தலின் போதே கள்ளமாக வாக்குப்பெட்டி மாற்றும் முறையை யூ.என்.பி. பரீட்சித்தது. காமினி திசாநாயக்க தலைமையில் முக்கிய பிரமுகர்கள் கொண்ட யூ.என்.பி.யின் குழு அதற்காக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வாக்கு மோசடிகளில் ஈடுபட்டதுடன், தேர்தலைத் தொடர்ந்து, மூன்றாம் முறையாக இன வன்முறையைக் கட்டவிழ்த்தது. 1.6.1981 அன்று, புகழ் பெற்ற யாழ்ப்பாண நூலகம் 96,000 நூல்களுடன் எரிந்து சாம்பலானது. இப் பாதகச் செயலுக்கு யூ.என்.

பி.யின் உயர் மட்டத்தவர்களே முன்னின்று வழிகாட்டினர் என்பது பகிரங்க இரகசியமாகும். இதில் இன்னொரு வினோதம் யாதெனில் இவ் வன்முறைக்கும் நூலக எரியூட்டலுக்கும் யாழ் நகரில் தங்கியிருந்து வழிகாட்டிய யூ.என்.பி. அமைச்சர், உயர் பிரமுகர்களுடன் தமிழ்ப் பிரமுகர்களும் இருந்தமையாகும். இவ்விடத்து, இனமல்ல வர்க்கமே முதன்மையானது என்பது துலக்கம் பெறுகின்றமை நோக்கற்குரியது.

இன முரண்பாடும் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையும் முன்தள்ளப்பட்ட சூழலிலேயே இலங்கையில் உலகமயமாதல் நிகழ்ச்சிநிரலின் கீழான தாராளமயமும் தனியார்மயமும் இலங்கைக்குள் இழுத்து வரப்பட்டன. தேசிய இனப் பிரச்சினை பூதாகரமானதன் மறைவில் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் இலங்கையில் தன் கைவரிசையைக் காட்டியது. அதற்கு ஜே.ஆர். செங்கம்பள வரவேற்பளித்தார். இச் சர்வதேசப் பொருளாதார ஊடுருவல்கள் பற்றித் தமிழர் கூட்டணியோ ஏனைய ஆளும் வர்க்கத் தரப்புகளோ ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. நவகொலனியத்திற்குள் நாட்டை அமிழ்த்தும் திட்டம் இன மத மொழி பேதமற்று அனைத்து இன மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளாலும் ஏற்கப்பட்டது. மக்களிடமிருந்து இந் நிகழ்ச்சிநிரலை மறைக்குமாறு போர் தீவிரமாக்கப்பட்டது.

# 06

# வலுக்கும் அரச ஒடுக்குமுறை

*1980முதல்1990வரையானகாலம், இலங்கைவரலாற்றில் அரசியல் பொருளாதார சமூகக் கொந்தளிப்புகள் மட்டுமன்றி அவற்றின் காரணமான இரத்தப் பலிகளும் உயிரிழப்புகளும் பாரிய அளவில் இடம்பெற்ற காலமாகும். அவற்றுக்குக் கெடுமதிமிக்க பேரினவாத முதலாளிய ஏகாதிபத்திய அடிவருடியான ஜே.ஆரும் அவரது யூ.என்.பி. அரசாங்கமும் தலைமைவகிக்க, வர்க்க ஒடுக்குமுறை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இவற்றின் மறைவில் நாட்டைத் தாராளமயத்திற்கும் தனியார்மயத்திற்கும் உள்ளாக்கும் நிகழ்ச்சிநிரல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சி, இன்றுவரை ஒரு தடையுமின்றி நவதாராளவாத உலகமயமாக்கற் போக்குடன் பிணைக்கப்பட்டுள்ளது. இப் போக்கின் எதிர்கால ஆபத்துப் பற்றி நாட்டின் இடதுசாரி, ஜனநாயக, முற்போக்குச் சக்திகள் எச்சரித்து வந்ததுடன் அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் ஆரம்பித்தன.*

ஆனால் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான தமிழர் கூட்டணியும் அதன் தலைவரான அமிர்தலிங்கமும் தாராளமயம்-தனியார்மயத்தை எந்த நிலையிலும் எதிர்க்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அது அவர்களது முதலாளி வர்க்க நிலைப்பாட்டையும் ஏகாதிபத்தியச் சார்பையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தியது.

இச் சூழலிலேயே தென்னிலங்கையிற் பொருளாதார நெருக்கடி தீவிரமானது. 1977ஆம் ஆண்டுத் தேர்தலின் போது சாதாரண பொது மக்களைக் கவர்வதற்காக ஜே.ஆர். முன்வைத்த ஒரு ஏமாற்று, "எட்டு இறாத்தல் தானியம் தருவேன்" என்பதாகும். வெறும் மொட்டை வசனமாக வழங்கிய அத் தேர்தல் வாக்குறுதி மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாகியது. ஜே.ஆர். அதற்குக் கொடுத்த விளக்கம் "எட்டு இறாத்தல் மட்டுமல்ல எண்பது இறாத்தலையும் வேண்டியபடி கடைகளில் வாங்கக் கூடியதாகத் தாராள இறக்குமதி செய்யப்பட்டுள்ளது" என்பதாகும். பொருட்கள் வெளியில் இருந்து தாராளமாக இறக்குமதியான போதும் அவற்றின் விலைகள் யானை விலை குதிரை விலையாக இருந்தன. அதே வேளை, உள்ளூர் உற்பத்திகள் நலியலாயின.

இச் சூழலிலேயே தொழிற் சங்கங்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்தன. 1980 யூலையில் முன்னூறு ரூபா சம்பள உயர்வு கேட்டு இடதுசாரித் தொழிற் சங்கங்கள், குறிப்பாக அரசாங்க ஊழியர்கள், இன, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இச் சம்பள-உயர்வுப் போராட்டத்தில் தமிழர் கூட்டணி பங்கு கொள்ளவுமில்லை, அதை ஆதரிக்கவுமில்லை. வழமையாகவே, தென்னிலங்கையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களிலோ இதர வெகுஜனப் போராட்டங்களிலோ இறங்கி ஆட்சியதிகாரத்திற்கு எதிராக நிற்கும் வேளைகளில் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் தமிழ்த் தொழிலாளர்களையும் மக்களையும் அவற்றிற் கலந்துகொள்ளாது மறிப்பார்கள். அதற்கு அவர்கள் கூறிவந்த காரணம் "அவை அவர்களுக்குள் உள்ள பிரச்சினை, நாம் அதிற் பங்குகொள்ள வேண்டியதில்லை" என்பதாகும்.

ஆனால், உண்மைக் காரணம், தமிழ்க் குறுந்தேசியவாதிகளின் மேட்டுக்குடி உயர்-வர்க்க நலன்களைப் பேணுவதாகும். அத்தியாவசியச் சேவைகள் சட்டத்தின் கீழ், வேலைநிறுத்தம் துப்பாக்கிமுனையில் முறியடிக்கப்பட்டு, ஏறத்தாழ எழுபத்தையாயிரம் அரசாங்க ஊழியர்கள் வேலை நீக்கி வீதியில் விடப்பட்டனர். வேலை இழந்த பலர் நீண்டகாலத்தின் பின் சிறிதுசிறிதாக வேலையில் சேர்க்கப்பட்டனர். வேலை இழந்து மீளச் சேர்க்கப்படாதோர் இன்றுமுள்ளனர். அவர்களில் வடக்கு-கிழக்கின் தமிழர்களும் அடங்குவர். வேலை மீளக்கிடைக்காத விரக்தியால் முப்பதுக்கு மேற்பட்டோர் தற்கொலை செய்தனர். பாதிக்கப்பட்டோருக்காக உருவான “1980 யூலை வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தோர் சங்கம்” இன்னமும் இயங்கி வருகிறது. இவ் அனுபவம், தொடரும் வர்க்க ஒடுக்குமுறைக்கு ஓர் உதாரணமாகும்.

மேற்கூறியவாறு அரசு வர்க்க அடக்குமுறையை நாடு முழுவதும் கட்டவிழ்த்தபோது அதற்கு எதிர்ப்போ கண்டனமோ தெரிவிக்காத தமிழர் கூட்டணி, ஜே.ஆர். முன்வைத்த ஏமாற்றுத்தனமான மாவட்ட அபிவிருத்தி சபைகட்கு இணங்கியது. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகனான ஏ.ஜே. வில்சனும் மு. திருச்செல்வத்தின் மகனான நீலன் திருச்செல்வமும் அதை ஒரு சட்டமாகவும் தமிழர்கட்கான அதிகாரப் பரவலாக்கமாகவும் காண்பித்து அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் முன்னின்றனர். இருவரும் அமெரிக்க விசுவாசியான ஜே.ஆரின் நம்பிக்கைக்கு உரித்தானோர் என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்ட அபிவிருத்த சபைகட்குத் தமிழர் கூட்டணி தனது பூரண ஆதரவைத் தெரிவித்தது. தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு 1977இல் ஆணை பெற்றதாகவும் அதை முடிந்த முடிவு எனவும் கூறிவந்த கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றதன் மூலம் தமது முன்னைய பிரகடனத்திற்குக் குழிவெட்ட முன்னின்றனர். வளர்ந்துகொண்டிருந்த அன்றைய இளைஞர் இயக்கங்கள் அவர்களது முடிவை ஏற்க மறுத்தன. சில இயக்கங்கள் அதைக் கடுமையாக எதிர்த்தன. வெகு சில, கூட்டணித் தலைமையின் முடிவை ஏற்றன.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்கள் வடக்கு-கிழக்கில் இடம்பெற்றன. யாழ் மாவட்டத்திற்கான தமிழர் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ் நாச்சிமார் கோவிலடியில் இடம்பெற்ற போது அங்கு தமிழர் இளைஞர் இயக்கம் ஒன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததிற் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமும் அடைந்தனர். தமிழ் இளைஞர் இயக்கங்கள் சில, தேர்தல் தினத்தன்றும், சில இடங்களில் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தின. இத் தேர்தலின் போதே, வாக்குப்பெட்டி மாற்றும் மிக நுட்பமான "ஜனநாயகச் செயற்பாடு" அமைச்சர்களின் நேரடிக் கண்காணிப்பில் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்தே யூ.என்.பி.யின் மூன்றாவது இன வன்முறை தமிழர் பிரதேசம் எங்கும் கட்டவிழ்க்கப்பட்டது. அதன்போதே புகழ்பெற்ற யாழ்ப்பாணப் பொது நூலகத்தை அதன் 96,000 நூல்களுடன் சிவில் உடையணிந்த பொலிசார் கொழுத்திச் சாம்பராக்கினர். இந் நிகழ்வு தமிழ் மக்கள் மத்தியில் கடும் சோகத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. அதே வேளை, அது தமிழீழத்திற்காக ஆயுதம் ஏந்திய இளைஞர்களிடையே தாம் அவ்வாறு நிற்றற்கான தார்மீக நியாயத்தையும் வலுப்படுத்தியதுடன், இளைஞர் இயக்க நடவடிக்கைகள் விரிவுபெறவும் புதியவர்கள் இணையவுமான சூழலைத் தோற்றுவித்தது. ஆயுதங்களைச் சேகரிப்பதிலும் பயிற்சிகளை மேற்கொள்வதிலும் இளைஞர்கள் மும்முரமாயினர். அதற்கான நிதியைப் பெறப் புலோலி வங்கியைக் கொள்ளையடித்தனர். பின்பு நீர்வேலியில் வங்கிப் பணத்தைக் கொண்டுவந்த வாகனத்தை வழிமறித்துக் கொள்ளையடித்தனர். இவ்வாறு பெற்ற பணமும் தங்க நகைகளும் இளைஞர்களின் இயக்க வளர்ச்சிக்கு என்ற நியாயத்தை தமிழ் மக்கள் மெளனமாக ஏற்றனர். அது அரச பணம் தானே என அமைதி கண்டவர்களும் இருந்தனர். அரச ஒடுக்குமுறை காரணமாக, இவற்றில் உள்ளடங்கிய எதிர்காலத்திற்குப் பாதகமான விருத்திப் போக்குகளை மக்கள் அதிகம் கருத்திற்கொள்ளவில்லை. தனிப்பட்டோர் கொலைகளையும் கொள்ளைகளையும் அமைப்புமுறையிற் கட்டுப்பாடற்ற இளைஞர் இயக்கப் போக்குக்களையும் மக்கள் விமர்ச்சித்த சந்தர்ப்பங்கள் குறைவு.

மாக்சிச லெனினிசவாதிகளும் பிற இடதுசாரிகளும் இத்தகைய போக்கின் எதிர்கால அபாயம் பற்றித் தூரநோக்குடன் சுட்டிக்காட்டிக் கருத்துகளை முன்வைத்த போதும், இன உணர்வு அலையின் முன் அவை செல்லவில்லை.

ஒரு புறம் ஜே.ஆர். தலைமையிலான பேரினவாத முதலாளிய ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடு வலுப்பெற, மறுபுறம் ராணுவ ஒடுக்குமுறையை எதிர்த்த தமிழ் இளைஞர்களின் செயற்பாடுகளும் வலுப்பெற்றன. தெற்கில் உருவாகி வளர்ந்த இடதுசாரி, தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கொடிய அரசு இயந்திர ஒடுக்குமுறை மூலம் கையாண்ட ஜே.ஆர்., பொலிஸ், இராணுவத்துடன் தனது குண்டர் படைகளையும் பயன்படுத்தி வேலை நிறுத்தத் தொழிலாளர்களைத் தாக்கினார். இதில் சோமபால என்ற கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர் கொல்லப்பட்டார். 1977இல் உள்நோக்கத்துடன் விடுதலை செய்த இடதுசாரி வேடதாரியான ரோகண விஜேவீரவை இடதுசாரிகட்கெதிராகப் பயன்படுத்தி வந்த ஜே.ஆர்., இவ் விடயத்திலும் மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப ஜே.வி.பி.யைப் பாவித்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் இன ஒடுக்குமுறைக்கு எதிராக வளர்ந்துவந்த உணர்வும் உத்வேகமும் காரணமாகத் தமிழ் இளைஞர் அமைப்புகள் தோன்றி வளர்ந்த அதேவேளை, அவற்றின் ஆரம்பத் தலைமையில் இருந்தோரிடையான கருத்து முரண்பாடுகளின் பயனான கொலை முயற்சிகளும் அரச படைகளிடம் காட்டிக்கொடுத்தலும் இடம்பெற்றன. 1981ஆம் ஆண்டு நான்காம் மாதம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர்கள் எனப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகிய இருவரை வடமராட்சிக் கடற்கரையில் அரச படையினர் கைது செய்தனர். இது ஒரு காட்டிக்கொடுப்பு என்றும் அதில் மற்றொரு இயக்கம் சம்மந்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு விசாரணை கொழும்பில் நடந்து இருவருக்கும் 13.8.1982 அன்று மரணதண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிட வேண்டியதாகும். அதே காலப் பகுதியில், சகோதரப் படுகொலைகளும் அரங்கேறலாயின. புலிகள் இயக்கத்தின்

ஆரம்பத் தலைவர்களில் ஒருவரான உமா மகேஸ்வரன் தலைமையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைக்கப்பட்டு அதன் ஆயுத நடவடிக்கைகளும் மக்கள் மத்தியிலான வேலைகளும் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன. சுந்தரம் என அழைக்கப்பட்ட சிவசண்முகமூர்த்தி என்ற இளைஞர் அதில் முன்னணியில் நின்ற ஒருவராவார். அவரிடம் மக்கள்-சார்பும் இடதுசாரிக் கருத்துகளும் மேலோங்கி இருந்ததுடன், அவர் ஆயுதச் செயற்பாட்டிலும் வல்லவராயிருந்தார். வடபுலப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களின் முதல் நடவடிக்கையாக ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் அவரது தலைமையிற் தாக்கப்பட்டது. அத்தகைய ஆற்றலுடைய சுந்தரத்தின் வளர்ச்சி தனக்கு ஆபத்தானது என முடிவுசெய்த பிரபாகரனின் நேரடி வழிகாட்டலில் பட்டப்பகலில் வெலிங்டன் சந்தியில் அமைந்த சித்திரா அச்சகத்தில் சுந்தரம் சுட்டுக்கொலப்பட்டார். சகோதரப் படுகொலைகட்கு இது குறிப்பிடத்தக்க உதாரணமாகும். இதுபோன்ற சகோதரப் படுகொலைகள் பல, அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்தன. பல கொலைகள் வெளியே தெரியவரவில்லை. இவற்றிடையே, அளவெட்டியைச் சேர்ந்த இறைகுமரன், உமைகுமாரன் எனும் துடிப்பான இயக்க இளைஞர்கள் இருவரைப் புளொட் இயக்கம் கொன்ற செய்தியும் கசிந்தது. இவையாவும் வளர்ந்துவந்த தமிழ் ஆயுத இயக்கங்களின் எதிர்காலத்துக்குத் "துர்ச்சகுனங்களாகின" என்பதைக் கடந்த மூன்று தசாப்த காலத் தமிழீழப் போராட்டம் நூறு சதவீதம் நிரூபித்துள்ளது.

தெற்கிலே ஜே.ஆர். தனது ஆட்சி அதிகாரத்தை நீடித்து நிலைநிறுத்தத் தனது காய்நகர்த்தல்களைச் செய்துவந்தார். தனது பிரதான போட்டியாளரான முன்னாள் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை முன்கூட்டியே பறித்து அவர் தேர்தல்களில் போட்டியிடாதவாறு செய்தார். மேலுஞ் சில முக்கிய எதிர்க் கட்சிப் பிரமுகர்கட்கும் குடியுரிமை பறிக்கப்பட்டது. இன்றுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பை **1978**இல் கொண்டுவந்து, **4.2.78** அன்று தன்னைத்தானே ஜனாதிபதி ஆக்கிய ஜே.ஆர்., ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிய ஒன்றரை வருடங்கள் முன்பே தன்

இரண்டாவது தவணைக்கான ஜனாதிபதித் தேர்தலை 1982 ஒக்ரோபர் மாதத்தில் நடத்தினார். இத் தேர்தலில் ஜே.ஆர்., ஹெக்டர் கொப்பேகடுவ, குமார் பொன்னம்பலம், ரோகண விஜேவீர, கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோர் பிரதானமாகப் போட்டியிட்டனர். அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் கூட்டணி எத் தீர்மானத்தையும் எடாமல் நழுவற் போக்கைக் கடைப்பிடித்து ஜே.ஆருக்கு மறைமுகமாக உதவியது. இது வரலாற்று ரீதியில் தமிழரசுக் கட்சியும் பின்பு தமிழர் கூட்டணியும் தெற்கின் யூ.என்.பி.யுடன் பேணிய வர்க்க கூட்டிணைவையும் அடிமைத்தனமான விசுவாசத்தையும் வெளிப்படுத்தியது. (இத் தொடர்பில் பகிஷ்கரிப்பைக் கோரிய இளைஞர்கள் கைதானமை பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட கருத்துகளை பின்னிணைப்பு-1இற் காண்க.) ஆனால், தமிழர் கூட்டணியின் துரோகத்தனமான நழுவல் போக்கை அடையாளம் கண்ட வடபுலத் தமிழ் மக்கள், குமார் பொன்னம்பலத்திற்கும் ஹெக்டர் கொப்பேகடுவவுக்கும் முறையே 85 ஆயிரம், 77 ஆயிரம் வரையான வாக்குகளை அளித்து ஜே.ஆருக்கு அவற்றிலும் குறைந்த வாக்குகளை அளித்தனர். அது ஜே.ஆரின் பேரினவாத வெறியை மேலும் தூண்டியதுடன், யூ.என்.பி. குண்டர்களும் இனவெறியர்களும் மீண்டுமோர் இன வன்முறைக்குத் தயாராகினர். வடபுலத்து மக்களின் எதிர்ப்பும் தமிழர் கூட்டணியின் இயலாமையும் இத்துடன் முடியவில்லை.

1982 டிசம்பரில், அடுத்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலைத் தவிர்க்குமாறு பாராளுமன்றத்தின் ஆயுளைச் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நீடிக்கும் ஜனநாயக-விரோத முயற்சியில் ஜே.ஆர். இறங்கினார். பாராளுமன்ற ஆயுளைத் தேர்தல் இன்றி நீடிப்பதற்கு "ஆம்" என்றும் அவ்வாறு செய்யலாகாது என்பதற்கு "இல்லை" என்றும் சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்குமாறு மக்கள் கேட்கப்பட்டனர். தமது பாராளுமன்ற ஆசனங்கள் பதினெட்டையும் பாதுகாத்து நீடிப்பதை மனதுள் விரும்பிய தமிழர் கூட்டணியினர், இவ் வாக்கெடுப்பிலும் ஜே.ஆருக்குச் சாதகமாக நடந்தனர். அதனால் சர்வசன வாக்கெடுப்பிலும் அவர்கள் எந்த எதிர்ப்பிரசாரத்திலும் ஈடுபடவில்லை. ஆனால் தமிழ் மக்கள்- குறிப்பாக வடபுலத்து மக்கள் -இவ்

வாக்கெடுப்பிலும் "இல்லை" என்று ஆகக் கூடிய சதவீதத்தில் வாக்களித்தனர். அவ்வாறே மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் "இல்லை" என்பதற்கே மிகக் கூடுதலாக வாக்களித்தனர். அதன்மூலம் தமிழர் கூட்டணி முகத்திற் கரிபூசப் பெற்றது. அத்துடன் அது பாராளுமன்ற அரசியலிற் கூட்டணி பயன்படுத்திவந்த ஏமாற்று வாக்குறுதிகளையும் தமிழ் மக்களிடையே அம்பலமாக்கியது.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ விடுதலைக் கழகம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பன அவற்றின் ஆங்கில எழுத்துகள் மூலம் பிரபலம் பெற்றன. அவை முறையே LTTE, TELO, PLOTE, EPRLF என்பனவாம். இவை தனித்தனியே தமிழ் இளைஞர்களை அணிதிரட்டி ஆயுதப் பயிற்சிகளை ஆரம்பித்தன. அவற்றின் கொள்கை, நடைமுறை, தந்திரோபாயம், இலக்கு என்பன பற்றி அடுத்துவரும் அத்தியாயங்களிற் காண்போம்.

ஒருபுறம், தமிழர் கூட்டணியின் தூரநோக்கற்ற குருட்டுத்தனமான குறுந்தேசியவாதப் பாராளுமன்ற அரசியல் இருக்கையில், மறுபுறம் தமிழ் இளைஞர் இயக்கங்கள் பொலிசார், இரகசியப் பொலிசார், காட்டிக்கொடுப்போர், அரசாங்கப் பிரமுகர்கள் என்போரை இலக்காக்கி ஆயுத நடவடிக்கைகளையும் கொலைகளையும் ஆங்காங்கே நடத்தின. அவற்றுக்கு எதிர்வினையாகப் பொலிஸ், இராணுவ நடவடிக்கைகள்- குறிப்பாகத், தமிழ் இளைஞர்களின் கைது, தடுத்துவைத்தல், சித்திரவதை என்பன -இடம்பெற்றன. அத்துடன், இடையிடை, பழிக்குப்பழியாகப் பொது மக்களைத் தாக்குவதும் கொல்வதும் நிகழ்ந்தன.

ஏற்கனவே, *1981*இன் பிற்பகுதியில் யாழ்நகரில் ஓர் இராணுவ வாகனத்தைப் புலிகள் இயக்கம் தாக்கியதில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர். அதுவே இராணுவத்தின் மீதான முதலாவது தாக்குதலாகும். அதன்பின், புலிகள் இயக்கம் நன்கு திட்டமிட்டதொரு தாக்குதலை *1983* யூலை *23*ஆம் திகதி பலாலி வீதியில் நடத்தியது. ராணுவ ட்ரக் வண்டி மீது நடந்த

கண்ணிவெடித் தாக்குதலும் மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூடும் பதின்மூன்று இராணுவத்தினரைக் கொன்றன. மேலுஞ் சிலர் காயமடைந்தனர். அத் தாக்குதலுக்குப் பழிதீர்க்கும் வகையில், மறுநாட் காலை, ராணுவத்தினர் அப் பகுதியிலும் யாழ் நகரிலும் மானிப்பாய் ஊடான வீதிகளிலும் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் 41 பொதுமக்கள் ஆங்காங்கே கொல்லப்பட்டனர். யாழ் குடாநாடு இக் கொலைகளால் அதிர்ந்தது. மக்கள் செய்வதறியாது திகைத்தனர். (இந் நிகழ்வுக்குச் சில நாட்கள் முன்பு குடாநாட்டு நிலைமைகள் பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட கருத்துகளை பின்னிணைப்புகள் 2இலும் 3இலும் காண்க.)

இவ்வாறான அச்சமும் பீதியும் பீடித்திருந்த போது, மறுநாள், யூலை 24ஆம் திகதி, கொல்லப்பட்ட பதின்மூன்று இராணுவத்தினரின் சடலங்களைக் கொழும்புக்குக் கொண்டுசென்றதையொட்டிக், கொழும்பில் தமிழர்கட்கு எதிராக இன வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது. தலைநகரில் ஆளும் யூ.என்.பி.யின் இன வெறியர்களும் அவர்களது குண்டர்களும் காடையர்களுமே அவ் இன வன்முறையை நடத்தினர். சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாப்பன எனப்படும் இராணுவமும் பொலிசும் இவ் இன வன்செயலில் பங்காளிகளானார்கள். முன்கூட்டியே பட்டியலிடப்பட்டபடி தமிழர்களின் வீடுகள் கடைகள் தொழில் நிறுவனங்கள் எல்லாம் தாக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டு கட்டிடங்கள் தீக்கிரையாகின. தமிழர் என்ற இன அடையாளங் கொண்ட இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர் எல்லோரும் தாக்கப்பட்டு அக்கிரமங்கட்கு உள்ளாயினர். தலைநகரில் மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் அவர்கள் நிர்க்கதிக்கு உள்ளாகினர். சிங்கள மக்களுள் நல்லெண்ணம் கொண்டவர்களும், ஜனநாயகவாதிகளும் முற்போக்காளர்களும் இடதுசாரிகளும் தமிழர்களைப் பாதுகாக்க முன்னின்ற போதிலும், அரசாங்கமும் இனவெறிக் காடையர்களும் தமிழர்களைப் பழிவாங்கித் தமிழீழக் கோரிக்கைக்குச் சவால்விடும் வகையில் நடந்தனர்.

நாட்டின் அதியுயர் அரசாங்கத் தலைவரான ஜனாதிபதி ஜே.ஆர். இன வன்முறை மூண்டு 24 மணிநேரம் கடக்கும்வரை அதைத் தடுக்க ஒரு உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. அதேவேளை, நாடுமுழுவதும் தமிழர்கள் மீது இன வன்முறையைப் பரப்பும் செய்திகளையும் தகவல்களையும் வதந்திகளையும் பரப்புவதில் அரசாங்க ஊடகங்கள் முன்னின்றன. அந்த அரசாங்கத்தில் ஒரு முக்கிய அமைச்சரான சௌமியமூர்த்தி தொண்டமான் மலையக மக்களின் பெருந்தலைவர் என்ற பட்டத்தோடு இருந்தும், மலையகத் தமிழ் மக்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர். நகரங்களில்இருந்த அவர்களது கடைகளும், வர்த்தகமையங்களும் தாக்கிக் கொள்ளையிடப்பட்டு எரியூட்டப்பட்டன. சாதாரண தொழிலாளர்களின் இருப்பிடங்களான லயன்கள் கூட விட்டுவைக்கப் படவில்லை. தொண்டமான் உட்பட்ட மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள் யாவுமே செய்வதறியாது திகைத்தன. அரசாங்கத்திற் செல்வாக்கு மிக்க அமைச்சரான காமினி திசாநாயக்கவின் நேரடி வழிகாட்டலில் நுவரெலியாவின் தமிழர் கடைகளும் வீடுகளும் லயன்களும் எரியுண்டன. பலர் கொல்லப்பட்டனர். இத்தனைக்கும் தொண்டமான் தனது அமைச்சுப் பதவியைப் பற்றியவாறு இருந்தாரே தவிரச் சிறு எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை. இது அவரது வர்க்க ஐக்கியம் சம்பந்தப்பட்ட அடிமை விசுவாசத்தையே எடுத்துக்காட்டியது. சுருங்கக்கூறின், "இனிமேல் இலங்கையில் வாழ்ந்து பயனில்லை. எல்லோரும் இந்தியா செல்வதே சரி" என்று தலைவர்கள் எனப்பட்ட சிலர் கூறுமளவிற்கு 1983 யூலை இன வன்முறை மலையகத் தமிழ் மக்களைக் கொடுமைகட்கு உள்ளாக்கியது.

இவ் இன வன்முறை வெறியாட்டம் சிறைச்சாலைகளுள்ளும் கொண்டுசெல்லப்பட்டது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ்க் கைதிகள் மீதான கொடூரத் தாக்குதல்கள் யூலை 24ஆம் திகதியும் மறுநாள் 25ஆம் திகதியும் இடம்பெற்றன. சிங்கள இனவெறி கொண்ட சிறைக் காவலர்களின் அனுசரணையுடன் இனவெறிகொண்ட சிங்களக் கைதிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் மொத்தம் 53 பேர் அடித்தும் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர்.

அவர்களுள் ஏற்கனவே நீதிமன்றம் மரண தண்டனை விதித்த குட்டிமணியும் தங்கத்துரையும் அடங்குவர். அவ்விருவரையும் கொடூரமான சித்திரவதைகட்கு உள்ளாக்கிக் கொன்றதாகத் தெரியவந்தது. (பின்னிணைப்பு 4ஐக் காண்க.)

1983 யூலை இன வன்முறை, ஜே.ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கத்தின் பேரினவாத ஒடுக்குமுறையின் உச்சமான வெளிப்பாடாகும். அனைத்துத் தமிழர்கட்கும் எதிரான, இத் திட்டமிட்ட இன வன்முறையைப் பற்றிக் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன குறிப்பிடும்போது "அது சிங்கள மக்களின் தேசிய எழுச்சி" எனக் கூறியமை கவனிக்க வேண்டியதாகும். அவரது தலைமையிலான அரசாங்கத்தின் ஆறு வருட ஆட்சிக் கீழ்த் தமிழர்கள் மீது பிரயோகித்த இந் நான்காவது பேரினவாத வன்முறை மிகுந்த கொடுமையும் உயிரிழப்புகளும் சொத்தழிவுகளும் கொண்டதாகும்.

1983 யூலை வன்முறை இலங்கைக்குள்ளும் வெளியிலும் பல்வகை அரசியல் பொருளாதார சமூக எதிர் விளைவுகளை ஏற்படுத்தியதுடன் தேசிய இனப் பிரச்சினையை மேலும் இருண்டதொரு காலகட்டத்துள் இழுத்துச் செல்லும் போக்கையுங் குறித்தது. (பின்னிணைப்பு 5ஐக் காண்க.) அதுபற்றி அடுத்த அத்தியாயத்தில் மேலும் பார்ப்போம்.

# 07

# அரசின் கொலைவெறி வன்முறை

*1983 யூலையில் இடம்பெற்ற இன வன்முறை, அதற்கு முன் இடம்பெற்ற இன வன்முறைகளைவிட நாடு தழுவியதாகவும் கொடூரமாகவும் அமைந்தது. அது தமிழ் மக்கள் அனைவரதும் மனங்களில் ஆழமான இனப் பிளவுக் காயங்களாகப் பதிந்தது. அதன் தாக்கம், இலங்கையின் அரசியல் பொருளாதார சமூகத் தளங்களில் கடுமையான எதிர் விளைவுகளைத் தோற்றுவித்தது. அவற்றை வரிசைப்படுத்தி நோக்குவது பயன் தரும்.*

1. முன்பிருந்தே விரிந்துவந்த இன முரண்பாடுகள் இன வன்முறையுடன் பகை முரண்பாடாக மாறி அப்பட்டமான இன ஒடுக்குமுறையாக வளர்ந்தது.

2. பேரினவாத ஒடுக்குமுறை நிறுவனப்பட்டதாகி அரசியல் தீர்வு எதனையும் நாடாது இராணுவ நோக்குடன் முன்செல்லும் போக்கு முனைப்புற்றது.

3. அதன் எதிர்நிலையில், ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனம் தனித் தமிழீழத்திற்கான பிரிவினைக் கோரிக்கை மூலம் குறுந் தேசியவாதத்தைப்

பின்பற்றுமாறு மேற்படி இன வன்முறை நிர்ப்பந்தித்தது.

4. தமிழீழத்தை வெல்ல ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ்இளைஞர்கள்அதைவிஸ்தரித்துமுன்னெடுப்பதற்கேற்ற தளத்தையும் இவ் வன்முறை வழங்கியது.

5. ஜே.ஆரும் அமெரிக்கத் தலைமையிலான மேற்குலகும் முன்வைத்த தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கல் நிகழ்ச்சிநிரலை இலங்கைக்குள் இலகுவாக உட்புகுத்த இவ் இன வன்முறை நிகழ்வு வாய்ப்பானது.

6. தனது பிராந்திய மேலாதிக்கப் பாதையில் முன்னேறிவந்த இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையில் தலையிட்டுத் தன் ஆதிக்கப் பிடியை வலுப்படுத்தும் சூழலையும் இவ் வன்முறை தோற்றுவித்தது.

7. அதன் மூலம் இந்தியாவின் பிராந்திய ஆதிக்கம் ஒரு புறமாகவும் அமெரிக்க மேற்குலக ஆதிக்கம் மறுபுறமாகவும் இலங்கையில் வேகம்பெறலாயின. ஆட்சி அதிகாரம் பெற்ற பேரினவாத முதலாளிய சக்திகளும் தமிழீழத்தை வென்றெடுக்க முன்னின்ற தமிழ்க் குறுந்தேசியவாதக் சிறு முதலாளிய சக்திகளான தமிழ் இளைஞர்களும் இதைத் தமக்குச் சாதகமாக்க முன்னின்றனர்.

இலங்கையில் தலையிடக் காத்திருந்த இந்தியா, **1983** இன வன்முறைச் சூழலைப் பயன்படுத்தித் தனது கைகளை அசைக்கலானது. அதன் உளவுப் பிரிவான "றோ" (RAW) முற்றுமுழுதான ஆட்டத்திற்குத் தயாரானது. எவ்வகையிலும் இலங்கைத் தமிழருக்கு இன்னல் வருவதைத் தாங்கிக்கொண்டு இந்தியா சும்மா இராது என்ற விதமான அறிக்கைகள் கடுந்தொனியில் வரலாயின. அங்கு இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். இங்கு ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தார். முன்னவர் சோவியத் யூனியனின் பக்கம் நின்று இந்தியாவைப் பிராந்திய வல்லரசாக்கச் செயற்பட்டதால் அமெரிக்க மனக்கசப்பிற்கு உட்பட்டவர். மாறாகப் பின்னவர் பூரண அமெரிக்க விசுவாசியாக விளங்கியவர். ஜே.ஆர். **1977**இல் பதவிக்கு வருமுன்பே

இந்தியாவையும் இந்திரா காந்தியையும் வன்மத்துடன் நோக்கியவர். 1977 தேர்தலின் போது, இந்திரா காந்தியையும் அவரது அரசியல் வாரிசான மகன் சஞ்சய் காந்தியையும் "பசுவும் கன்றும்" எனப் பொது மேடையில் எளனஞ்செய்தவர்.

இவ்வாறு 83ன் இன வன்முறை, இந்திய இலங்கை ஆளும் வர்க்கங்கட்கிடையிலான முரண்பாடு, போட்டிக்கும் இந்தியத் தலையீட்டுக்கும் தகுந்த வாய்ப்பாகியது. வன்முறையின் தொடக்கத்திலேயே ஜே.ஆர் அதைத் தடுத்திருக்கலாம். ஆனாற், திட்டமிட்டே தமிழர்கட்கும் தமிழீழக் கோரிக்கைக்கும் பாடம் புகட்டுமாறு அவர் நடந்துகொண்டார். தமிழர் மீதான வன்முறையை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தியதால், தமிழர் தரப்பில் இந்தியா நற்பெயரைச் சம்பாதித்தது. தன் பிராந்திய நலனுக்கான தலையீட்டைக் கருதியே அது அவ்வாறு நடந்ததை விளங்குதற்கான அரசியற் தொலைநோக்கு பெரும்பாலான தமிழர்களிடம் அன்று இருக்கவில்லை. குறுந்தேசியவாத, பழைமைவாத தமிழ் ஆதிக்க சக்திகள் பரப்பிவந்த "தாய்நாடு" "தொப்புள்கொடி உறவு" போன்ற அர்த்தமற்ற- ஆனால் உணர்ச்சி மிகுந்த -பரப்புரைகளில் தமிழ் மக்கள் கட்டுண்டிருந்தனர். இந்திய ஆளும் வர்க்கமும் அதன் உளவுப் பிரிவான றோவும் அதை நன்கு பயன்படுத்தின.

இராஜதந்திர வழிகளிற் தலையிடுவதாகக் கூறியே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை ஆடுகளத்தில் இந்தியா இறங்கியது. இந்திரா காந்தி உடனடியாகவே இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஜி. பார்த்தசாரதியைக் கொழும்புக்கு அனுப்பினார். அவர் தமிழராக இருந்தமை, தமிழர் தரப்பில் உற்சாகத்தையும் இந்தியா மீதான அடிமை விசுவாசத்தையும் அதிகரித்தது. இலங்கைத் தலைவர்களுடனும் உயர் அதிகாரிகளுடன் பார்த்தசாரதியின் சந்திப்பும் கடுஞ் சொற்பிரயோகங்களும் ஜே.ஆர். அரசாங்கத்தைச் சற்று அதிரவும் ஆலோசிக்கவும் வைத்தது. அதனால் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான ஆலோசனைகளும் பேச்சுவார்த்தைகளும் தொடங்கின. அதன்போது, ஜே.ஆர். தனது பக்கத்தின் பேரினவாத முதலாளியக் காய்நகர்த்தலை

மிகுந்த கவனத்துடன் செய்தார். சிங்கள மக்கள் மத்தியில் இயல்பாகவே வரலாற்று வழியான இந்திய விரோதம் இருந்துள்ளது. டி.எஸ். சேனநாயக்க முதலாக, யூ.என்.பி. தலைவர்கள் யாவருமே அதனைப் பயன்படுத்தினர். அமெரிக்க, பிரித்தானிய விசுவாசத்தை இறுகப்பிடிப்பதற்கும் அது அவர்கட்கு வசதிசெய்தது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் அரசாங்கத்தையும் தமிழர் தரப்பையும் தீர்வு நோக்கிய இணக்கத்துக்குக் கொண்டுவரும் அனுசரணையாளராகவே தான் இயங்குவதாக இந்தியா காட்டிக்கொண்டது. மோதலையும் முறிவையும் ஏற்படுத்தாது நடப்பதாகவே டில்லியின் கொள்கை வகுப்பாளர்கள் தோன்றினர். கொழும்புக்கும் டில்லிக்கும் இராஜதந்திரிகள் மாறிமாறிப் பறந்தனர். இதில் தமிழர் கூட்டணியும் அதன் செயலாளர் நாயகமான அமிர்தலிங்கமும் தமிழர் தரப்பில் இந்திய மத்திய அரசாங்கத்திடம் நம்பிக்கைவைத்துச் செயற்பட்டனர். தானே இந்திரா காந்தியை இலங்கை விடயத்தில் தலையிட வைத்ததாகவும் அமிர்தலிங்கம் பெருமை பேசினார்.

இவ்வாறு, இலங்கை அரசாங்கம், இந்திய ஆளுந் தரப்பினர், தமிழர் தலைமைகள் ஆகிய மூன்று தரப்புகளிடையே பேச்சுவார்த்தை என்ற வெளிப்படையான செயற்பாடு நடக்கையில், அத் தரப்புகள், மறைமுகமாகத் திரைக்குப் பின்னால் தத்தமது நிகழ்ச்சிநிரல்களை மும்முரமாக முன்னெடுத்தன. இலங்கை அரசாங்கம், தமிழ் இளைஞர் இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகளை அடக்குவதற்குப் பெருந்தொகையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து இராணுவத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்றுவித்ததுடன் முப்படையினரின் எண்ணிக்கையையும் அதிகரித்தது. இவ்வாறு, அரசியல் தீர்விற் காட்டாத அக்கறையை அது இராணுவத்தைப் பெருக்கிப் பயன்படுத்துவதில் காட்டியது. வெள்ளுடையணிந்த மோசமான பேரினவாத தரகு முதலாளியவாதியாகவே நரிக்குணம் படைத்த ஜே.ஆர். செயற்பட்டுவந்தார்.

அதேவேளை, ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின்

விடுதலைக்கான பரந்துபட்ட சக்திகளை ஐக்கியப்படுத்தி முன்செல்லும் தூரநோக்கும் நிதானமும் மிக்க கொள்கையுடைய தலைமைத்துவமாகத் தமிழீழ ஆணை பெற்றுப் பாராளுமன்றத்திற்குத் தெரிவான தமிழர் கூட்டணியும் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அமிர்தலிங்கமும் அமையவில்லை. பழம்பெருமை பேசி "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்ற நிலைப்பாட்டில் பழைமைவாதத் தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியலின் பிரதிநிதிகளாகவே அவர்கள் இருந்தனர். இவ் ஆதிக்க நிலைப்பாட்டைப் பேண இந்தியாவையும் ஏகாதிபத்திய சக்திகளையும் இறுகப்பற்றினர்.

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினையை வளர்த்த தெற்கின் சிங்கள பௌத்தப் பேரினவாத முதலாளிய ஆளும் வர்க்கச் சக்திகள் சிங்கள உழைக்கும் மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றினர். அவ்வாறே வடக்கு-கிழக்கில் தமிழர் பழைமைவாத மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சக்திகளின் குறுந்தேசியவாதக் கொள்கைகள் தமிழ் மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றின. தமிழ் மக்களிடையே தோன்றி வளர்ந்த பல்வேறு பெயர்களையுடைய ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களும் அதற்கு விலக்காக இருக்கவில்லை. தமிழ் இளைஞர்கள் ஓர் இடதுசாரிப் பாதையில் மக்கள் போராட்ட இயக்கமாகவும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமாகவும் முன்செல்வதைத் தமிழர் ஆதிக்கத் தலைமைகள் மட்டுமன்றி, அவர்களது எசமானர்களான இந்திய அமெரிக்க ஆளும் வர்க்க சக்திகளும் விரும்பவில்லை என்பது ஆழ்ந்து நோக்க வேண்டியதாகும்.

இத்தகைய சூழலிற், தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய இளைஞர் இயக்கங்கள் *1983* யூலை இன வன்முறையைத் தொடர்ந்து பெருமளவில் இந்தியாவை நோக்கிச் செல்லலாயின. ஏற்கனவே தமிழ் நாட்டைத் தமது தளமாகப் பாவித்துவந்த இளைஞர் இயக்கங்கள், போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்த வேகத்துடன் வந்த இளைஞர்களை உள்வாங்குவதில் மும்முரமாயின. அப்பொழுது வெவ்வேறு பெயர்களில் பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் இயக்கங்கள் உருவாகி

இருந்தன. அவற்றில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் இணைந்திருந்தனர். இவ்வாறு நகர்ப்புற, கிராமப்புற இளைஞர்கள் வடக்கு-கிழக்கின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் "தமிழர்கள்" என்ற இன-மொழி அடையாளத்துடன் அலை அலையாக ஒவ்வோர் இயக்கத்திலும் இணைந்தனர். குறிப்பாக ஆயுதப் பயிற்சிக்காகக், குறுகிய அகலங் கொண்ட பாக்கு நீரிணையைத் தாண்டித் தமிழ்நாட்டில் இறங்கப் படகுகளில் ஏறிய இளைஞர்கள் தாம் எந்த இயக்கத்தின் படகில் ஏறுவது என்ற வேறுபாடின்றி எல்லா இயக்கங்களும் தமிழீழத்தை வென்றெடுக்கும் விடுதலை இயக்கங்களே என்ற பெரு நம்பிக்கையுடனே ஏறித் தமிழ்நாட்டை அடைந்தனர்.

இவ்விடத்து, ஒரு விடயம் ஆழ்ந்து நோக்க வேண்டியதாகும். அதாவது இளைஞர்கள் என்போர் தனி ஒரு வர்க்கத்தினர் அல்லர். அவர்கள் பல்வேறு வர்க்கப் பின்புலக் குடும்பங்களில் இருந்து வருவோராவர். எனவே, அவர்கள் வர்க்க-சாதி-குடும்பச் சூழலின் கருத்தியல், சிந்தனை, நடைமுறைகட்கு உட்பட்டோராவர். இன உணர்ச்சியும் பேரினவாத ஒடுக்குமுறைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற இனவழி மன உணர்வும் ஓர்மமுமே அவர்களை இளைஞர் இயக்கங்களில் இணைவித்தன. அவ்வாறு ஆயிரக்கணக்கிற் பல்வேறு இயக்கங்களில் இணைந்த இளைஞர்கட்கு எந்தவொரு அரசியற் போதனையோ அன்றி எத்தகைய கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது என்ற விளக்கமோ கொள்கை வழிகாட்டலோ தரப்படவில்லை. ஆயுதப் பயிற்சி வழங்குவது மட்டுமே முதன்மை பெற்றது. சிங்கள ராணுவத்திற்கு எதிராகப் போராடித் தமிழ் ஈழத்தை வென்றெடுப்பதற்கே இந்த ஆயுதப் பயிற்சி என்ற மிகக் குறுகலான விளக்கமே அளிக்கப்பட்டது. இத்தகைய ஆரம்பம் இந்தியத் தலையீட்டிற்கு வழிவகுத்தது. அதுபற்றி அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

# 08

# இளைஞர்களும் இந்திய அரவணைப்பும்

தமிழ் இளைஞர் இயக்கங்களை அரவணைத்த இந்திய ஆளும் வர்க்கம், பயிற்சி முகாங்கள் வைத்திருக்கவும் அவற்றை அனுமதித்தது. அதற்கும் அப்பால், ஓய்வுபெற்ற உயர் ராணுவ அதிகாரிகள் மூலம் பயிற்சி பெறுவதையும் ஏற்றது. ஆனால், இந்தியப் பாதுகாப்புத் தரப்பு, அவை சுதந்திரமாக இடம்பெற அனுமதிக்கவில்லை. யாவும் அதன் பன்முகப்பட்ட இராணுவ, பொலிஸ் உளவுப் பிரிவுகளின் வலுவான கண்காணிப்பின் மத்தியிலேயே இடம்பெற்றன. எதிர்காலத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒரு கருவியாகத் தாங்கள் பயன்படும் அபாயம் பற்றி ஆரம்பத்தில் எந்த இளைஞர் இயக்கத் தலைமையும் தெளிவுடன் இருக்கவில்லை. ஆனால் விரைவாகவே இவ்விளைஞர் இயக்கங்களிற் சில இந்திய ஆளும்

வர்க்க நோக்கங்கள் பற்றித் தெளிவு பெற்றன. குறிப்பாக, 1989ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தாம் பயன்படுத்தப்படுவதை உணர்ந்திருந்ததாகப் பிரபாகரன் தெரிவித்திருந்தார். புளொட் இயக்கத்தின் முற்போக்கான ஒரு பிரிவினர் "வங்கம் தந்த பாடம்" எனும் நூலினை வெளியிட்டதன் மூலம் இந்திய ஆளும் வர்க்க எதிர்ப்பைச் சம்பாதித்தனர். இன்னுஞ் சில இயக்கங்கள் இந்திய ஆளும் வர்க்கம் வழங்கிய ஆயுதப் பயிற்சியை நிராகரித்து இந்தியாவின் வெவ்வேறு புரட்சிகர அமைப்புகளிடம் பயிற்சிபெற முயன்றன. அதேவேளை, சில இயக்கத் தலைமைகள் தமிழ்நாட்டினூடாக மத்தியின் ஆதரவைப் பெறவும் பயன்படுத்தவும் முன்னின்றன. சில இயக்கங்கள் முன்னெச்சரிக்கையுடன் இருந்தபோதும், வேறு சில நேரடியான இந்தியக் கைக்கருவிகளாகின. எவ்வாறாயினும், இந்தியத் துணையுடன் பங்ளாதேஷ் பிரிவினை சாத்தியமானதை தமிழீழக் கனவுடன் பொருத்திப் பார்ப்பதிலேயே அதிகமானோர் தங்கியிருந்தனர். சில இயக்கங்கள் பலஸ்தீனப் போராளி இயக்கங்களுடன் தொடர்புகொண்டு அங்கு ஆயுதப் பயிற்சி பெற்றனர். இஸ்ரேலில் ஆயுதப் பயிற்சி பெறுவதிலும் முனைப்புக் காணப்பட்டது. அதிலிருந்த முரண்நகை யாதெனில், தமிழ் இளைஞர்கட்கும் இலங்கையின் சிங்கள இராணுவத்தினருக்கும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் ஒரேகாலத்திற் பயிற்சி வழங்கியமையாகும். இவையாவும் எத்தகைய உள் நோக்கங்களைக் கொண்டிருந்தன என்பதைச் சிந்திக்க முடியாத தலைமைகளையே தமிழ் இளைஞர் இயக்கங்கள் கொண்டிருந்தன. தமிழர் மத்தியிலான ஆதிக்க அரசியற் தலைமைத்துவமாயிருந்த தமிழர் கூட்டணியினர் இந்திய, அமெரிக்க, இஸ்ரேலிய விசுவாசிகளாக விளங்கினர்.

1983ஐ அடுத்த காலப் பகுதியில் இந்தியா மேலாதிக்கம் நோக்கிய தனது காய் நகர்த்தலை இலங்கை மீது மேற்கொண்டது. ஒரு புறம், இளைஞர் இயக்கங்களை இராணுவச் செயற்பாட்டிற்காகக் களமிறக்க முழு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியது. மறுபுறம் ஜே.ஆர். அரசாங்கத்துடன் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை அதே தமிழர் தரப்புத் தலைமைகளை மையமாகக் கொண்டு முன்னெடுத்தது. இலங்கையிலும்

அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்குமிடையே பல சந்திப்புக்களும் பேச்சுவார்த்தைகளும் நடந்தன. அவை யாவும் பயனற்றவையாயும் வெறும் போக்குக் காட்டுவனவாயுமே அமைந்தன. அதே வேளை, வடக்கு-கிழக்கில் இளைஞர் இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகள் விரிவு பெற்றன.

எண்பதுகளின் ஆரம்பத்தில் ஐந்து தமிழ் இளைஞர் இயக்கங்கள் முன்நிலைக்கு வந்தன. பெருந்தொகையான இளைஞர்கள் அவற்றில் இணைந்து பயிற்சிபெற்ற போராளிகளாகவும் வளரலாயினர். இதில் உள்நாட்டுப் பயிற்சியும் இந்திய, பலஸ்தீன, இஸ்ரேலியப் பயிற்சிகளும் சேரும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (LTTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பு (EROS), புளொட் என அறியப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) ஆகிய ஐந்து அமைப்புகளில் புளொட் தவிர்ந்த நான்கு அமைப்புகள் இணைந்து 1985இன் முன் கூற்றில் ஈழத் தேசிய விடுதலை முன்னணி எனச் சிறிது காலம் செயற்பட்டன. ஆயினும் அது நீடிக்கவில்லை. அவற்றிடையே பணம், அதிகாரம், தலைமை என்பன பற்றிய போட்டி பிரதானமானதாக இருந்ததே தவிர அவர்கள் உச்சரித்த தமிழீழ விடுதலை என்பது முக்கியம் பெறவில்லை.

இலங்கை அரசாங்கம், தீர்வு பற்றிய தனது நிலைப்பாட்டில் முதலில் ஏற்பது போன்று காட்டுவதும் பின் அதை மறுத்து இழுத்தடிப்பதுமாக இருந்தது. அதன் உச்ச கட்டமாக இந்திய அனுசரணையுடன் பூட்டானின் தலைநகர் திம்புவில் 1985ஆம் ஆண்டு யூலை, ஒகஸ்ட் மாதங்களில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. தமிழ் இளைஞர் இயக்கங்களும் தமிழர் கூட்டணியும் இணங்கிப் பேச்சுவார்த்தையிற் பங்கு கொண்டன. கூட்டணித் தலைவர்களான அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோரும் இளைஞர் இயக்கங்களின் பிரதிநிதிகளும் ஒருபுறமாகவும் ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜயவர்தன தலைமையிலான அரசாங்கப் பிரதிநிதிகள் மறுபுறமாகவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதன் போதே தமிழர் தரப்பில் நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அவற்றையே திம்புப் பிரகடனம் எனப் பிற்காலப் பேச்சுகளிலும் எழுத்துகளிலும் குறித்தனர். அந் நான்கு கோரிக்கைகளாவன:

1. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல்.
2. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றல்
3. தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்தை அங்கீகரித்தல்
4. இலங்கையைத் தம் நாடாகக் கொண்ட அனைத்துத் தமிழரதும் குடியுரிமையையும் ஏனைய அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.

திம்புப் பேச்சுவார்த்தை இரண்டு சந்திப்புகளுடன் முறிந்தது. அதேவேளை, இயக்கங்களும் இராணுவமும் தத்தமது வழிகளில் தாக்குதல்களையும் எதிர்த்தாக்குதல்களையும் பழிவாங்கல்களையும் தொடர்ந்தன. வடக்கு-கிழக்கின் தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தின் கொடூரத் தாக்குதல்கட்கும் கொலை வெறியாட்டத்திற்கும் பலியாகினர். அவற்றுக்குப் பழிவாங்கும் நோக்கில் இளம் ஆண்களும் பெண்களும் ஆயுத இயக்கங்களில் இணைந்தனர். ஆனால், அவ்வாறு இணைந்த இளைஞர்களை ஓர் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைப் போராளிகளாக மாற்றுதில் எந்த இயக்கமும் வெற்றிபெறவில்லை. கொலை, கொள்ளை, கப்பம், சகோதரப் படுகொலை என்பன அவர்களின் தலைகளை நிரப்பின. இராணுவத்துடன் மோதி மாள்வது தியாகம் எனப்பட்டது. ஆயுதம் ஏந்திய இயக்க இளைஞர் ஒவ்வொருவரும் தமிழ் மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் ஆயுததாரிகளாகவே நடந்துகொண்டனர். வாயளவில் சோசலிசம், இடதுசாரிக் கொள்கைகள் என அவ்வப்போது கூறிவந்த ஓரிரு இயக்கங்களும் இந்த நடைமுறைக்கு விலக்காக இருக்கவில்லை.

இராணுவத்தின் மீதான தாக்குதல்கள் வென்றபோதெல்லாம் "எங்கள் பொடியள் விடமாட்டார்கள்" என உற்சாக வார்த்தைகள் வழங்கிய அதே தமிழ் மக்கள், இயக்கங்களின் அடாவடித்தனங்களையும் கொலைகளையும் கொள்ளைகளையும் கண்டும், எதுவும் பேசவியலாத

மௌனத்திற்குட்பட்டனர். அந்தளவிற்கு இளைஞர்கள் விடுதலையின் பெயரிலான ஆயுத கலாசாரத்தின் உச்சமாக விளங்கினர். படித்தோர், படியாதோர், தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழை, பணக்காரர், நீதி நியாயம் பேசுவோர் என எல்லோரும் தாம் உற்சாகமூட்டி வரவேற்ற அதே ஆயுத இளைஞர் இயக்கங்கட்கு அஞ்சிநடுங்கி வாய்திறவாத நிலையில் வாழவேண்டியதாயிற்று. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மக்கள் ஒருபுறம் பேரினவாத ஒடுக்குமுறை இராணுவத்தாலும் மறுபுறம் விடுதலைப் போராட்ட இயக்கங்களாலும் அடக்கப்பட்ட நிலைக்குள் சிக்கித் தவித்தனர். அதாவது, வாய் திறப்பது உண்பதற்கும் குடிப்பதற்கும் மட்டுமே. மற்றும்படி வாய்களைத் திறவாதிருப்பது உசிதம் என்றே பெரும்பாலான மக்கள் கருதினர். இதுவே தமிழீழ விடுதலைப் போராட்டம் எனத் தமிழ் இயக்கங்கள்- பிற்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் -முன்னெடுத்து முடிவிற் தோல்வி கண்ட போராட்டத்தின் சாராம்சமாகும்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவின் தலையீட்டுக்கு அப்படியே அடிபணிய மறுத்தது. இந்திய அரசாங்க ஆலோசனைகளை இழுத்தடிப்பதிலும் தனது இராணுவ நடவடிக்கைகளை முன்தள்ளுவதிலும் ஜே.ஆர். அரசாங்கம் முனைப்புக்காட்டியது. இச்சூழலில், இந்திரா காந்தி 1984இல் தனது சீக்கிய மெய்காப்பாளரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது இழப்பைத் தமிழ்த் தலைமையினர் யாவரும் தமது சொந்த இழப்பாகவே கருதியமை விசேடமானதல்ல. இது வழமையான இந்தியா மீதான விசுவாசமும் பிரமையும் சார்ந்ததாகும். இந்திரா காந்தியின் மறைவுக்குப்பின் அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமரானார். அவரும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கைவிடாது தொடர்ந்து இலங்கை மீதான இந்திய அழுத்தத்திற்கு வலுவூட்டினார்.

இலங்கை அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கை மூலம் இந்திய அழுத்தத்திற்குப் பதிலிறுக்குமாறு 1987 மே மாதத்தில் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தைத் தன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதற்கான "ஒப்பரேசன்

லிபரேசனை" நடத்தியது. (இந் நிகழ்வுக்கு முன் குடாநாட்டில் நிலவிய அடக்குமுறைச் சூழல் தொடர்பான கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அறிக்கையொன்றைப் பின்னிணைப்பு-6இல் காண்க.) அந்த இராணுவ நடவடிக்கை அரசாங்கம் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை. ஆனால், முன்னேறிய இராணுவ நடவடிக்கை என்றளவில் அரசாங்கம் நிறைவெய்தியதுடன் அதை இந்தியாவிற்கும் போராளிகட்கும் இலங்கை அரசின் பலத்தை வெளிக்காட்டும் சந்தர்ப்பமுமாக்கியது. இதில் வெளிவராது மறைக்கப்பட்ட ஒரு செய்தியும் அவ்வேளை பேசப்பட்டது. அது, இலங்கை அரசாங்கம் தனது "ஒப்பரேசன் லிபரேசன்" பற்றிய இரகசியத் தகவலை முன்கூட்டியே இந்திய அரச அதிகாரிகட்குத் தெரிவித்திருந்தது என்பதாகும்.

இவ் இராணுவ நடவடிக்கை 26.5.87இல் இடம்பெற்றுச் சில நாட்களில் இந்தியா தனது தலையீட்டு முயற்சியில் மேலுமொரு நாடகத்தை நடத்தியது. அதாவது வடபுலத் தமிழர்கள் பசி பட்டினியால் வாடி வருவதாகவும் அவர்களுக்கு உணவு அளிப்பது தனது தார்மீகக் கடமை எனவும் இந்திய மத்திய அரசு ஒரு பிரசாரத்தை கட்டவிழ்த்தது. அப் பிரசாரத்தையொட்டி 3.6.87 அன்று உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு பாக்கு நீரிணை வழியே 19 படகுகள் இலங்கை நோக்கிப் பயணித்தன. இப் படகுகளை இலங்கையின் கடற்படை தனது கடல் எல்லையில் மறித்துத் திருப்பியனுப்பியது. அவ்வேளை, இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர், படகில் வந்தவர்களிடம் "இங்கு எந்தத் தமிழரும் பட்டினியுடன் இல்லை. இவ் உணவுப் பொருட்களை நாளாந்தம் பட்டினியுடன் வீதிகளில் வாழும் இந்திய மக்களுக்குக் கொடுங்கள்" எனச் சொன்னாரென்று பேசப்பட்டது.

படகுகள் கடல் எல்லையை மீறாது திரும்பிச்சென்ற போதிலும் மறுநாள், 4.6.87 அன்று முற்பகலில் இந்திய இராணுவ விமானங்கள் "ஒப்பரேசன் பூமாலை" என்ற பெயரில் உணவுப் பொதிகளை வட புலத்தில் ஆங்காங்கே வீசிச் சென்றன.

இந்தியப் படகுகளில் வடக்குக்கு உணவுப்பொருட்கள் கொண்டுவருமளவுக்கு வடக்கில் பசி பட்டினி இருந்ததாகக்

கூறமுடியாது. ஆனால், அக் காலப்பகுதியில் வடக்குக்குப் பொருட்களை எடுத்துச் செல்லக் கட்டுப்பாடுகள் இருந்தன. பார ஊர்திகளில் கொண்டுசென்ற அனைத்துப் பொருட்களையும் இராணுவம் இறக்கிப் பரிசோதித்த பின்பே மீண்டும் ஏற்றி அனுப்பியது. வட பகுதியைக் குறிப்பாகப் பாதித்த விடயம், எரிபொருட்கட்கு விதித்த தடையாகும். அதனாற் போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் ஆதியன முடங்கின. அதை மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக எதிர்த்ததுடன் பரந்தளவில் மக்களை அணிதிரட்டி வெகுஜன இயக்கங்களை முன்னெடுத்தது. அதில் ஒன்றாக, மனித உரிமைகட்கான வெகுஜன இயக்கத்தை அமைப்பாக முன்னெடுப்பதில் முன்னின்றது. இம் மனித உரிமைகட்கான வெகுஜன இயக்கம், அவ்வேளை, மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு நெருக்கடிகளும் பிரச்சினைகளும் பற்றிய வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தது.

அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களை அழித்துத் தடைசெய்தபின் வடக்கின் தனியொரு இயக்கமாகியது. விடுதலைப் புலிகள் உட்படப் பெரும்பாலான தமிழர்கள் அப் பொதிபோடல் தமக்கு இந்திய ஆதரவின் அடையாளம் என நம்பினர். போட்ட உணவுப் பொதிகளைக் கண்டெடுப்போர் அவற்றை உடனடியாகத் தமது முகாங்களில் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட விடுதலைப் புலிகளின் தலைமை இந்தியாவிற்கு நன்றியையும் தெரிவித்தது. மாறாக, இந் நிகழ்வையடுத்துச் சிலநாட்களில் வெளிவந்த புதிய ஜனநாயகக் கட்சியின்- அன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) -அரசியல் மாத இதழான புதியபூமி கடுமையானதொரு கண்டனக் கட்டுரையை எழுதியிருந்தது. இப் பொதிபோடலுக்குப்பின் இந்திய மேலாதிக்கத் தலையீடு மறைந்திருக்கிறது என்று அக் கட்டுரை சுட்டியது. அது விடயங்களை விரிவாக எடுத்துக் காட்டியதைத் தாங்கமுடியாத விடுதலைப் புலிகள் அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் அதன் ஆசிரியரைக் கொண்டே மறுப்புக் கட்டுரை எழுதுவித்தனர். அதில் மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்று சீனத் தலையீடு பற்றியும் அவர்களது

கையாட்கள் தான் கம்யூனிஸ்டுகள் என்றும் எழுதியிருந்தது. அது பற்றிய வாதப்பிரதிவாதம் அவ்வேளை இடம்பெற்றதைப் பலர் அறிவர். ஆனால் வரலாறு எதை நிரூபித்துள்ளது என்பதே கவனத்துக்குரியது. (பின்னிணைப்பு 7ஐக் காண்க.)

இவ் விமானப் பொதிபோடலுடன் இந்தியத் தலையீட்டின் பரிமாணம் புதிய திசைகளிற் காய் நகர்த்தலுக்குக் கட்டியங்கூறியது. அதற்கான சூழலை, ஜே.ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கம் அரசியல் தீர்வின் மறுப்பால் ஏற்படுத்திக் கொடுத்தது. அடுத்த நகர்வு 1987 யூலை 29ஆம் திகதிய இலங்கை-இந்திய ஒப்பந்தமாகவும் இந்தியப் ஆக்கிரமிப்புப் படைகளின் வரவாகவும் அமைந்தது. அது பற்றி அடுத்த அத்தியாயத்திற் பார்க்கலாம்.

# 09

# இந்தியப் படையெடுப்பு

*1983ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கைத் தமிழர் தரப்புப் பிரதிநிதிகட்கும் ஜே.ஆர். தலைமையிலான அரசாங்கப் பிரதிநிதிகட்குமிடையிற் பல-கட்டப் பேச்சுகள் நடந்தன. இந்திய ஆளும்வர்க்க ராஜதந்திரிகள் இரு தரப்பினர்க்குமிடையில் இணக்கம் ஏற்படுத்துவோராகத் தம்மைக் காட்டியபோதும், அவர்களது நோக்கும் போக்கும் தமது பிராந்திய மேலாதிக்கக் கண்ணோட்டத்திலேயே தொடர்ந்தன. தம்மைமீறி இலங்கையில் எதுவும் நடக்கக்கூடாது என்பதும் இலங்கை அரசாங்கமோ போராளிகளோ தம்மிடமிருந்து கட்டுமீறிப் போகக்கூடாது என்பதிலும் இந்தியா மிகக்கவனமாக இருந்தது. இவற்றை அன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக இருந்த ஜே.என். தீக்ஷித் தனது திமிர் மிகுந்த பேச்சுகளில் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.*

பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்டவற்றைத் தமிழர் தரப்பும் இலங்கை அரசாங்கத் தரப்பும் புரிந்துணர்வுடனோ விட்டுக்கொடுப்புடனோ பேசி ஒரு குறைந்தபட்சத் தீர்வு வராது மறித்தன. இதனைச் சில பத்திரிகைகள் "கொடாக்கண்டனும் விடாக்கண்டனும்" போன்ற நிலைப்பாடுகளாகச் சுட்டிக்காட்டின. அரசாங்கப் பிரதிநிதிகள் தமது பேரினவாத நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்க மறுத்த அதேநேரம் போராளிக் குழுக்கள் தனிநாடு என்ற தமது அடிப்படை நிலைப்பாட்டிலேயே விடயங்களை அணுகினர்.

இச் சூழலிற் பல்வேறு தாக்குதல்களும் எதிர்த்தாக்குதல்களும் தொடர்ந்தன. அவற்றிடையே இந்திய-இலங்கை அரசாங்க மட்டப் பேச்சுவார்த்தையிலும் முன்னைய பேச்சுகளின் தொடர்ச்சியாகவும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவானது. இந்தியா முன்னின்று உருவாக்கிய இவ் ஒப்பந்தத்தைத் தமிழ்த் தரப்பினர் ஏற்றேயாகவேண்டும் என டில்லியின் "ஆள்வோர்" நிர்ப்பந்தித்தனர். போராளி இயக்கங்களும் தமிழர் கூட்டணியும் ஒப்பந்தத்தை அங்கீகரிக்குமாறு வற்புறுத்தப்பட்டன. இவ் வற்புறுத்தலின் உச்ச நிலையில், இந்திய அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கட்டாயப்படுத்தி யாழ்ப்பாணம் சுதுமலையில் இருந்து உலங்குவானூர்த்தியில் டில்லிக்கு அழைத்துச்சென்றனர். அங்கு அவர் இவ் ஒப்பந்தத்திற்குத் தனது மறுப்பைத் தெரிவித்தபோது அவரை வெவ்வேறு வழிகளில் மிரட்டிப் பணிவிக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. அவரை டில்லியின் ஐந்து நட்சத்திர உயர்விடுதி ஒன்றில் தங்கவைத்து ஒரு சிறைக்கைதி போல நடத்தியதாகச் செய்திகள் வெளிவந்தன. விடுதலைப் புலிகள் இயக்கம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து தமது தலைவரை விடுவிக்கக்கோரி ஆங்காங்கே பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திய அதிகாரிகளின் செயல்களைப் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி (பு.ஜ.மா.லெ.க.- அன்றைய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) -வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டது. அதன் அறிக்கையிற் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "...எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டிற்கும் புலிகள் இயக்க நிலைப்பாட்டிற்கும்

வேறுபாடும் முரண்பாடுகளும் உள்ளன. ஆனால் நம் நாட்டின் ஓர் இயக்கத்தின் தலைவரான பிரபாகரனை இந்திய நாட்டு அதிகாரிகள் கட்டாயப்படுத்தி டில்லிக்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்திருப்பது கடுமையான கண்டனத்திற்கு உரியதாகும். உடனடியாக அவர் விடுவிக்கப்பட்டு நாடு திரும்ப வேண்டும். இந்தியா இவ்வாறு நடந்து கொள்வது இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் மீறும் செயல்". (அறிக்கையின் மேலுஞ் சில பகுதிகட்குப் பின்னிணைப்பு 8ஐக் காண்க.) இந் நிலைப்பாடு இந்திய மேலாக்கத்திற்கு எதிரான ஒன்றேயாகும். அதேவேளை, தென்னிலங்கையில் ஜே.வி.பியும் ஸ்ரீல.சு.க.வும் அத்தகைய ஓர் ஒப்பந்தம் உருவாவதை எதிர்த்தனர்.

இவ்வாறு 1987 யூலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் கொழும்பிற் கைச்சாத்திட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம், வடக்கு-கிழக்கிலும் தெற்கிலும் எதிர்ப்புக்களைத் தோற்றுவித்தது. தமிழர்களின் உரிமைகளையும் அபிலாட்சைகளையும் பிரதிபலிக்கும் சாதகமான அம்சங்கள் அவ்வொப்பந்தத்தில் அடங்கியிருப்பதாக இந்தியத் தரப்பிற் கூறப்பட்டது. ஆனாற், தமிழர் தரப்பில் முழுத் திருப்தி காணாத அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கம் அவ்வொப்பந்தம் பயனற்றது என முற்றுமுழுதாக நிராகரித்தது. இந்தியாவின் நெருக்குதலால் உருவான இவ் ஒப்பந்தத்தை வேறுவழியின்றி ஜே.ஆரும் அவர் தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கமும் ஏற்றன. ஆனாற் கட்சிக்குள்ளும் அரசாங்க உயர் தலைவர்களிடையும்- குறிப்பாகப் பிரதமர் ஆர். பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி போன்றோரிடை -கடும் அதிருப்தியும் எதிர்ப்பும் இருந்தது. அவற்றை ஜே.ஆர். தனது ஆளுமையாற் கட்டுப்படுத்தினார். இருப்பினும் அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர். வேறுவழி தெரியாமல் இறுதியாக இந்திய ஆளும் வர்க்கத்திடம் சரணடையும் நிலைக்கு உள்ளானார். இந்திரா காந்தியிடம் சவால்விடும் தோரணையில் நடந்த ஜே.ஆர்., இந்திரா காந்தியின் மகன் ராஜீவிடம் பணிந்துபோக வேண்டியாயிற்று. இதில் இந்திய ஆளும்வர்க்க இராஜதந்திரம் வென்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட அடுத்தடுத்த நிமிடங்களில் ஒப்பந்தத்தைச் செயற்படுத்தற்கென, இந்தியப் படையினர் கடலாலும் வானாலும் இலங்கை மண்ணில் இறங்கினர். ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் இலங்கையின் வடக்கு-கிழக்கில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தவும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்துள்ளமையை உறுதிசெய்யவுமே இந்தியப் படையினர் இங்கு வந்ததாக மக்களுக்குக் கூறப்பட்டது. அதற்கமைய "இந்திய அமைதி காக்கும் படை" என்றும் "இந்திய சமாதானப் படை" என்றும் அப் படையினர் அழைக்கப்பட்டனர். ஆனால் இந்தியப் படையினரின் வருகையும் செயற்பாடும் அவர்களிடம் காணப்பட்ட மனநிலையும் சமாதானம் பாதுகாப்பு என்பவற்றுக்கு உரியனவாக இருக்கவில்லை.

இந்தியப் படைகள் வடக்கு-கிழக்கில் சந்துபொந்துகள் வரை பரந்து முகாமிட்டன. திருகோணமலை, காங்கேசன்துறைத் துறைமுகங்களையும் சீனன் குடா, பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்களையும் இந்தியப் படைகள் நிரப்பின. 50 ஆயிரம் படையினர் எனப்பட்ட போதும், மொத்த எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்தைத் தாண்டியிருந்ததாக ஊடகங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கையின் அரசியல் யாப்பிற்குக் கொண்டுவந்த 13வது திருத்தச்சட்டம் 1987 ஒகஸ்ட்டில் நிறைவேறியது. அத் திருத்தச் சட்டமூலம், மாகாணசபைகள் முறைமையைக் கொண்டுவந்தது. இதில் வினோதம் யாதெனில், தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கெனக் கொண்டு வரப்பட்ட மாகாணசபையானது ஒன்பது மாகாணங்கட்கும் உரித்தானது. ஒப்பந்தப்படி, வடக்கு-கிழக்குத் தனி அலகாக இணைந்து ஒரு மாகாணசபையாக இயங்கும். ஒரு வருடத்தில் கிழக்கில் இணைப்புப்பற்றிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தி இணைப்பைத் தொடர்வதா அன்றி வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணசபைகளாக இயங்க இடமளிப்பதா எனத் தீர்மானிக்கப்படும். ஒன்பது அம்சங்களைக் கொண்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாகிச் சில நாட்களில், 1987 ஒகஸ்ட்

4ஆம் திகதி கூட்டப்பட்ட பகிரங்கப் பொதுக்கூட்டத்தில், ஒப்பந்தத்திற்குத் தமது இயக்கத்தின் ஆதரவைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார். இந்திய உயர் தளபதிகளும் அதிகாரிகளும் சமுகமளித்த அக் கூட்டத்தில் ஆயுதங்களை ஒப்படைப்பதாகவும் இந்தியாவிடம் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பைக் கையளிப்பதாகவும் இந்தியாவை நம்புவதாகவும் பிரபாகரன் ஏற்றார். ஆனால் இவை யாவும் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முன்னெடுத்த ஒரு நாடகம் போன்று நடந்தேறினவே அன்றித் தமிழ் மக்களுக்குச் சாதகமாக எதுவும் இடம்பெறவில்லை.

அமைதிகாக்க வந்ததாகக் கூறிய இந்தியப் படைகள் படிப்படியாகத் தமது சுயரூபத்தை வெளிக்காட்டின. இந்தியப் படைகட்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான முரண்பாடுகள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டுப் பகைமையை நோக்கி வளர்ந்தன. ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளரான திலீபன் நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதியில் உண்ணாவிரதம் இருந்த நிகழ்வு இரு தரப்பினரிடையிலும் பகைமை கூர்மையடைவதை எடுத்துக்காட்டியது. அவர்கள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் இந்தியப் படைகள் நிறைவேற்றக்கூடியனவாக அன்றி இலங்கை அரசாங்கம் முடிவெடுக்கவும் செயற்படுத்தவும் உரியனவாகவே தெரிந்தன. அவ்வாறு இருந்தபோதிலும், இந்தியத் தூதுவர் தீக் ஷித் புலிகள் இயக்கத் தலைவரைச் சந்தித்து உறுதிமொழிகளை வழங்கினாராயினும் அது பலனளிக்கவில்லை. 1987 செப்ரம்பர் 15ஆம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திலீபன், பன்னிரண்டு நாட்கள் கழித்து, செப்ரம்பர் 26ஆம் திகதியன்று இறந்தார். இவ் உண்ணாவிரதமும் மரணமும் புலிகள் இயக்கத்திற்குப் பெருமளவில் மக்கள் ஆதரவையும் அனுதாபத்தையும் தேடிக் கொடுத்ததோடு, இந்தியப் படைகள் மீது வெறுப்பையும் விதைத்தன. அதேபோன்று, கிழக்கிலே பூபதி என்னும் பெண்மணி புலிகள் சார்பாக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார். தியாகி திலீபனும் அன்னை பூபதியும் புலிகளால் வருடாவருடம் உச்சமான தியாகிகளாக நினைவு கூரப்பட்டனர் என்பதை இங்கு குறிப்பிடத் தகும்.

இவ்வாறு இந்தியப் படைகட்கும் புலிகளுக்குமிடையிலான இடைவெளி விரிந்து முறுகல் வளர்ந்துவந்த சூழலில், பருத்தித்துறைக் கடற்பரப்பில் 17 விடுதலைப் புலிகளைக் கடற்படையினர் கைது செய்தனர். அவர்களிற் புலிகளின் முக்கிய தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் உள்ளடங்கினர். கைதான அனைவரையும் கொழும்புக்குக் கொண்டுசென்று விசாரிக்க இலங்கை அரசாங்கம் முடிவுசெய்தது. அதைத் தடுத்துக் கைதானோரை விடுவிக்க இந்தியத் தளபதிகளாலும் அதிகாரிகளாலும் முடியவில்லை. இறுதியில், 1987 ஒக்ரோபர் 5ஆம் திகதி தடுப்பிலிருந்த 17 பேரும் சயனைட் அருந்தித் தற்கொலை செய்ய முடிவுசெய்தனர். தடுப்புக்காவலின் போது அவர்களைப் பார்க்கச்சென்ற அன்ற்றன் பாலசிங்கமும், மாத்தையாவும் அவர்களுக்கு சயனைடை வழங்கினர் அல்லது அது அவர்களுக்கு உணவிற் கலந்து கொடுக்கப்பட்டதெனச் செய்திகள் கூறின. தற்கொலை முயற்சியில், குமரப்பாவும் புலேந்திரனும் உட்பட, 12 பேர் உயிரிழந்தனர். மற்ற 5 பேர் உயிர் தப்பினர். இந் நிகழ்வையடுத்து இந்திய இராணுவமும் புலிகள் இயக்கமும் நேரடி மோதலுக்குத் தயாராகின.

1987 ஒக்ரோபர் 10ஆம் திகதி, இந்திய இராணுவம் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. பத்து வாரங்கட்கு மேல் முகாங்களில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம், தனது போர்ப் பிரகடனத்துடன், தாக்குதல்தொடுக்கக் களத்தில் இறங்கியது.

அன்றுவரை, பல பத்தாண்டுகளாகத் தாய்நாடென்றும் தொப்புள் கொடி உறவென்றும் தமிழ்த் தலைவர்கள் காட்டிவந்த பொய்த் தோற்றங்களை மேற்படி தாக்குதலின் ஆரம்பம் நொருக்கியது. இந்தியப் படைகளின் கோர முகங்களையும் பற்களையும் தமிழ் மக்கள் நேரடியாகக் காண வாய்ப்புக் கிடைத்தது.

இவ்விடத்து ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது அவசியம். இந்தியா இலங்கையில் தலையிடுவது தமிழர் நலன்களைக் காப்பதற்கன்றித் தனது பிராந்திய மேலாதிக்க நலன்களைப் பாதுகாக்கவே என்பதை மாக்சிச லெனினிசக் கட்சியான

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மட்டுமே தொடர்ந்து வலியுறுத்தியது. 1987 யூலை 29இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் படைகள் வந்திறங்கிய போது அதனை எதிர்த்துத் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வெளியிட்ட அக் கட்சி, இந்தியப் படைகளைக் கண்டித்து வெளியேறுமாறு வற்புறுத்தியது. மேலும், இந்தியப் படைகளை வெளியேறக் கோரியும் தமிழ் மக்கள் மீதான தாக்குதல் இடம்பெறும் அபாயத்தை முன்னெச்சரித்தும் ஒரு பெரும் பகிரங்கக் கண்டன எதிர்ப்புக் கூட்டத்தை அக் கட்சி நடத்தியது. பலாலி ராணுவத் தளத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவிலிருந்த புத்தூரில் நடந்த அக் கூட்டத்திற் பெருந் தொகையான மக்களின் பங்கேற்றனர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்ரமணியம் தலைமை தாங்கிய அக் கூட்டத்திற் தோழர்கள் சி.கா. செந்திவேல், க. தணிகாசலம், சோ. தேவராஜா, கா. செல்வம் கதிர்காமநாதன் உட்பட்ட பல தோழர்கள் உரையாற்றினர். அக் கூட்டம் அன்றைய சூழலில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய அபாயங்களையும், இந்தியாவையும் அதன் படைகளையும் தோரணங்கட்டிக் கும்பம்வைத்து வரவேற்ற புலிகள் உட்பட்ட தமிழ்த் தலைமைகளின் இந்திய விசுவாசத்தையும் அரசியல் அறிவீனத்தையும் அம்பலப்படுத்தியது. அதன் பின்பான அரசியல் இராணுவ நடவடிக்கைகளின் போக்கை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 10

# இந்தியாவின் போர்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 1987 யூலை 29 அன்று அமைதி காக்கும் படையெனும் பெயரில் வந்திறங்கிய இந்தியப் படைகள் வடக்கு-கிழக்கில் பரந்து நிலை கொண்டன. இலங்கை இராணுவம் பிரதான முகாங்களுள் முடங்கியிருந்தது. எங்கும் அமைதி நிலவியது போன்றதொரு தோற்றம் காணப்பட்டது. ஆனால் அது புயலுக்கு முந்திய அமைதி போலிருந்தது. பிராந்திய மேலாதிக்க நோக்கம் கொண்ட இந்திய இராணுவமும் ஏகப் பிரதிநிதித்துவ ஆதிக்க எண்ணத்தோடிருந்த விடுதலைப் புலிகளும் நேரடி மோதலை நோக்கி நகரும் சூழலை உருவாக்கினர். ஆயுத ஒப்படைப்பும் வாய்ச்சொல் வாக்குறுதியும், வெற்று வார்த்தைகள் என்பதும் ஏமாற்றுச் செயல்கள் என்பதும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மட்டுமன்றி விடயங்களைப் பார்த்த அனைவருக்கும் விளங்கியிருக்கும். பன்னிரண்டு விடுதலைப் புலிகள் சயனைட் உட்கொண்டு தடுப்பில் இறந்தமையும் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த

திலீபனின் சாவும் இந்திய ராணுவத்திற்கு எதிரான மோதலுக்கு வழிவகுத்த அதேவேளை, விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்திற்கெதிராகப் பொதுமக்கள் மத்தியில் திட்டமிட்ட பிரசாரத்தை முன்னெடுக்கும் முகமாக ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தூண்டினர். இந்தியாவும் இந்திய இராணுவமும் விடுதலைப் புலிகளை மதித்துத் தமிழரின் ஒரே போராட்டச் சக்தியாகவும் ஏகப் பிரதிநிதியாகவும் ஏற்க மறுத்தாலேயே, புலிகள் இந்திய எதிர்ப்புக் காட்டினர். அதற்கப்பால், இந்தியாவின் பிராந்திய விரிவாதிக்க நோக்கத்தை எதிர்த்ததாலல்ல என்பது நோக்கவேண்டிய உண்மை.

இந்நிலையில், 1987 ஒக்டோபர் 10 அன்று, இந்திய இராணுவம் தனது தாக்குதல் முனையைத் திறந்தது. விடுதலைப் புலிகளை நிராயுதபாணியாக்கி வடக்கு-கிழக்கில் அமைதியை நிலைநாட்ட எனத் தொடங்கிய இந்திய இராணுவ நடவடிக்கையை மறுத்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இவற்றால் பொதுமக்கள் கொல்லப்படுவது பற்றி இரு தரப்பினருக்கும் அக்கறையோ கவலையோ இருக்கவில்லை என்பதை முக்கியமான இராணுவ நடவடிக்கைகளின் போது காணமுடிந்தது.

உதாரணமாக, யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பிரம்படி எனும் இடத்தில் 40 பொதுமக்களை இந்திய ராணுவம் சுட்டுக்கொன்று தனது கொடிய அந்நிய இராணுவத் தன்மையை வெளிப்படுத்தியது. அதன் கொடூரத்திற்கு மேலுமொரு எடுத்துக் காட்டாக, அதே இடத்தில் சில பொதுமக்களை வீதியில் படுக்கவைத்து அவர்கட்கு மேலாகத் தமது தாங்கி வாகனத்தைச் செலுத்தினர். அதற்குக் காரணமான மோதலில் 37 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். இந் நிகழ்வின்போது, இந்தியப் படையினர் ஆங்காங்கே பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தினர்.

இவ்வாறு, ஒக்டோபர் 10க்குப் பின் வடக்கு-கிழக்கின் சகல பகுதிகளிலும் இந்திய இராணுவத்தின் தாக்குதல்கள் விரிவடைந்தன. அவை ஈவிரக்கமற்று, மக்களை அற்பமாகக் கருதும் தாக்குதல்களாக அமைந்தன. விடுதலைப் புலிகளும் இந்திய இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை

விரிவுபடுத்தினர். அவர்களும் மக்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளாமலே நடந்தனர். புலிகள் இயக்கத்தினரை அடையாளங் காணமுடியாத சூழலில், புலிகளெனச் சந்தேகித்த பொதுமக்களையும் இளைஞர்களையும் இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். புலிகளை ஆதரிக்கும் பொதுமக்கள் என்ற ஐயத்தில் வயது முதிர்ந்தோர், பெண்கள் என்ற வேறுபாடின்றிப் பலரைச் சுட்டுக்கொன்றதுடன் பலவாறான அவமதிப்புக்கட்கும் ஆளாக்கினர்.

இவ்வாறு, இந்திய ராணுவம், விடுதலைப் புலிகளின் இராணுவச் செல்வாக்குப் பிரதேசம் எனக் கணித்த குடாநாட்டைத் தனது பூரண கட்டுப்பாட்டுள் கொண்டுவரத், திட்டமிட்ட தாக்குதல்களை மேற்கொண்டது. ஷெல் தாக்குதல்கள், உலங்குவானூர்தித் தாக்குதல்கள், நேரடியான தரைத் தாக்குதல்கள் எனப் பலவாறு அவை இடம்பெற்றன. இந்திய இராணுவம் தனது தாக்குதலின் போது கேள்விநியாயமின்றிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்றது. யாழ். மருத்துவமனைப் பிரேத அறை நாளாந்தம் வரும் நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களால் நிரம்பிவழிந்தது. பலர் காயப்பட்டுச் சிகிச்சைபெற்றனர். மருத்துவர்களும் தாதிமாரும் ஊழியர்களும் மிகுந்த நெருக்கடிக்கும் மரணபீதிக்கும் நடுவே நோயாளர்கட்குச் சிகிச்சை அளித்தனர்.

இந் நிலையில் ஒக்டோபர் இறுதி வாரத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மீது தாக்குதல் நடந்தது. வைத்தியசாலையும் அதை அண்டிய பிரதேசத்தையும் பாதுகாப்பு வலயமாக வைத்திருந்த முன்னைய நிலைப்பாட்டை இந்திய இராணுவம் துச்சமாகக் கொண்டு ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியது. இதற்குக் களமமைப்பதுபோன்று வைத்தியசாலைக்குள்ளிருந்து விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை நடத்தியிருந்தனர். யாழ் நகரத்தைக் கைப்பற்றும் இந்திய ராணுவ முயற்சியின்போது யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்களும் தாதியர்களும் உட்பட்ட ஊழியர்கள் பலர் கொல்லப்பட்டனர். பிரபல சிசு-வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம், தான் ஒரு

வைத்தியர் என்றும் மற்றையோர் தாதியர் என்றும் கைகளை உயர்த்தி உரத்துக் கூறியபோதும் "அகிம்சை நாட்டின்" இராணுவம் ஈவிரக்கமின்றி அவ் வைத்திய நிபுணரைச் சுட்டுவீழ்த்தியது. இது போன்ற கொடிய இராணுவ தாக்குதல்களை அதற்கு முன்போ பின்போ இலங்கை இராணுவம் யாழ் போதனா வைத்தியசாலையில் நடத்தியதில்லை என்பது ஒப்பிடத்தக்கது.

இந்திய இராணுவத்தினதும் புலிகளினதும் இராணுவ மோதல் வடக்கின் சகல பகுதிகளிலும் போல, கிழக்கிலும் இடம்பெற்றது. வடக்கில் காங்கேசன்துறைத் துறைமுகமும் பலாலி விமான நிலையமும் முற்றுமுழுதாக இந்திய இராணுவத்தின் வசமிருந்தன. அவ்வாறே திருகோணமலைத் துறைமுகத்தையும் திருகோணமலை சீனக் குடா விமான நிலையத்தையும் இந்திய இராணுவம் தனது விருப்பப்படி கையாண்டது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்திய இராணுவம் புலிகளை நிராயுதபாணியாக்கும் பெயரில் தாக்குதல்களை மேற்கொண்டது. ஏற்கனவே மட்டக்களப்பில் பூபதி என்ற பெண்மணியைச் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வைப்பதில் முன்னின்று செயற்பட்ட புலிகள் அவரது இறப்பைப் பயன்படுத்தி இந்திய இராணுவத் தலையீட்டுக்கெதிரான உணர்ச்சிகளை முன்தள்ளியிருந்தனர்.

எழுபதுகளின் தொடக்கத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் புகுந்த இந்திய இராணுவம் பங்களாதேஷ் உருவாக்கத்திற்குத் தனது படை பலத்தைப் பயன்படுத்தியவாறே இலங்கையிலும் வடக்கு-கிழக்கைப் பிரித்துத் தமிழீழத்தைத் துண்டாடித் தரும் என ஒருகாலம் நப்பாசை கொண்டிருந்த தமிழ்த் தலைமைகட்கு மக்கள் மீது அமைதிப் படையின் மிருகத்தனமான தாக்குதல்களும் அடாவடித்தனங்களும் பெரும் அடியாகவும் ஏமாற்றமாகவும் அமைந்தன. மேலாதிக்க அகங்காரம் கொண்ட ஓர் அந்நிய இராணுவமாக இந்திய இராணுவம் தன்னை இலங்கையில், குறிப்பாகத் தமிழர் மத்தியில், புலப்படுத்தியது. அதன் மூலம், இந்தியப் படை ஓர் அமைதி காக்கும் படையாக இருக்க முடியாது, அது ஓர் ஆக்கிரமிப்புப் படையாகவே இருக்க

முடியுமென மாக்சிச லெனினிசவாதிகள் எதிர்வு கூறியதை மக்கள் நிதர்சனமாகக் கண்டனர்.

இந்திய இராணுவ - புலிகள் இயக்க மோதல் உக்கிரமடைந்த சூழலில் ஜே.ஆர். ஜயவர்தன தனது ராஜதந்திர நகர்வின் வெற்றியையிட்டுப் பெருமிதங்கொண்டார். எந்த இந்தியா தமிழ் இளைஞர் இயக்கங்கட்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்ததோ அந்த இயக்கங்களில் வல்லமை மிக்க புலிகள் இயக்கத்துடன் இராணுவ மோதலில் ஈடுபட்டு இந்தியா இழப்புகளைச் சந்தித்து வருவதையிட்டு ஜே.ஆர். திருப்தியடைந்தார். அதேவேளை, இந்தியாவைத் தாய்நாடு என்றும் தொப்புள்கொடி உறவு என்றும் எப்போதும் கண்மூடித்தனமாகப் போற்றிப் புகழ்ந்துவந்த தமிழ்த் தலைமைகள் மக்கள் மத்தியிற் தலைகுனிவுக்கு ஆளாகினர். அதுவரை இருந்துவந்த ஒரு ஆளும் வர்க்கப் பிரமை தமிழ் மக்கள் மத்தியில் முதற்தடவையாக உடைந்து அம்பலமானது. இந்திய இராணுவத்தின் கொடூரத் தாக்குதல்கள், ஈவிரமற்ற போக்கு, அதிகாரத் திமிர், வல்லரசு ராணுவம் எனும் அகங்காரம், பெண்கள் மீதான பாலியற் கொடுமைகள் போன்ற யாவும் இந்திய இராணுவத்தின்மீது தமிழ் மக்களின் வெறுப்பை அதிகரித்தன.

இத்தகைய சூழலைப் புலிகள் இயக்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. இந்திய இராணுவ ஆதரவு கொண்ட தமிழ் இயக்கங்கள் இந்திய இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தின. ஏற்கனவே புலிகள் இயக்கத்தாற் பழிவாங்கப்பட்டு இழப்புக்களைச் சந்தித்த தமிழ் ஆயுத இயக்கங்கள்தமது இலங்கைஅரசாங்க ஆதரவுநிலைப்பாட்டுடன் இந்தியாவின் அரவணைப்புக்குள் சுகங்காண முன்வந்தன. இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். முதன்மை பெற்றது.

வெளித் தோற்றத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவ வருகையும் அதை எதிர்த்த புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கையும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை சார்ந்தவையாகத் தெரிந்தன. அதில் உள்ள உண்மையை மறுக்கமுடியாது. ஆனால், அதன் பின்னால், இப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவது யார் என்பதில் இந்து

சமுத்திரப் பிராந்திய மேலாதிக்க ஆளும் வர்க்கச் சக்திகட்கும் அமெரிக்க-மேற்குலக மேலாதிக்கச் சக்திகட்கும் உள்ளார்ந்த போட்டி இருந்தது. இதன் அடிப்படையில், தமிழீழத்திற்காக ஆயுதமேந்திய இளைஞர் இயக்கங்கள் அணிபிரிந்து இந்திய அல்லது அமெரிக்க அரவணைப்பிற்கும் வழிகாட்டல்கட்கும் ஆளாகின. புலிகள் இயக்கம் நாசூக்கான வழிகளில் தன்னை அமெரிக்க மேற்குல விசுவாசியாக்கியது.

இந்தியப் படைகளின் நிலைகொள்ளலும் இராணுவ நடவடிக்கைகளும் தெற்கில் பல்வேறு எதிர்விளைவுகளைத் தோற்றுவித்தன. ஜே.ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கம், ஸ்ரீல.சு.க., ஜே.வி.பி., பாராளுமன்ற இடதுசாரிகள் என்போர் மத்தியில் உருவாகியிருந்த அரசியல் நிலைப்பாடுகள் வெவ்வேறு வழிகளில் வெளிப்பட்டன.

ஸ்ரீல.சு.க. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பதன்மூலம் சரிந்துபோனதனது பாராளுமன்றச்செல்வாக்கைமீட்கமுயன்றது. அதன் அடிப்படையில் இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கில் இருந்து வெளியேறவேண்டும் என வலியுறுத்தியது. அதேவேளை, பாராளுமன்ற இடதுசாரிகளும் முற்போக்குச் சக்திகளும், தேசிய இனப் பிரச்சினைக்கான குறைந்தபட்சத் தீர்வு என்ற அடிப்படையில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்தனர். அவ்வேளை யூ.என்.பி.க்குள் இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தியப் படைகளின் பிரசன்னம் ஆகியன பற்றிப் பலத்த கருத்து மோதல்கள் உட்கட்சி முரண்பாடுகளாக வளர்ந்து கொண்டிருந்தன. ஜே.ஆர். தலைமையிலான யூ.என். பி. அரசாங்கம் தனது ஆறில் ஐந்து பெரும்பான்மை குலையாமற் கவனித்துக்கொண்டது. இதற்குப் பல காரணங்கள் உதவின. ஒன்று, ஜே.ஆர். அமெரிக்க, மேற்குலக் விசுவாசமும் தரகு முதலாளிய ஆளும் வர்க்க அரசியல் ஆளுமையும் கொண்டவராக விளங்கியமை. இன்னொன்று, தனது அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரிடமும் இருந்து திகதி இடப்படாத பாராளுமன்றப் பதவிவிலகல் கடிதங்களை ஆரம்பத்திலே ஜே.ஆர். பெற்றுவைத்திருந்தமை. மூன்றாவது, ஆர். பிரேமதாச, அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க ஆகியோரிடையே அடுத்த

தலைமைக்காக நிலவிய போட்டியை ஜே.ஆர். தனக்குரிய நரித்தந்திர அரசியல் மூலம் கையாண்டமை. பிரேமதாச தனது இடத்தையும் எதிர்கால நிலையையும் பாதுகாத்துக் கொண்டார். இத்தகைய தெற்குச் சூழலில் ஜே.வி.பி. தனது முன்னைய இந்திய விஸ்தரிப்புவாத எதிர்ப்புக் கொள்கையைத் தனது அரசியல் மூலதனத்தின் ஒரு பகுதியாக்கி, இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சிக்குத் தன்னைத் தயாராக்கியது. தென்னிலங்கையில் மீண்டும் இளைஞர்களை வீணே பலிகொடுக்கும் கொள்கையை விஜேவீர தன் தலைமைத்துவ வழிகாட்டலில் நடைமுறைப்படுத்த முன்வந்தார். தாக்கியழித்துத் தப்பியோடும், தனிப்பட்டோர் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. அத் தாக்குதல்களில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் அதன்கீழ் மாகாணசபைகள் தோற்றுவிக்கப்படுவதையும் ஆதரித்த பலர் ஜே.வி.பி.யால் கொல்லப்பட்டனர். இதில் பாராளுமன்றவாத இடதுசாரிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி.யினர் தம்மைத் தேசப்பற்றாளர்களாக மக்கள் மத்தியில் உருவகப்படுத்திக் காட்ட முன்னின்றனர். தெற்கிலே இந்திய எதிர்ப்பை ஜே.வி.பி.யினர் முன்னெடுத்த போதிலும், வடக்கு-கிழக்கில் அவர்களால் எதனையும் செய்ய இயலவில்லை.

இவ்வாறு தெற்கில் இலங்கை-இந்திய ஒப்பந்த எதிர்ப்பும் மாகாணசபைக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரித்த அரசியல் போக்குகளும் முன்தள்ளப்பட்டன. அதேவேளை, இந்தியாவிற்கு ஒப்பந்த வழியாக வழங்கிய வாக்குறுதிப்படி ஜே.ஆர். அரசாங்கம் மாகாணசபைகட்கான தேர்தலையும் அதன் மூலம் மாகாணசபைகள் நிறுவும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அதனை வடக்கு-கிழக்கில் புலிகள் இயக்கம் எதிர்த்தது. இவற்றின் நடுவே தேர்தல்மூலம் மாகாணசபைகள் நிறுவப்பட்டன. வடக்கு-கிழக்கில், இலங்கை-இந்திய ஒப்பந்த அடிப்படையில் உருவான பதின்மூன்றாம் திருத்தச்சட்ட அடிப்படையில் மாகாணசபைகளை உருவாக்கும் முயற்சிகள் முன்தள்ளப்பட்டன. அவை பற்றி அடுத்த அத்தியாயத்திற் பார்க்கலாம்.

# 11

# மாகாணசபை எனும் மாயை

*1987 யூலை 29ஆம் திகதி இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன் அடிப்படையில் ஓகஸ்ட் மாதத்தில் 13வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அது எந்தளவிற்குப் பேரினவாதிகளுக்கு உள்வாங்கமுடியாததாக இருந்துள்ளது என்பதை, இன்றுவரை அதன் முழுமைக்கும் காட்டப்படும் வெறுப்பிலும் எதிர்ப்பிலுமிருந்து அளவிடலாம். இந்தப் 13வது திருத்தத்திற்கு உட்பட்டதே மாகாணசபை முறைமையாகும். ஒப்பந்தத்தின் கீழ்த், தேசிய இனப் பிரச்சினைக்கு உட்பட்ட வடக்கு-கிழக்கிற்கு ஒரு குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டிய அம் மாகாணசபையானது நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் உரித்தாக்கப்பட்டமை ஒரு பேரினவாத விந்தையாகும். அதே வேளை, வடக்கும் கிழக்கும் தற்காலிக இணைப்பின் கீழ் உள்ளார்ந்த நிபந்தனைகளுடன்*

இணைத்த ஒற்றை நிர்வாக அலகானது. அந்த இணைப்பு, பத்தொன்பது வருடங்களுக்குப் பின் 2006இல் ஜே.வி.பி தெடுத்த வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் பிரிக்கப்பட்டமை அதன் சோக வரலாற்றில் ஒரு அம்சமாகும்.

1987 ஒக்டோபரில் வெடித்த இந்தியப்-படை-புலிகள்-இயக்கப் போரின் காரணமாக, மாகாணசபைகளை உருவாக்கிய கையோடு மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை. போரின் கடுமையும் தொடர்ச்சியும் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதை ஒரு வருடத்திற்கு மேற் பின்போடச் செய்தன. அதேவேளை, தெற்கில் ஸ்ரீல.சு.க.வும் ஜே.வி.பியும் மட்டுமன்றி ஆட்சியில் இருந்த யூ.என்.பி.க்குள்ளும் மாகாணசபைகட்குக் கடும் எதிர்ப்பு இருந்தமையும் ஒரு காரணமாகும். எனினும், 1988 நவம்பர் 19ஆம் திகதி மாகாணசபைகட்கான தேர்தல் நடந்தது. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணத்திற்கான அத் தேர்தலைப் புலிகள் எதிர்த்துக் குழப்ப முனைந்தனர். ஆனால் அங்கு நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளின் கடுங் கண்காணிப்புடனும் சிலவகைத் தலையீடுகளுடனும் தேர்தல் நடந்தது.

அத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ரெலோ, ஈரோஸ் என்பன போட்டியிடவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். எனும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், ஈ.என்.டி.எல். எவ். எனும் ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் இணைந்து போட்டியிட்டு வென்றன. இவை இரண்டும் இந்திய ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கை விசுவாசம் பெற்று வடக்கு-கிழக்கு மாகாணசபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றன. மொத்தம் முப்பத்தாறு உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆளும் தரப்பாகி வரதராஜப்பெருமாள் முதலமைச்சர் ஆனார். ஒரு சிங்களவரும் ஒரு முஸ்லிமும் மாகாணசபை அமைச்சரவையில் இடம்பெற்றாலும், குறுகிய காலத்திலேயே அவர்கள் அதிலிருந்து விடுபட்டனர். மாகாணசபையின் ஆட்சித் தலைமையகம் திருகோணமலையில் அமைக்கப்பட்டது. அதனைப் பேரினவாதச் சக்திகள் விரும்பாதபோதும் இந்தியப்

படைகளின் பிரசன்னத்தின் கீழ் அதை ஏற்கவேண்டியாயிற்று.

இம் மாகாணசபையை நிராகரித்துக் குழப்புவதில் புலிகள் இயக்கம் மும்முரமானது. வன்னிப் பிரதேசத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் காட்டுப்பகுதிக்குள் ஒதுக்குண்ட புலிகள் இயக்கம், மறைந்திருந்து தாக்கியழித்துத் தப்பியோடும் தந்திரோபாயத்தை முன்னெடுத்தது. அத்துடன் ஏனைய இயக்கங்களை ஒழித்துக்கட்டும் சகோதரப் படுகொலை வழிமுறையையும் தொடர்ந்தது. இந்திய இராணுவ அரவணைப்புடன் மாகாணசபை ஆட்சியை நடத்திய ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். ஆகியன தமக்குக் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு புலிகள் மீது எதிர்ப் படுகொலைத் தாக்குதல் தொடுத்தனர். புலிகளெனவோ புலிகளுக்கு ஆதரவளித்தவர்களெனவோ சந்தேகித்தோரைத் தாக்கினர். மேலும், மிரட்டியும் அச்சுறுத்தியும் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம், மனித உரிமைகள், மக்கள் நலன்கள் என்பனவற்றைக் காலடியில் மிதிப்பதில் புலிகள் மட்டுமன்றி, இந்திய ராணுவத் துணையுடன், வரதராஜப்பெருமாள்-சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமும் முன்னின்றது.

மக்கள் சார்பற்ற, சமூக நோக்கற்ற, வெறும் தேசியவாத முழக்கங்களைக் கொண்ட கட்டுப்பாடற்ற இளைஞர் இயக்கங்களின் கைகளில் ஆயுதங்களும் அதிகாரமும் இராணுவத் துணையுங் கிடைத்தால் எவையெல்லாம் நடக்கும் என்பதற்குச் சான்றுகளைஅக்காலப்பகுதியின்மோசமானசோகஅனுபவங்கள் மக்களுக்கு வழங்கின. இது, புலிகள் இயக்கம் முதலாக இன்றுவரை ஈழத்தின் பெயரில் "ஜனநாயக" அரசியல் இயக்கம் நடத்தும் அனைவரும் கைக்கொண்டுவரும் நடைமுறையாகவே இருந்து வருகிறது. இவர்கள் அனைவரினதும் அரசியல் என்பது ஆயுதம், ஆளும் வர்க்க அரவணைப்பு, அதிகார மிரட்டல், கொலை, கொள்ளை என நீண்டுநிலைக்கின்றமை மறைக்கக் கூடியதல்ல. அதனால் ஏற்படும் நாசங்களின் சுமைதாங்கிகளாக மக்களே இன்னமும் இருந்துவருகின்றனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் இந்திய இராணுவ நிலைகொள்ளலும் அதற்கெதிரான புலிகளின் தாக்குதல்களும்

அதை முறியடிக்க இந்திய இராணுவத்தின் எதிர்த் தாக்குதல்களும் அவற்றின் நடுவே மாகாணசபை ஆட்சியின் அதிகாரத் துர்ப்பிரயோகமும் மக்களின் அன்றாட வாழ்வைச் சிதறடித்தன. அதேவேளை, தெற்கில் ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி, முதலாவதிலிருந்து வேறுபட்டுத், தனிமனிதப் படுகொலைகளின் உச்சத்தைத் தொட்டது. ஸ்ரீல.சு.க. தன்னை மீளமைத்து மீண்டும் அதிகாரத்திற்கு வரமுயன்றது. வடக்கு-கிழக்கில் முடங்கியிருந்த இலங்கை இராணுவமும் பொலிசும் தெற்கில் ஜே.வி.பி.யை வேட்டையாடுவதில் முனைப்பாகின.

இத்தகைய காலத்திலேயே *1988* டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அரசியலமைப்பின்படி இரு தடவைகள் பதவி வகித்த ஜே.ஆர். போட்டியிட இயலாததால், பிரதமராகப் பதவிவகித்த ஆர். பிரேமதாச யூ.என்.பி. சார்பாகப் போட்டியிட வாய்ப்பு ஏற்பட்டது. அவரது கட்சிக்குள்ளிருந்த மேட்டுக்குடி வழிவந்த தலைவர்கள் சிலர் அவரைக் கடுமையாக எதிர்த்தபோதும், எல்லா எதிர்ப்பையும் முறியடித்துப் பிரேமதாச போட்டியிட்டார். எதிர்த்தரப்பிற் குடியுரிமைப் பறிப்பிற்கு ஆளாகியிருந்த சிரிமாவோ பண்டாரநாயக்க, அதன் கால எல்லை முடிவடைந்த நிலையில் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டார்.

மேற்படி தேர்தல், வடக்கிலும் தெற்கிலும் இந்திய ராணுவம், புலிகள் இயக்கம், ஜே.வி.பி, இலங்கை ஆயுதப் படைகள் என்பவற்றின் தாக்குதல்களிலும் கொலைகளிலும் இரத்தம் பாய்ந்த சூழலிலேயே இடம்பெற்றது. புலிகள் இயக்கம் தனது இருப்பின் தேவைகருதித் தேர்தலைப் பகிஷ்கரித்தது. அவ்வேளை தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைப் (தோழர் மணியம்) பொதுச் செயலாளராகக் கொண்டு இயங்கிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) (இப்போது பு.ஜ.மா.லெ.க.) ஜனாதிபதித் தேர்தலில் சிரிமாவோ பண்டாரநாயக்கவை ஆதரிப்பதெனத் தீர்மானித்தது. அவ்வேளை, சிரிமாவோ தலைமையிலான ஸ்ரீல.சு.க. "மக்கள் சக்தி" என்னும் ஒரு பரந்த கூட்டணியை அமைத்திருந்தது. அதிற், பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் உட்பட, குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில

இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் இணைந்திருந்தது. அத் தேர்தலின் போது, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சிரிமாவோவின் தலைமையிலான "மக்கள் சக்தி" கூட்டில் இணையாமல் அதை வெளியிலிருந்து ஆதரிக்க முடிவெடுத்தது. அந்த அடிப்படையில் சிரிமாவோ பண்டாரநாயக்கவை யாழ்ப்பாணம் அழைத்து ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஒழுங்குசெய்தது. அவ்வேளை புலிகளின் அட்டகாசம் உச்சமாக இருந்ததால், அத்தகைய ஒரு தேர்தல் கூட்டத்தை ஒழுங்குசெய்ய வடக்கிலிருந்த பாராளுமன்ற இடதுசாரிகளோ ஸ்ரீல.சு.க.வோ துணியவில்லை.

அச் சூழலில் சிரிமாவோ பண்டாரநாயக்கவை வரவழைத்து வரவேற்று பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் மிகப்பெரும் கூட்டத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) நடத்தியது. தோழர் மணியம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டத்துக்கு முன், புலிகளிடமிருந்து தலைமைக்குக் கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. கூட்டத்துக்கு முதல்நாள் இரவு பண்டத்தரிப்பு புலிகள் இயக்கப் பொறுப்பாளர் தும்பன் என்பவர் தலைமையிற் தோழர் மணியத்தின் வீட்டுக்குச் சென்ற குழுவினர் கூட்டத்தை நிறுத்துமாறு அவரை ஆயுதமுனையில் எச்சரித்தனர். ஆனாற் தோழர் மணியம் தனது கட்சி எதற்காக சிரிமாவோவை ஆதரிக்கிறது என்பதை எடுத்துக்கூறிக், கூட்டத்தை எவ்வாறாயினும் நடத்துவது என்று கட்சி தீர்மானித்ததையும் உறுதிப்படுத்தினார். மறுநாள், பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரளினிடையிற் கூட்டம் நடந்தது. அதிற் தோழர் மணியம் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, "இந்திய இராணுவம் வெளியேற வேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்" என்ற இரண்டு விடயங்களை முன்வைத்தார். அதனை ஆதரிப்பதாக உறுதியளித்த சிரிமாவோ பண்டாரநாயக்க, தனது உரையில், தான் பதவிக்கு வந்தால் இந்தியப் படைகளை வெளியேற்றுவேன் என்றும் மக்கள் சக்தி கூட்டு தயாரித்த தீர்வுத்திட்ட அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பேன் எனவும் மக்களது பலத்த கரகோஷத்தின் மத்தியில் வாக்குறுதியளித்தார். இக் கூட்டத்தில் குமார் பொன்னம்பலமும்

பங்கேற்றார். இந்திய ராணுவத்தினர் சூழ்ந்திருந்த அக் கூட்டத்தில் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என அக் கூட்டத்தில் முன்வைத்த கோரிக்கையும் அதற்கு மக்களின் ஆதரவும், இந்திய இராணுவத்திற்கு மட்டுமன்றி புலிகள் இயக்கத்திற்கும் அதிர்ச்சி தருமாறு அமைந்தன.

அத் தேர்தலில் பிரேமதாச ஜனாதிபதியானார். அதனைத் தொடர்ந்து 1989 பெப்ரவரியில் பாராளுமன்றத் தேர்தல் நடந்து, யூ.என்.பி. ஆளுங் கட்சியானது. ஜனாதிபதி பிரேமதாச தனக்கு வாய்ப்பான வகையில் டி.பி. விஜயதுங்கா என்பவரைப் பிரதமராக்கினார். சகல நிலைகளிலும் எதிர்நீச்சலிட்டே பிரேமதாச ஜனாதிபதியானார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அத்தகைய ஜனாதிபதியுடன் முல்லைத்தீவுக் காட்டிற்குள் முடக்கப்பட்ட புலிகள் இயக்கம் நட்புறவு வேடமிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற எண்ணத்திலும் அவ்வக் காலத்திற்கு தேவையானோரைப் பயன்படுத்தித் தமது தேவை முடிந்ததும் கைகழுவுவது அல்லது அழிப்பது என்ற புலிகள் இயக்க நடைமுறைக்கு அமையவும் புலிகள்-பிரேமதாச கூட்டு அமைந்தது. ஜனாதிபதி பிரேமதாச இந்தியப் படைகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனக் கோரினார். அதற்காகப் புலிகளுடன் பேச்சுவார்த்தையையும் நட்புறவையும் நாடினார். தமது ஏகத்துவ அதிகாரத்திற்கு இந்தியப் படைகளின் நிலைகொள்ளல் தடையாயிருந்ததால் புலிகள் பிரேமதாசவுடன் இணைந்தார்கள். அக்காலத்திற பெறக்கூடியவற்றைப் பணமாகவும் பொருட்களாகவும் பெற்றுக்கொண்ட அதேவேளை, பேச்சுவார்த்தை எனக்கூறித் தமிழ் மக்களின் கண்களில் மண் தூவவும் அவர்கள் கூசவில்லை.

இச்சூழலில் நடந்த 1989 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் புலிகள் இயக்கம் ஈரோஸ் இயக்கம் வெற்றி பெறுமாறு அதை ஆதரித்தது. வெற்றி பெற்றோரிடையே, உள்ளாரத் தனக்குச் சார்பான சிலர் இருப்பதையும் உறுதி செய்தது. வடக்கு-கிழக்கைச் சேர்ந்தோரும் மலையகத்தின் ஒரு பிரதிநிதியுமாகப் ஈரோஸ் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவான பதின்மூன்று பேரும்

புலிகள் சொன்னதைச் செய்வோராயிருந்தனர்.

இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை தெற்கிலும் வடக்கிலும் வலுப்பெறலானது. வடக்கில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிலான மாகாண ஆட்சியின் கீழ் இந்திய இராணுவத்தின் வழிகாட்டலில் ஆரம்பித்த தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டிய முறை மக்கள் மத்தியிற் கடுஞ்சினத்தையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியது. விருப்பின்றிக் கட்டாயத்தின் பேரில், ஈ.பி.ஆர்.எல்.எவ். இளைஞர்கள் ஆயுதமுனையில் பிடித்து இழுத்துச்சென்றவர்கட்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களைக் கொண்ட அமைப்பிற்குத் தமிழ்த் தேசிய இராணுவம் எனப் பெயரிடப்பட்டது. கட்டாயமாகக் கொண்டுசென்ற தமது பிள்ளைகளை மீட்கத் தாய் தந்தையர் ஈ.பி. ஆர்.எல்.எவ். இயக்க முகாங்களின் வாசல்களில் காத்துக்கிடக்க நேர்ந்தது. அவ்வாறு விடுபட்ட இளைஞர் சிலரைப் புலிகள் வேட்டையாடிய கோரமும் நடந்தது.

இலங்கையில் பிரேமதாச ஜனாதிபதியான பின்பு, இந்தியாவில் காங்கிரஸின் இடத்தில் ஆட்சிக்கு வந்த கூட்டணி, வி.பி. சிங் தலைமையில் ஆட்சி அமைத்தது. அதன்பின்பு, சில அரசியல் இராணுவத் திருப்பங்கள் ஏற்பட்டன. இந்தியப் பிரதமர் வி.பி. சிங் இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தைத் திருப்பியழைக்க முடிவெடுத்தார். அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணசபையை ஜனாதிபதி ஆர். பிரேமதாச கலைத்தார். இலங்கை அரசாங்கம், இராணுவம், புலிகள் இயக்கம் என்பனவற்றிடம் இருந்து தம்மைப் பாதுகாக்க மாகாணசபையை நடத்திய இயக்கத்தினர் வேறுவழியின்றிக், கப்பல்களில் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள், இந்தியாவில் "றோ" அமைப்பின் வழிகாட்டலில் ஒரிசா மாநிலம் உட்படப் பல்வேறு மாநிலங்களிலிருந்த முகாங்களில் அகதிகளாகக் கஷ்டங்களுடன் வாழநேர்ந்தது. வரதராஜப் பெருமாள் போன்ற உயர்-மட்டத் தலைவர்கள் சகல வசதிகளுடனும் வாழ்ந்தனர்.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் இலங்கை

இராணுவம் தனது இராணுவ முகாங்களை மீளப் பலப்படுத்தவும் தமது நிலைகளை வலுப்படுத்தவும் முனைந்தது. அதேவேளை, வடக்கு-கிழக்கில் புலிகள் இயக்கம் தனது இராணுவ அரசியல் அதிகார மையங்களை வலுப்படுத்தச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அதன்மூலம், முல்லைத்தீவுக் காடுகளுள் முடங்கி இரண்டு வருடங்களாகத் தம்மைத் தக்கவைத்த புலிகள் இயக்கம் வெளியேவந்து வெற்றிக் களிப்புடன் தன் புகழ்பேச ஆரம்பித்தது. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தைத் தோற்கடித்து அதனை நாட்டைவிட்டு வெளியேற்றியதாக ஆர்ப்பரித்து வெற்றிப் பரப்புரை செய்தது. அதன் எதிர்கால விளைவுகட்கு முகம் கொடுத்தற்கு ஏற்ற தந்திரோபாயம் ஏதுமற்ற புலிகள் இயக்கம் தனியாதிக்க வெறியுடன் தொடர்ந்தும் பயணிக்கும் நோக்குடன் தனது பழைய போக்கில் நடந்தது.

அதைச் சற்று விரிவாக அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 12

# பிரேமதாசவின் நிழலிற் புலிகள்

*1988 நவம்பரில் மாகாணசபை உருவாக்கத்துடன் வடக்கு-கிழக்கில் இயல்பு-வாழ்வோ சமாதானச் சூழலோ ஏற்படுதற்கு மாறாக மோதல்களும் அதிகாரப் போட்டிகளுமே வலுத்தன. அங்கு தம்மை நிலைநிறுத்தித் தத்தமது நோக்கங்களை நிறைவேற்ற நான்கு அதிகார மையங்கள் முயன்றன. இந்திய இராணுவம், இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பவையே அவை. அவற்றின் செயற்பாடுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நகர்வுகளாக அன்றித் தத்தமது நிலைப்பிற்கான ஆயுத நடவடிக்கைகளாகவே*

அமைந்திருந்தன. இதனால் கொலைகளும் இரத்தப் பெருக்குமே தொடர்ந்தன. வடக்கு-கிழக்கு மக்கள் அனைவரும் அச்சம், பீதி, உயிரிழப்புகள் மத்தியில் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழிருந்த அதேவேளை, வடக்கின் முல்லைத்தீவுக் காட்டுப் பிரதேசத்தில் புலிகளின் தலைமை முடக்கப்பட்டிருந்தது. கிழக்கின் முக்கிய காடுகளிலும் விடுதலைப் புலிகள் மறைந்திருந்தனர். அவ்வப்போது மறைந்திருந்து தாக்கியழித்துத் தப்பியோடும் கெரில்லா முறையினைப் புலிகள் தமது இராணுவத் தந்திரோபாயமாக கொண்டிருந்தனர்.

இப் பின்புலத்தில், ஆர். பிரேமதாச **02.01.1989** அன்று இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதிப் பதவிக் காலத்திற்குப் பதவியேற்றார். அவர் இலங்கையின் சமூக அமைப்பில் சாதி அடிப்படையிற் தாழ்த்தப்பட்ட குடும்பத்திற் பிறந்து வளர்ந்து அதியுயர் பதவிக்கு வந்தவர். எனவே அவரது சில குணவியல்புகள் சிங்கள ஆதிக்க-சாதி மேட்டுக்குடித் தலைவர்களின் குண வியல்புகளின் வேறுபட்டுத் தெரிந்தன. ஆயினும் அவற்றில் எதுவும் தரகு முதலாளிய யூ.என்.பி.யின் வர்க்க நிலைப்பாட்டிற்கு ஊறாக அமையவில்லை. பதிலுக்கு, யூ.என்.பி.யைச் சாதாரண உழைக்கும் கிராம மக்கள் மட்டத்திற்குக் கொண்டுசென்று அவர்களிடையே வாக்கு வங்கியை வளர்க்க உதவியது.

ஜனாதிபதி பிரேமதாச, இந்திய ஆளும் வர்க்கத்துடன் இணக்கமற்றுத் தெரிந்தார். இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதை அவர் கடுமையாக எதிர்த்துவந்தார். மாகாணசபை மூலம் அதிகாரப் பகிர்வு இடம்பெறக் கூடாது என்பதிலும் விடாப்பிடியாக இருந்தார். இவ்விடயத்தில், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கவும் இந்திய ஆளும் வர்க்கத்தின் அரவணைப்பைப் பெறவும் முன்னின்ற, மேட்டுக்குடி வழிவந்த யூ.என்.பி. தலைவர்களான காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோருடன் கடுமையாக முரண்பட்டார்.

அத்தகைய ஜனாதிபதி பிரேமதாசவை, "எதிரிக்கு எதிரி நண்பன்" என்ற வகையில், தமது நோக்கங்கட்குப் பயன்படுத்தப் புலிகள் இயக்கம் முன்வந்தது. அவ்வாறே, இந்திய இராணுவத்தை

வெளியேற்றும் தனது நோக்கத்திற்காகப் பிரேமதாச புலிகளுடன் உறவாட முன்வந்தார். அதன் விளைவாக, அவர் பதவியேற்ற ஐந்தாம் மாதத்தில், *04.05.1989* அன்று பிரேமதாச-புலிகள் பேச்சுவார்த்தை கொழும்பில் ஆரம்பித்தது. அதிற் பிரபாகரனும் பொட்டம்மானும் கலந்துகொள்வில்லை. அடுத்த நிலைத் தலைவர்களான மாத்தையா, யோகி, அன்ற்றன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், லோரன்ஸ் திலகர், மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். அரசாங்கத் தரப்பில் உயர் அதிகாரிகளான சேபால அட்டிகல, பிரட்மன் வீரக்கோன், கே.எஸ்.கே. விஜயதாசா, தளபதி சிரில் ரணதுங்க, பேணாட் திலகரத்ன போன்றோர் கலந்துகொண்டனர். புலிகள் இயக்கக் குழுவினரை இலங்கை இராணுவ உலங்குவானூர்தி மூலம் வன்னிக் காட்டிலிருந்து அழைத்துவந்து கொழும்பின் ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹில்ட்டனில் தங்கவைத்தனர். பேச்சுவார்த்தைகள் அங்கு இடம்பெற்றன. ஏறத்தாழப் பதின் மூன்று மாதங்கள் இடம்பெற்ற அரசாங்கம்-புலிகள் பேச்சு வார்த்தையால் தேசிய இனப் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் காணவியலவில்லை. தீர்வுகாணும் நோக்கம் இரு தரப்பினரிடமும் இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

ஜனாதிபதி பிரேமதாசவும் அவரது அரசாங்கமும் இப் பேச்சுவார்த்தை மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தித் தமது பேரினவாத முதலாளிய நிலைப்பாட்டை வலுப்படுத்தலாம் என நம்பினர். அதன் மூலம் இலங்கை அரசியலில் தனது ஆட்சி அதிகாரத்தைச் சிங்கள மக்களின் ஆதரவோடு நீடித்து நிலைக்கவைத்து இரண்டாம் முறையும் ஜனாதிபதிப் பதவிக்கு வருவதைப் பிரேமதாச நோக்கமாகக் கொண்டிருந்தார். அதைவிடப், பிரேமதாசவிற்கு உடனடியாகத் தேவைப்பட்டது வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருக்கும் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதாகும். அவரிடம் இருந்த இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு சிங்கள மக்களிடையே வரலாற்று வழியாக இருந்துவந்த இந்திய ஆதிக்க எதிர்ப்புடன் இணைந்ததாகத் தெரிந்தது. அதேவேளை, புலிகள் இயக்கத்தின் இந்திய விரோதம், இந்திய இராணுவத்தை அகற்றுவதன்மூலம் தமது தனியதிகார நோக்கங்களை அடைய வழியமைப்பதாக

இருந்தது. ஆதலால் இரு தரப்பினரினதும் நோக்கங்கள் சிரமமின்றி ஒரே புள்ளியில் ஒன்றிணைந்தன.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய புலிகள் இயக்கம் தனது அடுத்த நகர்வுக்குரிய நடவடிக்கைகளை வலுப்படுத்தியது. இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஏறத்தாழப் பத்து மில்லியன் ரூபா பணத்தையும் தமக்கு வேண்டிய ஆயுதங்களையும் ஆயுதத் தளபாடங்களையும் பெற்றனர். அத்துடன் சொகுசு வாகனங்கள் உட்பட்ட பலரக வாகனங்களையும் பெற்றனர். பெண் புலி உறுப்பினர்கள் உட்படச் சிறையிலிருந்த பன்னிரண்டு பேரை விடுவித்தனர். அத்துடன் புலம்பெயர்ந்து வாழ்ந்த பிரபாகரனின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இலங்கைக் கடவுச்சீட்டுடன் கட்டுநாயக்க விமான நிலையம் வந்து அங்கிருந்து அரசாங்க உலங்கு வானூர்தி மூலம் வன்னிக் காட்டை அடைந்தனர். அத்துடன், அதே கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் தளபதி கிட்டுவிற்கும் அவரது காதலிக்கும் 1989 ஒக்ரோபர் 25ஆம் திகதி திருமணம் நடந்தது. இவையாவும் 1990ஆம் ஆண்டின் முற்பகுதி வரை புலிகள் இயக்கம் பெற்ற சாதகமான விடயங்களுட் சேரும்.

இவ்வாறான அரசாங்க-புலிகள் உறவும் பேச்சுவார்த்தையும் நீடித்த சூழலிலேயே ஜனாதிபதி பிரேமதாச கொழும்புக்கு வெளியே நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அக் கோரிக்கையைச் சிங்கள மக்கள் வரவேற்றனர். அதேவேளை அமைதி காக்கும் பெயரில் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்த இராணுவம் வெளியேற வேண்டுமெனப் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களும் வலியுறுத்தினர். இவற்றைப் புலிகள் இயக்கம் தனக்குச் சாதகமாக்கியது.

இச் சூழலில், 1990 மார்ச் மாதம் இந்திய இராணுவம் வெளியேறலானது. மார்ச் 24ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்திலிருந்தும் பலாலி விமான நிலையத்திலிருந்தும் இந்திய இராணுவம் இறுதியாக வெளியேறியது. அவர்களது அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் மாகாணசபை ஆட்சியை நடத்தி அராஜகம் புரிந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும் இலங்கை மண்ணில் இருக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஏற்கனவே மாகாணசபை ஆட்சியின் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வை எட்டமுடியாத முதலமைச்சர் வரதராஜப் பெருமாளைத் தலைவராகக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்.வினர் பேரினவாத இலங்கை அரசாங்கத்துடன் முரண்பட்டனர். இந்திய ராணுவம் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்தமையே அவர்கட்கிருந்த ஒரே துணிவாகும். ஜனாதிபதி பிரேமதாச, இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி உடன்பட்ட அதிகாரங்களை அம் மாகாணசபைக்குக் கொடுக்க மறுத்தார். அதுமட்டுமன்றி, மாகாணசபை முதலமைச்சரின் ஒப்புதலின்றி மாகாணசபையைக் கலைக்க முடியாது எனப் பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்த ஒரு முக்கியமான சரத்தை நீக்கப் பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. வினோதம் என்னவெனில் புலிகள் இயக்கம் அச் சட்டத்திருத்தத்திற்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துத், தனது முகவர்களாகப் பாராளுமன்றத்தில் இருந்த பதின்மூன்று ஈரோஸ் பிரதிநிதிகளையும் அதற்கு ஆதரவாகக் கையுயர்த்த வைத்தது. இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் பிற்போக்குத் தமிழ் தேசியவாதத் தலைமைகள் பேரினவாத ஆட்சியாளர்களுடன் இணைந்து பல மக்கள்-விரோதச் சட்டங்கட்கு வாக்களித்துள்ளனர். புலிகள் இயக்கம் ஈரோஸ் மூலம் அதே அடிச்சுவட்டைப் தொடர்ந்தது. ‘தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக வேண்டும்’ என்பது போல அது அமைந்தது.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறியபின் வரதராஜப் பெருமாளுக்கும் அவருடைய தலைமையிலான வடக்கு-கிழக்கின் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தவர்களும் இங்கு பாதுகாப்பிற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே அவர்களும் இந்தியா செல்ல வேண்டியாயிற்று. தாம் வெளியேறு முன் அவர்கள் “தமிழீழப் பிரகடனம்” செய்தனர். வரதராஜப்பெருமாளின் தமிழீழப் பிரகடனத்தை யாரும் கணக்கிற் கொள்ளவில்லை. அப் பிரகடனத்துக்குப் பின்னாலும் இலங்கையிற் தோல்விகண்ட இந்திய உளவு நிறுவனமான “றோ”வின் அரசியல்-இராணுவத் தந்திரோபயம் இருந்தது.

இந்திய ராணுவம் வெளியேறியபோது அதன் 32-மாத (1987.07.29 - 1990.03.24) நிலைகொள்ளலில் ஏறத்தாழ 1300க்கு மேற்பட்ட படையினரை வடக்கு-கிழக்கு மண்ணிலே பலிகொடுத்தனர். அத்துடன் இந்திய முன்முயற்சியால் விளைந்த இலங்கை-இந்திய ஒப்பந்த மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் எட்டமுடியவில்லை என்பதும் இந்திய ஆளும் வர்க்கத்திற்குப் பலத்த அடியானது.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான, இந்திய இராணுவத்தினரைத் தாமே வெளியேற்றியதாகப் புலிகள் தமக்குத் தாமே வெற்றிப் புகழ்மாலை சூட்டினர். இந்திய இராணுவத்தை எதிர்த்துப் புலிகள் இயக்கம் களத்தில் நின்றமை உண்மை. ஆனால் அது மட்டுமே இந்திய இராணுவத்தை வெளியேற்றவில்லை. ஜனாதிபதி பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்தின் நெருக்குதல்களும் இராஜதந்திர நகர்வுகளும் அதற்கு முக்கிய காரணங்களாம். அத்துடன் இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி தோற்று வி.பி. சிங் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது. பிரதமர் வி.பி. சிங் இந் தியஇராணுவம்இலங்கையில்நிலைகொள்வதைவிரும்பவில்லை. அது இந்தியாவிற்கு அவப் பெயரை ஏற்படுத்தியமையை ஐக்கிய முன்னணிக் கட்சிகளும் சுட்டிக்காட்டியிருந்தன. மீண்டும் காங்கிரஸ் வென்று ராஜீவ் காந்தி மீளவும் பிரதமராகியிருந்தால் இந்திய இராணுவம் வெளியேறியிராது என்பது பல அரசியல் நோக்கர்களது கருத்தாகும். இதன் சாத்தியப்பாட்டைப், பின்னர், ராஜீவ் காந்தி மீது புலிகளது தற்கொலைத் தாக்குதல் முயற்சி உறுதிப்படுத்தியது. அனைத்துக்கும் மேலாக இந்திய இராணுவம் இலங்கையின் வடக்கு-கிழக்கில் நிலைகொள்வதை மக்கள் விரும்பவில்லை. இந்திய இராணுவ நிலைகொள்ளல் இலங்கை மக்களின்- குறிப்பாக தமிழ் மக்களின் -நலன்கள் சார்ந்த நடவடிக்கைல்லாது இந்திய மேலாதிக்க நலன்களின் அடிப்படையிலானதாகும். அதனாலேயே அமெரிக்க, மேற்குல சக்திகள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கின. அதற்கான தளமாக நோர்வே அமைந்தது.

இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கிற் கால்பதித்த காலம் முதல் அதன் வெளியேற்றம் வரையான **32** மாதங்களில் இந்திய இராணுவம், புலிகள் இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம், ஏனைய ஆயுததாரி இயக்கங்கள் ஆகியவற்றால் கொல்லப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை மிகப் பெரிதாகும். திட்டமிட்ட அரசியற் படுகொலைகளும் அவற்றுள் அடங்கும். மேற் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு முன்பும் அதற்குப் பின்பும் இடம்பெற்ற அரசியற் படுகொலைகள் வேறாக நோக்கப்பட வேண்டியன.

**1989.07.13** அன்று தமிழ்த் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கிய அமிர்தலிங்கத்தையும், அவரது சகாவும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான வெ. யோகேஸ்வரனையும் அவர்கள் தங்கியிருந்த கொழும்பு இல்லத்தில் விடுதலைப் புலிகள் பட்டப்பகலிற் சுட்டுக் கொன்றனர். அவர்களுடன் இருந்த மு. சிவசிதம்பரம் படுகாயமடைந்தார். மேற்கூறிய படுகொலைகள் மட்டுமன்றி எந்த அரசியற் படுகொலையும் ஏற்கத்தக்கதல்ல. ஆனால் வரலாற்றின் முரண்நகையை இங்கே நோக்கத் தகும். இதே அமிர்தலிங்கமும் தமிழர் கூட்டணியினரும் துரோகிகள் என விரல் நீட்டிக் காட்டிய அனைவரையும் புலிகள் சுட்டுக்கொன்றனர். அவ்வேளை, மௌன அங்கீகாரமும் திரைக்குப் பின்னால் வாழ்த்தும் வழங்கப்பட்டது. இப்போது தமது வழிகாட்டியை, அதே துரோகிப் பட்டத்துடன் புலிகள் சுட்டுக்கொன்றனர். "வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததாகவும்" "பழி விட்டுப் போகாது" எனவும் தமிழ் மக்கள் மத்தியிற் பேசப்பட்டது. அதேவேளை, அக் கொலைகளை நியாயப்படுத்தினோரும் இருந்தனர்.

இக் காலகட்டத்தில் **1989**ன் நடுப் பகுதியில் வன்னிக் காட்டில் இருந்து புலிகளின் தலைமையால் புதிய ஜனநாயகக் கட்சியின் (அன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது), இப்போது பு.ஜ.மா.லெ.க.) பொதுச் செயலாளர் தோழர் மணியத்தைக் கொல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இச் செய்தியை இடைமறித்துச் செவிமடுத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் சிலரால் அது கட்சித் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டது.

கட்சித் தலைமை துரிதமாகச் செயற்பட்டு தோழர் மணியத்தைப் பாதுகாத்துக் கண்டி நகரை அண்மிய ஒரு கிராமத்திற் தலைமறைவாக வைத்திருந்தது. ஏழு மாதத் தலைமறைவு வாழ்வின் போது கடும் சுகவீனம் ஏற்பட்டு 1989 நவம்பர் 27ஆம் நாள் தோழர் மணியம் இயற்கை எய்தினார். அவரது உடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கட்சியின் பூரண மரியாதையுடனும் தோழர்களதும் நண்பர்களதும் பொதுமக்களதும் இறுதி அஞ்சலியுடனும் தகனம் செய்யப்பட்டது. இத்தகைய சூழலில் 1990 மார்ச் பிற்பகுதியில் இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கிலிருந்து வெளியேறியது. (இந்தியப் படை விலகல் தொடர்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட அறிக்கையைப் பின்னிணைப்பு 9இல் காண்க.) அதன்பின், புலிகள் இயக்கம் வடக்கு-கிழக்கில் தனது முழுமையான கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முயன்றது. அதனை அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 13

# புலிகளின் எழுச்சி

*1990* மார்ச் இறுதி வாரத்தில் இந்திய இராணுவம் வெளியேறியபின், வடக்கு-கிழக்கு நிலப்பரப்பின் பெரும்பகுதியைப் புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடிந்தது. முக்கியமான இராணுவ, கடற்படைத் தளங்களை ஏற்கனவே புலிகள் இயக்கம் தாக்கி அழித்திருந்தது. இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கில் இறங்கியதும் இலங்கை இராணுவம் தனது படைத்தளங்களுள் முடங்கியது. இந்திய இராணுவம் வெளியேறிய பின்னும் அம் முடக்கம் தொடர்ந்தது. புலிகள் இயக்கம் வளர்ச்சி பெற்றிருந்ததால், உடனடியாக விடுதலைப் புலிகளுடன் போராடி வடக்கு-கிழக்கைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவது இலங்கைப் படைகட்கு இயலாது. இந்திய இராணுவத்தால் ஓரளவு கட்டுப்பட்டிருந்த காலத்தில்

அது தனது இராணுவ வலிமையைப் பெருக்கியது. ஆயினும், ஆட் தொகையிலும் ஆயுதங்கள் பெறுவதிலும் புலிகள் வலுவுடன் விளங்கினர்.

மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் செயல்களால் இலங்கை இராணுவத்தின் மீது மக்களுக்கு வெறுப்பும் எதிர்ப்பும் இருந்தது போன்று, இந்திய இராணுவத்தின் மோசமான நடத்தையால் அதை ஓர் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவமாகவே மக்கள் நோக்கினர். அதன் காரணமாகப், புலிகள் இயக்கம் இலங்கை இராணுவத்திற்கு எதிராகப் போராடியதைக் கணிசமானோர் வெளிப்படவும் மானசீகமாகவும் ஆதரித்தவாறே, இந்திய இராணுவத்திற்கு எதிராகப் புலிகள் தாக்குதல் தொடுத்தபோதும் மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவு காணப்பட்டது.

ஆனால் அவ்வாதரவு முழுமையான, வெகுஜனரீதியான அரசியல்மயப்பட்ட ஆதரவல்ல. பெரும்பாலும் புலிகளின் வீரத்தையும் அவர்களது உயிர் அர்ப்பணிப்பையும் கருதியே அந்த ஆதரவு அமைந்தது. "பெரிசுகள் விடமாட்டாங்கள்" என்று பேசும் போக்குப் பெரிதுங் காணப்பட்டது. இந்நிலை புலம் பெயர்ந்த நாடுகளிலும் பரந்தளவில் இருந்தது.

வடக்கு-கிழக்கில் அதிகளவு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டிருந்த புலிகள் இயக்கம் இராணுவரீதியில் தன்னைப் பலப்படுத்தி ஆங்காங்கே தாக்குதல்களையும் முன்னெடுத்ததுடன் அப் பிரதேசங்களில் சுதந்திரமான நடமாட்டத்தையும் கொண்டிருந்தது. ஆயுதங்கள் வாகனங்கள் முகாங்கள் ஆயுதப்-பயிற்சி மறைவிடங்கள் எனப் புலிகள் விஸ்தரித்தனர். தமிழ் மக்களின் மாற்று இராணுவம் போன்று நாளாந்தச் செயற்பாடுகள் விரிந்தன. வடக்கு-கிழக்கின் கடற்பரப்பில் தமது தேவைகளை ஒரளவு நிறைவுசெய்ததுடன் கடற்புலிகள் அமைப்பை வளர்த்து உரியவற்றை வழங்கி அதைப் பலப்படுத்தினர்.

இவ்வாறான சூழலில், வடக்கு-கிழக்கு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை மிகுந்த நெருக்கடிகளிடையே முன்னெடுக்க வேண்டியிருந்தது. இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாடு

இல்லாத நிலப்பரப்பிலும் இலங்கை அரச நிர்வாகம் தொடர்ந்தது. அதேவேளை, புலிகள் இயக்கத்தின் நிர்வாக நடைமுறைகளும் விரிவாயின. எந்தெந்த முனைகளில் வரிகளை அறவிட முடியுமோ அங்கெல்லாம் வரிகள் அறவிடப்பட்டன. சகல தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெருந்தொகையான பணம் அறவிப்பட்டது. அத்துடன் புலிகள் இயக்கத்தினர், தாமும் வர்த்தக, வணிக நிலையங்களை நடத்தத் தொடங்கினர். எதிலும் பணம் முதன்மைப்பட்டது. அதனை மையமாக்கி, அச்சுறுத்தல் மூலம் நிர்வாக நடைமுறைகள் கட்டாயச் சட்டம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டன.

ஓர் அரசுக் கட்டமைப்பிற்குரிய ஆயுதப் படைகள், வரி அறவிடு, நீதிமன்றம், “பங்கர்” என்ற நிலக்-கீழ் அறைகளில் அமைந்த சிறைச்சாலைகள் என்பவற்றை உருவாக்கினர். அவற்றுக்குத் “தமிழீழம்” என்ற பெயர் சூட்டப்பட்டது. எதிர்ப்போ மறுப்போ அதிருப்தியோ தெரிவித்தோர் ஒடுக்கப்பட்டனர். மிரட்டல், சிறை, சித்திரவதைகள், காணாமலாக்கல் போன்றவை பாசிசத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன. “தமிழீழத்தின் அசையும், அசையாச் சொத்துகள் யாவும் புலிகள் இயக்கத்திற்கே சொந்தம்” என்றவாறு தமது நிர்வாகத்தின் கீழ் புலிகள் மிக்க அகங்காரத்துடன் நடந்தனர். சகலவற்றுக்கும் புலிகளை எதிர்பார்த்தும் பணிந்தும் இருக்கவேண்டிய ஒரு புதுவகை அடக்குமுறைக் கீழ் வாழுமாறு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மக்களை அரசியல்மயப்படுத்தி தமது செயற்பாடுகள் அனைத்திலும் அவர்களது அபிப்பிரயாயங்களைக் கேட்டறிந்து தவறுகளை நீக்கி, மக்கள் சார்பானவற்றை முன்னெடுப்பதைப் புலிகள் இயக்கம் எங்குங் கைக்கொள்ளவில்லை. அனைத்திலும் தமது ஆயுத வலிமை மீதும் தமது “தன்னிகரில்லாத் தலைவர்” பிரபாகரன் மீதுமே நம்பிக்கைவைத்துச் செயற்பட்டனர். ஆனாற், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், மக்கள் இரட்டை நிர்வாகத்தின் கீழ் மிகுந்த துன்பங்களை அனுபவித்தனர். விடுதலைப் போராட்டத்தில் மக்கள் கஷ்டங்களை அனுபவித்தே தீர வேண்டும் எனப் புலிகள் விளக்கமளித்தனர். வடக்கில் பலாலி, இயக்கச்சி, பூநகரி படைத்தளங்கள் வலிதாயிருந்தன.

வடக்கிற்கான தரைவழிப்பாதை வவுனியா தாண்டிக்குளத்திற்கு அப்பால் ஏற்கனவே தடைப்பட்டிருந்தது. இந்திய இராணுவப் பிரசன்னத்தின் போது அது திறக்கப்பட்டது. இந்திய இராணுவம் திரும்பிச் சென்றதும், ஏ-9 பாதையைப் புலிகள் தமது கட்டுப்பாட்டினுட் கொண்டுவந்தனர். இயக்கச்சி முகாம் ஏ-9 பாதையில் இருந்ததால் பரந்தன் முதல் பளை வரை தரைவழிப் பாதை மூடப்பட்டிருந்தது. எனவே பூநகரி-சங்குப்பிட்டி ஊடாகவும் கிளாலி கடலேரி ஊடாகவும் குடாநாட்டிற்குப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான சிரமம் நிறைந்த பாதைகளின் ஊடாக மக்கள் வவுனியாவுக்கும் அதற்கு அப்பாலும் பயணித்தார்கள். அவ்வாறு செல்லும் பயணிகள் புலிகள் இயக்கத்திடம் அவர்களது அலுவலகங்களிற் பணம் செலுத்தி முன்கூட்டி அனுமதி பெறவேண்டியிருந்தது. அவ்வாறு அனுமதி பெறுவோர், இருவரைப் பிணையாக வைத்தே அனுமதி பெறவேண்டும் எனவும் குறித்த காலத்தில் திரும்பவேண்டும் எனவும் புலிகள் நிபந்தனை விதித்தனர்.

வடக்கிற் கைக்கொண்ட நடைமுறையைப் புலிகளால் கிழக்கில் பின்பற்றமுடியவில்லை. ஏனெனில், கிழக்கின் அமைவிடமும் அங்கே முஸ்லிம்கள், சிங்களவர் அனைவரும் வாழ்ந்துவந்தமையாகும். அங்கே தமது தனி ஆதிக்கத்தை நிலைநிறுவ முடியாத அதேவேளை, முஸ்லிம் மக்களோடு முரண்பட்டு அவர்கள் மீது அவ்வப்போது தாக்குதல்களையும் கொலைகளையும் நடத்தினர். அவ்வாறே சிங்களக் கிராமங்கள் மீதும் சிங்கள மக்கள் மீதும் அவ்வப்போது தாக்குதல்களையும் கொலைகளையும் நடத்தினர். இதனால் அவ்விரு இனத்தவர்களிடமிருந்தும் நிரந்தரமான வன்மமிக்க எதிர்ப்பைப் புலிகள் பெற்றனர். அவர்களது இயக்கம் ஒரு விடுதலை இயக்கமல்ல என்ற பொது எண்ணத்தை அவர்களது செயல்கள் ஏற்படுத்தியிருந்தன. கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டக் கிராமங்களில், புலிகள் தமது நிலைகளை வலிமையாகக் கொண்டிருந்த அதேவேளை, அம்பாறை மாவட்டக் காடுகளையும் தமிழ்க் கிராமங்களையும் பயன்படுத்தினர். கிழக்கிலிருந்து பெருந்தொகையான இளைஞர்கள் புலிகள்

இயக்கத்தில் இணைந்தனர். விரும்பியும் சூழல் நிர்பந்தத்தாலும் கட்டாயத்தாலும் அவர்கள் உறுப்பினர்களாகினர். அங்கு உருவாகிப் பயிற்சி பெற்ற புலிகள் இயக்கப் படையணி ஆற்றல் மிக்க தாக்குதல் அணி என்று பேசப்பட்டது. கிழக்கிலிருந்து இளம் ஆண்களும் பெண்களும் இயக்கங்களில் இணைந்ததற்குக் கூறப்பட்ட இரண்டு காரணங்களில் உண்மை இருந்தது. ஒன்று, பொருளாதார நிலையில் கிழக்கின் பின்தங்கிய கிராமங்களின் வர்க்க நிலவரமாகும். மற்றது பேரினவாத ஒடுக்குமுறையை நேரடியாக எதிர்நோக்குவோராகவும் அன்றாட வாழ்வில் அனுபவிப்போராகவும் அவர்கள் இருந்தமையாகும். கிழக்கிலிருந்து பெருந்தொகையான இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்தபோதும், வடக்கு-கிழக்குப் பிரதேசவாத எண்ணங்கள் அவ்வியக்கத்திலிருந்து அகலவில்லை. புலிகள் இயக்கம் சாதியக் கருத்தியலையும் சிந்தனையையும் அகற்றத் தவறியவாறே பிரதேசவாதச் சிந்தனையையும் நடைமுறையையும் தூக்கிவீசத் தவறியமை நோக்கற்குரியது. இவ்விடத்துத், தமிழர்களின் பழைமைவாத மேட்டுக்குடிக் கருத்தியலும் யாழ்ப்பாண ஆதிக்கச் சிந்தனைப் போக்கும் புலிகள் மத்தியில் இருந்தமையின் பங்கை மறுக்கமுடியாது.

புலிகள் இயக்கம் வடக்கு-கிழக்கில் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தனது இராணுவ வழிப்பட்ட நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தியதோடு தாக்குதல்களையும் ஆங்காங்கே முன்னெடுத்த அதேவேளை, பிரதான அரச படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர் போன்றோரையும் தாக்கி அழிப்பதில் மும்முரம் காட்டியது. ஏற்கனவே உருவாகிச் செயற்பட்டுவந்த தற்கொலைப் படையைக் கொண்டு தனிமனித இலக்குகளைத் தாக்கினர். தரையில் தமது தாக்குதல்களை விரிவுபடுத்திப், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் பயண ஊர்திகளிலும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். தெற்கில், குறிப்பாக தலைநகரின் முக்கிய இடங்களில், குண்டுவைக்கவும் மக்களைக் கொல்லவும் புலிகள் தயங்கவில்லை. இத்தகைய தாக்குதல்களை இலங்கைக்கு அப்பால் தமிழ்நாட்டிலும் மேற்கொண்டனர். அதில் மிக முக்கிய கொலை நிகழ்வு, ஈ.பி. ஆர்.எல்.எவ். இயக்கத் தலைவராயிருந்த பத்மநாபா உட்பட்ட

12 பேரை ஒரே இடத்தில் வைத்துக் கொன்றமையாகும். இக் கொலை நடந்து பதினொரு மாதங்கட்குப் பின், 21.05.1991 அன்று, தமிழ்நாட்டில் ஸ்ரீ பெரும்புதூரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தற்கொலைக் குண்டுதாரியான பெண்-புலி தானு திட்டமிட்ட குண்டுவெடிப்பிற் கொன்றார்.

அவ்வாறே பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, கடற்படைக் கொமாண்டர் கிளான்சி பெணாண்டோ, ஜனாதிபதி ஆர். பிரேமதாச, காமினி திசாநாயக்க ஆகியோர் புலிகளின் தாக்குதல்களில் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டனர். கிழக்கின் சாம் தம்பிமுத்துவும் அவரது மனைவி கலா தம்பிமுத்துவும் கொழும்பிற் கொல்லப்பட்டனர். இலங்கையில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த 1989ஆம் ஆண்டில் யாழ் பல்கலைகழக மருத்துவ-பீட உடற்-கூற்றியற்துறை விரிவுரையாளர் ராஜினி திராணகம புலிகளாற் கொல்லப்பட்டார். இதிற் கவனிக்கத்தக்கது யாதெனில், இக் கொலை வடக்கில் மட்டுமன்றித் தெற்கிலும் கல்வியாளர்கள், ஆய்வறிவாளர்கள் நடுவே புலிகள் மீதான வன்மத்தைக் ஏற்படுத்தியது. இதே ராஜினி திராணகம முன்னர் புலிகள் இயக்கத்துடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட ஒரு ஆய்வறிவாளராவார் என்பதும் இங்கு குறிப்பிடதக்கத்து.

மேலே குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலாகப் பல தனிமனிதர்களும் மாற்று இயக்கத்தவர்களும் புலிகளின் தொடரான கொலைவெறித் தாக்குதல்கட்கு ஆட்பட்டனர். அவர்களிடையே வடபகுதியில் இடதுசாரித் தலைவர்களாக அறியப்பட்ட நவசமாஜக் கட்சியின் வி. அண்ணாமலை, பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் எஸ். விஜயனந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர். வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டு நிர்வாகம் ஆரம்பித்துச் சில மாதங்கள் கடந்து, 1990 ஒக்டோபர் முடிவில் வடக்கைப் பாரம்பரியமாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்களைப் புலிகள் இயக்கம் வடக்கிலிருந்து வெளியேற்றியது. திடீரென யாழ் முஸ்லிம் வட்டாரத்தையும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த ஏனைய

பகுதிகளையும் சுற்றிவளைத்த புலிகள் இயக்கத்தினர் கைகளிற் கொண்டுசெல்லக்கூடிய உடைகளுடன் சில மணி நேரத்தில் வெளியேறுமாறு ஆணையிட்டனர். வேறெப் பொருளையுமோ நகைகளையோ ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பணத்தையோ கொண்டுசெல்லப் புலிகள் அனுமதிக்கவில்லை. புலிகளின் துப்பாக்கி முனையில் வடக்கிலிருந்து ஒரு லட்சமளவான முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஆண்கள், பெண்கள், முதியோர், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் முதல் கடும் நோயாளர்கள் வரை மாரிகாலத் தொடக்க மழைக்குளிரில் விரட்டப்பட்டனர். அதன் காரணத்தைப் புலிகள் என்றுமே கூறவில்லை.

இது போன்ற ஒரு மனிதக் கொடுமையை அன்றுவரை முஸ்லிம் மக்கள் அனுபவித்தது கிடையாது. மனிதநேயமற்ற இக் கொடுஞ்செயல் மூலம் தாம் ஒரு விடுதலை இயக்கம் என்று பிரகடனப்படுத்தும் தகுதியை இழந்த விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னை பாசிச நடைமுறைகளுடைய ஒரு ஆதிக்கவாத இயக்கம் என நிறுவியது. முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டபோது வட பகுதித் தமிழ் மக்கள் திகைத்துச் செயலற்று நின்றனர். ஆயுத அராஜகத்தின் கீழ் ஏனைய விடயங்களில் மௌனம் சாதித்தது போல, மௌனமாக மன வேதனையடைவதைத் தவிர, அவர்களால் எதையும் செய்ய இயலவில்லை. அதை மிகுந்த சகோதர உணர்வோடு வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் உணர்ந்தனர்.

புலிகள் இயக்கம் தமது நிர்வாகத்தைச் சகல நிலைகளிலும் நடத்திய அதேவேளை, அரச நிர்வாகமும் முறிவின்றி இயங்கியது. புலிகள் அதை முடக்க முயலவில்லை. அவ்வாறு செய்யின் மக்களின் கடும் எதிர்ப்பையும் நடைமுறைப் பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டும் என அவர்கள் அறிந்திருந்தனர். அரச நிர்வாகம் அரசாங்க அதிபர் மூலம் இயங்கியது. கல்வி, சுகாதாரத் துறைகளும் இயங்கின. இருப்பினும் அவற்றிற் கட்டுப்பாடுகளும் மட்டுப்பாடுகளும் நிலவின. பொலிஸ் துறையும் நீதிமன்றங்களும் இல்லாததால், புலிகள் இயக்கம் தனது காவல்துறையையும் நீதிமன்றங்களையும் சிறைச்சாலைகளையும் கொண்டிருந்தது.

தமது இத்தகைய நிர்வாகத்தின் கீழ், வரிகட்கும் மேலாக, முக்கிய ஆயுதங்களை வாங்குதற்காக மக்களிடமிருந்து குறைந்தது இரண்டு பவுண்கள் பெறும் செயற்திட்டத்தைப் புலிகள் விரிவுபடுத்தினர். அவர்கள் தோற்றுவித்த சிற்றூர்ச் சபைகள் அதற்குப் பயன்பட்டன. வெளிநாட்டுத் தொடர்புடைய குடும்பங்களிடமிருந்து கூடுதலான பவுண்கள் பெறப்பட்டன. இதனால் மக்கள் மத்தியில் அதிருப்தியும் எதிர்ப்பும் தோன்றியபோதும், புலிகளின் ஆயுத அராஜகத்திற்கு அஞ்சி மௌனமாக இருக்கும் நிலையே காணப்பட்டது.

புலிகள் இயக்கத் தாக்குதல்கள் அதிகரித்த சூழலில், அரசாங்கப் படைகளின் தூர-வீச்சு எறிகணைகளாலும் விமானத் தாக்குதல்களாலும் கடற்படைத் தாக்குதல்களாலும் மக்கள் கொன்றொழிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ந்தன. தரைவழி, கடல்வழிப் பயணங்களின் போது மக்கள் கூட்டங்கூட்டமாகக் கொல்லப்பட்ட நிகழ்வுகள் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்றன. கிழக்கில் கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஏற்கனவே குமுதினிப் படகுப் படுகொலை, கிளாலிப் படகில் இடம்பெற்ற படுகொலை, நவாலிப் படுகொலை போன்ற கோர நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. இவற்றைப் பேரினவாத அரச ஒடுக்குமுறைப் படைகளே நடத்தின. புலிகளின் தாக்குதல்கட்குப் பதிலாகப் பழிக்குப்பழி என்ற வகையில் முன்னெடுத்த இத் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்புகளையும் படுகாயங்களையும் சொத்தழிவுகளையும் கண்டனர். (பின்னிணைப்புகள் 10ஐயும் 11ஐயும் காண்க.)

அவற்றுக்கு விளக்கமளித்த அரசாங்கம், அவை புலி இலக்குகள் மீதான தாக்குதல்கள் எனப் பிரசாரப்படுத்தியது. இத்தகைய தாக்குதல்களில் பொதுமக்கள் சாவதைப் புலிகள் விரும்பினர். தமது போராட்ட நியாயங்களை வலுப்படுத்த அவ் அழிவுகளைப் பயன்படுத்தினர். அழிவுகளின் தொகை எவ்வளவுக்கு அதிகரிக்குமோ அவ்வளவு துரிதமாகத் தாம் விடுதலையை அண்மிக்க இயலும் என்ற தவறான நம்பிக்கையிற் புலிகள் செயற்பட்டனர். இந்த மோசமான மக்கள் விரோத

நிலைப்பாட்டைப் புலிகள் இயக்கம் இறுதிக் கட்டமான முள்ளிவாய்க்கால் போர்முனை வரை முன்னெடுத்தது.

*1990* முதல் புலிகள் அதிகளவு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையும் தாங்கள் முகாங்கட்குள் முடக்கப்பட்டதையும் ஆயுதப் படைகளாலும் இலங்கை அரசாங்கத்தாலும் தாங்க முடியவில்லை. அந்த நிலையை மாற்றும் வகையில் அவர்கள் உள்ளார்ந்த தயாரிப்பைச் செய்து வந்தனர். ஆயுதங்களையும் தளபாடங்களையும் பெற்றுப், பயிற்சிகளையும் மேற்கொண்ட அதேவேளை, குடாநாட்டைப் புலிகள் இயக்கத்திடமிருந்து மீட்டுத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரக் காத்திருந்தனர். இலங்கை இராணுவம் தன்னை வலுப்படுத்திய அதேவேளை, அரசியல் ரீதியில் அதிகாரத்தில் இருந்த யூ.என்.பி. பலவாறும் பலவீனமானது. ஜனாதிபதி பிரேமதாசவை அடுத்துத் தலைமைக்கு வர எத்தனித்த லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்க ஆகியோரது இழப்பு யூ.என்.பி.க்கு மேலும் பலவீனமானது. இச் சூழலில், *1994*இல் *17*-வருட யூ.என்.பி. ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டது. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிற் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி ஏற்பட்டது. அதன் கீழ்ப் புலிகள் இயக்கமும் பிற தமிழ் இயக்கங்களும் எவ்வாறு செயற்பட்டன என்பதை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 14

# கலையும் போராளி வேடங்கள்

தமிழீழக் கோரிக்கையை வெல்ல ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் இயக்கம் ஒவ்வொன்றினதும் சுயரூபம் 90களில் தமிழ் மக்களின் நடுவே அம்பலமானது. புலிகள் இயக்கந் தவிர்ந்த பெரும்பாலான இயக்கங்கள் இந்தியாவின் கருவிகளாகச் செயற்பட்டமை தெளிவாகியது. அதேவேளை, புலிகள் இயக்கம் தன்னைத் தனியொரு ஆதிக்க இயக்கமாக்குவதில் முனைப்போடிருந்தது. அதற்காக ஏனைய இயக்கங்களையும் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் மாற்றுக் கருத்துடைய அரசியற் சக்திகளையும் வேட்டையாடத் தயக்கமோ தயவுதாட்சணியமோ காட்டவில்லை. புலிகள் இயக்கத்திற்குள்ளும் பிரபாகரனின் தலைமைக்கு எதிராகச் செயற்பட்ட எவரையும் விட்டுவைக்கவும் இல்லை. புலிகள் இயக்கத்தினுள் மாற்றுக் கருத்துகட்கோ ஜனநாயகக்

கலந்துரையாடலுக்கோ இடமிருக்கவில்லை. அந்த இயக்கம், தனது தேர்ந்த புலனாய்வு மூலம் எதிராளிகளை அடையாளங்கண்டு அழிப்பதில் முன்னின்றது போல தன் மத்தியில் இருந்த களப் போராளிகளையும் தலைமைத் தளபதிகளையும் கடுங் கண்காணிப்புக்கும் புலனாய்விற்கும் உட்படுத்திவந்தது. பிரபாகரனின் தனிமனிதத் தலைமைத்துவத்திற்கு எதிரானோரை அறிந்து அழிப்பதே புலிகளின் புலனாய்வுத் துறையின் முக்கிய பணியாயிருந்தது.

அவ்வகையில், பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாயிருந்த மாத்தையாவை 1993இல் பிரபாகரனின் வழிகாட்டலிற் கைதுசெய்து புலிகளின் சிறையில் அடைத்தமை குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ ஒருவருட விசாரணைக்கும் சித்திரவதைகட்கும் பின்பு 1994இல் மாத்தையாவின் மரண தண்டனை நிறைவேறியது. புலிகள் இயக்கம் அதை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லையாயினும் பின்வந்த மாதங்களில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் மூலம் இது உறுதியானது. மாத்தையா மட்டுமன்றி அவருக்கு ஆதரவான பலரும் கைதாகிக் கொல்லப்பட்டதுடன் சிலர் நீண்ட சிறைவைப்புக்கும் ஆளாயினர். இந்த உள்ளியக்க அழிப்பு நடவடிக்கையில், 300 பேராளிகள் வரை அழித்தொழிக்கப்பட்டதாகப் பின்வந்த தகவல்கள் தெரிவித்தன. அவர்கள் இந்திய உளவாளிகள் எனத் துரோகக் குற்றஞ்சாட்டிக் கொல்லப்பட்டனர். இது புலிகள் இயக்கத்திற்குக் கைவந்த கலையாகும். அக் கலையைப் பயன்படுத்தி மாத்தையாவுக்கும் அவரோடு இருந்தவர்கட்கும் முன் எத்தனை பேரைப் பலி கொண்டனர் என்பது சிந்தனைக்குரியது. பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய மற்றொரு தளபதியான கிட்டு, 1993 ஜனவரியில் ஒன்பது சகபோரளிகளுடன் ஐரோப்பாவில் இருந்து கடல்வழியாக இலங்கைக்குத் திரும்புகையில் வழிமறித்த இந்தியக் கடற்படை அவர்களைச் சரணடையும்படி கேட்டது. அதை மறுத்த அவர்கள், தமது கப்பலுக்கு வெடிவைத்துத் தற்கொலை செய்தனர். தனது எதிராளிகளைக் கொல்வதில் ஈவிரக்கமற்ற கிட்டு கப்பலிற் கருகி மாண்டார். இவை புலிகள்

இயக்க வரலாற்று முரண்நகைகளாம்.

தன்னையொரு சக்திமிக்க இராணுவ இயக்கமாக்க விரைந்து செயற்பட்ட புலிகள் இயக்கம் தனது பொருளாதர வலிமையை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெருக்குவதில் முனைப்புக் காட்டியது. அவர்கள் பின்பற்றிய இந்திய விரோதமும் சுயசார்பும் பற்றிய பரப்புரைகள் தமிழ் மக்கள் மத்தியில் விட்டுக்கொடாத உறுதியான இயக்கம் என்னும் ஒரு தோற்றத்தைக் காட்டின. அத்தகைய மதிப்பீடு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வளர்ந்ததையொட்டிப், புலிகள் இயக்கம் அவர்களைப் பணங் காய்ச்சி மரங்களாகப் பயன்படுத்த முன்னின்றது. அதேவேளை, புலிகள் இயக்கத் தலைமை, உள்ளார அமெரிக்க-மேற்குலகச் சார்போடு இயங்கியது. அவ்வியக்கம் அதை வெளிப்படையாக ஒருபோதும் காட்டாவிடினும், முக்கிய சர்வதேச நிகழ்வுகளில் இறுகிய மௌனத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் புலிகள் தமது உள்ளார்ந்த ஏகாதிபத்தியச் சார்பை வெளிப்படுத்தினர்.

இந் நிலையில் தெற்கில் அரசியல் நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. யூ.என்.பி.யின் தொடர் ஆட்சி தொண்ணூறுகளின் நடுக்கூறுவரை நீடித்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பிரேமதாசவின் வரவும் ஜே.வி.பி. மீதான (1988-89) கொடூரத் தாக்குதலும் அவ்வியக்கத்தை மட்டுமன்றிச் சாதாரண இளைஞர்கள் பொதுமக்கள் எனப் பலரையும் கடுமையாகப் பாதித்தது. அரசு இயந்திரத்தின் பாகங்களான பொலிசும் ஆயுதப் படைகளும் தமது அப்பட்டமான ஒடுக்குமுறையை உச்சப்படுத்தியது போல ஜே.வி.பி.யும் தமக்கு எதிரானவர்களைக் கொல்வதில் முனைப்புற்றது.

அவர்களது தனிமனித அழிப்பிற் பல ஜனநாயகவாதிகளும் இடதுசாரிகளும் தொழிற்சங்கவாதிகளும் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி.யின் அழிப்போடும் விஜேவீரவினதும் ஏனைய தலைமைக் குழுவினரதும் கொலைகளோடும் இப் பயங்கர நிலை சற்றுத் தணிந்தது. அதேவேளை, ஜனாதிபதி பிரேமதாச தனது எதிரிகளை அழித்தொழிக்கும் கொள்கையை முன்னெடுத்தார் என்பதை முன்னர் பார்த்தோம். ஜே.வி.பி. அழிப்பின் போது

தெற்கில் அறுபதினாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர் அல்லது காணாமற்போயினர். பிரேமதாசவுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை முறிந்த பின்னர் ஜனாதிபதி பிரேமதாச புலிகள் இயக்கத்தால் 1993ஆம் ஆண்டு மே தின ஊர்வலத்திற் கொல்லப்பட்டார். அன்று பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க அரசியலமைப்பின்படி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். வரவிருந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒன்றரை வருடகால இடைவெளி இருந்தது. யூ.என். பி.யின் தொடரான இருண்ட ஆட்சிக்கு எதிரான கடும் எதிர்ப் பிரசாரத்தை மேற்கொள்ள எதிரணிக் கட்சிகட்கு இக் காலம் வாய்ப்பானது. (பின்னிணைப்பு-12ஐக் காண்க.)

சிரிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீல.சு.க.வும், சந்திரிகா தலைமையிலான மக்கள் கட்சியும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் ஆளும் யூ.என்.பி.க்கு எதிரான தீவிரப் பிரசாரத்தில் மேலும் முன்சென்றன. அதற்கான சூழலை யூ.என்.பி.யின் தொடர்ச்சியான பாசிச ஆட்சி ஏற்படுத்தியது. அவசரகாலச் சட்டமும் பங்கரவாதத் தடைச் சட்டமும் நாடு முழுவதும் கோலோச்சின. அதனால் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடி மக்களைக் கொடிய அடக்குமுறைகட்கு ஆளாக்கியது. வடக்கில் பிரிவினைவாதப் பயங்கரவாதத்தையும் தெற்கில் ஜே.வி.பி.யின் தீவிரவாதத்தையும் அடக்குவதாகக் கூறியே யூ.என்.பி.யின் கீழான அரச இயந்திரம் தனது பாசிச ஒடுக்குமுறையை நடத்தியது

இத்தகைய சூழலில் 1994இல் தென் மாகாணத்திற்கும் மேல் மாகாணத்திற்கும் மாகாணசபைத் தேர்தல்கள் நடந்தன. பாராளுமன்ற இடதுசாரிகள் இணைந்திருந்த பொதுசன ஐக்கிய முன்னணி, ஸ்ரீல.சு.க.வின் தலைமையில் பெருவெற்றியைப் பெற்றது. சந்திரிகா குமாரதுங்க மேல் மாகாண முதலமைச்சராகவும், பின்னர் பாராளுமன்றத் தேர்தலின்பின் பிரதமராகவும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியாகவும் தெரிவானார். அவர் யூ.என்.பி.யின் பதினேழு வருடகால இருண்ட ஆட்சிக்கு முடிவுகட்டிய பொதுசன முன்னணிக்குத் தலைமைதாங்கினார். இந்நிலையில்

யூ.என்.பி.யின் 17 வருடகால இருண்ட ஆட்சியை அகற்றும் தேவை காரணமாக புதிய ஜனநாயகக் கட்சி (இன்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி) சந்திரிகாவையும் பொதுசன ஐக்கிய முன்னணியையும் ஆதரிக்க முடிவெடுத்தது. (பின்னிணைப்புகள் 13ஐயும் 14ஐயும் காண்க.) தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வைக் கொண்டுவருவதாகவும் போருக்கு முடிவு ஏற்படுத்துவதாகவும் மோசமடைந்துவந்த பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதாகவும் சந்திரிகா மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கினார். மனித உரிமைகளும் ஜனநாயகமும் பாதுகாக்கப்படுமெனச் சூளுரைத்தார். எல்லா ஆளும் வர்க்கக் கட்சிகளும் எதிர்க்கட்சியில் இருக்கும்போது வழங்கும் வாக்குறுதிகள் போன்றே பொதுசன ஐக்கிய முன்னணியின் சந்திரிகாவும் தாராளமாக வாக்குறுதிகளை வழங்கினார். மக்களும் வழமைபோன்றே மாறிப் புள்ளடியிட்டு விரைவாகவே ஏமாற்றங்களையும் புதிய அடக்குமுறைகளையும் எதிர்கொண்டனர். 1994இல் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா 62 சதவீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். ஆனால் அந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த மக்கள் எதிர்நோக்கிய எந்தவொரு அரசியல் பொருளாதாரப் பிரச்சினையும் அவரது முதற் தடவையிலும் சரி இரண்டாவது தடவையிலும் சரி தீரவில்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் சந்திரிகாவிடம் எதிர்பார்த்த தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முழுமையாகவோ பகுதியாகவோ கிட்டவில்லை. இருப்பினும் சந்திரிகா தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்முயற்சிகளைத் தனது நம்பிக்கைக்குரிய உயர் வர்க்கத் தமிழ் ஆய்வறிவாளர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்தார். ஆயினும் அவருடன் இருந்த பேரினவாதிகளும் எதிர்ப்புறத்தில் இருந்த யூ.என்.பி.யினரும் அவரது தீர்வுத் திட்டப் பொதிக்கு குழிபறித்துக் குழப்ப முழுமுயற்சி செய்தனர். எதிர்மறை நிலைநின்று பேரினவாதிகட்கும் எதிர்த்தரப்பினருக்கும் உதவுவது போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது வழமையான ஏமாற்றுகள் முலம் தமது இருப்பிற்கு வழிதேடும் காரியங்களில் இறங்கியது.

சந்திரிகா முன்மொழிந்த தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுத்

திட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் யூ.என்.பி. எதிர்த்தது. 2001ஆம் ஆண்டு, தீர்வுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்ற அவைக்குள் யூ.என்.பி. உறுப்பினர்கள் தீயிட்டுக் கொழுத்தினர். தற்போது தமிழ் மக்களின் காவலன் வேடமிட்டுத் தோற்றங் காட்டும் ரணில் விக்ரமசிங்க, அன்று பாராளுமன்றத்திலே அதைச் சிரித்தவாறு பார்த்திருந்தார். அத்தகைய மனிதர் தான் இன்று தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டுமென அடிக்கடி அறிக்கைவிட்டும் குரல் கொடுத்தும் வருகிறார்.

அவ்வாறே புலிகள் இயக்கமும் காலங்கடத்தித் தம்மைப் பலப்படுத்தும் பல-நிலை முயற்சிகளை முன்னெடுத்தது. பேச்சுவார்த்தையில் அவர்களது காய்நகர்த்தல், உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசித்தம்மைப்பலப்படுத்தி அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கைக்குச் செல்வதாகவே இருந்தது. புலிகளின் தலைமை அதற்கான பலநிலைப் பரப்புரைகளையும் செய்தது. அதே போன்று, பேரினவாத முதலாளிய அரசாங்கங்களும் அதன் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளை அவ்வப்போது ஏமாற்றி உரிய அடிப்படைகளில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது தட்டிக்கழித்தனர். இவ்விரு தரப்புகளதும் நிலைப்பாடுகளினூ டாக அவரவரது வர்க்க நலன்களும் இருப்புக்களும் ஆதிக்க அரசியல் போக்குகளும் பாதுகாக்கப்பட்ட அதேவேளை, இருதரப்பு உழைக்கும் மக்களும் பலநிலைப் பாதிப்புகளையே பெற்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த தேசிய இனப்பிரச்சினைத்தீர்வுப் பொதி, அதில் ஆரம்பத்தில் இருந்த உள்ளடக்க அம்சங்களைத் திரும்பத் திரும்ப வெட்டிக் கொத்திக் குறைத்ததால், இறுதியில் அர்த்தமற்ற வெற்றுப் பொதியானது. அதே வேளை, புலிகள் இயக்கம் சிறிய கால இடைவெளிக்குப் பின் தனது தாக்குதல்களை மேற்கொள்ளலானது. அவ் வேளை, சந்திரிகா தனது மாமனாரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான அனுருத்த ரத்வத்தவைப் பாதுகாப்பு அமைச்சராக்கினார். அவர், தனது இராணுவக் கண்ணோட்டத்தில், புலிகளைப் பலமிழக்கச் செய்யலாமென நம்பினார். அதற்கான இராணுவ வியூகங்களை

உயர் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து வகுத்தார். போர் தனது கோர முகத்தை மீண்டும் வெளிக்காட்டியது. அந்தப் போருக்கு அரசாங்கம் வழங்கிய நியாயம் "சமாதானத்திற்கான போர்" என்பதாகும்.

சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி போரை முன்னெடுத்த அதேவேளை, புலிகள் தமிழ் மக்களைப் போராட அழைப்புவிடுத்து, அதை மூன்றாவது ஈழப் போர் என அழைத்தனர். திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தரித்துநின்ற கடற்படைக் கப்பலொன்றை வெடிவைத்துத் தகர்த்ததன் மூலம் தமது முதற் தாக்குதலைத் தொடுத்தனர். அரசாங்கத் தரப்பிலும் புலிகள் இயக்கத் தரப்பிலும் ஒருவரையொருவர் ஏமாற்றியவாறு தத்தம் இராணுவ நிலைகளையும் அவற்றின் பலத்தையும் பெருக்குவதையே அடிப்படை நோக்காகக் கொண்டிருந்தனர். இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் பல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ முன்னகர்வுகளை அவ்வப்போது முன்னெடுத்தது. அவற்றை எதிர்கொள்வதில் புலிகள் இயக்கம் தனது இராணுவ உத்திகளையும் பலத்தையும் வெளிக்காட்டியது.

# 15

# புலிகளின் பின்வாங்கல்

*1995 நவம்பரில் யாழ் குடாநாட்டைப் புலிகள் இயக்கத்திடமிருந்து விடுவிக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை இலங்கை இராணுவம் மேற்கொண்டது. பலாலியில் இருந்து தொடங்கிய "சூரியக் கதிர்" இராணுவத் தாக்குதலின் முன்னால் புலிகளால் நின்றுபிடிக்க முடியவில்லை. பாதுகாப்புக்காக மக்களை வலிகாமம் மேற்குப் பிரதேசத்துக்குச் செல்லுமாறு இராணுவம் பணித்தது. ஆனால் புலிகள் இயக்கம் வலிகாமம் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, யாழ் நகரம், தீவுப் பகுதிகள் உட்பட்ட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்களைக் கட்டாயமாக வெளியேற்றியது. அதன்மூலம் நாவற்குழி முதல் தொண்டமானாறு வரையான கடலேரிக்கு அப்பால் தென்மராட்சி, வடமாராட்சிப்*

பிரதேசங்கட்குச் செல்லுமாறு புலிகள் மக்களுக்குக் கட்டளையிட்டனர். புலிகளின் துப்பாக்கி அராஜகத்துக்கு முகங்கொடுக்க முடியாத வலிகாமம், தீவகப் பகுதிகளின் மக்கள் தம் ஆத்திரமிக்க எதிர்ப்பை மௌனித்துத் தமது சைக்கிள்களிலும் பிற வாகனங்களிலும் எடுத்துச்செல்லக்கூடிய பொருட்களை மூட்டை முடிச்சுகளாக்கி, அன்றைய கடும்மழைக் காலத்தில் நாவற்குழிப் பாலத்தைக் கால்நடையாகக் கடந்தனர். இரண்டு பகல்களும் இரண்டு இரவுகளுமாக அந்த ஒருவழிப் பாதையில் பல இலட்சம் மக்கள் ஊர்ந்து நடந்த அன்றைய அவலக் காட்சிகளை மக்கள் இன்றும் மனக்கண் முன் காண்பர். போராலான முதல் இடப்பெயர்வு அதல்லவெனினும், குறுகிய கால-இடைவெளியில், இரண்டு நாட்களுள்- அதுவும் மண்ணையும் மக்களையும் விடுவிப்பதாகக் கூறியவர்களாலேயே -தமது வீடுகளிலிருந்தும் சொந்தப் பிரதேசங்களிலிருந்தும் மக்கள் விரட்டப்பட்டமை வேதனைக்குரியது. இவ்வாறு வலுக்கட்டாயமாக மக்களை விரட்டி வெளியேற்றி இடப்பெயர்விற்கு உள்ளாக்கியபோது, **1990**இல் வடபுலத்து முஸ்லிம் மக்களைப் புலிகள் வெளியேற்றியதன் வலியும் வேதனையும் எத்தகையது என்பதைச் சகோதரத் தமிழர்கள் உணர்ந்தனர். அதன் பின்பு தென்மாராட்சியும் வடமராட்சியும் இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் வந்தன. தீவகம் ஏற்கனவே இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. பளையும் பூநகரிக்கு அப்பாலான யாழ் குடாநாடு முழுதும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குட் சென்றது.

இவ்வாறு **1995**ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தின் துப்பாக்கிமுனையில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வு தமிழ்த் தேசியம் என இன்றுவரை போற்றிப் பேசப்படும் ஒன்றினுள் இருந்த ஒரு பலவீனத்தை அம்பலமாக்கியது. தமிழீழப் பிரகடனத்தின் போதும் அதனை வென்றெடுக்க நடத்திய போராட்டங்களின் போதும் சாதியத்தை ஒழிப்பதே தமது நோக்கம் என்று கூறப்பட்டது. புலிகள் இயக்கமும் அதற்கு விலக்கின்றிச் சாதி பார்க்கக் கூடாது எனக் கூறிவந்தது. ஆனால், தேசிய விடுதலைப் போராட்டம் என்று கூறிய காலத்திலும் சாதியக் கட்டிறுக்கம் எவ்வகையிலும் தளரவில்லை என்பதைத்

தென்மராட்சி நோக்கிய பாரிய இடப்பெயர்வின் நடைமுறை அனுபவங்கள் காட்டின.

நாவற்குழிப் பாலம் கடக்கும்வரை ஒரே மனிதக் கூட்டமாக நகர்ந்தோர் பாலத்தைத் தாண்டியதும் சாதிகளாகப் பிரிந்து அந்தந்தச் சாதியினர் வசித்த கிராமங்கட்கும் பகுதிகட்கும் சென்றனர். மாற்றுச் சாதியினரின் இடங்கட்குச் செல்லமுடியவில்லை. முன்பிருந்தே, இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலைகளிலும் கோவில் மண்டபங்களிலும் பிற பொது இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியறிந்து வெளியேற்றப்பட்டனர். “இது எங்கடை ஆக்கள் இருக்கிற பாடசாலை, நீங்கள் உங்கடை ஆக்கள் இருக்கிற பகுதிக்குப் போங்கள்” என வழிகாட்டப்பட்டனர். உணவோ தேநீரோ, ஏன் பச்சைத் தண்ணீரோ கூடக், கொடுக்கமறுத்த அவலத்தைச் சிலர் மறைக்கமுயலுகின்றனர். விடயம் அத்துடன் முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தத்தம் சாதி உறவுகளுடன் தங்கியிருந்த கிராமங்களில், குறிப்பாகத் தென்மராட்சியில், ஆதிக்க சாதியினரின் கிணறுகளில் தண்ணீர் எடுக்காது தடுக்கப்பட்டனர். அவ்வாறே அப் பிரதேசக் குளங்களில் இறங்காமலும் குளிக்காமலும் தடுக்கப்பட்டனர். மீறினோர் தாக்கப்பட்டனர். சில கிணறுகளில் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டதுடன், அடித்த பாம்புகளைக் கிணறுகளுள் போடும் செயலும் நடந்தது. இவற்றைச் சிங்களவர்களோ முஸ்லிம்களோ செய்யவில்லை. தமிழ்த் தேசியத்தைத் தாங்கி நின்ற ஆதிக்க சாதிச் சாதிவெறியர்களே செய்தனர். தமிழ்த் தேசியத்தின் வலுவான கூறாகச் சாதியம் இருக்கும் யதார்த்தத்தை இவ் இடப்பெயர்வுக் கால நிகழ்வுகள் அப்பட்டமாகப் பறைசாற்றின.

வன்னிப் பெருநிலப் பரப்பிற்குப் பின்வாங்கிய புலிகள் இயக்கம், முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களையும் வவுனியா மன்னார் மாவட்டங்களின் குறிப்பிடத்தக்க பெரியளவு பகுதிகளையும் கொண்ட பிரதேசத்தில் தனது இராணுவ-நிர்வாகத் தளங்களை விரிவுபடுத்தித் தன்னை வலுப்படுத்தியது. தமது கட்டுப்பாட்டிற்குள் இருந்த வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் புலிகள் தமது நிர்வாகத்தை பல

துறைகட்கு விஸ்தரித்தனர். காவல் துறை, நீதிமன்றம், சிறைச்சாலை, நிதித் துறை, சுங்கத் துறை, வணிகம், வர்த்தகம், அரசியல், கலை-பண்பாட்டுத்துறை போன்றவற்றைத் தமக்குரிய வரையறைகளுடன் முன்னெடுத்தனர். யாவற்றிலும் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற பதாகையும் "ஒரே தலைவர் ஒரே இயக்கம்" என்ற முழக்கமுமே உயர்த்தப்பட்டன. இராணுவ அணிகளில் மேலும் பல பிரிவுகள் உருவாயின. ஆண்களுக்கான படையணிகள், பெண்களுக்கான இராணுவப் படைப்பிரிவு, தற்கொலைப் படைப்பிரிவு, கரும்புலிகள் அமைப்பு என ஆண்களுக்கும் பெண்களுக்குமாக நிறுவப்பட்டன. அத்துடன் கடற்புலிகள் கடற்படையொன்றைக் கட்டியெழுப்பினர். சிறிய விமானங்களைக் கொண்ட வான்படையொன்று அதற்கான ஓடுதள வசதிகளுடன் கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டது. அரசியற் துறை கிளிநொச்சியில் தனது தலைமையகத்தை நிறுவியது. அதன் ஒரு பகுதியாகச் சமாதானச் செயலகம் நிறுவப்பட்டது. காவல் துறைத் தலைமையகமும் கிளிநொச்சியில் நிறுவப்பட்டது. அனைத்துக்கும் மேலாகப் புலிகளின் புலனாய்வுத்துறை பல நிலைகளில் இறுக்கமான கட்டமைப்புகளுடன் விளங்கியது. வன்னிப் பெருநிலத்தில் புலிகளின் சர்வ ஆதிக்கம் நிலவியது.

அங்கு போற் கிழக்கில் அலுவல்களை முன்னெடுக்க முடியவில்லை. இருப்பினும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டை வலுப்படுத்தியது. வடக்கு-கிழக்கின் கரையோர மக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும் அதன்மூலம் தனது கடற்படையை நிறுவி விரிவாக்கவும் அதற்கு முடிந்தது. அவர்களது கடற்படைத் தளம் வலிமையுடன் அமைய வாய்ப்பாக முல்லைத்தீவின் சாலைக் கடற்கரையோரம் அமைந்தது.

மேலும், புலிகள் இயக்கம் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்த தமிழர்களிடம் தனது செல்வாக்கை விஸ்தரித்தது. தமிழீழக் கோரிக்கைக்கான நன்கு திட்டமிடப்பட்ட பரப்புரையுடன்

அதற்கு ஏதுவான அவர்களது நேர்த்தியான, நவீன தொழிநுட்பத்துடன்கூடிய தகவல்-தொடர்பு, தகவல்-பரிமாற்ற வலைப்-பின்னலும் அமைந்திருந்தன. வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி, தொலைத்தொடர்பு வசதிகள் போன்றன மூலம் தமக்கான மேம்பாட்டுப் பரப்புரைகளைச் செய்துவந்தனர். இவை யாவற்றுக்கும் அப்பால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடையே புலிகள் இயக்கச் செயற்பாட்டின் குவிமையம், நேரடியாகவும் மறைமுகமாகவும் பணம் திரட்டுவதாகவே இருந்தது. அதற்குப் பல்வேறு அமைப்புகளையும் வழிமுறைகளையும் கையாண்டனர். வர்த்தக நிலையங்களையும் வணிக நிறுவனங்களையும் நடத்தியதோடு, கோவில்களை நிறுவியும் கைப்பற்றியும் அவற்றின் வருமானங்களைத் தமதாக்கினர். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகட்கு ஆட்களை அனுப்பியும் பெருமளவு பணத்தைச் சேகரித்தனர். புலம்பெயர்ந்த நாடுகளில் அவர்களது நிதிச்சேகரிப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) முக்கிய பாத்திரம் வகித்தது.

இவ்வாறு உள்நாட்டில் வரிவிதிப்பு முதல் வர்த்தகம் வரை கட்டாயப் பணம் திரட்டப்பட்ட அதேவேளை, புலம்பெயர்ந்த தமிழரின் நிதி வளங்கள் வற்றாத ஊற்றுமூலங்களாகக் காணப்பட்டன. இதனால் உலகிலேயே பணபலம் மிக்கதொரு இயக்கமாகப் புலிகளால் வளரமுடிந்தது. இந்தப் பணத்திரட்டல் நடவடிக்கைக்கு அவர்கள் பல்வகை அணுகுமுறைகளைக் கையாண்டனர். இராணுவத்தின் மீதான ஒவ்வாரு தாக்குதலின்போதும் அதில் இறந்த இராணுவத்தினரின் தொகையை மிகைப்படுத்திப் பிரசாரம் செய்து தமது வலிமையின் பெருமையை மக்களின் மனங்களில் வீரதீரமாக நிலைகொள்ள வைத்தனர். அத்தகைய தாக்குதல்களிற் பலியான புலிகளின் தியாகத்தைக் காட்டி "மாவீரர்கள் புதைக்கப்படுவ தில்லை விதைக்கப்படுகின்றார்கள்" என்று பரப்புரை செய்தனர். இவையனைத்தின் மூலமும் புலிகள் இயக்கத்தை வலுப்படுத்தவும் பணம் சேர்க்கவும் முடிந்தது. மக்களிடம் பணம் சேகரிப்பதில் புலிகள் இயக்கம் எந்த ஈவிரக்கமும் காட்டவில்லை.

இவ்வாறு 1990 முதல் 2000 வரையான பத்தாண்டுகளில் புலிகள் இயக்கம் வடக்கு-கிழக்கில் வன்னிப் பெருநிலப் பரப்பை மையப்படுத்திய இராணுவ வலிமை கொண்ட தனியொரு இயக்கமாகியது. கெரில்லா இயக்கமாக ஆரம்பித்த புலிகள் இயக்கம் மரபுவழியான தரை, வான், கடற் படைகளையும் காவற் துறையையும் கொண்ட அமைப்பாக வளர்ந்து இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகட்குச் சமாந்தரமான ஒரு நிர்வாகத்தையும் கொண்டிருந்தது. அதேவேளை, அதன் அரசியல் மார்க்கமும் நிலைப்பாடும் மிகத் தாழ்மட்டத்திலேயே இருந்தன. புலிகள் இயக்கத்திற்குள்ளும் மக்கள் மத்தியிலும் ஜனநாயகம், சுதந்திரம், மனித நேயம் என்பன உச்சரிக்கக் கூடிய நிலையிலும் இருக்கவில்லை. அவ்வாறெனில், மனித உரிமை விடயத்தில் புலிகள் இயக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எளிதாகக் கற்பனைசெய்ய முடியும்.

புலிகள் இயக்கம் அக் காலப்பகுதியில் தமது ஆயுதபலம், பணபலம், வளப் பெருக்கம் என்பவற்றின் மூலம் தமது அதிகாரப் பலத்தை வலுவாக்கியதுடன் மக்கள் மீது அவற்றைப் பிரயோகித்து, அச்சுறுத்தல், மிரட்டல், கைது, தடுத்துவைப்பு, விசாரணை, மரணதண்டனை போன்றவற்றை நடைமுறைப்படுத்தியது. இவற்றின் மூலம் விரைவிற் தமிழீழம் மலரும் என நம்பியதுடன் மக்களும் நம்பும்படி தூ ண்டும் பிரசாரங்களையும் செய்தது. அவர்களின் கண்களுக்கு அகப்படாது அணுவும் அசைய முடியாதவாறு புலனாய்வு வலையமைப்பு கட்டப்பட்டிருந்தது. இதனால் மக்கள் அச்சுறுத்தி அடக்கியொடுக்கப்பட்டனர். புலிகளின் ஜனநாயக விரோத அராஜகச் செயற்பாடுகளை ஒருவர் விமர்சித்தால், மறுநாள் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தோர் வீடுதேடிவந்து அவரைக் கடுமையாக விசாரித்து எச்சரிப்பர். அவர் மேலும் எதிர்வாதம் புரிந்தால், அவரைக் கொண்டுசென்று புலிகளின் நிலத்தடிச் சிறையில் (பங்கரில்) தள்ளுவர். இவை மிக வழமையாக நடந்தன. தனது வளவின் பனை ஒன்றைப் புலிகளின் அனுமதியின்றித் தனது தேவைக்காகத் தறித்த ஒருவரையும், அவ்வாறே தனது வேப்பமரத்தைத் தறித்த ஒருவரையும் பல வாரங்களாகப் புலிகளின் பங்கர்களில் அடைத்தமையும்

அன்றைய நிகழ்வுகளுட் சேரும். பனைமரங்கள் உட்படப் பயன்தரு பெருமரங்களைத் தறித்து அழிக்கக் கூடாது என்பது சூழல் மீதான அக்கறை சார்ந்தது என மக்களுக்கு உரியவழிகளில் அறிவூட்டுதற்குப் பதிலாக ஆயுத அதிகார மிரட்டல் மூலம் அதனை முன்னெடுத்ததே சர்ச்சைக்குரியதாகியது. இவை யாவும் தமிழீழ விடுதலையின் பெயரால் ஆயுத அதிகார பலத்துடன் மக்கள் மீது புலிகள் இயக்கம் மேற்கொண்ட அராஜகச் செயற்பாடுகளாகும். தேசியவாதம் வலதுசாரிப் பாதையில் பயணித்து இறுதியில் பாசிச நடைமுறைவழியில் தன்னை வெளிப்படுத்துவதற்குப் புலிகளின் செயற்பாடுகள் நடைமுறை உதாரணங்களாகின. இவற்றைப் புலிகளின் ஆதரவாளர்களும் பிரசார ஊடகங்களும் நியாயப்படுத்தின. அதேவிதமான அராஜகச் செயற்பாடுகளை ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்கள் முன்னெடுத்தபோது புலிகள் இயக்க ஆதரவாளர்களும் பிரசார ஊடகங்களும் அவற்றையிட்டுக் குய்யோமுறையோ எனக் கூக்குரல் வைத்தன. அக் காலத்திற் பெரிசுகள் (புலிகள்) செய்தால் அதில் ஏதோ ஒரு நியாயம் இருப்பதாகவும் ஏனைய இயக்கத்தவர்கள் செய்தால் அதில் நியாயம் இல்லாததாகவும் பிரசாரங்கள் இடம்பெற்றன. அதிலும் ஆதிக்கக் கருத்தியலே முன்னின்றது. எனவே, ஜனநாயத்தை விரும்பிய மக்கள் மௌனிக்கவேண்டியாயிற்று.

அக் காலப்பகுதியில் புலிகள் இயக்கம் தனது சொந்த நீதிமன்றங்களையும் அவற்றுக்கான சட்டங்களையும் நீதிபதிகளையும் சட்டத்தரணிகளையும் உருவாக்கியது. தலைவர் பிராபகரனுக்கும் தமிழீழத்திற்கும் விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்தவர்கள் இந் நீதிமன்றங்களில் வாதாடியும் நீதி வழங்கியும் வந்தனர். அதே வேளை, கிளிநொச்சியைத் தமது நிர்வாகத் தலைநகராக ஆக்கியதுடன் வர்த்தக மையம் போன்றவற்றை நிறுவி அவற்றை விரிவுபடுத்தினர். முதலிற் சுய உற்பத்தி, சுய பொருளாதாரம் எனக்கூறிப் பொருண்மியத் துறையை உருவாக்கி வளர்த்த புலிகள் இயக்கம், இக் காலப்பகுதியில் உலகமயமாதலின் கீழான வர்த்தகச் செயற்பாடுகளுள் இறங்கியது. குரக்கனும் சாமையும் விதைத்துச் சுயஉணவு உற்பத்தி செய்யுமாறு பணித்தவர்கள்

கொக்கா கோலா வியாபாரம் முழுவதையும் தமதாக்கினர். இது அன்று இடம்பெற்றவற்றின் சிறியதொரு உதாரணமே. தனியரசிற்கான தோற்றத்தைப் பெரும்பாலான மக்களுக்கு வழங்கவும் இவை உதவின.

அதேவேளை, அரசியல் இராஜதந்திர வழிகளிலும் இராணுவப் பலத்தை விஸ்தரித்தும் புலிகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை வலுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கமும் இராணுவமும் முனைப்புக் காட்டின. அத்துடன் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் எனக் கூறி, அவ்வப்போது முன்மொழிவுகளும் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவற்றில் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. வெறும் ஏட்டளவிலும் பேச்சுவார்த்தை என்ற பொருளற்ற சந்திப்புகளினூடும் அவை இழுபட்டுச் சென்றன. இதனால் தமிழ் மக்கள் ஏமாந்தபோதும் புலிகள் இயக்கம் முன்வைத்த நியாயங்களைக் கணிசமானோர் நம்பி ஏற்றனர். இவ்விடயத்தை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 16

# சந்திரிகா: எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

சந்திரிகா முற்போக்கானவர், இனவாதமற்றவர், போருக்குப் பதிலாக அரசியல் தீர்வைக் கொண்டுவருவார், தந்தை தாயாரை விட வேறுபட்டவர், அவரிடம் இடதுசாரித் தன்மைகள் உள்ளன எனுமாறான தோற்றப்பாடுகள் அவரது முதல் வருட ஆட்சியின் போது முன்னெடுக்கப்பட்ட அரசியல் நகர்வுகளால் உடைந்துவிழலாயின. குறிப்பாகப் போராக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினையில் புதிய ஒரு சூழல் தோன்றும் என எதிர்ப்பார்த்தவர்கள் ஏமாற்றம் அடையும் நிகழ்வுகளே நடந்தேறின. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக 62 சதவீத வாக்குகள் ஆதரவோடு சந்திரிகா ஆட்சிக்கு வந்த போதிலும் அவர் அவரது பேரினவாதச் சிந்தனைகளில் இருந்தும் சுற்றிவர இருந்த பேரினவாத இராணுவ மத அடிப்படைவாதிகளிடமிருந்தும் வெளிவரமுடியாத கடுமையான வட்டங்களால் சூழப்பட்டிருந்தார். அதேவேளை அத்தகைய சக்திகட்கு எதிர்மறை நிலைப்பாட்டிலிருந்து ஊட்டந்தரும் வகையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

இச் சூழலில், சந்திரிகா பதவிக்கு வந்த ஒரு வருட முடிவில் வடக்கில் குடாநாட்டை விடுவிக்கும் சூரியக் கதிர் இராணுவப் படையெடுப்பு நடந்தது.

அதற்கு அவரது மாமனாரான முன்னாள் இராணுவ அதிகாரி அனுருத்த ரத்வத்தை தலைமைதாங்கினார். முதலில் 1995இல் யாழ்ப்பாணம் வலிகாமத்தைக் கைப்பற்றிய படையினர் ஐந்து மாதங்கட்குப் பின்பு தென்மராட்சி, வடமராட்சி உட்பட குடாநாட்டின் பெரும் பகுதிகளையும் கைப்பற்றினர். தீவுப் பகுதிகள் ஏற்கனவே படையினரிடம் இருந்தன. அவ்வாறு நிலைகொண்ட இராணுவம் குடாநாட்டில் சுற்றிவளைப்பு, தேடுதல், கைது, காணாமல் போக்கல் ஆகியவற்றைத் தாராளமாக முன்னெடுத்தது. இக் காலத்திலேயே (1996-97) குடாநாட்டில் 600 பேருக்கு மேற்பட்டோர் காணாமற் போயினர்.

சந்திரிகாவின் ஆட்சியின் ஆரம்பத்தில் இடம்பெற்ற இக் கொலைகளும் காணாமற்போதல்களும் ஓரிரு வருடங்களில் அம்பலத்திற்கு வரலாயின. சமாதானம் நிலவுவதாகக் கூறிய அன்றைய சூழலில் கைதடியில் இருந்து யாழ் நகரத்திற்குப் பாடசாலைக்குச் சென்று திரும்பிய கிரிஷாந்தி என்ற மாணவியை நாவற்குழிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் பிடித்து வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கிக் கொன்று புதைத்தனர். கிரிஷாந்தியைத் தேடிச்சென்ற அவரது தாயாரும் சகோதரனும் அயலவரும் கொன்று புதைக்கப்பட்டனர். இக் கொலைகளும் புதைத்தல்களும் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பாரிய மனித உரிமைப் பிரச்சினையை ஏற்படுத்தின. இதே காலப்பகுதியில்- அல்லது சற்று முன்பின்னாக -கோணேஸ்வரி, கமலிட்டா போன்ற யுவதிகள் வன்புணர்ச்சிக்கு உட்பட்டபின் கொன்று புதைக்கப்பட்டனர். இவ்வாறு புதையுண்டவர்கள் பலரின் விவரங்கள் வெளிவரவில்லை.

கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஓர் இராணுவச்சிப்பாய் அளித்த சாட்சியத்தில் செம்மணிப் பகுதியில் நாற்பதுக்கு மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் இருப்பதாகவும் அவற்றில் இராணுவத்தினர் தாம் படுகொலை செய்தவர்களைப் புதைத்ததாகவும் கூறினார். அந்தச்சாட்சியத்தின் அடிப்படையில் அங்கு வெவ்வேறு புதைகுழிகளிலிருந்து பதினாறுக்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டன.

1994இல் தெற்கிலே சூரியகந்த எனும் இடத்திற் கொன்று

புதைக்கப்பட்ட சிங்கள மாணவர்களின் புதைகுழிகளைத் தோண்டுவதில் முன்னின்று அதன் மூலம் பதவிக்கு வந்த சந்திரிகாவின் ஆட்சியின் முதல் ஒன்றரை வருடங்களுள் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் பெருகின. 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது தெற்கில் கதிர்காமத்தில் மன்னம்பேரி என்ற யுவதியை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கியபின் அவரை அரை உயிரோடு புதைத்துத் தமது ஆயுத அதிகார வெறியைத் தீர்த்த அதே இலங்கை இராணுவந் தான் வடக்கேயும் கிழக்கேயும் தமிழ் இளம் பெண்களை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கிக் கொன்றுபுதைத்தது. இங்கு இன வன்மமும் அங்கே வர்க்க அதிகார வன்மமும் தாண்டவமாடியதையே காணமுடிந்தது.

இவ்வாறு சந்திரிகாவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி "சமாதானத்திற்கான போரை" முன்னெடுத்த அதேவேளை, அரசியற் தீர்வு எனக் கூறித் தீர்வுப் பொதியொன்றினை முன்வைக்கவும் செய்தது. இதனை மேற்படி போர் வடக்கில் தொடங்குவதற்கு முன்பு, "1995 ஒகஸ்ட் முன்மொழிவுகள்" தீர்வுத்திட்டத்தை முன்வைத்தது. இத் தீர்வுத்திட்ட முன்மொழிவானது அரசியல் தீர்வு வேண்டிநின்றோருக்குப் "பரவாயில்லை இதனை அடிப்படையாகக் கொண்டு மேலும் முன்னோக்கிச் செல்லலாம்" என்னும் ஒரு தோற்றத்தைக் கொடுத்தது. இத் தீர்வுத்திட்ட முன்மொழிவானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் தொடர்ந்து செயற்பாட்டிற்காகக் கையளிக்கப்பட்டது. 1996இல் அது சட்டவரைவு பெற்றபோது அதில் சில விடயங்கள் வெட்டப்பட்டன. 1997இல் மேலும் வெட்டிக் குறைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அரசியற் தீர்வுத்திட்ட முன்மொழிவானது வெட்டி வெட்டிக் குறைபட்டு வெற்றுப் பொதியாகியது. பிராந்திய சபைகளை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட தீர்வுப் பொதி, அதிகாரப் பகிர்வு என்ற இடத்திற்கு செல்லாது வெறும் அதிகாரப் பரவலாக்கத்தையே கொண்டிருந்தது. இது 13வது திருத்தத்தை தாண்டிச் செல்வதாகவும் அமையவில்லை.

இவ்வாறான சூழலில் புலிகள் இயக்கம் தமது அடிப்படை நிலைப்பாடான இராணுவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதை முன்னெடுத்து அதனூடே நிர்வாகக் கட்டமைப்புக்களையும் இயக்கியது. ஓர் அரசக் கட்டமைப்பிற்கு அவசியமானவற்றை உருவாக்கி உறுதியாக்கப் புலிகள் இயக்கம் முனைந்தது. அதை உறுதியாகக் கட்டமைக்கத் தமக்கான அரசு இயந்திரமான ஆயுதப்படை, காவற்துறை, சிறைச்சாலை என்பனவற்றை விரிவாக்கியது. இவற்றை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை மையப்படுத்திச் செய்தனர். இராணுவத் தலைமையகங்கள் பெரும்பாலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, மற்றுஞ் சூழவுள்ள பிரதேசங்களில் நிலைபெற்றன. அதே போன்று கடலோரங்களில் புலிகளின் கடற்படைத் தளங்கள் கட்டப்பட்டன. சாலை என்னும் முல்லைத்தீவின் கடலோரக் கிராமம் பிரதான கடற்படைத்தளமாக விளங்கியது. வடபுலத்தில் இருந்து கிழக்கின் கடற்கரைகள் வரை கட்டுப்படுத்தவும் சுதந்திரமாகக் கடற் பயணங்களை மேற்கொள்ளவும் புலிகளின் கடற்படைக்கு இயலுமாயிற்று.

புலிகள் இயக்கம் தன்னை வன்னிப் பெருநிலப்பரப்பில் சகல நிலைகளாலும் வளப்படுத்திய அதேவேளை, மக்களுடன் கடுமையான அதிகார மிடுக்கோடும் ஆயுத மிரட்டலோடும் செயற்பட்டது. பொதுமக்களின் அன்றாட வாழ்வின் சகல மட்டங்களிலும் தலையீடுகள், கட்டளைகள், கைதுகள், தடுத்துவைத்தல்களில் ஈடுபட்டது. இதனை அவர்கள் "தமிழீழச் சட்டத்தின்" கீழ் செய்வதாகவே கூறினர். காவற் துறையானது முன்னாள் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தரும் வினீதா எனும் சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்தவருமான பா. நடேசன் தலைமையில் இயங்கியது. காவற்துறை, நீதிமன்றம் என்பன செயற்பட்டபோதிலும், பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுத் துறையினர் கைது, கொலை, தடுத்து வைத்தல், சித்திரவதை, மறைத்து வைத்தல் போன்றவற்றை முன்னெடுப்பதிற் தீர்க்கமான பங்கு வகித்தனர்.

அதேவேளை, புலிகள் இயக்கம் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த

அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளில் நன்கு திட்டமிட்ட பரப்புரைகளை முன்னெடுப்பதற்கும், நிதி ஊற்று மூலங்களைக் கொண்டிருப்பதற்கும் சிறந்த கட்டமைப்புக்களைக் உருவாக்கியிருந்தது. அங்கும், மாற்று இயக்கத்தவர்களைத் துரோகிகளாகக் காட்டிக் கொலைகள், தாக்குதல்கள், மிரட்டல்களில் ஈடுபட்டனர். அவற்றை நியாயப்படுத்தும் அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் அவர்களின் கைகளில் இருந்தன. ஆட்களை ஏற்றியிறக்குவது முதல் அம்மன் கோயில் வைத்துப் பணம் சம்பாதிப்பது வரை சகல சட்டப்பூர்வ/சட்டவிரோத செயற்பாடுகளின் மூலமும் நிதிவளம் திரட்டப்பட்டது. நிதி சேகரிப்பாளர்கட்குச் சேர்க்கும் பணத்தில் ஒரு பகுதியைத் நிதிப்பொறுப்பாளர்கள் தரகுப்பணமாக வழங்கினர். இவ்வாறன பலர் புலம்பெயர்ந்த நாடுகளில் தொழிலேதும் செய்யாது உயர்தர வீடுவாசல்களுடனும் வாகனங்களுடனும் வசதிமிக்கவர்களாகிய பல கதைகளைப் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் கேட்க முடியும். இவ்வாறு ஜனநாயக விரோதமும், அராஜகங்களும் அதிகார ஆதிக்கமும் மிக்க ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கைகளும், "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற குறுந்தேசியத் தாரக மந்திரத்தால் நியாயப்படுத்தப்பட்டன. இவ்வாறு புலம் பெயர்ந்த நாடுகளில் குவிந்த பணம் 2009 மே 19ற்குப் பிறகு எவரெவரது கைகளிலும் பைகளிலும் தேங்கியது என்பது இன்று வரை மூடுமந்திரமாகவே இருக்கின்றது. இத்தனை அழிவுகள் அவலங்களை இலங்கையில் தமிழர்கள் அனுபவித்து ஆறாத்துயரிலிருந்து மீளமுடியாது இருந்துவரும் சூழலிலுங் கூட, அண்மையில் புலம் பெயர்ந்த நாடொன்றில் பணம் மிதமிஞ்சிய ஒரு தமிழ் தம்பதியினர் தமது தாலிக்கொடியைக் கழற்றி "நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்" பிரதிநிதிகளிடம் கையளித்த படங்கள் தமிழ் நாளிதழ்களில் வெளிவந்தன. இதனைத் திருப்பதி உண்டியல் வகை மூட நம்பிக்கை என்பதா அல்லது தமிழீழ மனநோய் என்பதா அன்றி அறிவீனமான நம்பிக்கை என்பதா எனத் தீர்மானிக்க முடியாமலுள்ளது.

புலிகள் இயக்கம் 1995க்குப் பின்னான காலத்தில் தென்னிலங்கையின் பொருளாதார இலக்குகள் மீதும் பொதுமக்கள் இலக்குகள் மீதும் தமது தாக்குதல்களை-

குறிப்பாகத் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை -வேகப்படுத்தினர். இவ்வாறான தாக்குதல்களால் சிங்களப் பொதுமக்கள் ஆங்காங்கே கொல்லப்பட்டனர். தமிழ் முஸ்லிம் மகக்களும் தவறவில்லை. அதேவேளை, தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் கடுமையான இராணுவ மிரட்டல்கள், தாக்குதல்கள், கொலைகள், காணாமற் போதல்கள், கைதுகள், தடுத்துவைப்புக்கட்கு ஆளாகிச் சித்திரவதைப்பட்டனர். அவர்களில் தொள்ளாயிரத்திற்கு மேற்ப்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் வழக்கு விசாரணைகள் இன்றி இன்றுந் தடுத்துவைக்கப்பட்டோராக உள்ளனர். (குறிப்பு: இது கட்டுரை எழுதிய வேளை இருந்த தொகையாகும்).

இவ்வாறு ஒருபுறத்தில் புலிகளின் இராணுவ வலிமை விரிவடைந்த அதேவேளை, அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்த அரசாங்கத்தின் இராணுவமயமாக்கலும் வேகமாக விரிவடைந்தது. முப்படைகட்கும் போலீசுக்கும் அடிக்கடி ஆட்கள் திரட்டப்பட்டனர். வேலையின்மையால் அவதியுற்ற சிங்கள உழைக்கும் மக்களின் பிள்ளைகளான இளைஞர்கட்கு, நாட்டைப் பாதுகாப்பது என்பதை விடத் தமது குடும்பத்தினரைப் பட்டினியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இருந்து பாதுகாக்கும் நோக்கமே படைகளில் இணைவதில் மிகப் பிதானமானதாக இருந்தது. இவ்வாறு இராணுவத்திற்குச் சேர்க்கப்பட்டுக் குறுகிய காலப் பயிற்சிக்குப் பின் போர்முனைக்கு அனுப்பப்பட்டவர்கள் விரைவாகவே இராணுவத்தை விட்டுத் தப்பியோடினர். ஒரு கட்டத்தில் அவர்களின் தொகை ஐம்பதினாயிரம் பேர் மட்டில் இருந்தது. இவ்வாறாகவே சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியால் “சமாதானத்திற்கான போர்” முன்னெடுக்கப்பட்டது.

சந்திரிகாவின் வருகையோடு தமிழ் ஆய்வறிவாளரிற் குறிப்பிடத்தக்க தொகையினர் மத்தியில் சந்திரிகா அலை வீசத் தொடங்கியது. அவர்களிற் சிலர் தீர்வுப் பொதியை உருவாக்குவதிலும் முன்னின்றனர். சந்திரிகா பேரினவாத நெகிழிச்சிப் போக்குடையவர் என நம்பி, அல்லது அதற்கும்

மேலாக இனவாதமற்ற இடதுசாரித் தன்மை கொண்டவர் எனக் கொண்டு அவரது காலத்தில் குறைந்த பட்சம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையேனுங் கொண்டுவர முயன்றனர். இதில் தமிழரசுக் கட்சிக் குடும்பத்தின் கொழும்பு-வாழ் உயர்-வர்க்க ஆய்வறிவாளரான நீலன் திருச்செல்வம் முக்கியமானவராவார். அதேவேளை, தமிழ்த் தெரியாத உயர்-வர்க்க ஆய்வறிவாளரான லக்ஷ்மண் கதிர்காமர் பொதுசன முன்னணியின் வெளிவிவகார அமைச்சராக இருந்து சந்திரிகாவின் ஆட்சியில் கடுமையாகப் பணியாற்றினார். அவரது அயராத முயற்சியினாற் தான் புலிகள் மேற்குலக நாடுகளில் தடைசெய்த இயக்கமாகி விலங்கிடப்பட்டது. இது புலிகளின் சர்வதேசச் செயற்பாட்டிற்கு விழுந்த பலத்த அடியாகும். மேற்கூறிய இரு உயர்-வர்க்கத் தமிழ் ஆய்வறிவாளர்களான நீலன் திருச்செல்வத்தையும் லக்ஷமன் கதிர்காமரையும் புலிகள் இயக்கம் தனது தமிழ்த் துரோகிகள் அழிப்புப் பட்டியலில் இணைத்து, இருவரையும் கொன்றொழித்தது. இவ்வாறான கொலைகள் தனிப்பட்டோர்க்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளாம்.

சந்திரிகாவின் முதலாவது பதவிக் காலமான **1994** முதல் **1999** வரை, அரசியற் தீர்வுத்-திட்டத்தை நிறைவேற்ற முடியாமலும் இராணுவத் தீர்வில் முன்செல்ல இயலாமலும் இழுபட்டுக் காலம் கழிந்து போனமையையே காணமுடிந்தது. அதேவேளை, இரு தரப்பினரும் தத்தம் இராணுவ வலுப்படுத்தல்களை உள்ளார முன்னெடுப்பதில் முன்னின்றனர். அதன்மூலம் இரு தரப்பினருக்கும் இடையில் இராணுவச் சமனிலை காணப்பட்டதெனச் சில இராணுவ ஆய்வாளர்கள் கூறிவந்தனர். அதற்கு ஆதாரமாகப் புலிகள் இயக்கத்தின் கெரில்லா-வகைத் தாக்குதல் ஏற்பாடுகள் மரபுவழி இராணுவக் கட்டமைப்பாகக் உருமாறியமை சுட்டிக்காட்டப்பட்டது.

இக் காலகட்டத்திலேயே அமெரிக்க-மேற்குலகின் சமாதானத் தீர்வு எனக் கூறப்பட்ட விடயம் முன்தள்ளப்பட்டது. இதில் நோர்வே அனுசரணை வழங்கும் நாடாக முன்னுக்கு வந்தது. அதன் சாதக பாதக அம்சங்கள் பற்றி அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 17

# அமைதிக்கான போரும் தீர்வுக்கான பொதியும்

தனது முதலாவது பதவிக் காலம் முடிய ஒரு வருடம் இருக்கத், தான் பதவியேற்று ஐந்து வருடங்களின் பின் சந்திரிகா 1999இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முன்வந்தார். அவர் போரையும் அரசியல் தீர்வுப் பொதியையும் ஒரே நேரத்தில் முன்னெடுத்தார். ஆனால் அவ்விரண்டில், அவரது "சமாதானத்திற்கான போரே" வேகமாக முன்சென்றது. அதனைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்த வலதுசாரிகளும் பேரினவாதிகளும் இராணுவத்தின் உயர் மட்டத்தினரும் மனதார விரும்பினர். புலிகள் முன்னெடுத்த தாக்குதல் ஒவ்வொன்றையும் தமது இராணுவ நடவடிக்கைகட்கும் அதன் விஸ்தரிப்பான போருக்கும் தமது பக்க நியாயமாகவும் காரணமாகவும் மேற்குறிப்பிட்ட சக்திகள் காட்டின. இந் நிலையில், சந்திரிகாவால் அச் சக்திகள் வகுத்த எல்லைக்கு அப்பால் செல்ல முடியாத இக்கட்டான நிலையில் இருந்தார். ஒருவர் அதிகாரத்திற்கு வருமுன்பு எவ்வளவும் பேசலாம், வாக்குறுதிகளையும் வழங்கலாம். ஆனால் பதவிக்கு வந்த பின்னர்- குறிப்பாக நிறைவேற்றதிகாரம் கொண்ட தனியொருவர் பதவிக்கு வந்தால் -அத்தகையவரது சிந்தனையும் செயற்பாடுகளும் சர்வாதிகாரப் பதையிற் செல்லும் என்பதற்கு அவர் உதாரணமானார். அதனால், அவர் 1995 ஒகஸ்ட்டில் முன்மொழிந்த தீர்வுத் திட்டம் சாதகமாக முன்னெடுக்கப்படவில்லை. இதில் யூ.என்.பி., ஜே.வி.பி. என்பன மும்முரமான

எதிர்ப்புச் சக்திகளாகின. பாராளுமன்ற இடதுசாரிகள், சக்தி எதுவும் அற்றவர்களாகப் பதவிகளுடன் ஒட்டியபடி இழுபட்டுச் சென்றனர். இந் நிலையில் இராணுவ நோக்கில் ஆயுதக் கொளவனவும் இராணுவ ஆட்சேர்ப்பும் விஸ்தரிக்கப்பட்டன. அத்துடன் தமிழர் என்று கவனமாக வலிந்து ஒட்டப்பட்ட லேபலுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர் உலக நாடுகளில் புலி எதிர்ப்புப் பிரசாரத்திலும் பிரதான நாடுகளில் அவ்வியக்கத்தைத் தடைக்குட்படுத்துவதிலும் தனது ஆற்றலை நன்கு பயன்படுத்திச் சந்திரிகா அரசாங்கத்தின் நன்மதிப்புக்குரிய அமைச்சராக விளங்கினார். அவரது வெளி விவகாரப் பொறிமுறை, அரசுக்கு நல்ல பயனைக் கொடுத்ததுடன் போர் விரிவடைதற்கும் வழிவகுத்தது. அதேவேளை, அவர் தமிழர் தரப்பில் புலிகள் இயக்கத்தின் துரோகிகளின் பட்டியலில் இருந்தார் என்பதும் இரகசியமல்ல.

1996க்குப் பின் போர் வேகமடையத் தொடங்கிய காலத்தில் தெற்கிலே போர் எதிர்ப்பையும் அரசியல் தீர்வையும் வற்புறுத்தும் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடதுசாரிக் கட்சிகளும் அமைப்புகளும் முன்னின்று செயற்பட்டன. அவர்கள் முன்னெடுத்த இயக்கங்களில் ஒரு ஐக்கிய முன்னணியாக இணைந்து செயற்பட உகந்த பொதுக் கொள்கைகளும் தன்மைகளும் காணப்பட்டன. எனவே, போருக்கு எதிராகவும் அரசியல் தீர்வை வலியுறுத்தியும் அன்றாடப் பிரச்சினைகளில் அரசாங்கத்தின் மக்கள்-விரோதப் போக்குக்களை எதிர்த்தும் இவ் இடதுசாரிச் சக்திகள் ஐக்கிய இடதுசாரிக் குழு என்ற பெயரில் ஒன்றிணைந்து செயற்பட்டன.

புதிய ஜனநாயகக் கட்சி (பு.ஜ.க., இன்று பு.ஜ.மா.லெ.க.), நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி, தேசிய ஜனநாயக இயக்கம், தியச அமைப்பு ஆகிய ஆறு அமைப்புகள் இணைந்து புதிய இடதுசாரி முன்னணி என்றும் பெயரில் இயங்க முன்வந்தன. பு.ஜ.க.வின் சி.கா. செந்திவேல், இ. தம்பையா ஆகியோரும் நவசமசமாஜக் கட்சியின் விக்ரமபாகு கருணாரத்தின, லீனஸ் ஜயதிலக, வ. திருநாவுக்கரசு ஆகியோரும் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின்

முஜிபுர் ரஹ்மான், ஐக்கிய சோசலிசக் கட்சியின் சிறிதுங்க ஜயசூரிய, மகிந்த தேவகே ஆகியோரும் தேசிய ஜனநாயக இயக்கத்தின் பற்றிக் பெர்னாண்டோ, தியச அமைப்பின் வசந்த திசாநாயக்க ஆகியோரும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக் குழுவில் இருந்தனர். இப் புதிய இடதுசாரி முன்னணி தேர்தல் செயலகத்தில் இணைந்த முன்னணியாகப் பதிவு பெற்றது. "மேசை" அதன் தேர்தல் சின்னமாக வழங்கப்பட்டது".

இப் புதிய இடதுசாரி முன்னணியின் தோற்றமும் அது முன்னெடுத்த போராட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாலான இடதுசாரிச் சக்திகளிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தின. "போரை நிறுத்திச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அரசியல் தீர்வைக் கொண்டு வா" "பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்து" "வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து" "சம்பள உயர்வை வழங்கு" என்பன போன்ற பிரதான கோரிக்கைகளை இம் முன்னணி முன்னெடுத்தது. தெற்கிலே சிங்கள மக்கள் மத்தியில் அதற்கு வரவேற்பு வளர்ந்தது. கொழும்பு, கண்டி, குருநாகல், மாத்தறை, களுத்துறை, மலையகம் போன்ற இடங்களில் அது வெகுஜன இயக்க நடவடிக்கைகளை முன்னெடுத்தது. துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வீதி மறியல் போராட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் எல்லாம் போர்நிறுத்தமும் அரசியல் தீர்வும் முக்கிய கோரிக்கைகளாக முன்னெடுக்கப்பட்டன. அவை பிரதானமாகச் சிங்கள மக்கள் மத்தியிலே இடம்பெற்றன. சாதாரண உழைக்கும் சிங்கள மக்கள் பேரினவாதிகளோ அல்லது இனவெறி கொண்டவர்களோ அல்லர் என்பதை இப் போர்-எதிர்ப்பின்போது நடைமுறை அனுபவமாகப் பெற முடிந்தது. இன ஒடுக்குமுறையின் அம்சங்கள் பற்றியும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய நியாயமான அரசியல் தீர்வு பற்றியும் எடுத்துக் கூறியவற்றைச் சிங்கள மக்கள் செவிகொடுத்துக் கேட்டதுடன் அவற்றின் நியாயப்பாடுகளை ஏற்றனர். குருநாகல் நகரில் போரை நிறுத்தி அரசியல் தீர்வைக் கொண்டுவருவதை வலியுறுத்தி 1998இல் ஒரு முழுநாள் சத்தியாக்கிரகமும் கருத்தரங்கும் போர்-எதிர்ப்புக் கலை இலக்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

மாற்று இடதுசாரிச் சக்தி தானே என ஜே.வி.பி. உரிமை கொண்டாடிய சூழலில், புதிய இடதுசாரி முன்னணி அரசாங்கத்திற்கு ஒரு தலையிடியாக வளர்ந்ததுடன் கடுமையான சவாலாகவும் விளங்கியது. அதனாற், பல பக்கங்களில் இருந்தும் அதனைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றன. இதன் மத்தியில் 1999இல் மேல் மாகாணம் உட்பட மத்திய, வடமேல், சப்பிரகமுவ, வடமத்திய மாகாணசபைகட்குத் தேர்தல் நடந்தது. புதிய இடதுசாரி முன்னணி அவற்றிற் போட்டியிட்டது. மேல் மாகாணசபைக்குப் புதிய இடதுசாரி முன்னணி சார்பாக ஓர் உறுப்பினர் தெரிவானார். வடமேல் மாகாணசபையில் ஒரு உறுப்பினரின் தெரிவு சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் தவறியது. மொத்தமாகப் புதிய இடதுசாரி முன்னணி வேட்பாளர்கள் அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றனர்.

புதிய இடதுசாரி முன்னணி போரை எதிர்த்து அரசியல் தீர்வை வற்புறுத்திய சூழலில் புலிகள் இயக்கத்துடன் ஒரு பேச்சுவார்த்தைநடத்த முன்வந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு உத்தியயோகபூர்வமாக ஒரு கடிதத்தை அனுப்பியது. அக் கடிதம் அவரைச் சென்றடைந்தது. போரை நிறுத்தக் கோரியும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை வலியுறுத்தியும் முன்னணி முன்னெடுத்துவரும் வெகுஜன இயக்கத்தைப் பற்றியும் அதிற் சுட்டிக்காட்டியிருந்தது. அவை குறித்த ஒரு பேச்சுவார்த்தையைக் கோரியே கடிதம் எழுதப்பட்டது. அன்றைய சூழலில் தெற்கில் இருந்த நேர்மையான இடதுசாரிச் சக்திகளினதும் ஜனநாயக சக்திகளினதும் தமிழர் தரப்பிற்கான நட்புக்கரமாகவே புதிய இடதுசாரி முன்னணியின் கடிதம் இருந்தது. ஆனால் அக் கடிதம் பற்றியோ அதிற் குறிப்பிட்ட விடயங்கள் பற்றியோ கடிதம் கிடைத்தது என்றேனுமோ புலிகளிடம் இருந்து பதில் வரவில்லை.

புதிய இடதுசாரி முன்னணி, சிங்கள மக்கள் மத்தியிலும்

மலையகத்திலும் போரை நிறுத்தக் கோரும் பிரசார இயக்கத்தை முன்னெடுத்தது. புலிகள் இயக்கத்தின் வலதுசார்பால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் சிங்கள மக்களின் மத்தியிற் செல்வதைப் புலிகள் விரும்பவில்லை என்ற நடைமுறை உண்மையையும் புதிய இடதுசாரி முன்னணி சுட்டிக்காட்டியது. புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கோரிக்கையும் அதன் அராஜகம் நிறைந்த இராணுவ நடவடிக்கைகளையும் பு.ஜ.க.வும் புதிய இடதுசாரி முன்னணியும் ஏறகவில்லை. அதேவேளை, புலிகள் முன்னெடுத்த போராட்டத்தினுள் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் உள்ளடங்கியிருப்பதை அம் முன்னணி அடையாளங்கண்டது. அதனால், இன ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ் மக்கள் பக்கத்திலேயே அது என்றும் இருந்துவந்தது. பு.ஜ.க.வின் மேற்படி நிலைப்பாட்டை அரசாங்கச்சார்புப் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் விமர்சித்துப் புலி முத்திரை குத்தினர். ஒடுக்குமுறைகள் எவ்வடிவில் வந்தாலும் அவற்றை எதிர்ப்பது மாக்சிய லெனினியவாதிகளின் அடிப்படை நிலைப்பாடாகும். எக் கட்டத்திலும் ஆளும் வர்க்க ஒடுக்குதலோடோ அதன் அரசு இயந்திரத்தோடோ சமரசமற்ற நிலைப்பாட்டையே பு.ஜ.க. என்றும் பின்பற்றியது. எனவே அதன் நடைமுறையும் செயற்பாடுகளும் அது வெளியிட்ட அறிக்கைகள் யாவும் ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்குச் சார்பாகவே இருந்தன. ஆளும் தரப்பினர் எவராயிருந்தபோதிலும் அவை அவர்கட்கு எதிராகவே அமைந்தன. அந் நிலைப்பாட்டை வைத்து அரசாங்கச்சார்பு இடதுசாரிகள் பு.ஜ.க.வுக்குப் 'புலி சார்பினர்' என முத்திரைக் குத்திப் பிரசாரம் செய்த அதேவேளை, அக் கட்சிக்குப் புலிகள் பற்றிய கடும் விமர்சனம் இருந்ததால் புலிகள் அக் கட்சியின் மீது பகைமை கொண்டிருந்தனர். புலிகள் இயக்கம் முன்பிருந்தே அக் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்துள்ளது. அவற்றைச் சற்று விவரிப்பது இவ்விடத்து அவசியம். முக்கியமாக, 1989இல் பு.ஜ.க.வின் பொதுச் செயலாளர் தோழர் மணியத்தைக் கொல்லுமாறு வன்னியில் இருந்த தலைமை ஆணை பிறப்பித்ததை இங்கு குறிப்பிடலாம்.

அதன் பின்னணி பின்வருமாறு: அன்று யூ.என்.பி.யின் இருண்ட, ஜனநாயக விரோத, மனித உரிமை விரோத ஆட்சியை அகற்றுவதும் இந்தியப் படைகளை வெளியேற்றுவதும் தேவையாயிருந்ததால், 1989இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அன்றைய எதிர்க்கட்சி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை ஆதரிக்கப் பு.ஜ.க. முடிவெடுத்தது. அதனடிப்படையில் அக் கட்சி சிறிமாவோ பண்டாரநாயக்கவை வடபுலத்துக்கு வரவழைத்துத் தோழர் மணியம் தலைமையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றை நடத்தியது. ஸ்ரீல.சு.க.வினரோ பாராளுமன்ற இடதுசாரிகளோ அத்தகைய முயற்சிக்குத் துணியாத சூழலிற், புலிகளின் ஆயுத அராஜகத்துக்கு மத்தியிற், பு.ஜ.க. மேற்படி துணிகர நடவடிக்கையை எடுத்தது. பண்டத்தரிப்பில் நடந்த அக் கூட்டத்திற் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அதன் பின்னர் யாழ்நகரில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகளின் நடுவே அக் கட்சி 1989 மே தினத்தைத் தோழர் மணியம் தலைமையில் நடத்தியது. இவற்றாற் சினமடைந்தே புலிகள் இயக்கம் தோழர் மணியத்தைக் குறிவைத்தது. இந் நூலின் முன்னைய பகுதிகளிற் கூறியபடி தோழர் மணியத்தைக் கொல்லும் முயற்சியைத் தனது துரித நடவடிக்கைகள் மூலம் கட்சி தோற்கடித்தது. அதற்குச் சில நாட்களில் பின்னர் அக் கட்சியின் சங்கானைத் தோழர் சி. துரைசிங்கத்தையும் கட்சியின் நண்பரான நடேசு என்பவரையும் புலிகள் விசாரணைக்காக அழைத்துச்சென்றனர். புலிகளின் தடுப்பின்போது இருவரும் கொல்லப்பட்டனர். சங்கானையில் அக் கட்சித் தோழர்கள் மேலும் நால்வரைப் புலிகள் விசாரணைக்காகத் தடுத்துவைத்துச் சித்திரவதை செய்ததுடன், வேறுபல தோழர்களையும் வெவ்வேறு இடங்களில் அச்சுறுத்தி மிரட்டி மௌனித்தனர். அதன் நடுவே, புலிகள் எடுத்துச்சென்ற அக் கட்சியின் சொந்த அச்சகமான யாழ்ப்பாண அச்சகத்தின் அச்சியந்திரம் இறுதிவரை மீளத்தரப்படவில்லை. கட்சித் தலைமை எவ்வளவோ வாதாடி முயன்றும் அந்த அச்சியந்திரம் வன்னிக் காட்டிற்குட் தேவைப்பட்டதால் அங்கு கொண்டுசெல்லப்பட்டதாக இறுதியான பதில் கிடைத்தது. 1990-95 காலப் பகுதியில் கட்சிப் பத்திரிகையான "புதிய

பூமி"யை வெளியிடுவதைப் புலிகள் தடுத்தனர். 1990ஆம் ஆண்டு முஸ்லிம்களை வெளியேற்றிய வேளை "புதிய பூமி" அதனைக் கண்டித்தமைகுறிப்பிடத்தக்கது. (பின்னிணைப்பு-10ஐக்காண்க.) இச் சூழலில் தனது ஏடான "புதிய பூமியைக்" கையெழுத்துப் படிகளாக வெளியிடும் கட்டாயம் கட்சிக்கு ஏற்பட்டது. அதனாற் "புதிய பூமி" வெளியீட்டை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மாற்றநேர்ந்தது. இவ்வாறு கொலைகளும் கொலை முயற்சிகளும் சித்திரவதைகளும் மிரட்டல்களும் உட்பட்ட நெருக்கடிககளை எதிர்கொண்ட போதிலும், கட்சி கொள்கையிலும் நடைமுறையிலும் தெளிவாகவே இருந்தது. அது எச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கச்சார்பாக நின்றதோ அரசின் படைகளுடன் ஒத்துழைத்தோ இல்லை. இந்திய அமைதிப் படைக் காலத்திலும் அது தெளிவாயும் உறுதியாயும் இருந்து இந்தியப் படை நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என விடாது வற்புறுத்தியது. அதேவேளை, மக்கள் மத்தியில், குறிப்பாகப் பின்தங்கிய, உழைக்கும் மக்கள் மத்தியில் வெகுஜன வேலைகளைச் செய்துவந்தமையால் கட்சியைப் புலிகளால் எதுவுஞ் செய்யமுடியவில்லை. தோழர் மணியத்தின் போராட்ட வாழ்வு புரட்சிகரமாக முடிவுற்ற போதும், கட்சி அவர் வழிகாட்டிய பாதையில் தொடர்ந்து தனது புரட்சிகரப் பயணத்தை மேற்கொண்டது. அத்தகைய கட்சியையும் அதன் தோழர்களையும் புலி முத்திரையிட்டுக் காட்ட இன்றும் அரசாங்க அரவணைப்பில் உள்ள சில இடதுசாரி வேடப் போலிகள், இங்கும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உதிரிகளாயிருந்து எதிர்ப்பிரசாரம் செய்கின்றனர். இது அவர்களது கேவலமான சீரழிவின் வெளிப்பாடே. எனவே நேர்மையான மாக்சிச லெனினியத் தளத்தில் நிற்கும் பு.ஜ.மா. லெ.க. புலிகளின் ஆட்சிக் கால அராஜக ஜனநாயக மறுப்பின் மத்தியிலும் எந்தவொரு தமிழ்த் தேசியவாத ஆயுத இயக்கத்தின் பின்னாலும் செல்லாது தனித்துவத்தைப் பேணிய கட்சியாக இருந்தமை வலியுறுத்திக் கூறத்தக்கதாகும். இவ் வரலாற்றுப் பின்னணியில், 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா இரண்டாந் தடவை போட்டியிட்டு வென்ற பின்பு நடந்தவற்றை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 18

# உரையாடும் அரசும் புலிகளும்

1994 முதல் 1999 வரை நாடும் மக்களும் எதிர்பார்த்த சாதகமானவிடயம்எதையும்முன்னெடுக்காதஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்கவைப்பதில் அதிக அக்கறையாக இருந்தது. எனவே ஜனாதிபதி பதவிக் காலம் முடிவடைய ஒரு வருடம் முன்பே ஜனாதிபதித் தேர்தலை நடத்த முன்வந்தது. 1999 டிசம்பர் 21ஆம் திகதி நான்காவது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. அதில் சந்திரிக்க பண்டாரநாயக்க குமாரதுங்க யூ.என்.பி.யின் ரணில் விக்ரமசிங்க, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார, ஜே.வி.பி.யின் நந்தன குணதிலக ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். இதில் முரண்நகை என்ன

வெனில் நாட்டில் ஒரு புறத்தில் "சமாதானத்திற்கான போர்" நடந்துகொண்டிருந்தது. அங்கே இரத்தமும் கண்ணீரும் பெருக்கெடுத்தன. அதேவேளை, மறுபுறத்தில் "ஜனநாயகத்திற்கான" ஜனதிபதித் தேர்தல் நடக்கவிருந்தது. தேர்தல் பிரசாரங்கள் தீவிரமாக முடுக்கப்பட்டன. (பு.ஜ.மா.லெ.க.வின் நிலைப்பாட்டைப் பின்னிணைப்பு-15இல் காணவும்.) வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இருந்தன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகட்குள் புலிகள் சென்று தாக்குவதும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகட்குள் இராணுவம் ஆழ ஊடுருவித் தாக்குவதும் மாறிமாறி இடம்பெற்றன. எற்கனவே இராணுவம் குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்ததையடுத்துப் புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தம்மை நிலைநிறுத்தி வலுப்படுத்தினர். அதேபோன்று, கிழக்கின் படுவான்கரை உட்பட்ட முக்கிய பிரதேசங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். கிழக்கின் நிலமும் நீர்நிலைகளும் காடுகளும் புலிகளுக்குச் சாதகமாக இருந்த அதேவேளை, மூவின மக்களின் பரம்பலும் இருந்ததால் வன்னி நிலப்பரப்பிற் போன்று முழுக் கட்டுப்பாடு இயலவில்லை. அதேவேளை, இன, மத வக்கிரத்தோடு சிங்கள மக்களையும் முஸ்லிம் மக்களையும் புலிகள் இயக்கம் அடிக்கடி தாக்குதல்கட்கும் கொலைககட்கும் ஆளாக்கியது. அதன் எதிர்விளைவுகள் எவ்வளவு கேடாக இருக்கும் எனப் புலிகள் தூரநோக்கிற் கவனிக்கவேயில்லை.

இவ்வாறான 1999ஆம் ஆண்டுச் சூழலில் கொழும்பு நகரில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் கூட்டத்தின்போது ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிகாமீது மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் அவர் காயங்களுடன் உயிர்தப்பினும் கண்ணொன்றை இழந்தார். வேறு சிலர் கொல்லப்பட்டனர். சிலர் படுகாயமடைந்தனர். 1994ன் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரமேடையில் யூ.என்.பி. வேட்பாளர் காமினி திசாநாயக்க கொல்லப்பட்டார் என்பது இங்கு நினைவுகூரற்குரியது. இத்தகைய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் ஏனைய வகைத் தாக்குதல்களும் தெற்கிற்

தொடர்ந்தன. அரசாங்கத் தலைவர்களையும் முப்படைத் தலைவர்களையும் தாம் விரும்பாதோரையும் பட்டியலிட்டுக் கொல்வது புலிகளின் நடைமுறையாயிருந்தது. இவ்வாறான தனிப்பட்டோர் அழித்தொழிப்பு மூலம் புலிகள் எதையும் சாதிக்கவில்லை. அரசும் அரச இயந்திரமும் ஒருவரின் இடத்திற்கு மற்றவரை நிரப்பியவாறு தனது முதலாளியப் பேரினவாத ஒடுக்குமுறையைத் தொடரந்தது. சிறுமுதலாளிய அதிதீவிர ஆயுதப் போராட்ட சக்தியான புலிகள் இயக்கம் இதை இறுதிவரை புரிந்துகொள்ளவில்லை. குறுந்தேசியவாதத்தையும் இனவெறியையும் அடிப்படையாக கொண்ட அவர்களால் மக்கள் விடுதலைப் போராட்ட வழிமுறைகள் பற்றிச் சிந்திக்க முடியவில்லை.

1994ஆம் ஆண்டு ஜனதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குவிகிதத்தினும் பதினொரு சதவீத வாக்குகள் குறைவாக 51.1 சதவீத வாக்குகளை மட்டும் பெற்றுச் சந்திரிகா 1999இல் மீண்டும் ஜனாதிபதியானார். அதன்பின் தனது அடுத்த பதவிக் காலத்திற்கான தொடர் திட்டங்களை முன்னெடுத்தார். போரை முன்னெடுப்பதிலும் புலிகளைக் கையாள்வதிலும் சந்திரிகா தலைமையிலான பொதுசன முன்னணி எற்கனவே தீர்மானித்த நோர்வே நாட்டின் அனுசரணைக்குப் பச்சைக் கொடி காட்டியது. இதனிடை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர் தனது முழு இராஜதந்திர ஆற்றலையும் பயன்படுத்திச் செயற்பட்டார். குறிப்பாகப், புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்க முத்திரையுடன் மேற்குலக நாடுகள் தடைசெய்யக் கதிர்காமர் ஆற்றிய பணி பாரியது. அதேவேளை, அவர் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய மனிதராயும் விளங்கினார்.

இந்நிலையில், இலங்கையில் புதிதாகத் தோன்றிய சூழலைப் பயன்படுத்தி, அமெரிக்கா நோர்வேயின் பின்னாலிருந்து செயற்பட்டது. ஏற்கனவே இலங்கையின் இனப் பிரச்சினையில் கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா தனது தந்திரோபாய நடவடிக்கைகளிற் பின்னடைவுற்றதால் அவ்விடத்திற்கு அமெரிக்கா வரச் சகலதையும் செய்தது. நேரடியாகவன்றி, அனுசரணை நாடான நோர்வேயை வைத்துத் தனது

நோக்கங்களை நிறைவேற்ற இந்தியா முற்பட்டது. சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் அமெரிக்காவிற்குப் பிடித்த அரசாங்கம் அல்ல. ஏனெனில், சந்திரிகா தனது தந்தையும் தாயும் பின்பற்றிய "நடுவழிப் பாதை" "அணிசேராக் கொள்கை" போன்றவற்றைத்தானும் பின்பற்றுவதாகத் தோற்றங்காட்டினார். ஆனால் உலகின் பிரதான அலையாக ஏகாதிபத்தியம் முன்தள்ளிய நவதாராளமயப் பொருளாதாரக் கொள்கைக்கும் உலகமயமாதல் நிகழ்ச்சிநிரலுக்கும் சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் பணிந்துநடந்தன. எவ்வளவு வாய்வீச்சுப் பேசினாலும் இன்றைய உலகப் பொருளாதார ஒழுங்கின்கீழ் உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் அவர்களது திட்டங்கள் ஆலோசனைகள் வழிகாட்டல்கள் என்பனவற்றுக்கும் இலங்கை இணங்கவேண்டும். இது கட்டாய நிபந்தனையாகும். எனவே, அமெரிக்கா ஒருபுறம் இவற்றின் மூலமும் இன்னொருபுறம் நோர்வே மூலமும் இலங்கையைக் கையாளப் புதிய வியூகம் அமைத்தது. (பு.ஜ.மா.லெ.க.வின் மதிப்பீட்டைப் பின்னிணைப்பு-16இல் காணவும்.)

இக் காலகட்டதில் அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய உலகமயமாதலுக்குப் புலிகள் இயக்கமும் தன்னை இசைவாக்கியது. ஏனெனில், அவர்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்போ அமெரிக்க மேற்குலக முதலாளிய சக்திகளிடம் வெறுப்போஇருக்கவில்லை. பழைமைவாதத்தமிழ்த்தேசியத்தின் தொடர்ச்சியை அவர்கள் கொண்டிருந்தார்கள். தொடக்கத்திற் தமிழீழத்தின் பொருளாதார வளங்களைப் பேணுவதும் விருத்திசெய்வதும் எனக் கூறிப் பொருண்மியத் திட்டங்கட்கான தனி அமைப்பையும் கொண்டிருந்தனர். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்து அதிற் தாமும் ஈடுபட்டனர். இப்போது, எங்கும் எதிலும் பணத்தையும் இலாபத்தையும் முதன்மைப்படுத்தியதால், அந்த நிலைப்பாட்டைக் கைவிட்டு, எப்படியாகிலும் பணம் வந்தாற் சரி என்ற நிலைக்குச் சென்றனர். மக்களது மொழியிற் கூறுவதானால், 'பணங் கறக்கும்' சகல வழிகளையும் புலிகள் பயன்படுத்தினர். இதனாற் பல்தேசிய கம்பனிகளின் நேரடி முகவர்களும் ஆகினர். வர்த்தகமும் வணிகமும் அவற்றுக்கான விளம்பரங்களும் மூலம் மிகுந்த பண வருவாயும் வளங்களும்

பெற்ற இயக்கமாகியது. இத்தகைய பொருளாதார வளமும் ஆயுத பலமும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் நிர்வாகச் செயற்பாடும் இணைந்து இலங்கை அரசாங்கத்துடன் சமபலமாகப் புலிகள் இயக்கம் உள்ளது என்ற தோற்றத்தை ஏற்படுத்தின. அதற்கமைவான இராணுவத் தாக்குதல்களையும் புலிகள் வெற்றிகரமாக நிகழ்த்தியிருந்தனர். ஒன்று, வன்னி நிலப்பரப்பையும் குடாநாட்டையும் இணைக்கும் கழுத்துப் போன்ற முக்கிய பகுதியான ஆனையிறவில் அமைந்திருந்த பிரதான படைத்தளத்தைத் தாக்கி அழித்தனர். அடுத்துக், கொழும்பின் கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தையும் அருகே அமைந்த சிவில் விமானத்தளத்தையும் தாக்கிப் பல விமானங்களை அழித்தனர். இவை இலங்கை அரசாங்கத்திற்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. எனவே அரசாங்கத்திற்குப் பேச்சுவார்த்தைக்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தாம் சமபலத்துடன் தோன்றியதால், புலிகளும் பேச்சுவார்தைக்குப் பின்னிற்கவில்லை. இந் நிலையில் நோர்வே அனுசரணைப் பாத்திரம் வகிக்க முன்வந்தது.

ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து, புலிகள் இயக்கம் பலாலி படைத்தளத்தைக் கைப்பற்றும் தயாரிப்பிலும் அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டமையை இங்கு குறிப்பிட வேண்டும். அதன் மூலம் தனக்கு இராணுவ வெற்றி கிட்டும் என அது நம்பியது. கடல், ஆகாய வழிகளிலன்றி இலங்கை இராணுவத்தாற் தரைவழியாகப் பலாலித் தளத்தைப் பாதுகாக்க இயலாத நிலை அப்போது நிலவியது. எனவே இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் முறையிட்டுத் தமது படைகளைப் பாதுகாக்கக் கோரியது. அதற்கு இந்தியா இணங்கியது. தமிழ்நாட்டின் தென்கோடிக் கரையோரத்திலும் கேரளக் கரையோரத்திலும் இந்திய கடல், தரை, விமானப் படைகள் தயாராக்கப்பட்டன. இதை அவதானித்த புலிகள் இயக்கம் தனது பலாலித் தளத் தாக்குதலைக் கைவிட்டது. நோர்வே மீதான நம்பிக்கையுடன் பேச்சுவார்தைக்குச் செல்ல இதுவும் ஒரு தூண்டுதலானது.

இப் பின்புலத்தில், *11.09.2001*ஆம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரத் தகர்ப்பு இடம்பெற்ற பின், அமெரிக்கா உலகம் முழுதும்

பயங்கரவாத எதிர்ப்பை முன்னெடுக்கத் தயாரானது. அதனாற் புலிகள் மீது தனது பிடியை வலுப்படுத்தவும் மிரட்டவும் முற்பட்டது. பேச்சுவார்த்தைக்குப் புலிகள் செல்ல வேண்டுமென வெவ்வேறு வழிகளில் சமிக்ஞை காட்டியது. அதனாற் போலும், 2001 நவம்பர் மாவீரர் தின உரையில் "உள்ளக சுயநிர்ணயம்" பற்றிப் பிரபாகரன் பேசியிருந்தார்.

இலங்கை-அரசாங்கம் - புலிகள்-இயக்கப் பேச்சுவார்த்தை வெளிநாடொன்றில் இடம்பெறுவதைப் புலிகள் விரும்பியதால் இரு தரப்புகட்குமிடையே முதற் சந்திப்பு ஜெனிவாவில் நடந்தது. இலங்கை அரசாங்க அணிக்கு அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவும் புலிகள் இயக்க அணிக்கு அன்ற்றன் பாலசிங்கமும் தலைமைதாங்கினர். ஆரம்ப முதலே பேச்சுவார்தை கடுமையாயிருந்தது. புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் தென்படவில்லை. இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து விலகாது கவனிக்க நோர்வேயின் அனுசரணையாளர் எரிக் சோல்ஹைம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இலங்கை அரசாங்கம் தனது பேரினவாத நிலைப்பாட்டினின்று கீழிறங்கத் தயாராயிருக்கவில்லை. அதேபோன்று, புலிகள் இயக்கமும் தனது குறுந்தேசிய நிலைப்பாட்டில் இறுக்கமாயிருந்தது. எனவே பேச்சுவார்த்தைகள் இழுபட்டன.

இவ்வாறு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற 2002ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்தது. இத் தேர்தலில் பு.ஜ.க. (இன்று பு.ஜ.மா.லெ.க.) யாழ் மாவட்டம், நுவரெலியா மாவட்டம், கொழும்பு மாவட்டம் ஆகியவற்றில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் "சுவர் மணிக்கூடு" சின்னத்திற் போட்டியிட்டது. யாழ் மாவட்டத்தில் இராணுவம், புலிகள் இயக்கம், ஈ.பி.டி.பி. என்பவற்றின் துப்பாக்கிகள் அரங்கில் இருக்கையிற் பு.ஜ.க. அத் தேர்தலில் நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வெற்றி பெறுவது என்பதற்கப்பால், நாட்டின் அரசியல் நிலை பற்றியும் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படை பற்றியும்- குறிப்பாக அரசியல் தீர்வு பற்றியும் -பரவலாக நடத்திய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மக்களுக்கு

விளக்கியது. அதேபோன்று, நுவரெலியா, கொழும்பு மாவட்டங்களில் விரிவான அரசியல் விளக்கப் பிரசாரங்களையும் முன்னெடுத்தது. வடக்கு-கிழக்கில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற் போட்டியிட்டவர்கள் வென்றனர். அத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வென்றபோதிலும் அறுதிப் பெரும்பான்மை பெற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசையும் மலையக மக்கள் முன்னணியையும் ஈ.பி.டி.பி.யையும் இணைக்க வேண்டியிருந்தது. ரத்னசிரி விக்ரமநாயக்கவைப் பிரதமராகக் கொண்டு அரசாங்கம் அமைந்தது.

தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களில், 25.10.2000 அன்று பண்டாரவளையில் உள்ள பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமுட் புகுந்த சிங்கள இனவெறிக் காடையர்கள் 31 தமிழ் இளைஞர்களைக் கொடூரமாகக் கொன்றழித்தனர். இந்நிகழ்வு தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மலையகத் தமிழ் மக்கள் கொதித்தெழுந்து தமது எதிர்ப்பைக் காட்டினர். இக் கொடிய நிகழ்வைப் பு.ஜ.க. வன்மையாகக் கண்டித்ததுடன், தலவாக்கலை நகரில் மலையக மக்கள் முன்னணி ஏற்பாடுசெய்து, பல்வேறு அமைப்புகளும் கலந்துகொண்ட மிகப் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட கூட்டத்திலும் பங்கெடுத்தது. அக் கூட்டத்தில் தோழர்கள் சி.கா. செந்திவேல், இ. தம்பையா ஆகியோரின் தலைமையில் பெருந்தொகையான கட்சித் தோழர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தலைமையில் நடந்த அக் கூட்டத்தில் தோழர் செந்திவேல் உரையாற்றினார். தோழர் செந்திவேலின் உரை முடிந்த கையோடு காடையர்களும் பொலிசும் கூட்டத்தைத் தாக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். அதன்போது ஒருவர் இறந்தார். பலர் படுகாயப்பட்டனர். கட்சித் தோழர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர். இது 1983இன் இனப்படுகொலைகட்குப் பின்னுந் தொடர்ந்த பேரினவாதக் கொலைவெறியை வெளிப்படுத்தியது.

2001ஆம் ஆண்டிலும் பேச்சுவார்த்தை இரண்டாங் கட்டமாக நடந்தது. அமெரிக்கா இப் பேச்சுவார்த்தைக்குப் பக்கபலமாகப் பல்வேறு முயற்சிகளை முன்னெடுப்பதாகக் கூறிச் செயற்பட்டது.

புலிகள் இயக்கம், தாமே தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிற் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

இவற்றின் மத்தியில் 2001 யூலையில் அரசின் அமைச்சரான முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் உலங்கு வானூர்தி விபத்திற் கொல்லப்பட்டர். அதைத் தொடர்ந்து, வேறும் பிரச்சினைகளாலும் முஸ்லிம்-காங்கிரஸ்-அரசாங்க முறுகல் ஏற்பட்டு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியது. அதனாலும் சிலரின் கட்சித் தாவலாலும் 2001 டிசம்பரில் மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தநேர்ந்தது. இத் தேர்தலிலும் பு.ஜ.க. யாழ் மாவட்டத்தில் மீண்டும் போட்டியிட்டது. அதன்மூலம் அக் கட்சி தனது இடதுசாரி, மாக்சிச லெனினிச நிலைப்பாட்டை நெருக்கடிகட்கும் ஆபத்துக்கும் மத்தியில் மக்களிடையே பிரசாரம் செய்தது. இத் தேர்தலில் எதிர்க் கட்சியாயிருந்த யூ.என்.பி. பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றது. அதை அறுதிப் பெரும்பான்மையாக்க முழுமுயற்சி செய்த யூ.என்.பி., ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. ஆகிய கட்சிகளையும் இணைத்து 2002 ஜனவரியில் அரசாங்கத்தை நிறுவியது. ரணில் விக்ரமசிங்க பிரதமரானார். இதனால், நிறைவேற்று அதிகாரம் சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியிடம் இருக்க பாராளுமன்ற அதிகாரம் ரணில் தலைமையிலான யூ.என்.பி.யிடம் இருந்தது. எனவே ஜனாதிபதியும் பிரதமரும் நீயா நானா என்று போட்டியிடும் எதிரும் புதிருமான அரசியற் சூழல் உருவானது. இதைத் தமது நோக்கத்திற்கான வாய்ப்பாக்க அமெரிக்கா ஆர்வமாயிருந்தது. பதவிக்கு வந்த ரணில் விக்ரமசிங்க தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கம் அமெரிக்காவுக்கு விசுவாசமானது என்பதால், அதன்மூலம் அமெரிக்கா விரும்பியதைச் செய்ய இயலுமாகையால், அந்த அரசாங்கத்தைப் பலப்படுத்துவதையும் அமெரிக்கா நோக்கமாகக் கொண்டிருந்து.

நோர்வேயின் அனுரசணையுடன் எரிக் சோல்ஹைமின் முன்முயற்சியுடன் 2002 பெப்ரவரி 23ஆம் திகதி அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில்

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்பாடு ஒப்பமிடப்பட்டது. அரசாங்கச் சார்பில் ரணில் விக்ரமசிங்கவும் புலிகள் இயக்கச் சார்பில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஒப்பமிட்டனர். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில், இவ்விருவரும் ஒரே இடத்திலிருந்து ஒப்பமிடவில்லை என்பதாகும். ரணில் விக்ரமசிங்க வவுனியாவிலும் பிரபாகரன் கிளிநொச்சியிலும் ஒப்பமிட்டனர். பிரதமர் ஒப்பமிடும்போது நோர்வேயின் பிரதிநிதியும் வேறு சிலரும் உடனிருந்தனர். ஆனால் பிரபாகரன் ஒப்பமிடுகையில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மட்டுமே உடனிருந்தார். புரிந்துணர்வு உடன்பாடு இரு தரப்பினரினதும் உணர்வுபூர்வமான நிலைப்பாட்டில் இருந்து முன்னெடுக்கப்படவில்லை என்பதையே இது பிரதிபலித்தது. அரசாங்க தரப்பிற்கு உள்நோக்கம் இருந்தளவுக்குப் புலிகளுக்கும் உள்நோக்கம் இருந்தது. இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன், 15 ஆண்டுகட்குப் பின்பு, கிளிநொச்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் தோன்றித் தன்னை வெளியுலகிற்குக் காட்டினார்.

மேற்படி புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம் மக்களுக்கு நீண்ட காலத்திற்குப் பின்பு ஒரு வகை நிம்மதிப் பெருமூச்சுவிட வாய்ப்பு ஏற்பட்டது. போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. இராணுவத்தின் வரைமுறையற்ற கெடுபிடிகள் அடாவடித்தனங்கள் மட்டுப்படுத்தப்பட்டு சாதாரணமாக நடமாடினர். அதேவேளை, புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் செல்லவோ சீருடையிற் செல்லவோ முடியாத நிலை ஏற்பட்டது. புலிகள் அரசியல் வேலைகள் செய்வது ஏற்கப்பட்டாலும் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுள் இராணுவம் செல்வது உடன்பாட்டிற் தடைப்பட்டிருந்து. புலிகள் அரசியல் வேலைகட்காகப் பணிமனைகளைத் திறந்து செயற்பட்டனர். ஆனால் அவர்களது செயற்பாடுகள் யாவும் பழைய அணுகுமுறையிலேயே தொடர்ந்தன. மேலும் ஏ-9 பாதையில் ஓமந்தைக்கு வடக்கே புளியங்குளம் முதல் பளை வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கூடாகப் போக்குவரத்து இடம்பெற்றது. அதுவரை தடைசெய்திருந்த பொருட்களிற்

சில தவிர்ந்த அனைத்தையும் வடக்கே கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டது. அவ்வாறு அனுமதித்த பொருட்களைக் கொண்டுசெல்லும் வேளை புலிகளின் ஆயப் பகுதி (சுங்கப் பிரிவு) அவற்றைப் பரிசோதனைக்கும் வரிவிதிப்புக்கும் உட்படுத்தியது. சகல பொருட்களையும் ஓமந்தையிலும் புளியங்குளத்திலும் புலிகள் இறக்கி ஏற்றினர். பயணிகளும் பதிவுகட்கும், சில சமயங்களில், கேள்வி விசாரணைகட்கும் உள்ளாயினர்.

இவ்வாறிருந்தும், இவ்வொப்பந்தத்தின் மூலம் மக்களுக்கு ஓரளவாயினும் ஆறுதல் கிடைத்தது. புலிகள் இயக்கத்தினர் மத்தியில் போராளிகள் விடுப்பில் வீடு செல்லவும் வீட்டிற் தங்கியிருக்கவும் தலைமை அனுமதி வழங்கியது. இதனாற் பலர் நீண்டகாலத்திற்குப் பின் பெற்றோர் உறவினருடன் ஊடாட முடிந்தது. மேலும், போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்ததால் தெற்கிலும் மக்கள் நிம்மதிபெற்றனர். அதுவரை தெற்கின் மக்களும் வடக்கு-கிழக்கு எல்லையோரச் சிங்கள மக்களும் புலிகளின் தாக்குதலை எதிர்கொண்டவர்களாவே இருந்தனர். அந்நிலையில், ஓர் ஆறுதல் இடைவெளி ஏற்பட்டது எனலாம். மேற்படி போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழ்ப், போர்நிறுத்தக் கண்காணிப்புக்கு குழுவொன்று நிறுவப்பட்டது. அதில் உள்நாட்டு அதிகாரிகளும் வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்றனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருந்தபோதிலும், இரு தரப்பினராலும் போர்நிறுத்தம் மீறப்பட்டது. மீறல்களைப் பதிவுசெய்தமைக்கு அப்பால் அவ்வாறான தொடர் நிகழ்வுகளை விசாரிக்கவோ தடுத்துநிறுத்தவோ மேற்படி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முடியவில்லை.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை தொடர்ந்தது. ஆனாற் குறைந்தபட்ச இடைக்காலத் தீர்வுக்கான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கிக் கொள்வதில் இரு தரப்பினரும் தத்தம் நிலைப்பாட்டில் இருந்து இறங்க மறுத்தனர். அதேவேளை, பாராளுமன்ற அதிகாரத்தை பெற்ற ரணிலாலும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட சந்திரிகாவாலும் இணக்கமான வழியிற் செல்லமுடியவில்லை. ரணில் செய்த

புரிந்துணர்வுச் சமாதான உடன்பாட்டை எதிர்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியும் தீவிர பேரினவாதிகளும் எதிர்த்ததனர். அதேவேளை, புலிகள் இயக்கம் இச் சமாதான காலத்தைப் பயன்படுத்தித் தாம் வேண்டிய பலவற்றைப் பெற்றது.

எவ்வாறாயினும் 2000ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்ட அரசாங்க-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இணங்கிய இடைக்காலத் தீர்மானங்களும் பிரகடனங்களும் போன்றவற்றை அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 19

# முன்னேறமாட்டாப் பேச்சுகள்

*23.02.2002*இல் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனும் ஒப்பமிட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்பாடுபற்றி முன்னைய பகுதியிற் பார்த்தோம். அத்தகைய சூழலில் அரசாங்க இராணுவ வலிமையும் புலிகளின் இராணுவ வலிமையும் சமநிலையில் இருப்பது போன்ற ஒரு தோற்றம் காணப்பட்டது. இந்நிலையில் மேற்படி போர்நிறுத்த உடன்பாடும் அதன் கீழான சமாதானச் சூழலும், நீண்டுசென்ற போரின் மத்தியில் ஒரு முக்கிய புள்ளியைக் கடக்கும் ஒரு நிலையைக் குறித்தன. ஏற்கனவே பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் நோர்வே அனுசரணையில் தொடங்கிய பேச்சுவார்த்தையிற் குறைந்தபட்ச இணக்கங்கூடக் காணமுடியாத நிலை, ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் கீழும் தொடர்ந்தது. இரு தரப்பினரும்

உட்கிடக்கைகளில் நெகிழ்வேதும் தெரியவில்லை. ரணில் தரகு முதலாளியத் தாராளவாதியாகக் காணப்பட்டாலும். பேரினவாத அடிப்படைகளைக் கெட்டியாகப் பற்றிநிற்கும் ஒருவராகவே இருந்தார். அவர் அமெரிக்க மேற்குலக விசுவாசியாக மட்டுமன்றித், தனது குருவான ஜே.ஆர். போலன்றி, இந்தியாவை நேரடியாக பகைக்காத ஒரு நிலைப்பாட்டை முன்னெடுத்தார்.

அதேவேளை, மறுபுறத்தில்பிரபாகரனும்அவர்தலைமைதாங்கிய விடுதலைப் புலிகள் இயக்கமும் இளந்தலைமுறைத் தலைவர்களைக் கொண்டிருந்தபோதும், பழைமைவாதத் தமிழ் அரசியற் தலைமைகள் முன்மொழிந்த தமிழீழக் கோரிக்கையை இறுகப்பற்றியிருந்தனர். "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்பது அதன் தாரக மந்திரமாயிருந்தது. அதிற் புலிகள் மிக இறுக்கமாக நின்றனர். இவ்விடத்து ஓர் உண்மையைக் கவனித்தல் அவசியம். ஆளும் பேரினவாதத் தரப்புகளின் நிலைப்பாட்டில் இன ஒடுக்குமுறை கெட்டியாகப் பதிந்திருந்தது. அதேவேளை, புலிகளின் தமிழீழப் பிரிவினைக் கோரிக்கை சத்தியமற்றதாகப், பழைமைவாதத்தைப் பற்றி ஜனநாயக மறுப்பையும் அராஜகத்தையும் கைப்பிடித்த போதிலும், அவர்களது பக்கத்தில் ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான அபிலாட்சைகள் உள்ளடங்கியிருந்ததை நிராகரிக்க முடியாது. இது, இரு தரப்பினருக்குமிடையில் அனுசரணையாளர் பாத்திரம் வகித்த நோர்வேக்கும் அதன் பிரதிநிதியான எரிக் சோல்ஹைமுக்கும் மிகச் சவாலாகவும் கடும் முயற்சியாகவும் அமைந்தது.

இருப்பினும், புலிகளின் சர்வதேச அணுகுமுறை, இந்தியாவை விட அமெரிக்காவையும் மேற்குலகையுஞ் சார்ந்து தமக்குரிய வற்றை மட்டுமன்றித் தமது இறுதி இலக்கையும் வென்றெடுக்க வரித்துநின்றது. அதன் காரணமாக, அமெரிக்கப் பின்புலத்திற் சமாதான முயற்சிகளின் மொத்த உருவாகச் சித்திரிக்கப்பட்ட நோர்வேயின் அனுசரணையைப் புலிகள் இயக்கம் மறுப்பின்றி ஏற்றது. அதன் மூலம் நோர்வே ஊடாகத் தம்மைப் பலப்படுத்தும் பலநிலை உதவிகளையும் பெற்றனர். இந்நிலையிலேயே இலங்கை, இந்தியா தவிர்ந்த மேற்குலகச் சார்பு நாடுகளின்

தலைநகரங்களில் பேச்சுவார்த்தைகள் நிகழ்வதைப் புலிகள் வற்புறுத்தினர். அதுவே நடைமுறையுமானது.

ஏற்கனவே, பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் நோர்வேயின் அனுசரணையுடன் சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை தொடக்கப்பட்டது. அவ்வேளை, அரசாங்கத் தரப்பிற்கு நிமல் சிரிபால டி சில்வாவும் புலிகள் தரப்பிற்கு அன்டன் பாலசிங்கமும் தலைமைதாங்கினர். இருதடவைகள்நடந்தபேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்பு "கொடாக் கண்டன்" நிலையிலும் புலிகள் தரப்பு "விடாக் கண்டன்" நிலையிலும் இருந்தன. ரணில் விக்ரமசிங்க பிரதமராகி போர்நிறுத்த உடன்பாடு எற்பட்ட பின் தாய்லாந்தில் 2002 செப்ற்றெம்பரிலும் நவெம்பரிலும் நடந்த பேச்சுவார்த்தைகளும் போதிய இணக்கப்பாட்டுடன் இடம்பெறவில்லை. எனினும், அமெரிக்கப் பின்புலத்தில் நோர்வே இயங்கியதால் ரணில் நெகிழ்வுப் போக்கிற்கான சில சைகைகளைக் காட்டினார். புலிகளும் தமது அமெரிக்க, மேற்குலகச் சார்பால் சிறு விட்டுக்கொடுப்புடன் நடந்தனர்.

அதன் அடிப்படையில், 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இருதரப்பினர்க்கும் இணக்கமாக ஒஸ்லோ பிரகடனம் வரையப்பட்டது. ரணிலின் அரசாங்கம் அதனை விவாதித்து அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு நோக்கிச் செல்லத் தயாரெனக் கூறியது. புலிகள் இயக்கமும் ஒஸ்லோப் பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதை ஆதரித்தது. அதையொட்டி, 2002 டிசம்பர் 2 முதல் 5 வரை நடந்த பேச்சுவார்த்தைகளைப் பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கையை நோர்வே அரசாங்கம் டிசம்பர் 5இல் வெளியிட்டது. அதில் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு-கிழக்கில் ஒரு சமஷ்டி ஆட்சியை உருவாக்கித் தேசியஇனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல்வதற்கான வழிமுறைகளை விரிவாக வகுத்துக் கொள்வது எனக் கூறப்பட்டது. இச் சமஷ்டி முன்மொழிவு தேசிய இனப் பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வாய் அமையும் எனப் பலரும் நம்பினர்.

ஒஸ்லோப் பிரகடன அடிப்படையில் தயாரித்ததாக ஒரு முன்மொழிவை அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்குச் சமர்ப்பித்தது. அதைப் புலிகள் இயக்கம் நிராகரித்தது. அதனால், சோல்ஹைமின் முயற்சியால் யூ.என்.பி. அரசாங்கம், இரண்டாந் தடவையாக, முன்னையதின் வித்தியாசமான தீர்வு முன்மொழிவெனக் கூறி ஒரு முன்மொழிவைப் புலிகளுக்கு அனுப்பியது. அதனைப் பரிசீலித்த புலிகள் இயக்கம் அது ஒஸ்லோப் பிரகடனத்தின் அடிப்படைகளைப் எவ்வகையிலும் உருவமைக்கவில்லை என நிராகரித்தது. இக் காலப்பகுதி, புலிகள் இயக்கம் தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதிகள் தாமே எனப் பறைச்சாற்றிய காலமாகும். எனின், புலிகள் இயக்கம் ஏன் தனது சொந்த முன்மொழிவைப் பேச்சுவார்த்தையில் முன்வைக்கக் கூடாது என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், புலிகளின் பின்னால் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்த, சில குறிப்பான தமிழ் "உயர்நிலை ஆய்வறிவாளர்கள்" என்போரின் வழிகாட்டலுடன் புலிகள் இயக்கம் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைவு" எனும் முன்மொழிவைச் சமர்ப்பித்தது. அதில் 23 கூறுகளும் அவற்றின் துணைக்கூறுகளும் இருந்தன. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையென்பது இந்தியாவின் மாநிலங்களின் மேலானதும் அமெரிக்க மாநில சமஷ்டி அதிகாரங்கட்குத் தாழ்வானதுமான சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டது. அதை உள்ளக சுயநிர்ணய உரிமை எனக்கூறிப் புலிகள் முன்வைத்தனர். ஏற்கனவே 2001ஆம் ஆண்டின் மாவீரர் தின உரையில் பிரபாகரன் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றிக் குறிப்பிட்டிருந்தார். உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது, ஐக்கிய நாடுகள் அமைப்பு 1993 அளவில் புதிதாகப் புகுத்திய, பிரிந்து செல்லும் உரிமையை மறுக்கும் ஒரு கோட்பாடாகும். அதாவது, மாக்சிச உலக நோக்கில் தோழர் லெனின் முன்வைத்து ஸ்டாலினும் பின்னைய மாக்சிசத் தலைவர்களும் ஏற்றுச் செயற்படுத்திய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் மறுப்பாகும். இது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சனின் உள்ளக சுயநிர்ண யக் கோட்பாட்டினும் பலவீனமானது. அதையே புலிகள் இயக்கம் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின்

அடிப்படையாக்கினர்.

புலிகள் இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஐந்து வருடங்கட்கு நீடிக்கக்கூடியதாகவும் அக் காலத்துள் வடக்கு-கிழக்கில் ஒழுங்குமுறையான நிர்வாக உட்கட்டமைப்பு, சட்டமும் ஒழுங்கும், இயல்பு வாழ்க்கை, போராற் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணமும் புனர்வாழ்வும் எனபவற்றைக் கொண்டுவருமெனவும் கூறப்பட்டது. தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கண்டு அது நடைமுறைக்கு வரும்வரை, இவ் இடைக்காலச் சபை செயற்படும் எனவும் கூறப்பட்டது. இடைக்கால சபை நிர்வாகம் கிழக்கின் மூன்று மாவட்டங்களான அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியவற்றையும் வடக்கின் ஐந்து மாவட்டங்களான வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றையும் உள்ளடக்கிய எட்டு மாவட்டங்களையுங் கொண்டிருக்கும் என இடைக்கால சபைக்கான வரைபு கூறியது. முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது. முதலாவது சபையிற், புலிகளின் பிரதிநிதிகளும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் உள்ளடங்கும் அதேவேளை, உறுப்பினர்களில் அறுதிப் பெரும்பான்மை புலிகளின் பிரதிநிதிகள்ாக இருப்பதையும் அவ் வரைபு உறுதிசெய்தது.

புலிகள் இயக்கத்தின் இத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவு வரைபை யூ.என்.பி. அரசாங்கமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஏற்கத் துணியவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது பொதுசன ஐக்கிய முன்னணியும் அதை நிராகரித்தன. தெற்கின் கடும் பேரினவாதிகள் அதைத் தமிழீழத்திற்கான புலிகளின் வஞ்சகத் திட்டம் என்றும் பிரிவினைக்கான முதற்படி என்றும் தீவிரப் பேரினவாத பிரசாரத்தில் இறங்கின. ஒரு உடன்பாட்டிற்காக எந்தவொரு நகல் வரைபையும் முன்வைக்கும் போது பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் தீவிர இன வெறியர்களும் உச்ச ஆட்டம் போடும் வழமையான நிகழ்வு இங்கும் இடம்பெற்றது. எனவே, தனித் தமிழீழம்

என்பதற்கு மாற்றாகப் புலிகள் முதன்முதலாக முன்வைத்த முன்மொழிவான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஈற்றிற் பேசாப்பொருளானது.

அதேவேளை, இலங்கைக்கு உதவிவழங்கும் நடவடிக்கைக்கான அமெரிக்கா, மேற்குலகு, யப்பான் ஆகியவற்றின் முன்முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. நோர்வே அனுசரணையுடன் அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் பேச்சுவார்த்தைகள் தொடர்கையில் மேற்படி உதவி வழங்கும் நோக்கிலான ஒன்றுகூடல்களும் இடம்பெற்றன. அதன் முதற் கூட்டம் 2002இல் நவம்பர் 25இல் நோர்வேயில் நடந்தது. அதிற் புலிகள் இயக்கமும் இலங்கை அரசாங்கமும் கலந்துகொண்டன. அடுத்து நடந்த உதவி வழங்குதற்கான வாஷிங்டன் கருத்தரங்கிற்குப் புலிகள் இயக்கம் அழைக்கப்படவில்லை. அதற்குக் கூறிய காரணம், புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்பதாகும். புலிகள் இயக்கத்திற்கு ஒரு அடியாகவும் அவமதிப்பாகவுமே அமெரிக்கா இதைச் செய்தது. அதனாற் புலிகள் சினந்தனர். அதற்குப் பதிலடி கொடுப்பது போல, 2003 யூன் 9-10இல் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கான புனரமைப்பு அபிவிருத்தி மாநாட்டிற்கு அழைப்புக் கிடைத்தபோதும், புலிகள் இயக்கம் அதிற் பங்குபற்ற மறுத்தது. இணைத்தலைமை நாடுகள் எனப்பட்ட ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் என்பன தலைமைதாங்கி நடத்திய அம் மாநாட்டில் ஜப்பானியப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும் திறப்புரையாற்றினர். இலங்கைப் பிரச்சினைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி இறுதியமர்வில் உரையாற்றினார். அம் மாநாட்டில் இந்தியாவும் சீனாவும் உட்படப் பல நாடுகள் கலந்துகொண்டன.

இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை பற்றியும், போர்நிறுத்தம், புனரமைப்பு, அபிவிருத்தி என்பன உட்பட, மோதல் தவிர்ப்பின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தல் போன்றன பற்றியும் விரிவான ஒரு பிரகடனம் அம் மாநாட்டில் வரையப்பட்டது. அதில், வடக்கு-கிழக்கை முக்கியமுடைய பிரதேசமாக இனங்கண்டு

புனரமைப்புத் திட்டங்களை உள்ளடக்கிய பன்முகப்பட்ட அபிவிருத்திக்கென 45 ஆயிரம் கோடி (450 பில்லியன்) அமெரிக்க டொலர் உதவி வழங்குவதாக மாநாடும் பிரகடனமும் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாடு, பிரகடனம், பெருந்தொகை உதவி என்பவற்றில் அமெரிக்க-மேற்குலக சக்திகளின் உள்நோக்கங்கள் நிறைந்திருந்தன. இலங்கையில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் செல்வாக்கின் நீடிப்பிற்கு எதிர் நிலைப்பாட்டை வலுப்படுத்துவதில் மேற்படி இணைத்தலைமை நாடுகள் முன்னின்றன. குறிப்பாக, இலங்கையின் இனப் பிரச்சினை அரங்கிலிருந்து இந்தியாவை ஓரங்கட்டும் உள்ளார்ந்த முயற்சிகள் இடம்பெற்றன. அதற்கு வசதியாக, ரணில் தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கமும் புலிகள் இயக்கமும்- தம்மிடையே முரண்பாடுகள் இருப்பினும் -அமெரிக்காவுடனும் மேற்குலகுடனும் ஒத்துப் போயின. பேரினவாத ஒடுக்குமுறையாளர்களான பௌத்த சிங்கள ஆளும் வர்க்கச் சக்திகளைக் கட்டிற்குட் கொண்டுவர அமெரிக்க-மேற்குலக சக்திகளின் எந்த முயற்சியாலும் முடியவில்லை. அவ்வாறே, விடுதலைப் புலிகளையும் ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு அப்பால் நகர்த்த இயலவில்லை. 45 கோடி அமெரிக்க டொலர் பணப்பொதியைக் காட்டியபோதும், இரு தரப்பினரும் அதற்கு மருளவோ அதனைப் பற்றவோ முற்படாது தத்தம் நிலைப்பாட்டில் உறுதியாயிருந்தனர்.

அதேவேளை, பேச்சுவார்த்தைகள் இழுப்பட்டுச் செல்கையில், பேசியவைகூட உருப்படியாக முன்சென்றதாகத் தெரியவில்லை. போர்நிறுத்த உடன்பாட்டில் இணங்கியபடி நியமித்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் இரு தரப்புகளதும் போர் நிறுத்த மீறல்களைப் பதிவதைத் தவிர வேறெதையும் செய்யமுடியவில்லை. அரசாங்கமும் புலிகள் இயக்கமும் பரஸ்பர போர் நிறுத்த மீறற் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தின. புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டின்படி அரசியல் வேலைகளைச் செய்த அதேவேளை, அதனூடாகத் தமது வழமையான

புலனாய்வு வேலைகளையும் முன்னெடுத்தனர். இராணுவம் தனது அவதானிப்பிலும் தகவற் சேகரிப்பிலும் ஈடுப்பட்டது. அதாவது "உடன்பாடு தமது கைகளைக் கட்டியுள்ளதே தவிரக் கண்களையல்ல" என்று இராணுவத்தினர் கூறியதன்மூலம் யாவற்றையும் அவதானித்துப் பதிந்து வருகிறோம் என மறைமுகமாகச்சுட்டினர். போர்நிறுத்த உடன்பாடு முறிந்து போர் தொடங்கியதும் இதன் பயனை ஆங்காங்கே காணமுடிந்தது. இராணுவம் சேகரித்த தகவல்களின் அடிப்படையிற் பலர் கொல்லப்பட்டனர்ளூ பலர் காணாமற் போயினர்.

2004 டிசம்பர் 26இல் இலங்கையின் கிழக்கு, தெற்கு, வடக்குக் கரையோரங்களையும் மேற்கின் குறிப்பிட்ட கரையோரப் பகுதிகளையும் தாக்கிய சுனாமி எனும் ஆழிப் பேரலை பேரழிவொன்றை ஏற்படுத்தியது. அதனால் மூவினங்களையும் சேர்ந்த கரையோர மக்கள் பேரிழப்புக்களைச் சந்தித்தனர். குறிப்பாக, கிழக்கிலும் வடக்கிலும் பல லட்ச மக்கள் ஒரு சில நிமிடங்களில் அல்லது அரைமணி நேரத்திற்குள் உயிர் உடைமைகளை இழந்து நிர்க்கதியாயினர். அழிவை ஏற்படுத்திய சுனாமிக்குத் தமிழ் சிங்களம் முஸ்லிம் எனும் இன-மொழி-மத-பிரதேச வேறுபாடு எதுவும் இருக்கவில்லை என்பது கவனிக்க வேண்டியதாகும். அப் பேரழிவில் ஏறத்தாழ 35,000 பேர் அடையாள வேறுபாடின்றி இறந்தனர்.

சுனாமிப் பேரழிவுக்கு முகங்கொடுத்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் அழிவுகளிலிருந்து மீள மறுசீரமைப்பும் புனர்வாழ்வும் தேவைபட்டன. அதற்கான உள்நாட்டு வெளிநாட்டு உதவிகளைப் பெறவும் பெற்றவற்றைப் பயன்படுத்தவும் ஒரு முறையான கட்டமைப்பு அவசர அவசியமாகத் தேவைப்பட்டது. அதனை நோக்கமாக கொண்டே சுனாமிக்கு பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பை (P-TOMS) உருவாக்கும் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிற் தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதேசங்கள் உள்ளடங்கி இருந்ததால், அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டிய சூழலிலேயே P-TOMS கட்டமைப்பிற்

கான புரிந்துணர்வு உடன்பாடு தயாரானது. அதில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு கரையோர மாவட்டங்கள் அடங்கின. உடன்பாட்டிற்கு அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கின. ஆனால், வழமைபோற், தெற்கின் பேரினவாதிகள் போர்க்கொடி தூக்கினர். உடன்பாட்டை நிறைவேற்றும் தலைமைப் பணிமனையின் அமைவிடம் பற்றிச் சர்ச்சையும் இருந்தது. எவ்வாறாயினும் ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உருமயவும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்து அதைச் செயற்படாமலாக்கின.

இவ்வாறு 2002 பெப்ரவரியில் உருவான போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்பாடு தொடக்கம் சுனாமிக் கட்டமைப்பு உடன்பாடு வரை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், இணக்க முயற்சிகள், தீர்வு எத்தனிப்புகள் ஆகியவற்றுள் எதுவுமே உருப்படியாக முன்செல்லவில்லை. இந்நிலையில், மேற்படி முயற்சிகளின் தோல்வியும் இரு தரப்பினரிடையும் ஏற்பட்ட கசப்புணர்வும் குரோதமும் பகைமையை நோக்கி வளர்ந்தன. அதேவேளை, யூ.என்.பி. அரசாங்கத்தின் இரண்டுவருட ஆட்சியின் முடிவும் தேர்தல் ஒன்றினை நோக்கிய அரசியல் காய்நகர்த்தல்களும் போர்நிறுத்த முறிவை நோக்கி இரு தரப்பினரையும் இழுத்துச் சென்றன. விரைவாகவே மீண்டும் போர்மூளும் வாய்ப்பு அதிகரித்தது. சகல தரப்புகளிலும் மக்கள்-குறிப்பாக வடக்கு-கிழக்கு மக்கள் -தாம் அனுபவித்துவந்த இடைக்கால சமாதானச் சூழல் நலிவதையிட்டுக் கவலைகளை வெளியிடலாயினர். அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டியவாறு அடுத்த கட்டப் போருக்குத் தயாராகின. இது பற்றி அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 20

# இன்னொரு ஆட்சி மாற்றம்

அதுவரை தனது சார்பில் எத் தீர்வு யோசனையையும் முன்வைக்காத விடுதலைப் புலிகள் இயக்கம், 2003 நடுப்பகுதியில் முன்வைத்த வடக்கு-கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைவு பேரினவாதத் தரப்பினர் அனைவரையும் யோசிக்கவைத்தது. கடும் போக்காளர்களான ஜாதிக ஹெல உறுமயவினரும், ஜே.வி.பியினரும் எதிர்த்துக் குதிக்கலாயினர். ரணில் தலைமையிலான அரசாங்கம் மெல்லவும்முடியாது விழுங்கவும்முடியாது தவித்தது. யூ.என்.பி.யும் அதை நிராகரிப்பதாகக் கூறியது.

இருந்தும், அச்சூழலிற் பேரினவாதிகளும் ஜனாதிபதி சந்திரிகாவும் ரணில் மீதே தாக்குதல் தொடுத்தனர். ஜே.வி.பி. உச்சநிலைப் பேரினவாதப் பிரசாரத்தை முன்னெடுத்து, அதற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதான தோற்றத்தைக் கட்டியெழுப்பியது. ஜாதிக ஹெல உறுமயவும் தனது பங்கை ஆற்றியது. இவ்

வாய்ப்பைப் பயன்படுத்தக் காத்திருந்தது போல இந்தியா நடந்தது. நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை உள்வெறுப்புடன் அவதானித்த இந்தியாவைக் குளிர்மைப்படுத்த நோர்வேயின் பிரதிநிதியும் பேச்சுவார்த்தைத் தரகருமான சொல்ஹைம் தான் கொழும்பு வந்த ஒவ்வொரு முறையும் டில்லிக்குப் போவதை ஒழுங்காக மேற்கொண்டுவந்ததுடன் பேச்சுவார்த்தையின் அவ்வப்போதைய பெறுபேறுகள்பற்றி இந்தியக் கொள்கைவகுப்பாளர்கட்கு விளக்கியும்வந்தார். எனினும், நோர்வேயின் அனுசரணையுடன் முன்நகர்ந்த பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதிலே இந்தியா குறியாயிருந்தது. கிழக்கிலங்கையில் அக்காலத்தில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் முறுகல்கட்கும் மோதல்கட்கும் பின்னால் இந்தியக் கரங்கள் இயங்கியதாகச் சந்தேகிக்கப்பட்டது.

2003ன் பிற்பகுதியில் பேச்சுவார்த்தைகள் ஏறத்தாழ முற்றாகச் சீர்குலைந்த நிலையில், இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் கொள்கையளவிலான ஒரு தற்காலிக உடன்படிக்கைக்கு வந்தது. இலங்கையின் பாதுகாப்பிற்கான சகல உதவிகளையும் வழங்கவும் விடுதலைப் புலிகளின் கடற் போக்குவரத்துக்களைக் கண்காணிக்கவும் வடக்கின் விமானத்தளத்தைப் புனரமைக்கவும் உடன்பாடு ஏற்பட்டது. இது விடுதலைப் புலிகளுக்குச் சினமூட்டியதுடன், போருக்கான மறைமுகத் தூண்டுதலாகவும் அமைந்தது.

இச்சூழலில் ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ரணில் தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்து, 2004ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்கு வழிவகுத்தார். இத்தேர்தலில் வடக்கிலும் தெற்கிலும் புதிய கூட்டணிகள் உருவாகின. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் ஜே.வி.பியும் பொதுசன ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக உருவெடுத்தன. ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியுடனான கூட்டை விரும்பவில்லை. தன் கணவர் விஜய குமாரணதுங்கவைச் சுட்டுக்கொன்ற ஜே.வி.பி.யுடன் கைகோப்பதிற் தயக்கம் காட்டினார். அதேவேளை, பொதுசன முன்னணி தனித்து நின்று

பதவிக்கு வரமுடியாது என்பதும் உணரப்பட்ட சூழலில், மகிந்த ராஜபக்ச உட்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஒரு சாரார் வற்புறுத்திய நிலையில் ஜே.வி.பியுடனான கூட்டு முன்னணி சாத்தியமாகியது. ஸ்ரீல.சு.க. தலைமையில், எந்தப் பிசாசுடனும் இணங்கிச் செல்லக்கூடிய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் பதவிக்காகப் பின்னாற் செல்லவேண்டியாயிற்று. புதிய கூட்டணி வெற்றிலைச் சின்னத்துடன் தேர்தலில் இறங்கியது.

அதேவேளை, வடக்கு-கிழக்கிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயரில் புதியதொரு கூட்டணி வடிவு பெற்றது. ஏற்கனவே, 2001ஆம் ஆண்டுத் தேர்தலை முன்னிட்டுத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிக்கர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் கூட்டணி என்பன இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகியிருந்தது. அது தமிழ் மக்களின் விருப்பம் என்று கூறப்பட்டாலும், அது இந்தியாவின் தூண்டுதலிலேயே உருவானது. 2000ஆம், 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் புலிகள் எந்த அக்கறையும் காட்டாது பார்வையாளர்களாகவே இருந்தனர். அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. எனினும் வன்னிப் பிரதேசத் தேர்தல் நடவடிக்கைகள் வவுனியாவிலும் மன்னாரிலும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

இது 2002ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தல் அரசாங்கம்-புலிகள் புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாட்டிற்குப் பின் இடம்பெறும் பொதுத் தேர்தல் என்பதால், அதன்மூலம் தன்னைப் பாராளுமன்ற அரங்கில் வெளிப்படுத்தும் நோக்கிற், புலிகள் இயக்கம் அதிற் பங்குகொள்ள முடிவெடுத்தது. தனித்து நின்று வடக்கு-கிழக்கில் முழுமையான வெற்றிபெற இயலாது என்ற உண்மையை அறிந்த புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்த வாக்கு வங்கியையும் கவனத்திற்கொண்டனர். அதேவேளை, புலிகள் இயக்கத்தை முற்றாக நிராகரித்துத் தேர்தலில் வெல்லமுடியாது என்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் நன்கு உணர்ந்திருந்தனர். எனவே தமது பாராளுமன்ற ஆதிக்க அரசியலைத் தொடருமாறு,

தமது கடந்த காலம் பற்றி எந்த விமர்சனமோ சரிபிழைகள் பற்றிய கலந்துபேசுதலோ இன்றிப் புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை ஏற்று 2004ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து போட்டியிடத் தயாரகினர். அதற்காகக் கிளிநொச்சி சென்று புலிகளுடன் பேசினர். முறையே, சம்பந்தன், தமிழ்செல்வன் ஆகியோரின் தலைமைகளிலான குழுக்களிடை பேச்சுவார்த்தைகள் நடந்தன.

தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகியன கூட்டமைப்பில் இருப்பதற்குப் புலிகள் இணங்கினர். ஒரு கட்டத்திற் புலிகளே தமது பிரதான எதிரி எனக் கூறிய மேற்படி மூன்று கட்சிகளும் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றனர். முன்னர், இந்தியாவின் கையாட்கள் எனக் கூறி மேற்படி மூன்று இயக்கங்களையும் நிராகரித்த புலிகள் இயக்கம் அவற்றின் தலைவர்கள் முதல் போராளிகள் வரை பல நூற்றுக்கணக்கானோரைப் கொன்றிருந்தது. அதேபோன்று, பின்னைய இரு இயக்கங்களும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தோரையும் அதன் ஆதரவாளர்களையும் நூற்றுக்கணக்கிற் கொன்றிருந்தன. குறிப்பாகத், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான அ. அமிர்தலிங்கமும் பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனும் புலிகளாற் கொல்லப்பட்டோராவர். புலிகளால் விரட்டப்பட்ட தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் இலங்கை அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் நிழலிலும் ஆதரவிலும் இருந்தமை வரலாறாயினும், அதையெல்லாம் மறந்து 2004இல் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" என்ற பெயரிற் தேர்தல் கூட்டணி அமைக்கப் புலிகளும் தமிழரசுக் கட்சியும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும் ரெலோவும் இணங்கின. புலிகளின் பரிந்துரையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் அக் கூட்டணியில் இணைக்கப்பட்டது. ஆனால், வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் கூட்டணியும் த. சித்தார்த்தன் தலைமையிலான புளொட் இயக்கமும் சேர்க்கப்படவில்லை.

இவ்வாறு மேற்கூறிய தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் புலிகள் இயக்கமும் 2004ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலைத் தமிழ்த்

தேசியக் கூட்டமைப்பின் பெயரிலும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலும் எதிர்கொண்டன. அத் தேர்தலில் புலிகள் இயக்கம் மும்முரமாக ஈடுபட்டது. ஏலவே புரிந்துணர்வு, போர்நிறுத்த உடன்பாடுகட்கீழ்ப் புலிகள் இயக்கம் தனது அரசியல் வேலைகளைச் செய்ய இணங்கியதால் அதற்கான பணிமனைகள் வடக்கு-கிழக்கில் இயங்கின. முற்குறித்த கட்சிகள் முன்மொழிந்த உறுப்பினர்களும் புலிகள் இயக்கம் முன்மொழிந்த உறுப்பினர்களும் இப் பொதுத்தேர்தலிற் பங்குபற்றினர். புலிகள் இயக்கம், தனது நிலைப்பாட்டையும் தானே ஏகப் பிரதிநிதி என்பதையும் தெற்கிற்கும் உலகிற்கும் காட்ட இத் தேர்தலில் முழுமையாக ஈடுபட்டது. எனவே, தேர்தலில்நிற்க முன்வந்தோரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவிர்ந்த கட்சியினரைத் தமது வழமையான ஜனநாயகவிரோத வழிகளில் அவர்கள் தனிப்பட மிரட்டினர். எனவே, அவர்கள் நேரடியாகவும் பகிரங்கமாகவும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுப்பட முடியாத நிலை ஏற்பட்டது.

பு.ஜ.க. *2000*ஆம், *2001*ஆம் ஆண்டுகளின் பொதுத் தேர்தல்களைச் சவாலாக ஏற்றுப் பங்குபற்றியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தேர்தல் கூட்டத்தையும் நடத்தத் துணிவற்று, மக்களுக்கு எதைக் கூறுவது என்று தெரியாமற் தடுமாறியது. மாறாகப், பு.ஜ.க. சகல தொகுதிகளிலும் பெரிய, நடுத்தர, சிறிய அளவுகளிற் கூட்டங்களை நடத்தி மக்களுக்குத் தன் கொள்கையைத் தெரிவித்தது. நாட்டின் அரசியல் நிலைமை, தேசிய இனப் பிரச்சினை, தமிழ் தலைமைகளின் ஆதிக்க அரசியற் போக்கு, பேரினவாத ஒடுக்குமுறை போன்றவற்றை விளக்கிய பு.ஜ.க., அவ்விரு தேர்தல்களையும் தகுந்த அரசியல் மேடையாக்கியது. அதை நேர்மையான ஒரு இடதுசாரிக் கட்சிக்குரிய கடமையாகத் துணிவுடன் முன்னெடுத்த அக் கட்சி. அடுத்துவந்த 2004 தேர்தலில் பங்குகொள்வதில்லை என முடிவெடுத்தது. அதைப் புலிகள் இயக்கம் பொறுக்கவில்லை. கட்சித் தலைமையோடு பேசித் தேர்தலில் தமக்கு ஆதரவான ஊடக அறிக்கையை வெளியிட வற்புறுத்தியது. எச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறு செய்வதில்லை எனக் கட்சித் தலைமை உறுதியான முடிவெடுத்தமையாற், கட்சி அதை

ஏற்கவில்லை. புலிகள் பலவாறு முயன்றும் கட்சியின் முடிவை மாற்ற இயலவில்லை.

இப் பொதுத் தேர்தலில் புலிகளின் பிரதிநிதிகள் உட்படக் கூட்டமைப்பினர் 22 பேர் வடக்கு-கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாயினர். இது, ஒரு சின்னத்தின் கீழான ஆகக்கூடிய தமிழர் பிரதிநிதித்துவமாகும். இது பேரினவாதிகட்கு மிகுந்த சினமூட்டியது. அத் தேர்தலில், வழமை போன்று, பெயரளவிலேயே ஜனநாயகம் இருந்தது. புலிகள் இயக்கத்தினர் கள்ளவாக்கு இடுவது உட்படப் பல்வேறு முறைகேடுகளிலும் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுகள் இருந்தன. எவ்வாறாயினும், தெரிவானோர் பாராளுமன்றம் சென்றனர். சந்தர்ப்பவாத அரசியலில் வல்லவரான இரா. சம்பந்தன் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரானார். புலிகள் பாராளுமன்ற உறுப்பினர்களை அடிக்கடி கிளிநொச்சிக்கு அழைத்து வழிகாட்டல்களைக் வழங்கினர். இருந்தும், தமிழர் பிரச்சினை பற்றி இலங்கைக்குள்ளோ வெளியிலோ பேசுவதற்குக் கூட்டமைப்பினரைப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அவ்வாறான தேவை வந்தபோது தங்களுக்குச் சார்பான பாராளுமன்ற உறுப்பினர்களையே பேச அனுப்பினர்.

இத் தேர்தலால் வடக்கு-கிழக்கில் மேற்கூறிய நிலை உருவான அதேவேளை, தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வென்றது. அதில் ஜே.வி.பி.யின் ஆசனங்களின் பங்கு அதன் ஆதரவுத் தளத்தின் அளவை மீறியது. 2004ன் தேர்தலில் ஜே.வி. பி.க்கு மொத்தம் 38 ஆசனங்கள் கிடைத்தன. அதன்மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அது மூன்று முழு அமைச்சர் பதவிகளைப் பெற்றது. அத் தேர்தலையடுத்த புதிய அரசாங்கத்தில் மகிந்த ராஜபக்ச பிரதமரானார். சந்திரிகாவின் ஜனாதிபதிப் பதவிக் காலம் 2005இல் முடியவிருந்தது. இக் காலப்பகுதியிற், புலிகள் சந்திரிகாவின் நம்பிக்கைக்குரியவரும் புலிகளை வெளிநாடுகளில் செல்வாக்கிழக்க வைத்தவருமான வெளி அலுவல் அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமரை அவரது இல்லத்தின் நீச்சற் குளத்தருகே தொலைவிலிருந்து சுட்டுக் கொன்றனர்.

# 21

# போரை நாடிய நகர்வுகள்

2005ஆம் ஆண்டின் நவம்பரில் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியானதுடன் போர்மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேரினவாத இராணுவத் திட்டம் வேகமடைந்தது. இதை நோக்குமுன், சமாதான உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் நடைமுறையில் இருந்தபோது இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகளை மீள்நோக்கவேண்டும். ரணில் தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு முன்வைத்த நகல் தீர்வு யோசனைகள் இரண்டையும் புலிகள் நிராகரித்தனர். இந் நிலையிற் சமாதானப் பேச்சுகளின் பின்னால் இருந்த இணைத் தலைமை நாடுகளும் அனுசரணையாகச் செயற்பட்ட நோர்வேயும் புலிகள் தமது தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் என வற்புறுத்தினர்.

எனவே 2003 நவம்பரில், புலிகள் இயக்கம் வடக்கு-கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை முன்வைத்தனர். அன்றைய பிரதமராக இருந்த ரணிலும் அவரது தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கமும் அதை ஏற்கவோ விவாதிக்கவோ முன்வரவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது தலைமையிலான ஸ்ரீல.சு.க.வும் அதை எதிர்த்தனர். ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் தமது கடும் எதிர்ப்பையும் பேரினவாதப் பிரசாரத்தையும் மேற்கொண்டன. எனினும், சிங்கள ஆய்வறிவாளர்கள் மத்தியில் ஓரளவு நெகிழ்வான கருத்துகள் நிலவின. புலிகள் தமது தனித் தமிழீழ நிலைப்பாட்டிலிருந்து ஒருவகைச் சமஷ்டி முறைக்குக் கீழிறங்கியதால், அவர்கள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி இருதரப்பினரும் பிறரும் கலந்துபேசி விட்டுக்கொடுப்புக்கு வரமுடியும் எனச் சிலர் நம்பிக்கை தெரிவித்தனர். அத்தகைய கருத்துகள் பேரினவாதப் பரப்புரைகள் மத்தியில் மேற்கிளம்ப முடியவில்லை.

இடைக்காலத்தன்னாட்சிஅதிகாரசபைத்திட்டஆலோசனையில் புலிகள் முன்வைத்த கருத்துகளிற் சில கவனத்திற்குரியன.

1. மேற்படிச் சபை வடக்கு-கிழக்கை உள்ளடக்கியதாக அமையும்போது தமிழ்ப் பிரதிநிதித்துவத்துடன் முஸ்லிம் பிரதிநிதித்துவமும் சிங்களப் பிரதிநிதித்துவமும் உள்ளடங்குதல்

2. குறிப்பாக, மாவட்டப் பிரதிநிதித்துவத்தில், சகல இனங்களதும் பங்குபற்றல் அவற்றின் விகிதாசாரப்படி அமைதல்

3. சுயாதீனமான மனித உரிமை ஆணையத்தை உருவாக்கல்

4. மதச் சார்பின்மை

5. இடைக்கால சபையின் ஐந்து ஆண்டு நீடிப்பும் அதன் பின் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பிரசன்னத்துடன் சுயாதீனத் தேர்தலும்

6. அனைத்தினும் முக்கியமாக, வடக்கு-கிழக்கின் அரசாங்கப் பொதுக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை மேற்படி இடைக்கால அதிகாரசபை கொண்டிருத்தல். இது, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சியிலும் வரலாற்றிலும் முக்கியமானது.

மேற்படி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் பேரினவாதிகளும் அவர்களது அரசாங்கமும் எதிர்க் கட்சியில் இருந்தவர்களும் ஏற்கவில்லை. அத்துடன், இரண்டு தேசங்கள் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே புலிகள் இயக்கம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையை முன்வைத்தது என்ற சந்தேகம் பரவலாகக் காணப்பட்டது. எனவே அவ் ஆலோசனை, விவாதியாமலே நிராகரிக்கப்பட்டது. இருந்தும், சமாதான உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் பெயரளவிற் தொடர்ந்தன.

இந் நிலையில், 2004 டிசம்பர் 26ஆம் திகதி காலையில் சுனாமி இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கின் சில பகுதிகளிலும் கரையோரங்களைக் கடுமையாகத் தாக்கி அழிவுகளை ஏற்படுத்தியது. சுனாமியின் பயங்கரத்தையும் அது விளைத்த நாசகர அழிவையும் தாக்குண்ட கரையோர மக்கள் கடுந்துயராகவும் பேரழிவுகளாகவும் அனுபவித்தனர். அரைமணிநேரத்துட் பல்லாயிரக்கணக்கானோர் அப் பேரலையில் அடியுண்டு இழுத்துச் செல்லப்பட்டனர். மரித்தோர் பலரின் சடலங்கள் கிடைக்கவில்லை. கரையோரங்களில் வாழ்ந்த மீனவர்களதும் பிறரதும் தொழில் ஆதாரங்களும் வீடு வாசல்களும் அழிந்தன. விவரிக்க வார்த்தைகள் போதாத இழப்பின் சோகங்களுடன் மக்கள் நிர்க்கதியாகினர். வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்களும் பெரும் அழிவுகளைக் கண்டன. அவ்வாறே, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு மாவட்டங்களின் கரையோரங்களும் கடும் பாதிப்புற்றன.

வடக்கு-கிழக்கின் பெரும்பகுதி, குறிப்பாகப் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்கள், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. இப் பிரதேசங்களில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் சுனாமியாற் கொல்லப்பட்டனர். பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், வாழ்க்கைத் துணையை இழந்தோர் எனப் பலர் நிர்க்கதிக்கு ஆளாகினர். புலிகள் இயக்கமும் தன் கரையோரப் பிரதேசங்களில் பெரும் இழப்புகளைச் சந்தித்தது. கடற்புலிகளின் பிரதான தளமான முல்லைத்தீவின் சாலை முதல், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி கரையோரத் தளங்களும் பயிற்சி முகாங்களும் அழிவுகளைச் சந்தித்தன.

சுனாமியைத் தொடர்ந்து பெருந்தொகையான வெளிநாட்டு உதவி அரசாங்கத்திற்கும் அரசுசாரா நிறுவனங்கட்கும் தடையின்றிக் கிடைத்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கென வந்த பெருந்தொகைப் பணம் பெரும் அரசியற் தலைமைப் புள்ளிகளின் பைகளைச் சேர்ந்த கதைகள் பலவுண்டு. அதேபோன்று, புலிகள் இயக்கத்திற்கும் கணிசமான தொகைப் பணம் வந்தபோதும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் தனக்குக் கிடைத்த வெளிநாட்டு உதவியைக்கொண்டு நிவாரணம் வழங்க முன்வந்தது.

அதைவிடச், சூழலிற் கடும் பாதிப்பைப் பெற்ற வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் வழங்குவதை ஏற்கும் நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உள்ளாகினர். இதனை நோர்வேயும் இணைத்-தலைமை நாடுகளும் வலியுறுத்தின. எனவே அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இரு தரப்பினரிடையிலும் சமூகங்கட்கிடையிலும் ஒத்துழைப்பதற்கு வசதியளிப்பதற்கான தேவைகருதி வடக்கு-கிழக்கில் சுனாமி நிவாரணத்தை முறையாக வழங்குதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்து அதற்கான P-TOMS நிவாரண நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கின. அதாவது P-TOMS அமைத்தற்கான புரிந்துணர்வு உடன்பாடு (MOU) ஒன்றுக்கு அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கின.

அப் புரிந்துணர்வு உடன்பாடு, அமைப்பு என்ற முதலாம் பிரிவு

தொடக்கம் நிறைவேற்றுகை என்ற ஒன்பதாம் பிரிவு வரை பல்வேறு பயனுள்ள நடைமுறைச் சாத்தியமான பிரதான அம்சங்களையும் உப அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. அது நடைமுறைக்கு வந்திருந்தால் சுனாமியால் அழிவுக்கும் பாதிப்புக்கும் ஆளான வடக்கு-கிழக்கின் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் பயனும் நிவாரண ஆறுதலும் பெற்றிருப்பர். அத்துடன், இம் மாவட்டங்களின் தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்கள் மத்தியில் புதிய புரிந்துணர்வுக்கும் வாய்ப்புகள் அதிகரித்திருக்கும்.

ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்குக் கிடைக்கவிருந்த நிவாரணத்தை முடக்க ஜே.வி. பி. விரிவான எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டது. அத்துடன், பேரினவாதச் சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெற்று உயர்நீதிமன்றத்தில் P-TOMS ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கு ஒன்றைத் தொடுத்து அதில் வெற்றியும் பெற்றது. அவ்வாறு, வடக்கு-கிழக்கில் சுனாமியால் அவலங்கட்கும் இழப்புக்கட்கும் உள்ளான மக்களுக்கு ஜே.வி.பி. தனது பேரினவாத நிலைப்பாட்டினூடாகப் பெருந் துரோகமிழைத்தது. இது ஜே.வி.பி. சிவப்பு நிறம் தாங்கிய ஒரு பேரினவாதக் கட்சி என்ற மாக்சிச லெனினிசவாதிகளின் கணிப்பு நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை என மீண்டும் நிரூபித்தது.

சுனாமி அழிவை எதிர்கொண்ட வடக்கு-கிழக்கு மக்கள் ஏற்கனவே போர் அழிவுகளை அனுபவித்தோர் என்பது கவனத்திற்குரியது. இன்றுவரை சுனாமி கொண்டுவந்த அழிவுகளிலிருந்து மீளாத மக்களாக அவர்கள் உள்ளமையைப் பலர் மறந்துள்ளனர். 2009 ஆம் ஆண்டின் இறுதிப் போரின்போது முகங்கொடுத்த பேரழிவும் அவலங்களும் பாரிய இழப்புகளும் அகதி வாழ்வும் மட்டுமன்றி இன்றும் மீள் குடியமர்வில் அனுபவிக்கும் துன்பங்களும், மக்களின் மனங்கள் சுனாமி அழிவுகளை மறக்கச் செய்துள்ளன போலும். சுனாமியாலும் போராலும் பாதிக்கப்பட்டோரில் ஏகப்பெரும்பாலோர் சாதாரண உழைக்கும் மக்களாவர் என்பது இங்கே முக்கியமாக நோக்கவேண்டிய உண்மையாகும். அவர்கள் சிந்திய கண்ணீரும் இரத்தமும் இன்றும் காய்ந்து

இறுகிக்கிடக்கின்றன. புலிகள் இயக்கம் பிரிவினைக்காகவும் தமிழீழத்திற்காகவும் போராடினார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்களை அவ்வாறு போராட வைத்த, அல்லது நிர்ப்பந்தித்த இன ஒடுக்குமுறையின் வரலாற்று வளர்ச்சியை ஏற்க மறுத்ததால் அனைத்துத் தென்னிலங்கைப் பாராளுமன்ற அரசியற் கட்சிகளும் பெரும் வரலாற்றுத் தவறிழைத்தன. இது அறியாமையால் நிகழ்ந்த தவறல்ல. சிங்கள பௌத்த மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளின் ஆளும் வர்க்க அரசியலும் பேரினவாத நிலைப்பாடுகளுமே அதன் அடிப்படைக் காரணங்கள்.

பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட சிவப்பு என்றும் இடதுசாரித்துவம் எனவும் பேசி அரசியல் அரங்கிற்கு வந்த ஜே.வி.பி. இந்த அவலத்தைத் தனக்கேற்ற அரசியற் தளமாகப் பயன்படுத்தியமை விசனத்திற்குரியது. ஜே.வி.பி. இன்றுவரை தனது தவறான பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து மீளமுடியாதிருப்பதுடன், காலத்திற்குக்காலம் அதிலிருந்து பிரிந்தவர்களும் தேசிய இனப் பிரச்சினையில் தெளிவின்றியே இருந்து வருகிறமையும் கவனத்திற்குரியது.

ஜே.வி.பி. உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று P-TOMSஐச் செயற்படாது தடுத்ததுடன் நில்லாது, அந்த உற்சாகத்திற், பத்தொன்பது வருடங்களாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் ஒரே மாகாண அலகாக இருந்த வடக்கு-கிழக்கை உயர்நீதிமன்ற வழக்கின் மூலம் பிரித்த பேரினவாதப் பணியையும் செய்தது. அதற்கான முன்னாலோசனையையும் வழிகாட்டலையும் பேரினவாதச் சட்டவல்லுனர்கள் மட்டுமன்றி நீதித் துறையின் உச்சத்தில் இருந்தவர்களும் வழங்கினர். நீதித் துறை சுயாதீனமானதும் சுதந்திரமானதும் பக்கச்சார்பற்றதும் என்று கட்டமைத்த பரப்புரையின் பொய்மை இதிற் பகிரங்கமானது.

சந்திரிகாவை அடுத்து மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவானபின்பு போர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

# 22

# கிழக்கின் வீழ்ச்சி

*2004 டிசம்பர் இறுதி வாரத்தில் ஒரிரு மணி நேரத்துள் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவு ஏனைய கரைப் பிரதேசங்களை விடக் கிழக்கிலும் வடக்கிலும் பெரும் நாசங்களை விளைத்தது. அதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கமும் தப்பவில்லை. அவர்கட்கு உயிரழிவுகளும் இராணுவத் தளபாட இழப்புகளும் ஏற்பட்டன. இருப்பினும் அவர்கட்கு வெளியிலிருந்து கிடைத்த வளங்களும் நிதி உதவிகளும் அவர்களை நிலைநிறுத்தப்போதுமாயிருந்தன. ஆனால்சுனாமியைத் தொடர்ந்த அரசியல் இராணுவ நிலைமைகள் புலிகள் இயக்கத்திற்கு ஏறுமுகமாக இருக்கவில்லை. அவை புலிகள் இயக்கத்தின் இறுதிக்கட்டத்தை நோக்கிய நகர்வுகளாக முன்செல்லலாயின.*

2005 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அதிற் புலிகள் எடுத்த நிலைப்பாடு அரசியல் விவேகமற்றதெனவும் தூரநோக்கற்றதெனவும் நிரூபணமானது. தேர்தலை வடக்கு-கிழக்கில் நிராகரிப்பது என்றும் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் சடுதியாக முடிவு செய்ததன் மூலம் அவர்கள் ரணில் விக்ரமசிங்கவின் தோல்வியையும் மகிந்த ராஜபக்சவின் வெற்றியையும் உறுதிப்படுத்தினர். அதற்காக மகிந்த தரப்பிலிருந்து பெருந்தொகைப் பணத்தைப் புலிகள் பெற்றனர் என்ற தகவல் பலமாகப் பரவியது. மகிந்த வென்றால் அமெரிக்காவுடனும் மேற்குலகுடனும் முரண்படுவாரென்றும் அதன் மூலம் தாம் அமெரிக்க-மேற்குலக அரவணைப்பைப் பெற்றுத் தமது போராட்ட வேகத்தை முடுக்கலாம் எனவும் நம்பினர். ஆனால் அது முற்றாகப் பொய்த்தது. இது அமெரிக்காவையும் மேற்குலகையும் மகிந்த ராஜபக்வையும் புலிகள் விளங்காமையின் விளைவாகும்.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியானதும் தனது சகோதரர்கள், குடும்பத்தினர், இரத்த உறவினர்கள் அனைவரையும் தன்னோடு இணைத்து ஆட்சி அதிகாரத்தின் மையத்தில் இருத்தித் தன்னை அந்த அரவணைப்பின் நடுநாயகமாக்கினார். சகோதரர்களான பசில் ராஜபக்சவும் கோத்தாபய ராஜபக்சவும் அவருக்கு இரண்டு கரங்களாகச் செயற்படலாயினர். கோத்தாபய, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதேவேளை, சரத் பொன்சேகா இராணுவத் தளபதியானார். இவர்களது நியமனங்கள் போரின்மூலம் தேசிய இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் உள்ளார்ந்த திட்டத்தை உணர்த்தின. எனவே இராணுவ வியூகங்களை வகுப்பதிலும் இராணுவத்தினரின் தொகையைப் பெருக்குவதிலும் இராணுவத் தளபாடங்களின்- குறிப்பாகப், பல்குழல் ஏவுகணைச்சுடுகலங்கள் தொடக்கம் குண்டுவீச்சு விமானங்கள் வரை- கொள்வனவிலும் கவனங்குவிந்தது. போரில் வெற்றி பெறத் தேவையான பெரும் ஆயுதக் கொள்வனவில் அரசாங்கம் இறங்கியது. அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, பிரித்தானியா ஆகியன இலங்கைக்குப் ஆயுதங்களைப் பெருமளவில் விற்றன.

இவற்றிடையே இரு தரப்பினரும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டனர். 2005 டிசம்பர் 25ஆம் திகதி மட்டக்களப்பில் நத்தார் தின ஆராதனைக்குச் சென்று தேவாலயத்தில் வழிபடுகையில் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். பதினொரு மாதங்கள் கழித்துக் கொழும்பில் பட்டப்பகலில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறு, இலக்கு வைத்த கொலைகளும் ஆட்கடத்தல்களும் தொடர்ந்தன.

இதன் போக்கில் 2006ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திருகோணமலையில் இன வன்முறைகளும் அதனைத் தொடர்ந்து கொலைகளும் இடம்பெற்றன. 2006 ஜனவரி 2ஆம் நாள் திருகோணமலைக் கடற்கரையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான ஐந்து மாணவர்கள் கூடிக்கதைத்துநின்ற வேளை இனம் தெரியாதோராற் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். விசனத்திற்குரியது யாதெனில், 7 வருடங்களின் பின்பே அக் கொலைகளைச் செய்தோர் அரசாங்க அதிரடிப்படையினர் என அடையாளம் கண்டு கைது செய்தமையாகும். அவ் வருடம் ஓகஸ்ட்டில், அரசபடைகள் மூதூரைக் கைப்பற்றிய வேளை, மூதூரில், யுஊகு எனப்படும் பிரான்சு நாட்டுத் தொண்டு நிறுவனத்தின் உள்நாட்டு ஊழியர்கள் ஆண்களும் பெண்களுமாகப் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவ் விசாரணை இன்னமும் கிடப்பிலுள்ளது.

இச் சூழலில் அரசாங்கத்திற்கு இன்னமும் ஒரு பேச்சுவார்த்தை முகம் தேவைப்பட்டது. 2006 மார்ச்சில், மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பின் ஜெனிவாவில் அரசாங்க, புலிகள் இயக்கப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தை தொடங்கியது. வெறுமே காலத்தை இழுத்தடிக்கும் பேச்சுவார்த்தையாக அது அமைந்தது. அரசாங்கக் குழுவிற்கு அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவும் புலிகளின் குழுவிற்கு அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனும் தலைமைதாங்கினர். இந்தப் பேச்சுவார்த்தை எந்த முன்னேற்றத்தையும் கொண்டிருக்கவில்லை. இரு தரப்பிலும் போலி முகங்களைக் காட்டி ஒருவரை ஒருவர்

குற்றஞ்சாட்டினர். குறிப்பாகப், போர்நிறுத்தக் கண்காணிப்பும் போர்நிறுத்த உடன்பாட்டு மீறல்களும் பற்றிப் பேசப்பட்டது. விடுதலை புலிகளே மிக அதிகமான போர்-நிறுத்த மீறல்களைச் செய்தனர் எனப் பேச்சுவார்த்தையின் போது குற்றஞ்சாட்டிய அரசாங்கத் தரப்பு, சிறுவர்களை இராணுவப் பயிற்சிக்குச் சேர்ப்பது பற்றியும் முறையிட்டது. இவ்வாறு, ஆளுக்காள் குற்றஞ்சாட்டினரே தவிர அரசியல் தீர்வுக்கான விடயங்களை விவாதிக்கவில்லை. மொத்தத்தில், ஒருவரையொருவர் ஏமாற்றி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நடைமுறையே தெரிந்தது.

அதே வேளை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே மோதல் வலுத்துக்கொண்டுபோனது. 2006 ஏப்பிரல் 12ஆம் திகதி, திருகோணமலையின் பிரதான சந்தை வளாகத்தில் சக்தி மிக்க குண்டு ஒன்று வெடித்தது. ஒரு குழந்தையும் வளர்ந்தோர் நால்வரும் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஆயுதப்படையினரும் கூலிப்படையினரும் சேர்ந்து தமிழ்க் கடைகளைச் சூறையாடிக் கொலைகளையும் செய்தனர். அதிற் பத்தொன்பது பேர் வரை கொல்லப்பட்டனர். இது திட்டமிட்ட இனவெறித் தாக்குதலாகவே தெரிந்தது. இந் நிகழ்வுக்கு இரண்டு வாரங்கள் பின்னர், ஒரு பெண் தற்கொலைக் குண்டுதாரி 2006 ஏப்பிரல் 25ஆம் திகதி, நண்பகலில் கொழும்பில் இராணுவத் தலைமையகத்திற்கு முன்னால் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது தற்கொலைக்-குண்டுத் தாக்குதல் நடத்தினார். சரத் பொன்சேகா பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். ஆனாற் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தாக்குதலிலிருந்து உயிர்தப்பிக் கடுங்காயங்கட்குச் சிகிச்சைபெற்ற சரத் பொன்சேகா தனது இராணுவத் தளபதிப் பொறுப்பைத் தொடர்ந்தார். அதன் போது விடுதலை புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் பழிவாங்கும் வேகத்துடன் செயற்பட்டார். “அடிப்பட்ட புலி சும்மா இராது” என்பது போல, சரத் பொன்சேகா போர்முனையில் வேகமாக முன்னேறுவதற்கு இலங்கை இராணுவத்திற்கு வழிகாட்டினார்

இதில் ஒரு வினோத முரண்சுவை ஏதெனில், தளபதி சரத் பொன்சேகா தலைமையில் போரை வென்ற மகிந்த ராஜபக்சவும்

சகோதரர்களும், வெற்றி விழாவைத் தொடர்ந்து, சரத் பொன்சேகாவை இராணுவ அரங்கிலிருந்து அகற்றிச் சிறையில் அடைத்தனர். அவரது பட்டம், பதவி, சீருடை, யாவற்றையும் பறித்துச் சிறைக் கைதியாக்கி, இராணுவ நீதிமன்றத்திலும் வெளியிலும் பல வழக்குகள் தொடுத்தனர். இவை யாவும் பதவி, அரசியல் எதிர்காலம் பற்றிய அச்சத்திலும் பழிவாங்கும் அடிப்படையிலும் இடம் பெற்றன. இவை ஏன் என வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக விசாரிக்கலாம்.

இறுதிப் போரை நடத்திப் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழிக்கத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகா 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நின்றார். அவ்வேளை இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எவ்விதத் தயக்கமோ வெட்கமோ மானமோ ரோசமோ இன்றி, சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரிய கேவலமான அரசியற் சந்தர்ப்பவாதம் நிகழ்ந்தது. 2005இல் மகிந்த ராஜபக்ச முதல் முறை ஜனாதிபதியாவதற்கு விடுதலை புலிகள் உதவினார்கள். ஐந்து வருடங்கள் பின்னர், முள்ளிவாய்காலில் ஏறத்தாழ நாற்பதாயிரம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட பின், சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கோரியதன்மூலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்ச இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவாக உதவியது. இரு தடவைகளிலும் தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடுகள் அடிப்படையில் ஒன்றாக அமைந்திருந்தமை தமிழ்த் தேசியப் பிற்போக்கு ஆதிக்க அரசியலின் இயல்பின் வழிப்பட்டது. இவ்வாறான முடிவுகள், அவர்கள் பின்பற்றிய தமிழ்க் குறுந்தேசிய மேட்டுக்குடி உயர் வர்க்கச் சிந்தனைவயப்பட்ட அரசியல் முடிவுகளாகும். சரத் பொன்சேகாவை ஆதரித்தமை பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த உயர்வர்க்க உறவு சார்ந்தது. ஏனெனில், சரத் பொன்சேகா யூ.என்.பி. ஆதரித்த பொதுவேட்பாளராகவே அத் தேர்தலிற் போட்டியிட்டார். சரத் பொன்சேகாவை ஜே.வி.பி.யும் ஆதரித்தமை கவனத்துக்குரியது.

“முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களிற்

போடவே" என்ற முதுமொழிக்கு இணங்கப் புலிகள் இயக்கம் 2006 யூலையில் முன்யோசனையற்ற ஒரு முடிவை எடுத்தனர். திருகோணமலை மாவட்டத்தில் சம்பூருக்கு அண்மையில் அமைந்திருந்த மாவிலாறு நீர்த் தேக்கத்திலிருந்த விவசாய நீர்பாசனத்திற்கான வான்கதவுகளை மூடி அவற்றைத் திறக்கவிடாது இராணுவக் காப்பரண்களையும் ஏற்படுத்தினர். இதனாற் சிங்கள விவசாயிகளின் பல ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் நீரின்றி வாடிக் கருகலாயின. இதனை நல்ல காரணமாகவும் வாய்ப்பாகவும் கண்ட இலங்கை இராணுவம் மாவிலாறு மீட்புக்கான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, அதைப் பெரும் ஊடகப் பரப்புரையாக்கிச் சிங்கள விவசாயிகட்கும் மக்களுக்கும் உணர்ச்சியூட்டியது.

ஏற்கனவே புலிகள் திருகோணமலையை அண்டிய கிராமங்களில் பலவற்றில் தம்மை உறுதியாக நிறுவியிருந்தனர். மூதூர், சம்பூர் பிரதேசங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன. திருகோணமலையின் புவியியல்-அரசியல்-இனத்துவச் சூழலில் இப் பிரதேசங்கள் அவர்கட்கு முக்கியமாயிருந்தன. அதேவேளை, அது இலங்கை இராணுவத்திற்கு ஓர் உறுத்தலாகவும் மிரட்டலாகவும் இருந்தது. எனவே மாவிலாறு பிரச்சினை இராணுவத்திற்கு நல்லதொரு வாய்ப்பானது.

மாவிலாற்றுடன் இராணுவம் தனது நடவடிக்கைளை நிறுத்தவில்லை. இராணுவ நகர்வு மூதூரையும் சம்பூரையும் நோக்கிச்சென்றது. நின்றுபிடிக்கமுடியாதபுலிகள்பின்வாங்கினர். அதேவேளை, சம்பூர் முழுவதும் இராணுவத்திடம் வந்ததோடு அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு அகதிகளாயினர். அங்கே இந்தியா அறுநூறு ஏக்கர் நிலத்தில் அனல் மின் நிலையத்தைக் கட்டவிருந்து, மக்கள் போராடியதால் அந்த எண்ணம் 2016 செப்ற்றெம்பரில் கைவிடப்பட்டது. ஏனைய நிலப்பகுதியில் பாரிய வெளிநாடுகளின் முதலீடுகளுடன் கைத்தொழில் பேட்டை உருவாக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிடவில்லை. 2005இல் காணிகளை மக்களிடம் மீளக்கொடுக்க அரசாங்கம் உடன்பட்டபோதும், சம்பூர் மக்கள் இன்னமும் தமது பூர்விக மண்ணுக்கு மீளமுடியவில்லை.

மீள்வதற்கு அரசாங்கம் உடன்படுவதில் மிகுந்த ஐயமுள்ளது. அப் பிரதேசம் அபகரிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசம் என்ற நிலையிலுள்ளது. மாவிலாறு அணையை அடைக்கும் புலிகள் இயக்கத்தின் தந்திரோபாயமற்ற மூட நடவடிக்கை, அவர்களைத் தோற்கச்செய்து, மக்களை அகதிகளாக்கித், தமிழர் பிரதேசம் பறிபோகவும் வைத்தது.

மாவிலாற்றில் தொடங்கிய தரை, கடல், ஆகாயத் தாக்குதல்கள் முழுக் கிழக்கையும் இலக்காக்கின. கீழ் மாகாணத்திற் புலிகள் செல்வாக்கோடிருந்தும், வடக்கிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் செலுத்திய கட்டுப்பாட்டுக்கேற்ற நிலைமைகள் அங்கே இருக்கவில்லை. தமிழ் முஸ்லிம் பிரதேசங்கள் கலந்திருந்தன. அதேபோன்று, சிங்கள மக்கள் தமிழ், முஸ்லிம் மக்களோடு கலந்திருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில், குறிப்பாக படுவான்கரைப் பகுதிக் கிராமங்களில் புலிகளின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. கிழக்கில் புலிகளின் வளர்ச்சிக்கும் கணிசமான கட்டுப்பாட்டுக்கும் புலிகளின் தலைமைத் தளபதிகளில் ஒருவரான “கருணா அம்மன்” எனும் விநாயகமூர்த்தி முரளிதரனும் அவருக்கு அடுத்ததாக இருந்த “பிள்ளையான்” எனும் சிவநேசதுரை சந்திரகாந்தனும் முக்கியமானோராயிருந்தனர். இவர்களது தலைமையில், கிழக்கில், விடுதலைப் புலிகள் இயக்கம் போராளிகளின் பலமான அமைப்பாயிருந்தது.

அவர்கள் 2004ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி, மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தனர். இப் பிளவுவைத் தடுக்கவும் பிரிந்து சென்றோரைத் தண்டித்துப் பழிவாங்கவும் புலிகள் கிழக்கில் அவர்கள் மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். அதிற், புலிகளின் தலைமை பிரதேசவாதக் கண்ணோட்டத்துடன் நடந்துகொண்டதென்ற குற்றச்சாட்டு எழுந்தது.

பிரிந்து சென்ற கருணா குழுவினர் அரசாங்கப் படைகளின் ஆதரவையும் அரவணைப்பையும் பெற்றனர். புலிகள் கிழக்கில் பலவீன நிலைக்குத் தள்ளப்பட்டனர். இச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் நன்கு பயன்படுத்திக் கிழக்கில் உக்கிரத் தாக்குதல்

நடத்தினர். தொப்பிகல எனும் குடும்பிமலைக் காட்டுப் பிரதேசங்களிலும் தாக்குதல்கள் தீவிரமாக்கப்பட்டதுடன் விமானக் குண்டு வீச்சு மிக மோசமாயிருந்தது.

புலிகளுக்கு எதிரான, கிழக்கை விடுவிக்கும் இப் போரில் ஏறத்தாழ இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாயினர். புயல், மழை, சுனாமி என்பனவற்றாலும் அதிரடிப்படைகளாலும் இராணுவத்தாலும் அவ்வப்போது பாதிக்கப்பட்ட கிழக்கின் மக்கள், புலிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகளினாலும் பாதிக்கப்பட்டனர். இறுதியாக, 2006இல் இலங்கை இராணுவம் புலிகளை அழிக்கும் நோக்குடன் எடுத்த நடவடிக்கைகளும் மோசமான தாக்குதல்களும் புலிகளைக் கடுமையாகப் பாதித்தன.

கிழக்கில் அரசாங்கம் தொடுத்த போரில் புலிகள் தமது நிலைகளில் இருந்து பின்வாங்கிப் பெரும் இழப்புக்களைத் தவிர்த்து மீண்டனர். வன்னிக்குச் செல்லவிரும்பாத கிழக்கைச் சேர்ந்த போராளிகள் இராணுவத்திடம் சரணடைந்தனர். பெரும்பாலன போராளிகள் கருணா, பிள்ளையான் அணிகளில் இணைந்து தம்மைப் பாதுகாத்தனர். 2006ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், அரசாங்கம் கிழக்கில் இராணுவ வெற்றிக்குக் "கிழக்கின் உதயம்" என்ற பெயரில் கொழும்பில் விழாவெடுத்தது. அவ் வெற்றி மகிந்த ராஜபக்சவின் வெற்றியாகப் பரப்புரை செய்யப்பட்டது. "அடுத்து வெற்றிகொள்ள வேண்டியது வடக்கு" என்ற சூளுரையுடன் அரசாங்கத்தினதும் படைகளினதும் கவனம் வடக்கு நோக்கித் திரும்பிமையை அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 23

# புலிகளின் சுருங்கும் நிலப்பரப்பு

கிழக்கில் இரண்டு தசாப்தங்களாக வளர்ந்து நிலைகொண்ட புலிகள் இயக்கத்தை அங்கிருந்து முற்றாக அகற்றும் தாக்குதல்களை இராணுவம் 2004இன் நடுப்பகுதியிலிருந்து 2007இன் நடுப்பகுதி வரை படிப்படியாக உக்கிரப்படுத்தியது. மாவிலாற்றை 2006 ஒகஸ்ட் எட்டாம் திகதியும், சம்பூரை செப்டெம்பர் ஆறாம் திகதியும் வாகரையை 2007 ஜனவரி 15இலும், இறுதியாக யூலை 11இல் குடும்பிமலையையும் இராணுவம் கைப்பற்றி முழுக் கிழக்கிலங்கையையும் தனது கைகளுட் கொண்டுவந்தது. தந்திரோபாயப் பின்வாங்கல் எனக் கூறித், தாம் இறுதியாக நிலைகொண்டிருந்த குடும்பிமலைப் பிரதேசத்திலிருந்து புலிகள் கிழக்கைக் கைவிட்டுச் சென்றனர்.

சிறுசிறு ஆயுதந் தாங்கிய குழுக்களாகச் சிலர் எஞ்சியபோதிலும் அவர்கள் அதிக நாட்கள் தாக்குப்பிடிக்கவில்லை. நீரும் நிலமும் காடுங் கடலுமென இயற்கை வளங்கள் மிகுந்த கிழக்கு மாகாணத்தை இழந்தமை புலிகளுக்குப் பெரும் பின்னடைவானது. குறிப்பாகப், புலிகளின் இராணுவப் பிரிவில் இருந்து வந்த போராளிகளையும் ஆயுதங்களையும் ஏற்கனவே கருணா தலைமையின் பிரிவின் போது புலிகள் இழந்தனர். இவை யாவும் சேர்ந்து, இலங்கை இராணுவத்திற்குக் கிழக்கை மீட்கும் வெற்றியை அளித்தன.

அதேவேளை, கிழக்கின் மக்களில் இரண்டரை லட்சம் பேர் அளவில் இடம்பெயர்ந்து அகதிகளாயினர். உயிரிழப்புகட்கும் படுகாயங்கட்கும் நடுவே தமது உறவுகள் இறந்தும் காணாமலும் போன நிலையில், மோசமான அவலங்களுடன் மக்கள் நிர்க்கதியாகினர். உணவு, உடை, உறைவிடம் என்பவற்றுக்காகப் பரிதவிக்கும் அகதிகளாகினர். அரசாங்கம் ஏனோதானோ என நடந்தது. பொருளாதாரப் பலமின்மைக்கும் இயற்கை அழிவுகட்கும் அடிக்கடி முகங்கொடுத்துப் பின்தங்கிய சமூக வாழ்வு வாழ்ந்த கிழக்கின் ஏழை மக்களுக்கு மேற்படி இராணுவத் தாக்குதல்களும் கிழக்கை மீட்கும் பெயரில் அரசாங்கத்தின் கொடும் இராணுவ வழிமுறைகளும் தாங்கொணாத் துன்பங்களையும் துயரங்களையும் தந்தது.

இந்நிலையில், மகிந்த சிந்தனை அரசாங்கம் 19.07.2007இல் "கிழக்கின் உதயம்" என்னும் பெயரில் கிழக்கின் மீட்பு விழாவைக் கொண்டாடியது. "கிழக்கை மீட்டுவிட்டோம். வடக்கில் சில நிலப்பரப்புகளில் மட்டுமே புலிகள் நிலைகொண்டுள்ளனர். விரைவில் வன்னியையும் மீட்போம்." எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சூளுரைத்தார். அதேவேளை, புலிகள் இயக்கம் தமது உச்சநிலைத் தாக்குதல் முறை எனக் கருதும் தற்கொலைத் தாக்குதல்களையும் நேரடித் தாக்குதல்களையும் சிங்களக் கிராமங்களிலும் கொழும்பு நகரிலும் தீவிரப்படுத்தியது. போருடன் தொடர்பற்ற சாதாரண சிங்கள மக்கள் அதற்கு இலக்காயினர். இத் தாக்குதல்களைப் 'பழிக்குப் பழி' என, ஏற்கத்தகாத நியாயங்களின் அடிப்படையில்

புலிகள் முன்னெடுத்தனர். அதேவேளை, யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனை 2008 ஜனவரி முதலாம் திகதி கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் ஆயுததாரிகள் சுட்டுக்கொன்றனர். இதற்கு எவரும் உரிமை கோவில்லை. 2008 ஜனவரி 16ஆம் திகதி மொனராகலை மாவட்டத்தில் "புத்தள" பிரதேசத்தில் பேருந்தில் பயணித்த 45 சிங்கள மக்களைப் புலிகள் பட்டப்பகலில் குண்டுவைத்துக் கொன்றனர். இறந்தோரில் விவசாயிகளும் மாணவர்களும் குழந்தைகளும் அடங்குவர். 2008 ஜனவரி 16ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்துக்கு நூறு மீற்றர் தொலைவில் அரசாங்கம் கடும் விமானக் குண்டுவீச்சு நடத்தியது. பாடசாலையின் எழுநூறு மாணவர்களும் இருபது ஆசிரியர்களும் மயிரிழையிற் தப்பினர். அரசாங்கமும் இராணுவமும் இத் தாக்குதலைப் புலிகள் உறைவிட மீதான தாக்குதல் எனப் பரப்புரை செய்தன. ஆனால் ஒவ்வொரு நிகழ்விலும் அரசாங்கத்தினதோ விடுதலைப் புலிகளதோ கரங்கள் இருந்ததாகவே மக்கள் பேசினர். அதில் உண்மை இருந்தது.

இக் காலப்பகுதியில் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது மேன்மேலும் படைத் தரப்புகளினதும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிசாரினதும் தேடுதல்களும் சுற்றிவளைப்புகளும் கைதுகளும் வலுத்தன. தமிழர் எவரையும் புலி என்ற சந்தேகத்துடனேயே நடத்தினர். மலையகத் தமிழரும் பல்வகையான கண்காணிப்புகட்கும் நெருக்குதல்கட்கும் ஆளாயினர். இத்தனைக்கும் நடுவே பு.ஜ.க. ஒரு அரசியற் கட்சியாகவும் வெகுஜன அரசியல் அமைப்பாகவும் தனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. தெற்கின் இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளோடு இணைந்து ஏலவே முன்னெடுத்து வந்த வேலை முறையை விரிவாக்கியது. அன்றைய சூழலிற், அக் கட்சி மலையகப் பிராந்தியத்தில் பல பணிகளை முன்னெடுத்தது. குறிப்பாக, மேல் கொத்மலைத் திட்டத்துக்கு எதிரான இயக்கத்தை விரிவாக முன்னெடுத்தது. அதனால், அக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஆளும் தரப்பின் கடுங் கண்காணிப்புக்கும் நெருக்குவாரங்கட்கும் உள்ளாயினர். பு.ஜ.க.வின் ஐந்து முன்னணித் தோழர்களான வே. மகேந்திரன்,

எஸ். சுகேசனன், ஆர். ஜெயசீலன், எஸ். மோகன்ராஜ், என். கிருஷ்ணப்பிரியன் ஆகியோரைப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிசார் 2007 பெப்ரவரியில் "சிங்களப் புலிகளுடன்" தொடர்புடையோர் எனக் கைதுசெய்து, அட்டன், கொழும்பு, பூசா விசாரணை மையங்களில் கடும் விசாரணைக்கு உட்படுத்தினர். சில மாத விசாரணைக்குப் பின், நீதிமன்றத்தில் நிறுத்தி அரசியல் கைதிகளாகத் தடுத்துவைத்தனர். தோழர்கள் மகேந்திரன், மோகன்ராஜ், கிருஷ்ணப்பிரியன் ஆகியோர் இரண்டு வருடங்களையும் ஆர். ஜெயசீலன் மூன்றரை வருடங்களையும் எஸ். சுகேசனன் ஆறரை வருடங்களையும் சிறையில் கழித்தனர். அதேபோன்று, வவுனியாவில் அக் கட்சி உறுப்பினரான தோழர் என். பிரதீபனைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற ஐயத்தில் 2009 மார்ச்சில் கைது செய்து நீதிமன்ற விசாரணையின்றி இரண்டு வருடங்கள் தடுத்துவைத்தனர். அக் கட்சியின் தலைமைத் தோழர்கள் சி.கா. செந்திவேல், கா. செல்வம் கதிர்காமநாதன் ஆகியோரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கொழும்பிற் கைதுசெய்து கடும் விசாரணைக்குப் பின் விடுவித்தனர். கொழும்பு, மலையகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மேலும் பல முக்கிய தோழர்கள் மீது பொலிசாரதும் இராணுவத்தினரதும் கடுங் கண்காணிப்பு இருந்தது. வட பகுதியில் அமைப்பு முறையிலும் வெகுஜன ஆதரவிலும் பு.ஜ.க.வின் முக்கிய தளங்களில் ஒன்றான புத்தூர் கிராமத்தை இராணுவமும் புலிகளும் தொடர்ச்சியாகக் கண்காணித்துவந்தனர். குறிப்பாகத், தோழர் செல்வம் கதிர்காமநாதனை புலிகளினதும் இலங்கை இராணுவத்தினதும் துப்பாக்கிகள் குறிவைத்திருந்தன. ஆனால் அக் கட்சி எடுத்த நிலைப்பாடும் புத்தூர் கலைமதிக் கிராம மக்களின் ஒன்றுபட்ட ஆதரவும் தோழர் செல்வத்தையும் பிற முக்கிய தோழர்களையும் பாதுகாத்தன.

2007ன் அக்டோபரில் "வன்னியை மீட்கும்" அரசாங்க இராணுவத் தாக்குதல் தொடங்கியது. அதற்கு வேண்டிய சகல வலிமையும் இராணுவத்திடம் இருந்தது. புலிகளிடம் முப்படைகளும் காவற்துறையும் தற்கொலைப் படையும் உளவுப் பிரிவும் நவீன தொடர்பாடல் ஒழுங்கமைப்பும் இருந்தன.

அத்துடன் உள்நாட்டிலும் வெளியிலும் ஒழுங்கமைந்த பரப்புரை வலையமைப்புகளும் இருந்தன. இவை, புலிகளும் இராணுவமும் சமபலத்துடன் இருப்பதுபோல் ஒரு தோற்றத்தை வழங்கின. எனினும், வன்னிப் போர் தொடங்கியபோது "சர்வதேச சமூகம்" எனப்படும் அமெரிக்க-மேற்குலக நாடுகளும் இஸ்ரேலும் இந்தியாவும் உள்ளார, உறுதியாக அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்தன.

இச் சூழலில் வன்னியின் மன்னார் மாவட்டத்தின் மேற்குப் பகுதியான சிலாவத்துறை, அரிப்பு பிரதேசங்களைக் கைப்பற்றிய இராணுவம் மடுப் பிரதேசத்தை நோக்கி முன்னேறியது. பரந்த காடு வயல்கள் வழியே முன்னேறிய இராணுவத்தின் தாக்குதல் வியூகத்தை மறிக்கவோ முறியடிக்கவோ விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல்களால் முடியவில்லை. இராணுவம் மன்னார்-பூநகரி நெடுஞ்சாலையான A-32ஐக் கைப்பற்றிக் கிழக்கு நோக்கிய படையெடுப்பை முன்னெடுத்தது. 2007 செப்டெம்பர் 2இல் சிலாவத்துறையும், 2008 ஏப்ரல் 24இல் மடுவையும் இராணுவம் கைப்பற்றியது. அங்கு நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளால் தரை, கடல், வான் வழித் தாக்குதல்கட்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே, ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பின்வாங்கினர். துணுக்காய்-மல்லாவி, இராணுவ முன்னகர்வின் முக்கிய தொடக்க இலக்காயிருந்தது. ஏனெனில், 1995இல் புலிகள் குடாநாட்டில் இருந்து பின்வாங்கி வன்னியை மையப்படுத்தித் தமது இருப்பை உறுதிப்படுத்தியபோது, துணுக்காய்-மல்லாவி அவர்களது பிரதானமான ஒரு தளமாயிருந்தது. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் உட்படச் சில சர்வதேசத் தொண்டு நிறுவனங்களும் அங்கு செயற்பட்டன. மக்களின் அன்றாடத் தேவைகட்கும் போராளிகளின் காயங்கட்கும் மல்லாவி அரசாங்க மருத்துவமனையே முக்கிய மருத்துவ சேவை வழங்கியது. விரைவில், துணுக்காய்-மல்லாவி இராணுவ வசமானது. கவனத்திற்குரிய ஒரு விடயம் ஏதெனில், ஒவ்வொரு பிரதேசத்தின் கைப்பற்றலையும் அடுத்து இடப்பெயர்வால் அகதிகளானோரின் தொகை அதிகரித்தமையாகும். இடம்பெயர்ந்த மக்களுக்குச் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களும் உள்நாட்டு மனித

நேய அமைப்புகளும் வழங்கிய உதவி வரையறுக்குட்பட்டே இருந்தது.

1995இல் புலிகள் இயக்கம் மக்களை வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு வலிந்து இடம் பெயர்த்தது. தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தோரில் ஒரு பகுதியினர் புலிகளின் அழைப்பை ஏற்றோ கட்டாயத்தாலோ வன்னிக்குச் சென்றனர். அவர்களிற் கணிசமானோர் வன்னிச்சூழலில் அதிககாலம் வாழமுடியாது இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டிற்கு மீண்டனர். ஏலவே வன்னிக்குச் செல்லாது இராணுவக் கட்டுப்பாட்டுள் இருந்த மக்களின் வாழ்க்கை நிலை வன்னியில் இருந்ததை விட மேலாயிருந்தது. ஏனெனில் அவர்களில் ஒரு பகுதியினருக்குப் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்த உறவுகளின் ஆதரவு இருந்தமையாகும். எனினும், அதேவேளை, குடாநாட்டிற்குள் இராணுவத்தின் கடும் கட்டுப்பாடும், கண்காணிப்பும், கெடுபிடிகளும் இருந்தமையுங் குறிப்பிடவேண்டியதாகும். குடாநாட்டில் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் எல்லையாகப் பளைப் பகுதியின் முகமாலை இருந்தபோது, பளையிற் புலிகளும், முகமாலையில் இராணுவமும் தமது சோதனைச்சாவடிகளில் தெற்கிற்கும் வடக்கிற்கும் பயணிக்கும் மக்களைக் கடுஞ்சோதனைகள் மூலம் பயணக் கெடுபிடிகட்கு உள்ளாக்கினர். புலிகளிடமிருந்து துணுக்காய்-மல்லாவியைக் கைப்பற்றிய இராணுவத்தின் அடுத்த இலக்கு கிளிநொச்சியாகும். எனவே பூநகரி-பரந்தனில் இருந்த இராணுவம், கிழக்கு நோக்கி நகரலானது. கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் இராணுவத்தின் வசமாயின.

வன்னியில் புலிகள் இயக்கத்தின் குடிசார்-நிர்வாகத் தலைமையகமாகக் கிளிநொச்சி இருந்தது. புலிகளின் காவற் துறைத் தலைமையகமும் சமாதானச் செயலகமும் அரசியற் துறையும் அங்கிருந்தே இயங்கின. எனவே, உள்நாட்டுப் பிரமுகர்களும் அயல்நாடுகளின் இராஜதந்திரிகளும் கிளிநொச்சிக்கு வந்து போயினர். புலிகள் இயக்கத் தலைவர்களுடான பேச்சுவார்த்தைகள் யாவும் கிளிநொச்சியிலேயே இடம்பெற்றன. அத்துடன் கிளிநொச்சியை

அண்டிய இரணைமடுப் பகுதியில் புலிகள் இயக்கம் தனது விமான ஓடுபாதையை அமைத்திருந்தது.

முன்பு சிறிய கடல் விமானங்களை இரணைமடுக் குளத்தில் இறக்கும் வசதியை ஏற்படுத்தியிருந்த புலிகள் இப்போது சிறிய விமானங்கட்கான ஓடுபாதையை அமைத்திருந்தனர். இவ் ஓடுபாதை விடயத்தை முதலில் இரகசியமாக வைத்திருந்த புலிகள், தம்மிடமிருந்த நான்கு சிறிய-வகை விமானங்கள் பற்றியும் உத்தியோகபூர்வமாகத் அறிவிக்கவில்லை. விமான ஓடுபாதைத் தகவலைப் பின்னர் தமது பரப்புரை வலையமைப்பில் கசியவிட்டு, அதைப் பரபரப்புச் செய்தியாக ஊடகங்களில் வெளிவரச் செய்தனர். அதனாற் புலிகளின் வலிமை பற்றிய உருப்பெருக்கிய தோற்றம் காட்டப்பட்டது. வன்னிக்குள்ளும் வெளியிலும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டப்பட்டது. புலிகளின் ஆதரவாளர்கள் பெரும் உற்சாகங்கொண்டு புலிகளை எவரும் வெல்லமுடியாது என்ற மயக்கத்துள் ஆழ்ந்தனர்.

இலங்கை அரசாங்கமும் இராணுவமும் வன்னியை மீட்டுப் புலிகள் இயக்கத்தை முற்றாகத் முறியடிக்கும் மூலோபாயத்துடன் தமது ஒவ்வொரு இராணுவத் தந்திரோபாயக் காயையும் நகர்த்தின. மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் அரசாங்கத்தில் அவர்கட்கு நெருங்கியோரும் ஆட்சி அதிகாரத்திற் பல ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்க இந்தப் போரில் வெல்வது அவசியமாயிருந்தது. அதேபோன்று, ஒரு நாட்டின் ஆளும் அரசு யந்திரத்தின் பிரதான பகுதி என்ற அடிப்படையில், தமக்குச் சவாலான ஒரு விடுதலைக்கான இராணுவக் கட்டமைப்பு தமிழர்கள் மத்தியில் பிரிவினைக் கோரிக்கையுடன் வளர்ந்து நிற்பதை அரசாங்கம் எவ்வாறும் ஏற்கத் தாயாராக இருக்கவில்லை.

ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் வலிய ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் உருவானபோது ஒருமுறைக்கு இருமுறை அவற்றை முறியடித்துச் சிங்கள இளைஞர்களையும் மக்களையும் இந்த இராணுமே கொன்றுகுவித்தது என்பதை நாம் மறக்கலாகாது. அத்துடன், இந்தியாவுக்கும் அமெரிக்க-மேற்குலக நாடுகட்கும் இனிமேல் புலிகள் இயக்கமும்

அவர்களது இராணுவ வல்லமையும் பயனற்றன என்றானதும், அவ்வியக்கத்தின் எதிர்கால மிரட்டல்களை உணர்ந்த அந் நாடுகள், இலங்கை அரசாங்கத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவின. 2003 தொட்டுச் சில ஆண்டுகட்குள் சர்வதேசக் கடற்பரப்பில் ஆயுத இறக்கலிலும் ஏனைய சட்டபூர்வமற்ற வர்த்தகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்த புலிகளின் பத்து வரையான கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாக இலங்கைக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றைச் செய்மதி மூலம் அடையாளம் காட்டியும் உளவுத் தகவல்களை வழங்கியும் அழிக்க உதவியவை அமெரிக்காவும் இந்தியாவும் என்பது பரகசியம்.

மேற்கூறிய சூழலில் அரசாங்கம் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தையும் தொடர்ந்தது. புலிகளும் அதிற் பங்கேற்றுத் தமது பாத்திரத்தில் நடித்தனர். பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்காற்றிய அரசியல் ஆலோசகர் அன்ற்றன் பாலசிங்கத்தாற் கடுஞ் சுகவீனங் காரணமாகப் பேச்சுவார்த்தையிற் பங்குகொள்ள முடியவில்லை. அவருடைய இடத்தில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் தலைமை தாங்கினார். பேச்சுவார்த்தையை இழுத்தடித்த அரசாங்கத்தின் பிரதான இலக்கு போர்முனையில் இராணுவ வெற்றியாகும். எனவே, 2008 ஜனவரியிலிருந்து போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் வரன்முறையாக விலகுதாக அறிவித்தது. அதன்மூலம், 2002ஆம் ஆண்டிலிருந்து பெயரளவிலும் மக்களின் தேவைகட்குச் சாதகமாகவும் இருந்துவந்த போர் நிறுத்த உடன்பாட்டை அரசாங்கம் மறுதலித்தது. இப் போர் நிறுத்த உடன்பாட்டு விலகல் போரைத் தீவிரமாகவும் முழுமையாகவும் முன்னெடுப்பதற்கான அரசாங்கத்தின் அறிவிப்பைச் சுட்டுவதாயமைந்தது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகிய மூன்று வருடங்களில் அவரது வழிகாட்டலிலும் அவரது தம்பியான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சபை ஒரு முழுமையான போருக்குத் திட்டமிட்டது. ஏற்கனவே இருந்து வந்த கூட்டுப்படைச் செயலகம், அதை நிறைவேற்றத், தீவிரமான

செயற்பாட்டை முன்னெடுத்தது. அவை யாவும் ஒரு நாட்டின் இராணுவமாக, அதன் அடிப்படையில் ஒடுக்குமுறையை முன்னெடுப்பனவாக இருந்தன.

அதேவேளை, புலிகள் இயக்கமும் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" எனும் முழக்கத்தின் கீழ் விட்டுக்கொடுக்காத போராக இப் போரைத் தாம் முன்னெடுப்பதாகக் கூறியது. இருப்பினும், ஏற்கனவே இராணுவத்திடம் இழந்த ஒரு சிறு பிரதேசத்தையேனும் புலிகளால் மீளக் கைப்பற்ற இயலவில்லை. அத்துடன் புலிகளின் ஆயுத வலிமையும் அதிகரிக்கவில்லை. எனவே இளைஞர்களைப் கட்டாயமாக இயக்கத்தில் இணைக்கும் நடவடிக்கைகளைப் புலிகள் ஒரு வேலைத்திட்டமாக முன்னெடுத்தனர். அதனால் வன்னியில் வாழ்ந்த மக்களுக்கும் புலிகளுக்குமிடையில் முரண்பாடும் முறுகலும் வலுத்தன. இச் சூழலிற் கிளிநொச்சி நோக்கிய படைகளின் முன்னேற்றமும் புலிகளின் பின்வாங்கலும் பற்றி அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.

# 24

# புலிகளின் தோல்விக்கான அறிகுறிகள்

2008 ஏப்ரலில் வன்னிப் பெருநிலத்தின் தென்மேற்கில் உள்ள மடுப் பிரதேசம் இராணுவத்தின் பிடிக்குள் வந்தது. இராணுவம், வழமை போன்று, சிங்கக் கொடியேற்றி அதை வெற்றியாகப் பரப்புரை செய்தது. அதைத் தொடர்ந்து, யு-32 நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் பிரதேசங்களைக் கைப்பற்றிய இராணுவம் கிழக்கு நோக்கித் துணுக்காய், மல்லாவி வரை முன்னேறியது. முற்கூறிய பிடிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் எவரும் தங்கியிருக்கவில்லை. ஒரு பகுதியினர் வவுனியா, மன்னார் போன்ற இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கட்குச் சென்றனர். பெரும்பாலோர் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கட்குச்

சென்றனர். அதுவே தமக்குப் பாதுகாப்பு என அவர்கள் நம்பினர். புலிகளிடம் நான்கு படையணிகளும் கட்டுப்பாடான நிர்வாகமும் வலுவாக இருப்பதாக மக்கள் நம்பினர். இவ்விரு மாவட்டங்களினதும் பெருமளவான நிலப்பரப்பைப் புலிகள் இறுதிவரை கைவிடார்கள், அதன்வழிச் சர்வதேசத் தலையீட்டின் மூலம் போர்நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நிகழும் எனும் பரப்புரையை மக்கள் நம்பினர். புலிகளின் தகவல் ஒலிபரப்பு வலையமைப்பு அந்த நம்பிக்கையைச் செவ்வனே பேணிவளர்த்தது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழீழ வெற்றி அண்மித்துவிட்டதாகப் புலிகள் இயக்கத்தினர் பரப்புரை செய்தனர். ஆனாற், போர் தணிவதற்கு ஒரு அறிகுறியும் இல்லாது, போரை உக்கிரமாக்கும் செயல்களையே இரு தரப்பினரும் மேற்கொண்டனர்.

ராஜபக்ச சகோதரர்களது தலைமையிலான ஆட்சி சகல வழிகளிலும் இராணுவத்தின் மூலம் வெற்றி பெறுவதை முன்னிறுத்தியதேயன்றிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்ற விடயத்தை எடுத்தெறிந்தே வந்தது. அதேவேளை, அதன் இராஜதந்திர நடவடிக்கைகள் போரின் விரிவாக்கத்தை நியாயப்படுத்தி வந்தன. அத்துடன் போரை நடத்துதற்கான சகல ஆயுதவகைகளையும் வாங்கிக்குவித்தது. ஆளணியை விரிவாக்கிப் பயிற்றுவிப்பதிலும் கைப்பற்றிய பிரதேங்களில் இராணுவ நிலைப்பை உறுதிப்படுத்துவதிலும் முனைப்புடன் செயற்பட்டது. தமிழ் மக்கள் மீது அடக்குமுறையையும் கண்காணிப்பையும் செறிவாக்கியது. அதன்படி, தமிழர் என்றால் புலிகள் என்ற பார்வையுடனேயே பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்களை நோக்கின. அந் நோக்கை வலுப்படுத்துமாறு, புலிகள் இயக்கம் தெற்கிற் பொதுமக்களைப் பாதிக்கும் இலக்குகள் மீது தற்கொலைத் தாக்குதல்களை விரிவுபடுத்தியது. தொழிலகங்கட்கும் பாடசாலைகட்கும் பேரூந்துகள், புகையிரதங்கள் மூலம் பயணித்த அனைத்து மக்களும் இத் தற்கொலைத் தாக்குதல்களாற் பீதியடைந்தனர். வெளியேசென்ற எவரும் வீடுதிரும்புமுன் ஏதாவது அசம்பாவிதம் நடக்கலாம் என்ற மரண பயத்தைப் புலிகள் ஏற்படுத்தியிருந்தனர். இது மக்கள் சார்பான ஒரு விடுதலை இயக்கம் முன்னெடுக்கும்

தாக்குதல் வழிமுறையல்ல. இது முற்றிலும் பயங்கரவாத வழிமுறையாகும். தமிழ் மக்கள் மீதான ராணுவ ஒடுக்குமுறையை முன்னெடுத்த ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிக்குப் புலிகளின் மேற்படி தாக்குதல்கள் ஒரு வரப்பிரசாதமாயின. தாம் நடத்தும் போர், சிங்கள மக்களை அச்சுறுத்தும் புலிப் பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டவே நடப்பதாகச் சிங்கள மக்களுக்குப் பரப்புரை செய்யப்பட்டது. சராசரியான மக்கள் இத்தகைய பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது சரியென ஏற்றனர்.

2007 பிற்பகுதி முதல், வன்னியிற் தனது பிடியை இறுக்கிவந்த இராணுவம் தனது அடுத்தகட்ட நகர்வுக்கு ஆயத்தமாகத் தனது விமானக் குண்டு வீச்சு வலுவையும் கடற் தாக்குதல் வலுவையும் மேம்படுத்திவந்தது. அதன்போதே, புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் அவரது பாதுகாப்பு இல்லத்தின் மீது விமானக் குண்டு வீச்சிற் கொல்லப்பட்டார். இத் தாக்குதலும் தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பும் புலிகள் இயக்கத்திற்குத் தாக்கம் மிகுந்த இழப்பாகின. கடற்படை நடவடிக்கை ஒன்றின்போது கடற்படைத் தளபதி சூசையின் பதின்நான்கு வயது மகன் உயிரிழந்தார். உயிரிழப்புகள் போர்முனையில் வழமையாயினும் சில இழப்புகள் உள்ளார்ந்த பலவீனங்களை ஏற்படுத்தின. ஏற்கனவே புலிகள் இயக்கம் சில முக்கிய தளபதிகளை இழந்திருந்தது. சங்கர் அவர்களில் ஒருவர். ஆழ ஊடுருவித் தாக்கும் ஒரு ராணுவ அணி செயற்பட்டு வந்தது. அதற்குக் கண்காணிப்பு வலுவாயிருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உளவுத் தகவல்களை வழங்கும் முகவர்கள் இருந்தனர் என்றும் கூறப்பட்டது. அத்தகைய ஆழ ஊடுருவற் தாக்குதலிலேயே புலிகளின் பாராளுமன்றப் பிரதிநிதியான கி. சிவநேசன் வாகனத்தில் பயணிக்கையில் கண்ணி வெடித்தாக்குதலிற் கொலையுண்டார். இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தன. புலி இயக்க எதிர்ப்பாளர்கள் இவை உள் முரண்பாட்டின் காரணமாக இடம்பெறுவதாக விளக்கினர்.

போர் உக்கிரமடைகையில் ஒவ்வொரு ஆண்டிலும் பாதுகாப்பிற்கும் முப்படைகட்குமான வருடாந்த

வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு பல நூறு கோடிகளால் உயர்ந்தது. 2007ஆம், 2008ஆம் ஆண்டுகளின் வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கும் ஆயுதப் படைகட்குமான ஒதுக்கீடுகள் முறையே 22,300 கோடி, 25,800 கோடி ரூபாய்களாகும். அத் தொகைகள் ஏனைய துறைகட்கான நிதி ஒதுக்கீடுகளினுங் கூடியவை. போர் முடிந்து பல ஆண்டுகளின் பின்பும் பாதுகாப்பிற்கும் ஆயுதப் படைகட்குமான ஒதுக்கீடு குறையவில்லை என்பது கவனிக்கத்தக்கது. (மக்கள் மீது ஏறும் பொருளாதாரச் சுமைகள் பற்றிப் புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கையைப் பின்னிணைப்பு-17இல் காணவும்.)

இவ்விடத்து, மற்றொரு முக்கிய விடயமும் கவனத்திற்குரியது. போர் உச்சத்தை நோக்கிச் சென்ற சூழலில் மகிந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் 180 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரியிருந்தது. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய போரை நடத்துவதால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தலையிட்டு அக் கடன் கோரிக்கையை மறுத்து அரசாங்கத்தை இக்கட்டில் மாட்டும் என்று தமிழர் தரப்புகளும் புலம் பெயர்ந்த தமிழ் மேட்டுக்குடி அமைப்புகளும் எதிர்பார்த்தன. புலிகளிடமும் மனதார அத்தகைய எதிர்பார்ப்பு இருந்தது. மாறாக, அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் மகிந்த அரசாங்கம் கேட்டதை விட எழுபது மில்லியன் டொலர்கள் கூடுதலாக, அதாவது 250 மிலியன் டொலர் வழங்க இணங்கியது. மூன்று தவணைகளில் வழங்கிய அந் நிதி, போர்புரிந்த ராஜபக்ச சகோதரர்கட்குப் பேருதவியானது. அவ்வாறே உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவனவும் அரசாங்கத்திற்குத் தாராளமாக உதவின. யப்பான், சீனா, ஈரான், ரஷ்யா, பாக்கிஸ்தான் ஆகியனவற்றுடன் இந்தியாவும் வெவ்வேறு வழிகளில் உதவின. இந் நிலையிலும், தமிழர் தரப்புகளும் புலிகள் இயக்கமும் அமெரிக்கா மீதும் இந்தியா மீதும் மேற்குலகின் மீதும் இறுதிவரை தளராத நம்பிக்கையோடிருந்தனர். இது தமிழ்த் தேசியத்தை ஆரம்பம் முதல் அடையாளப்படுத்திய உயர் வர்க்கப் பிற்போக்குச் சிந்தனையின் தொடர்ச்சியாகும்.

போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு என

மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு எதிராகக் குமுறி நிற்பதாக இன்று தோற்றம் காட்டும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் 2008ஆம் ஆண்டிற் போர் உச்சத்தை எட்டிய வேளை, பம்மாத்தான அறிக்கைகளோடு தம்மை மட்டுப்படுத்தின. ஐ.நா. வும் அதன் மனித உரிமைகள் பேரவையும் பேசாதிருந்தன. தமக்குத் தேவையெனக் கருதும் பட்சத்தில் அவை பயன்படுத்தும் R2P எனும் தலையீட்டு வழிமுறையை ஐ.நா. இப் போரிற் பயன்படுத்தும் என மேற்குலக விசுவாசிகள் சிலர் எதிர்பார்த்தனர். ஆனால், ஐ.நா., பார்வையாளராகக் கைகட்டி நின்றது. ஏனெனில், அமெரிக்காவும் மேற்குலகும் இந்தியாவும், முரண்படும் தமது சொந்த நலன்கட்கும் அப்பால், புலிகள் இயக்கத்தை அரங்கில் இருந்து அகற்றுதல் என்ற இலக்கில் ஒத்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. இந்த உண்மையை இன்றுவரை விளங்க இயலாதோராகவே தமிழ்க் குறுந்தேசியச் சிந்தனையுடையோர் உள்ளனர். அமெரிக்க, மேற்குலக நாடுகள் போர் தீவிரமாகுமுன்பே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தத்தமது நாடுகளிற் தடைசெய்தமை மேற்கின் விசுவாசிகட்கு அதிர்ச்சி தராமையும் நினைவுகூரத்தக்கது.

தென்னிலங்கையின் அரசியற் சூழலில், உச்சத்தை நோக்கிய போரின் நகர்வு ராஜபக்ச சகோதரர்களின் 'மகிந்த சிந்தனை' ஆட்சிக்கு வாய்ப்பாக இருந்தது. யூ.என்.பி. ஏறத்தாழ முழு மௌனங் கடைப்பிடித்தது. அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையிடையே ஒரிரு விமர்சனங்களை முன்வைத்தனர். ஒரு சிலர், போர்முயற்சியை ஆதரிப்பதாகக்கூறி அரசாங்கத்தில் இணைந்தனர். ஜே.வி.பி. தனது போர் ஆதரவு நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டோர் தொடர்ந்தும் தமது பழைய சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை முன்னெடுத்து மகிந்த சிந்தனையின் கீழான போருக்குச் சப்பைக்கட்டுக் கட்டினர். நேர்மையான மாக்சிச லெனினிச சக்திகளும் சில ட்ரெட்ஸ்கியர்களும் மட்டுமே போரைநிறுத்தி நியாயமான அரசியல் தீர்வு காண்பதை மீளமீள வற்புறுத்தினர். அவ் வேளை, பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 22 பேரில் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளாக நால்வர் இருந்தனர்.

ஏனையோர் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பாராளுமன்றத்திற் பிடிகொடாது பேசினரே ஒழிய, அதற்கு அப்பால் எதையும் செய்யவில்லை. வேறுவழியின்றி, இந்தியா சென்று டில்லியில் முறையிட முயன்றனர். பிரதமர் மன்மோகன் சிங்கை நேரிற் காணவேண்டி மூடிய கதவுகளின் முன் சிலநாட்கள் காத்திருந்து வெறுங்கையோடு திரும்புமுன், தமிழ்நாட்டிற்குச் சென்று அங்கு தமது நண்பர்களைச் சந்தித்துத் திரும்பினர். தமிழ்நாட்டு மக்கள் போருக்கு எதிராக உணர்வுபூர்வமாகப் பல்வேறு இயக்கங்களை நடத்தினர். தீக்குளிப்பு உட்பட்ட பல்வகை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். ஆனால் தமிழ்நாட்டுத் திராவிட இயக்கத் தலைவர்களும் இன உணர்வுத் தலைவர்களும் இலங்கையின் போர்ச்சூழலைத் தமக்கு வாய்ப்பாக்குவதில் மட்டுமே கவனமாயிருந்தனர். அதற்கு ஒரு சத்தான உதாரணம் அன்றைய முதல்வர் மு. கருணாநிதியின் ஒருநாள் உண்ணவிரத நாடகமாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளிற் பல்வேறு அமைப்புகளின் பெயரில் இலங்கை அரசாங்கத்தின் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் எழுச்சிகளையும் புலிகள் இயக்கத்தினர் மேற்குலகின் தலைநகரங்களில் முன்னெடுத்தனர். புலிகளின் பெயரில் கட்டாய நிதிச் சேர்ப்பும் நிகழ்ந்தது. ஆளுக்கு இரண்டாயிரம் யூரோ பெறும் நிதி திரட்டல் மும்முரமானது. வழங்க மறுத்தோர் இங்கு போல் அங்கும் மிரட்டப்பட்டனர். "ஊருக்குப் போகமாட்டீர்கள்" "ஊரில் உள்ள சொத்துகள் பறிமுதலாகும்" எனப் பலவகை அழுத்தங்கள் பாவிக்கப்பட்டன. அதன்மூலம் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களிடமிருந்து கோடிக்கணக்கில் பணம் கறக்கப்பட்டது. இதுவரை யாரும் அதற்குக் கணக்குக் காட்டவில்லை. அப் பணத்திற்கு என்ன நடந்ததென இன்றுவரை எவரும் அறியார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் தலைவர்கள் எனப்படுவோரிடமோ பல அமைப்புகளாக இயங்கிவரும் புலி ஆதரவுத் தலைமைகளிடமோ எவராவது அப் பணம் பற்றிக் கேட்டால் அதைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று கைவிரிக்கின்றனர். ஆனால் இப்

பெரும் பணப்பைகள் தனிமனிதர்கள் பலரிடம் வெவ்வேறு வகைகளில் சேர்ந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. பனியிலும் குளிரிலும் கடும் உடல் உழைப்பிலும் சேகரித்த இலங்கைத் தமிழர்களின் பணம் விடுதலையின் பெயரிற் கறக்கப்பட்டு ஒரு சிலரது கைகளிற் குவிந்துள்ளது.

இந்நிலையில் வன்னிப் போர்க்களம் துரிதமாக மாறலானது. 2008ன் இறுதிப் பகுதியில் இராணுவமும் புலிகளும் சமநிலையில் உள்ளனர் என்ற கணிப்புச் சரியலானது. அரசாங்கப் படைகள் வலுப்பெற்றும் தாம் பிடித்த இடங்களை புலிகள் மீண்டுங் கைப்பற்றாதவாறும் தம்மை நிலைப்படுத்தின. அத்துடன் முன்னேறித் தாக்குதவதிலும் முனைப்புக்காட்டினர். மாறாகப், புலிகள் இயக்கத்தின் தாக்குதல் வேகத்தில் உள்ளார்ந்த பலவீனங்கள் தோன்றலாயின. சில முக்கிய தற்கொலைத் தாக்குதல்கள் குறிதவறின. வலுத்துவந்த அரசாங்கத் தரப்பு வான், கடல் தாக்குதல்கட்கு ஈடுகொடுப்பது புலிகளுக்குக் கடினமாகிற்று. இருப்பினும் "புலிகள் விடமாட்டார்கள்" என்ற கற்பனையான அரசியல், இராணுவ விவேகமற்ற வெகுளித்தனமான குரல்கள் ஆங்காங்கே ஒலித்தன. அதேவேளை இந்திய, அமெரிக்க, மேற்குலக, இஸ்ரேலிய, சீன, பாகிஸ்தானிய, ரஷ்ய ஆதரவுப் பின்புலத்துடன், அரசாங்கம் தனது தாக்குதல்களை விரிவுபடுத்தியது. கிளிநொச்சியை இலக்குவைத்த தாக்குதல்கள் தீவிரமாயின. (பின்னிணைப்பு-18ஐக் காண்க.)

ஏற்கனவே கிளிநொச்சி புலிகள் இயக்கத்தின் நிர்வாகக் கோட்டையாகியிருந்தது. அதன் காவல் துறையின் தலைமைப் பணிமனை அங்கிருந்தது. கிளிநொச்சி நகரில் ஏலவே இருந்த இலங்கைப் பொலிஸ் நிலையத்தையே புலிகள் தமது காவல் துறைத் தலைமையகமாக மாற்றினர். அதன் பொறுப்பாளராக இலங்கைப் பொலிஸ் சேவையின் முன்னாட் பொலிஸ் அலுவலரான நடேசன் இருந்தார். அவரது மனைவியும் ஒரு முன்னாட் பொலிஸ் அலுவலரும் ஒரு சிங்களப் பெண்மணியுமாவார் என்பதும் இறுதிப் போரின் முடிவில் அவரும் கணவரோடு சேர்த்துக் கொல்லப்பட்டார் என்பதும்

குறிப்பிடத்தக்கன. புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டபின் அவருடைய இடத்திற்கு நடேசன் நியமிக்கப்பட்டார். காவல் துறைத் தலைமையகம் மட்டுமன்றிப் புலிகளின் நீதிமன்ற வளாகமும் கல்வித்துறையின் நிர்வாகத் தலைமையகமும் பொருண்மியத் தலைமையகம், தமிழீழக் காப்பகம், சுகாதாரத்துறைத் தலைமையகம், கலை-பண்பாட்டுத் தலைமையகமும் பிறவும் கிளிநொச்சியிலேயே இருந்தன. இவற்றிடையே புலிகள் இயக்கத்தின் சமாதானச் செயலகமும் அங்கு செயற்பட்டது. எனவே, உள்நாட்டு வெளிநாட்டு அரசியல், இராஜதந்திரப் பிரதிநிதிகளுடனான புலிகளின் சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் கிளிநொச்சியிலேயே இடம்பெற்றன.

இவ்வாறு புலிகளின் முக்கிய மையமாயிருந்த கிளிநொச்சியைக் கைப்பற்றுவது அரசாங்கத்திற்குஇராணுவ, அரசியல்முனைகளில் முக்கியமாயிருந்தது. கிளிநொச்சியைக் கைப்பற்றுதல் புலிகளின் முள்ளந்தண்டிலில் தாக்கிக் காயப்படுத்துவது போன்றது என்று இராணுவத் தரப்புக் கருதியது. அதேவேளை, தெற்கிற் சிங்கள மக்களின் மனங்களில் வெற்றி மனப்பான்மையை மேலும் வலுப்படுத்துவது பற்றிக் கவனங்காட்டப்பட்டது. அதற்கான இராணுவ முன்நகர்வு வியூகங்களை அமைப்பதில்- பின்னர் கீரியும் பாம்புமாக மாறிய -பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஏனைய தளபதிகளுடனும் இராணுவ வல்லுனர்களுடனும் இணைந்து ஆலோசனை நடத்திச் செயற்பட்டனர்.

இச் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகள்- குறிப்பாக இந்திய இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகள் -உரியவாறு பெறப்பட்டன என நம்பப்பட்டது. ஏனெனில் இந்திய இராணுவம் 1987-90 வரை வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்தமையால் அவர்கட்கு வன்னிப் பெரு நிலப்பரப்பின் புவியியல் அமைப்பும் சனச்செறிவு, விவசாய, தொழிற் துறை நிலைமைகளும் அங்குவாழ் மக்களின் உளவியலும் நன்கு தெரிந்திருந்தது. இன்றும் வடக்கு-கிழக்கின் மூலை முடுக்குகள் யாவும் இந்திய

இராணுவத்திடம் வரைபட, புள்ளிவிவர நுணுக்கங்களுடன் உள்ளமை புறக்கணிக்கக்கூடியதல்ல. முன்பு புலிகள் இயக்கத்தை இறுதித் தோல்விக்கு இட்டுச் செல்வதற்குத் தம்மால் இயலாததைக் கருதி, இலங்கை இராணுவ மூலம் அதை அடையச் சகல ஒத்துழைப்பையும் இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் இராணுவத்திற்கும் இந்தியா வழங்கியது. போரின் முடிவையடுத்து, இப் போர் "இந்தியாவின் போர்" என மகிந்த ராஜபக்சவும் ஏனைய தலைவர்களும் அழைத்தமை நினைவுகூரத்தக்கது.

எனவே கிளிநொச்சியைக் கைப்பற்ற இலங்கை இராணுவம் தொடுத்த கடுந் தாக்குதல்கள் 2008ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் 2009ன் தொடக்கம் வரை நீடித்தன. ஜனவரி 2ஆம் திகதி, அரசாங்கப்படைகள் கிளிநொச்சியைக் கைப்பற்றி, அங்கு சிங்கக் கொடியேற்றித் தமது வெற்றிச் செய்தியை அறிவித்தனர். அடுத்த நகர்வுகள் பற்றி அடுத்த அத்தியாயத்திற் காண்போம்

# 25

# புலிகளின் முடக்கம்

2008ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குப் பின், வன்னிப் போர்க்களத்தில் பாரிய இராணுவத் தாக்குதல்களும் நகர்வுககளும் இடக் கைப்பற்றல்ககளும் நடந்தன. வன்னியின் மேற்கில் இராணுவம் நாச்சிக்குடாவை 21.08.2008இல் கைப்பற்றியது. அதன் பின், மூன்று மாத இடைவெளிக்குள் புலிகளின் மிக முக்கிய கட்டுப்பாட்டுப் பகுதியாகவும் இராணுவ முக்கியம் பெற்ற இடமாயும் இருந்த பூநகரியை 15.11.2008இல் கைப்பற்றியது. தமது பூநகரி இராணுவ நிலைகளில் இருந்தே புலிகள் பலாலி நோக்கிய எறிகணை வீச்சை அவ்வப்போது நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இராணுவத்தினர் பலாலி படைத்தளத்திற்கு அருகிலிருந்த ஊரெழு எறிகணைத் தளத்திலிருந்து பூநகரிக்கும் புலிகளின் ஏனைய இலக்குகட்கும் பல்-குழல் எறிகணைகளை ஏவியமை,

போர்க்கால இராணுவச் செயற்பாட்டில் முக்கியமான ஒரு பகுதியாகும்.

வன்னியின் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி முன்னேறுவதில் இராணுவத்தின் 8வது படையணி முனைப்புடன் இயங்கியது. பூநகரி அதன் வசமானதும், கிளிநொச்சி அதன் அடுத்த இலக்கானது. ஏ-9 பாதையில் அமைந்த கிளிநொச்சி நகரத்தைக் கைப்பற்றுவது, இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை, வெற்றியின் அரைப் பங்கை அடைவது போன்று இருந்தது. எனவே கிளிநொச்சிக்கான போர் கடுமையாயிருக்கும் என இராணுவத் தரப்பு எதிர்பார்த்தது. அவ்வாறு மதிப்பிடுவதற்கு வன்னிப் போர்களத்தில் கிளிநொச்சி புலிகளின் தலைநகரம் போன்று செயற்பட்டு வந்தமை முக்கிய காரணமாகும். புலிகள் கிளிநொச்சியைத் தமது நிர்வாக மையமாகக் கட்டியெழுப்பியமை பற்றி ஏற்கனவே இந் நூலில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது.

அத்தகைய கிளிநொச்சி, 02.01.2009இல் இராணுவத்திடம் வீழ்ந்தது. அதிற் கவனிக்க வேண்டியது யாதெனில், இராணுவம் எதிர்பார்த்ததற்கு மாறாகப், புலிகள் கிளிநொச்சிக்காகப் போரிடவே இல்லை. எதிர்த் தாக்குதலின்றி அவர்கள் அங்கிருந்து விலகினர். அது புலிகளின் போர்த்தந்திரப் பின்வாங்கல் எனப் புலி ஆதரவாளர்களாற் பிரசாரப்பட்டது. அதன்படி, 1995ஆம் ஆண்டின் "ரிவி ரச" இராணுவத் தாக்குதலுக்கு முகங்கொடாது வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கும் பின்பு வன்னிப் பெருநிலத்திற்கும் பின்வாங்கியது போன்று புலிகள் கிளிநொச்சியிலிருந்து கிழக்கு நோக்கிப் பின்வாங்கினர். பின்வாங்கிய புலிகள் கிளிநொச்சி மாவட்ட எல்லை கடந்து முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குட் தம்மைத் தக்கவைத்தனர். அதாவது, விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகட்குப் பின்வாங்கித் தமது நிலைகளை வலுவாக்குவதில் முனைப்பாயினர். விசுவமடுவில் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குச் சகல வசதிகளுடனும் பாதுகாப்புடனும் பாரியசெலவில் அமைத்த வீடொன்று இருந்தமையை இங்கு குறிப்பிடத்தகும்.

முன்னேறி வந்த இராணுவம், விசுவமடுவின் ஒரு பகுதியோடு நின்று, கைப்பற்றிய பகுதிகளை வலுப்படுத்திப் புலிகளின் எதிர்த் தாக்குதல்கட்கு முகங்கொடுக்குமாறு நிலைகொண்டது. இக் கட்டத்தில் புலிகளின் பின்வாங்கலுடன் மக்களும் இடம்விட்டு இடம்பெயர்ந்தவாறிருந்தனர். முல்லைத்தீவின் கடற்கரைப் பகுதியையும் அதையண்டிய உட்கிராமங்களையும் கொண்ட குறுகிய பிரதேசத்தில் நாலு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருந்தனர். அப் பிரதேசத்தின் சூழலும் அங்குள்ள வளங்களும் இத் தொகையினரின் தேவைகட்கு ஈடுகொடுக்க இயலாதிருந்தன. தங்குமிட வசதிப் போதமையாலும் உணவு பெறுவதில் இருந்த பெருஞ் சிரமங்களாலும் மருத்துவ வசதி கிடையாமையாலும் மக்கள் தமது அன்றாடவாழ்வை நடத்தக் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். குறிப்பாகப், பெண்களும் குழந்தைகளும் முதியோரும் நோயாளிகளும் பெரும் துன்பங்கட்குள்ளாயினர். அதேவேளை, இராணுவப் பக்கத்திலிருந்து வந்த எறிகணை வீச்சுகளும் விமானக் குண்டுத் தாக்குதல்களும் படுகாயங்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தின.

இந் நெருக்கடிச் சூழலில், 2009ஆம் ஆண்டின் தொடக்கத்தித்திலிருந்து மக்களிடையே புலிகள் மீது அதிருப்தி மேலெழலானது. புலிகள் மீது நம்பிக்கையீழும் வளரலானது. அவற்றுக்குப் பல காரணங்கள் இருந்தன. முக்கியமாகப், புலிகள் தமது நிர்வாகக் கட்டமைப்பைக் கவனித்த அளவுக்கு மக்களின் உணவு, உடை, உறைவிடம் போன்ற தேவைகளைக் கவனிக்கத் தவறினர். இதனால் புலிகளை நம்பிச் சென்ற மக்கள் விரைவாக விரக்திக்குள் ஆழ்ந்தனர்.

அதேவேளை, புலிகள் இயக்கம் இராணுவத்தை எதிர்கொள்வதில் பல்வேறு அக நெருக்கடிகளை எதிர்நோக்கியது. குறிப்பாகச், சொல்லத்தக்களவு ஆயுதபலம் இருந்தபோதும், அதைப் பயன்படுத்தத் தேவையான ஆட்பலம் இருக்கவில்லை. புலிகளின் போர் இழப்பை ஈடுசெய்ய இயலாதபடி ஆளணித் தட்டுப்பாடு காணப்பட்டது. ஆதலால், வீட்டுக்கு ஒருவர் என்ற முந்திய நிலைப்பாட்டை வீட்டுக்கு இருவராக மாற்றி, இளவயதினரை வலுக்கட்டாயமாகப் பிடித்துச்செல்லும்

வழிமுறைகளைப் புலிகள் தீவிரமாகப் பயன்படுத்தினர். இதனால் மக்களுக்கும் புலிகளுக்கும் கடும் முரண்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் புலிகளுடன் மக்கள் மோத முற்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன. பல குடும்பங்களும் பெற்றோரும் பிள்ளைகளைப் புலிகளிடம் ஒப்படைத்துப் பரிதவித்தனர். "உங்களைவிட இராணுவத்தினர் பரவாயில்லை" என்று கூறும் நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டனர்.

இச் சூழலில் இராணுவத்தினர் புலிகளின் பகுதியில் நின்ற மக்களைத் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வரும்படி கேட்டவாறிருந்தனர். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துமாறு கிளிநொச்சிக்குக் கிழக்காயும் உடையார்கட்டிற்கு மேற்காயும் உள்ள தேவிபுரத்தில் முப்பத்தி ஐந்து சதுர கிலோமீற்றர் பிரதேசத்தை அரசாங்கம் "பாதுகாப்பு வலயமாகப்" பிரகடனம் செய்தது. இராணுவம் மக்களைப் பாதுகாப்பு வலயத்திற்கு வருமாறு பிரசாரஞ் செய்தது. புலிகள் இயக்கம் மக்களைக் கட்டாயப்படுத்தி மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதாக அரசாங்கம் பரப்புரை செய்தது. அதேவேளை, புலிகள் இயக்கம் தமது தொடர்பு சாதனங்கள் மூலம் நம்பிக்கை தரும் பரப்புரைகளைச் செய்தனர். தாங்கள் பலமிழக்கவில்லை எனவும் இராணுவம் பேரழிவை எதிர்நோக்குகிறது எனவும் தீவிரமான பரப்புரைகள் இடம்பெற்றன. அதையொட்டிப், புலம்பெயர்ந்த மேற்குலக நாடுகளில், புலிகள் வெல்லப் போகிறார்கள் என்றும் அதற்குப் போதிய நிதிவளம் தேவை என்றும் ஒவ்வொரு குடும்பமும் தனி நபர்களும் கட்டாயம் இரண்டாயிரம் யூரோக்கள் தரவேண்டுமென வற்புறுத்தியும் அவ்வாறு தர மறுப்போர் இலங்கை திரும்பும் போது சிக்கல்கட்கு உள்ளாவர் என மிரட்டியும் பணம் பெற்றனர். புலிகள் தோற்றபின் இவ்வாறு கறந்த பணத்திற்கு என்ன நடந்தது என்று எவரும் அறியாத மர்மச் சூழல் தொடர்கிறது.

முல்லைத்தீவின் குறுகிய பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் மக்கள் உணவுக்கும் மருந்துக்கும் இருப்பிடத்திற்கும் அல்லற்பட்டு அலைந்த வேளை, புலிகளிடம் போதிய பணப்புழக்கம் இருந்தது. அவர்களே அடகுக்குத்

தங்கநகைகளைப் பெற்றுப் பணங் கொடுத்தனர். வியாபாரத்தில் ஈடுப்பட்டு மக்களுக்குப் பொருட்களை அதிக விலையில் விற்றனர். வெளிநாடுகட்குத் தொலைத் தொடர்பை ஏற்படுத்தி நிமிடத்திற்கு நூறு இருநூறு முன்னூறு ரூபாவென வசூலித்தனர்.

வெளிநாடுகளில் இருந்து உறவினர்களும் நண்பர்களும் அனுப்பும் 'உண்டியல்' பணத்தை மாற்றுவதிலும் புலிகளே அதிகார அங்கீகாரம் பெற்றிருந்தனர். இவ்வாறான செயல்கள்மூலம் தங்களை நம்பிவந்த மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மக்கள் சார்பான சிந்தனையோ செயலோ புலிகளிடம் தென்படவில்லை. ஒரு உண்மையான விடுதலை இயக்கத்திற்கு இருக்கவேண்டிய மக்கள்மீதான அக்கறையோ மக்களைப் பேணும் பண்போ புலிகள் இயக்கத்திடம் காணப்படவில்லை.

அதேவேளை, மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்லலாயினர். 2009இன் தொடக்கத்தில் 7000 பேர் வரை சென்றதாக ஒரு தகவல் கூறியது. மறுபுறம் இராணுவத்தின் மீது கடும் எதிர்த் தாக்குதலுக்கு வியூகம் அமைப்பதில் புலித் தளபதிகள் ஈடுபட்டனர். இந்நிலையில், தெற்கில் மறைந்திருந்த புலிகள், வன்னிக்கு வெளியே கவனத்தைத் திருப்புமாறு குடிமக்கள் சார்ந்த இலக்குகள் மீது தாக்குதல்களைத் தொடுத்தனர். அவற்றில் ஒன்றாக, 2009 பெப்ரவரி 21ஆம் திகதி கீழ் மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கரமிட்டிய கிராமத்தில் தம்மை அடையாளம் காட்டாத ஆயுததாரிகள் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பெண்கள், வயோதிபர், குழந்தைகள் உட்படப் பதினாறு விவசாயிகள் கொல்லப்பட்டனர். இக் கொலைக்குப் புலிகள் இயக்கமே பொறுப்பென விரைவாகத் தெரியவந்தது.

மற்றொருவகைத் தாக்குதலிற், புலிகளின் சிறிய-ரக விமானமொன்று 2008 ஒக்டோபரில் கொழும்பில் களனி-திஸ்ஸ மின்வலு நிலையத்தைத் தாக்கித் தப்பிச்சென்றது. இம் முயற்சி, புலிகளிடம் விமானப்படை ஒன்று இருக்கிறது என்ற ஊகம் உண்மையென உறுதிப்படுத்தியது. அடுத்த தடவை, 2009 பெப்ரவரியில், முல்லைத்தீவிற் தோல்வியை எதிர்நோக்கிய வேளை, புலிகளின் இரண்டு சிறிய-ரக விமானங்கள் கொழும்புத்

துறைமுகத்தையும் விமானப்படைத் தலைமையகத்தையும் இலக்குவைத்தன. விமான-எதிர்ப்புத் தாக்குதலின் காரணமாக விமானங்கள் இரண்டும் இலக்குத்தவறின. விமானங்களும் வெடிகுண்டுகளுடன் அவற்றைச் செலுத்திய தற்கொலைப் புலிகளும் அழிவுற்றனர்.

புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் சில, கொழும்பு நகரத்திலும் இடம்பெற்றன. கொழும்பில் மறைந்திருந்து புலிகள் இயக்க நடவடிக்கையில் ஈடுப்பட்டவர்களே அவற்றை முன்னெடுத்தனர். இத் தாக்குதல்களில் சாதாரண சிங்கள, தமிழ் மக்களே கொலைக்கும் படுகாயங்கட்கும் உள்ளானார்கள். தமிழ்க் குறுந்தேசியவாத வக்கிரம் கொண்டோர் இத்தகைய தாக்குதல்களை நியாயப்படுத்தி உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வீரதீரப் பிரசாரம் செய்தனர். இராணுவ ஒடுக்குமுறையை எதிர்த்த தமிழ் மக்களிற் பெரும்பாலோரும் இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் குடிமக்களை இலக்காக்கிய இத்தகைய தாக்குதல்களை நிராகரித்தனர்.

நீண்டகாலமாக, இருதரப்புப் போர் முன்னெடுப்புகளும் சமாந்தரமாகச் செல்வதாகவும் சமபலத்துடன் இருப்பதாகவும் நம்பப்பட்டது. குறிப்பிட்ட காலம் வரை அதிற் பகுதி உண்மை இருந்தது. ஆனால் ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின், போர்முறையிலும் போர் ஆயத்தங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் பயனாக 2006ஆம் ஆண்டிற்குப் பின் போரானது துரிதமாக உச்சத்தை நோக்கிச் செல்லுமாறு இருதரப்புகளும் இயங்கின. போரின் இவ் வளர்ச்சி, கிளிநொச்சியை இலங்கை இராணுவம் கைப்பற்றிப் புலிகளின் பின்வாங்கியதுடன், மேலுங் கோரமான அழிவை நோக்கிச் செல்லலானது.

கிளிநொச்சியைப் புலிகள் கைவிட்ட வேளை, நான்கு லட்சமளவான மக்களில் தம்முடன் வர விரும்பியோர் வரலாம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் போக விரும்பியோர் போகலாம் எனப் புலிகள் அறிவித்திருந்தாற், கணிசமான மக்களின் சாவைத் தவிர்த்திருக்கலாம். அத்தகைய முடிவு, மக்கள் சார்பானதாகவும் இருந்திருக்கும். ஆனாற், புலிகள் அவ்வாறு செய்யாது ஒரு

புறத்தில் வெறும் நம்பிக்கையைப் பரப்பியும் மறுபுறத்தில் அச்சுறுத்தல்கள் மூலமும் பெருந்தொகையான மக்களைத் தம்முடன் வைத்திருக்க முயன்றனர். மக்களில் ஒரு பகுதியினர் புலிகள் இயக்கம் பற்றியும் அதன் தலைவர் மீதும் அதீத நம்பிக்கையுடன் இருந்தனர். அத்தகையோருக்கு நாட்டினதும் சர்வதேசத்தினதும் அரசியல் பொருளாதார வளர்ச்சிப் போக்கும் அமெரிக்க-மேற்குலக-இந்திய வல்லரசுகளின் உள்ளார்ந்த நோக்கங்களும் விளங்கவில்லை. இது புலிகள் இயக்கத்தின் மீதான ஒரு வகை "மூட நம்பிக்கை" எனலாம். இவ்வாறு கூறுவது, பேரினவாத ஒடுக்குமுறை போரின் மூலம் அரசியல் தீர்வு காண்பது எனும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான நிலைப்பாட்டினை ஏற்பதாகாது.

போரின் அடுத்தகட்ட நகர்வுகளும் கோர அழிவுகளும் பற்றி அடுத்த அத்தியாயத்திற் பார்ப்போம்.

# 26

# பேரழிவில் முடிந்த இறுதிச் சமர்

நான்காம் ஈழப் போர் அதன் இறுதிக் கட்டத்தை நெருங்கியது. இலங்கை இராணுவத்திற்கு முன்னேற்றத்துடனும் நம்பிக்கைகளுடனும் புலிகள் இயக்கத்திற்குப் பின்வாங்கல்களுடனும் இழப்புகளுடனும் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு தொடங்கியது. புலிகளும் அவர்களோடு புறப்பட்ட பெருந்தொகையான மக்களும் விசுவமடுவுக்கு அப்பால் உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு ஊடாகக் கடற்கரையை நோக்கித் த்ள்ளப்பட்டனர். என்றுமில்லா அளவுக்குச் சனநெருக்கம் ஓங்கிய அதே வேளை, மக்கள் அடிப்படை வசதிகள் அறவேயற்ற சூழலில் இருந்தனர்.

இந்நிலையில், மக்களுக்கு ஆறுதலளிக்கும்

திட்டமெதுவும் புலிகளிடம் இருக்கவில்லை. எனவே, மக்கள் மத்தியில் அவர்கள்மீது நம்பிக்கையீனமும் சினமும் நாளாந்தம் வளர்ந்தது. மக்கள், தாம் கொண்டுவந்தவற்றைப் பாவித்துத் தாம் வசிக்கச் சிறிய கொட்டில்களை அமைத்ததுடன், எறிகணைத் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறு பதுங்குகுழிகளையும் வெட்டினர். ஆனால் உணவு, மருந்து, உடை என்பவற்றுக்குப் பெருஞ் சிரமப்பட்டனர். புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புகளால் மக்களுக்கு உதவமுடியாதளவுக்கு இடப்போதாமையும் விநியோகத் தொடர்புகளின் துண்டிப்பும் இருந்தன. மக்கள் கையிற் கொண்டுவந்த உணவுப் பொருட்களும் பணமும் வற்றலாயின.

இராணுவம் முல்லைத்தீவு, அலம்பில், வற்றாப்பளை, கேப்பாபிலவு தொட்டு வடக்கே சுண்டிக்குளம் வரை சுற்றிவளைத்துத் தாக்குதல்களை வலுப்படுத்தியது. தருமபுரம், பிரமந்தனாறு பகுதிகள் உட்பட இராணுவத்தின் நிலைகொள்ளல் மிக இறுக்கமாக இருந்தது. அத்துடன், வான் தாக்குதல்களும் வேவு பார்த்தலும் வலுத்துவந்ததோடு, கிழக்குக் கடலிற் கடற்படைச் செயற்பாடு பன்மடங்கு அதிகரித்தது. இராணுவத்தின் 53வது, 55வது, 58வது படைப்பிரிவுகள் புலிகளையும் அவர்களோடு சென்ற மக்களையும் ஒதுங்கி ஓரிடத்திற் குவியச்செய்தன.

இராணுவத்திற்கான வளங்கள் யாவும் சிரமமின்றிக் கிடைத்தன. முன்னைவிட அதிக தாக்குதல் அனுபவங்களையும் போதிய இராணுவத் தளபாடங்களையும் நவீன சுடுகலன்களையும் வெடிப் பொருட்களையும் கொண்டிருந்த இராணுவம், போரை வெல்லும் மனவுறுதியையுங் கொண்டிருந்தது. புலிகள் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்து விரைவாகத் தேறிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னிலும வேகத்துடன் போர்க்களத்திற் தலைமை தாங்கினார். படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வா, கேணல் ரவிப்பிரியா, மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகிய போர்முனை அனுபவம் கொண்டோர் போர்முனைகளில் தளபதிகளாக இருந்தனர்.

அரசாங்கம் இப் போரை இறுதிப் போராக்குவதிற் கவனமாயிருந்தது. பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச இராணுவத்திற்கு வேண்டிய அனைத்தையும் வழங்குவித்தார். அதேவேளை, போரில் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தும் மக்களை மீட்பதே தனது நோக்கம் என அரசாங்கத்தின் பரப்புரைகள் கூறின. அதற்கமைய, அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைட்கு "மனிதாபிமான நடவடிக்கை" எனப் பெயரிட்டு அதை முதன்மைப்படுத்திச் செய்திகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தது.

அதேநேரம், புலிகளின் தரப்பில் நாளாந்தம் நம்பிக்கையீனம் வளர்ந்தது. புலிகளின் முக்கிய தளபதிகள் பலர் ஏற்கனவே போர்க்களத்தில் இறந்துவிட்டனர். எஞ்சியிருந்தோர் மிகவும் மனமுடைந்து இருந்தனர். அவர்களில் சொர்ணம், தீபன், பொட்டம்மான், ஜெயம் போன்றோர் புலிகளுக்குத் தலைமைதாங்கித், தமது தலைவர் பிரபாகரனைப் பாதுகாப்பதிலுங் கவனமாக இருந்தனர். பிரபாகரனால் முன்போன்று கட்டளை பிறப்பிக்க முடியவில்லை. கள நிலைமைகளும் அதற்கு அமைவாக இருக்கவில்லை. புலனாய்வுப் புலிகள் வழங்கிய தகவல்களை வைத்து முன்புபோற் தாக்குதல் வியூகங்களை வகுக்க முடியவில்லை. ஒருபுறம் புலிகள் பலவீனமடைந்து வந்தமையும் இன்னொருபுறம் மக்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்தியையும் அத்துடன் புலிகள் நம்பியிருந்த "சர்வதேச நாடுகள்" தம்மைக் கைவிட்டு வருவதையும் கண்டு பிரபாகரன் மனமுடையலானார்.

இந்நிலையில் அரசாங்கம் அறிவித்த போரற்ற சிறிய பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கானோர் மிக நெருக்கமாக வாழ வேண்டியதாயிற்று. இந்து மாகடலுக்கும் சிறு கடலான நந்திக் கடலுக்கும் இடையில் அமைந்த அப் பிரதேசம், முல்லைத்தீவின் கடற்கரையை அண்டி, எட்டுக் கிலோமீற்றர் (5 மைல்) நீளமும் 1.2 கிலோமீற்றர் (முக்கால் மைல்) அகலமும் கொண்ட நிலப்பரப்பாகும். அங்கு மக்கள் தங்கலாம் என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது. தெற்கே முல்லைத்தீவின் வட்டுவாகலிற்

தொடங்கி வெள்ளாம் முள்ளிவாய்க்கால், கரையாம் முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், புதுமாத்தளன், மாத்தளன் ஆகிய பகுதிகளைக் கொண்ட இப் பிரதேசத்திற் போதிய கட்டிடங்களோ மக்கள் வாழவுகந்த வசதிகளோ இருக்கவில்லை. பல்லாயிரக்கணக்கானோர் நெருக்கமாகவும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும் இருந்த அப் பகுதியில் ஒரு சிறு வைத்தியசாலைக் கட்டிடமும் ஒரு கத்தோலிக்கத் தேவாலயமும் இருந்தன. வலைஞர்மடத்தில் அமைந்த இத் தேவாலயத்தின் உள்ளும் புறமும் மக்கள் நிரம்பிவழிந்தனர். புலிகள் இயக்கத்தினர் தமது ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை விடாது தொடர்ந்துவந்ததால், ஆள்பிடிகாரர்களிடமிருந்து தப்பவேண்டி இளம் வயதினர் இத் தேவாலயத்தை நாடியதால், தேவாலயத்தில் இருந்தோரிற் பெரும்பாலோர் இளவயதினராக இருந்தனர். எனினும், ஒரு கட்டத்தில், தேவாலயமென்றும் பாராது அங்கிருந்து பெருந்தொகையான இளவயதினரைப் புலிகள் பிடித்துச் சென்றனர். தேவாலயத்தின் பிதாவால் அதைத் தடுக்க முடியவில்லை.

இந்நிலையில், மக்கள் உணவுக்கும் ஏனைய அடிப்படைத் தேவைகட்கும் அல்லற்பட்டு அலைந்தனர். பசியும் பட்டினியும் அவர்களை வாட்டியதால், ஒரு கட்டத்தில், மக்கள் புலிகளுடன் முரண்பட்டு மோதும் நிலைக்கு வந்தனர். அதன் பின்பு, புலிகள் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க ஆரம்பித்தனர். கஞ்சியைப் பெறுவதற்கு மக்கள் பாத்திரங்களுடன் நீண்ட வரிசையில் நின்றனர். சிலர் பசி தாங்கமுடியாது மயங்கி வீழ்ந்தனர். வயது வந்தவர்கள் ஒருபுறம் துன்புறச், குழந்தைகளும் பாலகர்களும் பாலும் உரிய உணவுமின்றித் தவித்தனர்.

ஐ.சி.ஆர்.சி. எனப்படும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கொண்டுவந்து வழங்கிய உணவுகளைக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மக்கள் பெற்றனர். உணவுப் பற்றாக்குறை மேலோங்கியதால், மக்கள் உணவுப் பார ஊர்திகளை உடைத்து உணவுப் பொருட்களை அள்ளிச்சென்றனர். அவ்வேளை, அரிசி ஒரு கிலோ 2000 ரூபா, சீனி ஒரு கிலோ 1000 ரூபா, மீன் ஒரு கிலோ 2000 ரூபா என விலைபோயின. ஏனைய

பொருட்களும் அதிக விலைக்கே விற்கப்பட்டன. புலிகள் இயக்கத்திற்கு மக்கள் தம்முடன் இருப்பது தேவைப்பட்டது. ஆனால் மக்களுக்கு உணவையும் பிற தேவைகளையும் அதி குறைந்தளவிலும் வழங்கமுடியவில்லை. இவற்றின் நடுவிலும் புலிகளின் ஆள்பிடிகாரர்கள் வலுகட்டாயமாக இளவயதினரைப் பிடித்துச்சென்றனர். மக்கள் தங்கள் இருப்பிடங்களைச் சிறு கொட்டில்களாக அமைத்துக் கூரையில் உரப் பைகளையும் சேலைகளையும் கட்டினர். அதனோடு சேர்த்துப் பதுங்கு குழிகளையும் அமைத்திருந்தனர்.

மாத்தளன் வைத்தியசாலை மிகச் சிறியது. நோயாளர்கட்கும் காயமடைந்தோருக்கும் அங்கேயே மருத்துவம் செய்யப்பட்டது. நான்கு மருத்துவரும் தாதிமாரும் சேவை-அடிப்படையில் மருத்துவத்துடன் சம்பந்தபட்டோரும் முடிந்தளவிற்குச் சேவைகளை வழங்கினர். ஆயினும் அவ் வைத்தியசாலையால் மருத்துவத் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை. மருந்துகள் போதியளவிற் கிடையாததுடன் கிடைத்தற்கரிய முக்கிய மருந்துவகைகளை அரசாங்கம் தடைசெய்திருந்தது. உணவையும் மருந்துகளையும் விநியோகித்த ஐ.சி.ஆர்.சி.யே நோயாளர்களைக் கடல்வழியே திருகோணமலைக்குக் கொண்டுசென்றது. ஒரு பயணத்தில் 500 பேர் வரை செல்லக்கூடிய போதும், அக் கப்பல் வாரத்தில் ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே வந்துசென்றது. இவ்வாறு மிக நெருக்கி இருந்த பெருந்தொகையான மக்கள் உணவு, உறைவிடம், மருந்து, தண்ணீர் ஆகியவற்றின் தட்டுப்பாட்டால், தமது சமூக வரலாறு என்றுமே கண்டிராத கொடும் வாழ்க்கை நிலைமைகளை அனுபவித்தனர்.

அதேவேளை, புலிகள் இராணுவத்தின் மீது தொடுத்த தாக்குதல் முயற்சிகளைக், கடும் இராணுவத் தாக்குதல்கள் முறியடித்தன. அம் முயற்சிகளின் போது இறந்த முக்கிய தளபதிகளில் ஒருவர் கேணல் சொர்ணம் ஆவார். படுகாயமடைந்து உடல்தேறமுடியாத நிலையில் என்றுமே கழற்றாது தனது கழுத்தோடிருந்த சயனைட் குப்பியைக் கடித்து இறந்தார். மேலும் பல முக்கிய முன்னணிப் போராளிகள் கொல்லப்படலாயினர்.

அத்தனைக்கும் நடுவே, தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பு வலுப்பட்டுவந்தது. ஆயுத விநியோகப் பாதைகளும் அடைபட்டமையால் புலிகளின் ஆயுதபலம் நாளுக்குநாள் குறைந்தது. குறிப்பிட்ட சில ஆயுதவகைகள் மட்டுமே அவர்களிடம் இருந்தன. இராணுவத்தின் தாக்குதல்களை எதிர்த்துநிற்க அவை போதவில்லை. இவ்வாறு புலிகளின் இராணுவவலிமை குறைந்து எதிர்த்தாக்குதல் இயலாதநிலையில், இராணுவச் சுற்றிவளைப்புப் பலமடைந்தது. புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் தனிமைப்பட்டுப் பலவீனமடைந்தது.

அதேவேளை, அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், பிரித்தானியா உட்பட ஏறத்தாழ எல்லா வல்லரசுகளும் வெவ்வேறு அளவுகளிலும் வழிகளிலும் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்தன. 2009 ஜனவரி பிற்பகுதியில் பராக் ஒபாமா இரண்டாம் முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அப் பதவியேற்புடன் அவர் இலங்கையின் போரில் தமிழர் தரப்பிற்கு (அதாவது புலிகளுக்கு) ஆதரவான சில முடிவுகட்கு வருவார் எனவும் அமெரிக்கா இலங்கைத் தமிழர்களைக் கைவிடாது எனவும் புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழர்களும் நம்பினர். கடலிலும் ஆகாயத்திலும் அமெரிக்கப் படைகளை எதிர்பார்த்த புலிகட்கும் அமெரிக்க விசுவாசிகட்கும் ஏமாற்றமே எஞ்சியது. இந் நிலையிற் புலிகள் இயக்கம் 26.04.2009 அன்று ஒருதலைபட்சப் போர்நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால் அரசாங்கம் அதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. போர் மேலும் உக்கிரமடைந்தது. பொதுமக்கள் உயிரிழப்புகள் நினைக்கமுடியா உச்சத்தைத் தொட்டன.

# 27

# புலிகளின் அவல முடிவு

2009 மே மாத ஆரம்பம் முதல் 'நாலாவது ஈழப் போர்' கொடூரமும் பயங்கரமும் மிகுந்திருந்தது. இலங்கை வரைபடத்தில் மேற்கே புத்தளம் தொடக்கம் வடக்கு-கிழக்கை உட்படுத்திக் கிழக்கே பாணம வரை தமிழீழ எல்லையை வரைந்து முன்னெடுத்த தனித் தமிழீழப் போராட்டம் முல்லைத்தீவிற் பெருங்கடலை அண்டிய எட்டுக் கிலோமீற்றர் நீளமும் 1.2 கிலோமீற்றர் அகலமும் கொண்ட மணற்பரப்பில் சுருங்கித் தனது இறுதிமூச்சை எதிர்நோக்கியது. எவரும் வெல்ல இயலாதது என மார்தட்டிப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் தனிமைப்பட்டுப் பலவீனமடைந்து தளர்ந்து தள்ளாடியது. தன்னிகரற்ற தலைவன் எனப் போற்றப்பட்ட வேலுப்பிள்ளை பிரபாகரனின் போர்க்கள வெற்றிகளை ஈட்டிய தளபதிகளும் படுகாயப்பட்டும் சயனைட் வில்லைகள் உட்கொண்டும் மடியலாயினர். சொர்ணம், பானு, ஜெயம், தீபன் போன்ற முக்கிய தளபதிகள் அடுத்தடுத்துப் போர்களத்தில் மரித்தனர். இளம் போராளித் தளபதியும் பிரபாகரனின் மகனுமான சார்ள்ஸ் அன்டனியும் இராணுவத்திற்கு எதிரான தாக்குதலிற் கொல்லப்பட்டார். அத் தாக்குதலுக்கு முன்பு, இதே சார்ள்ஸ் அன்டனி முன்னர் போரிலே

முடமான நிலையில் இயக்கத்தால் பாதுகாக்கப்பட்ட போராளிகளை, வேறுவழியின்றி, இரண்டு பேரூந்துகளில் ஏற்றி அவற்றைக் குண்டுவைத்துத் தகர்த்துக் கொன்றார் என மக்களும் போராளிகளும் சொல்லியுள்ளனர். இறுதிப் போரில் இது போன்ற பல கொடுமைகளைத் தமிழீழப் போராட்டம் கண்டது.

ஒருபுறம் புலிகள் இயக்கம் கணங்கணம் பலவீனமடைந்து நகரமுடியாத நிலையை நெருங்கியது. அதேவேளை, புலிகளை நம்பி வந்த லட்சக்கணக்கான மக்கள் மிகச்சிறிய நிலப்பகுதியில் விவரிக்க முடியாத துன்பதுயரங்களை அனுபவித்தனர். அவற்றிலிருந்து விடுபட மக்களுக்கு இருந்த ஒரே வழி, சுற்றிவளைத்த இராணுவத்திடம் போவதாகவே இருந்தது. அதையே இராணுவமும் எதிர்பார்த்தது. ஆனாற் புலிகள், மக்கள் அவ்வாறு போவதைத் தடுக்குமாறு ஏற்கனவே தமது மூன்றடுக்குப் பாதுகாப்புத் தடுப்பரண்களை அமைத்திருந்தனர். அதையும்மீறி மக்கள் ஆங்காங்கே இராணுவப் பிரதேசத்திற்குச் சென்றனர். அதைத் தடுக்கப் புலிகள் மக்கள் மீது சுட்டனர். அதனாற் பலர் இறந்தனர். இத் தகவலைத் தப்பிவந்த மக்கள் ஒளிவுமறைவின்றிக் கூறினர்.

ஒரு கட்டத்திற் கரையாம் முள்ளிவாய்கால் எனுமிடத்தில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் துணிவுடன் புலிகளின் மூன்றடுக்குப் பாதுகாப்பை உடைத்து நந்திக் கடல் ஊடாக இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதியை அடைந்தனர். மக்களது இத்தகைய உடைப்பும் இராணுவத்திடம் சென்றமையும் புலிகளுக்குப் பெரும் பின்னடைவாகியது. தமிழ்த் தேசியவாதிகள் வழமையாக நம்பியது போன்று அமெரிக்காவில் பராக் ஒபாமாவின் இரண்டாவது பதவியேற்பும் தமிழ் நாட்டின் ஜெயலலிதாவின் அமோக வெற்றியும் இறுதிப் போரில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவரும் எனும் நம்பிக்கை போன்று, புலிகள் இயக்கத் தலைமையிடம் எஞ்சியிருந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் படிப்படியாகத் தகர்ந்தன. சர்வதேசம் தங்களை நட்டாற்றில் விட்டமையைத் தலைமைத் தளபதிகள் உணர்ந்தனர். எனவே, அவர்கள் தங்களுள் மூவிதமான முடிவுகட்கு வந்தனர். முதலாவது, இறுதிவரை

இராணுவத்தை எதிர்த்துப் போராடி மடிவது. இரண்டாவது, சயனைட் அருந்தித் தற்கொலை செய்வது. மூன்றாவது, இராணுவத்திடம் சரணடைவது. இம் மூன்றும் போர் முனையில் இடம்பெற்றன. அதேவேளை, மிக விசுவாசமானவர்கள், தமது தலைவர் பிரபாகரனைப் பாதுகாத்துத் தப்பவைப்பதில் முனைப்புடனிருந்தனர். பிரபாகரனைப் பாதுகாக்கப் பல-அடுக்குப் பாதுகாப்பு வளையங்கள் இருந்தன. ஏனைய அடுக்களைச் சேர்ந்த தனது பாதுகாவலர்களைத் தன்னைவிட்டுத் தப்பிச்செல்லும்படி பிரபாகரன் வற்புறுத்தினார். அவர்களிற் பலர் அவ்வாறு செல்லமறுத்தும், அவர்கள் வற்புறுத்தி விலகிச் செல்லவைக்கப்பட்டனர். எஞ்சிய இருபது பேரளவிற் பிரபாகரனுடனேயே இருந்தனர். இராணுவத்திடம் சரணடைந்த புலிகளிற் சிலர் காட்டிக்கொடுப்பிலும் ஈடுபட்டனர். புலிகள் தப்பிச்செல்லப் பெருங்கடலும், நந்திக் கடல் முனையூடாகக் கேப்பாபுலவு வற்றாப்பளை நோக்கி நகரக்கூடிய தரைவழியுமென இரண்டு வழிகளே இருந்தன. பெருங்கடல் மூலம் தப்பமுயல்வது இடரானதாயிருந்தது. ஏனெனில், இலங்கைக் கடற்படை வலிமையாக அணிவகுத்து நின்றது. இருந்தும் அதனாற் தரையிறக்கம் எதையுஞ் செய்யமுடியவில்லை. எனவே தரைவழியாக மட்டுமே- அதுவும் பெருந் தாக்குதல் மூலமே -எதையுஞ் செய்ய வாய்ப்பிருந்தது. அம் முயற்சியும் இறுதியிற் தோற்றது.

இவற்றிடையே மேற்குலக நாடுகளின் ஆலோசனையின் அடிப்படையில் மே 17ஆம் திகதி புலிகள் இயக்க அரசியற்துறைப் பொறுப்பாளர் நடேசன், திலக், புலித்தேவன், இளவரசன், செல்வம் மாமா ஆகியோருடன் சிங்களவரான நடேசனின் மனைவி வினீதா உட்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் வெள்ளைக் கொடிகளுடன் இராணுவத்திடம் சரணடையச் சென்றனர். இத்தொடர்பில், இந்தியாவின் ஐ.நா. ராஜதந்திரி நம்பியாரின் பெயரும் அடிபட்டது. எனினும் இலங்கை இராணுவம் அனைவரையும் அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன. இங்கும் புலிகள் இந்தியாவையும் அமெரிக்க, மேற்குலக ராஜதந்திரிகளையும் நம்பி ஏமாந்ததாகவே புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கடும்

கவலையும் விசனமும் தெரிவித்தன. புலிகளின் துப்பாக்கிகளை மௌனித்த பின் வெள்ளைக்கொடி பிடித்துச்சென்ற புலிகளின் முடிவு கொடியது.

2009 மே 1ஆம் திகதியும் நந்திக் கடலுக்குத் தெற்கே காட்டுப் பகுதிகளில் ஆங்காங்கே இரு தரப்பினரும் போரில் ஈடுபட்டனர். ஆனால் அவற்றில் எதுவும் பெரிய மோதலல்ல. பிரபாகரனும் பொட்டம்மானும் அவர்களது நம்பிக்கைக்குரிய போராளிகளும் பதினெட்டாம் திகதி இரவு கொல்லப்பட்டிருக்கலாம் என இராணுவம் ஊகித்தது. பத்தொன்பதாம் திகதி பிரபாகரனின் இறந்த உடல் புலிகளின் சீருடையில் அரசாங்கத் தொலைக்காட்சியிற் காட்டப்பட்டது. இராணுவம் கண்டெடுத்தவை என சூசை, ஜெயம், பானு ஆகிய புலித் தளபதிகளின் உடல்களும் தொலைக்காட்சியிற் காட்டப்பட்டன.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்னும் தாரக மந்திர முழக்கத்துடன்முன்னெழுந்து வீர நடைபோட்டு வளர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முப்பத்திமூன்று வருடங்கட்குப் பின் அழித்தொழிக்கப்பட்டது. தரை, கடல், வான்படைகளையும் காவல் துறை, கரும்புலிகள், புலனாய்வு அணிகளைக் கொண்ட பெரும் படையணிகளையும் முல்லைத்தீவின் கடற்கரை ஓரத்தில் இலங்கை இராணுவம் அழித்து வெற்றிகண்டது. கழுத்துகளில் சயனைட் குப்பிகள் கட்டிய இளைஞர்கள் புலிகள் இயக்கத்தின் சீருடை அணிந்தபடி ஒரே தலைவன், ஒரே இயக்கம், ஒரே இலக்கு என இணைந்திருந்தனர். "தலைவர்" "அண்ணை" என உயர்வாகவும் மதிப்பாகவும் கட்டுப்பாட்டுடனும் போராளிகள் அனைவரும் போற்றிய பிரபாகரன் போர்காலத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் சாவைத் தழுவிய சோக நிகழ்வு புலிகளை ஏற்காதவர்களின் நெஞ்சங்களையுந் தொட்டது. மாற்றுக் கருத்துடையோரும் பிரபாகரனின் வீரத்தையும் தியாகத்தையும் மறுக்கவில்லை. ஏறத்தாழ மூன்று தசாப்தகட்கு மேல் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் இன விடுதலையின் பெயரால் இளைஞர்கள் தம் இன்னுயிரை அர்ப்பணித்ததை எவ்வாறுங் கொச்சைப்படுத்தல் தகாது.

சாத்தியமற்ற ஒரு கொள்கையையும் அதைச் செயற்படுத்த முயன்ற புலிகள் இயக்கத்தையும் சரியானதொரு நிலைப்பாட்டிலிருந்து விமர்சிப்பது அவசியம். அவ் விமர்சனம் எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் வெற்றிகரமான விடுதலை மார்க்கத்திற்கு வழியமைக்க உதவவேண்டும். ஒரு கட்டுரையின் முதல் எழுத்தும் முதல் வசனமும் தவறாக அமையின் அவற்றைத் தொடரும் கட்டுரை மேலும் தவறுகளைக் கொண்டே அமையும். தமிழீழக் கோரிக்கையை 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் போன்றவர்களும் தமிழரசுக் கட்சியினரும் முன்வைத்தபோது அதன் தவறான நிலைப்பாட்டையும் சாத்தியமின்மையையும் மாக்சிச லெனினிசவாதிகள் தெளிவாகச் சுட்டிக்காட்டினர். ஆனால் அதில் எதுவும் பாராளுமன்றத்திற்கும் பின்பு ஆயுதப் போராட்டத்திற்கும் முன்னின்றவர்களின் செவிகளில் ஏறவில்லை. "ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை?" எனக் கேட்டே சகல தமிழ்த் தேசியவாதிகளும் தமிழீழத்திற்கு முழக்கமிட்டனர். இவ்வாறு முழக்கமிட்டவர்களில், தமிழ் மேட்டுக்குடியினர் தம்மை உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வளப்படுத்தினர். ஆனால் ஏறத்தாழ மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டோர்- முக்கியமாக உழைக்கும் தமிழ் மக்கள் -தமது உயிர்களையும் உடைமைகளையும் இழந்தனர். படுகாயப்பட்டோரும் வீடுவாசல் இழந்தோரும் பல லட்சம் பேராவர்.

இத்தகைய பாரிய இழப்புகளும் அழிவுகளும் நிகழ்ந்தமைக்குப் புலிகள் இயக்கம் மட்டுமன்றி ஆயுதம் ஏந்திய அனைத்து இயக்கங்களும் அவற்றை ஊக்குவித்தோரும் பொறுப்பாவர். தமிழ் மக்களின் முன் அவர்களனைவருங் குற்றவாளிகளே. ஆனால், இன்றும், புலிகள் இயக்கத்தை நியாயப்படுத்துவோர் மட்டுமன்றி ஏனைய இயக்கத்தோரும் தமது கடந்தகாலத்தின் தவறான அரசியல் நிலைப்பாட்டையோ போராட்ட வழிமுறைகளையோ மக்களுக்குத் தாம் இழைத்த தவறுகளையோ சுயவிமர்சன முறையிற் காணத் தயாராக இல்லை. இது, தமிழர் ஆதிக்க அரசியலில் நாம் காணும் மிக மோசமான தீய அம்சமாகும். அத்துடன், தமது கறைபடிந்த கரங்களோடு பாராளுமன்றம்,

மாகாணசபை, ஊராட்சிச் சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் புனிதமான ஜனநாயகவாதிகள் போற் பங்குகொண்டு பதவி பெறுகின்றனர். கடந்த காலத்திற்கும் தமக்கும் ஒரு உறவும் இல்லாதது போன்று நேர்மையற்று நடப்பதையும் காண்கிறோம். அதுமட்டுமன்றிக், கொலை கொள்ளை சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களே இன்று தமிழ்த் தேசியத்தின் காவலர்கள் போற் பதவியேற்று உரத்துப் பேசுவதையும் காண்கிறோம். இவற்றை ஏன் இவ்வேளை கூறவேண்டுமெனில், முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் புலிகள் இயக்கம் மட்டுமே காரணமல்ல என்பதாலாகும். யதார்த்தமற்றதும் வெற்றிபெற முடியாததுமான தமிழீழக் கோரிக்கையை முன்மொழிந்து முன்னெடுத்த அத்தனை தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியற் கட்சிகளும் இயக்கங்களும் தலைவர்களும் தனிப்பட்டோரும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

உலகின் வெற்றிபெற்ற விடுதலைப் போராட்டங்களோடு முப்பத்திமூன்று வருடகால ஈழப் போராட்டத்தை ஒப்பிடுவது அவசியம். ஜனநாயகப் புரட்சிகளும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் சோசலிசப் புரட்சிகளும் வெற்றியடைந்து தத்தமது நாடுகட்கும் மக்களுக்கும் மீட்சியளித்தன. சில விடுதலைப் போராட்டங்கள் பெருந் தோல்விகளையும் மோசமான அழிவுகளையும் ஈந்தன. அத்தகைய ஒன்றாகவே தமிழீழப் போராட்டம் அமைகிறது.

வட்டுக்கோட்டை முதல் முல்லைத்தீவு வரையான காலப்பகுதியின் வரலாற்றுப் பக்கம் ஒவ்வொன்றும் சரியான, உறுதியான, சமூக விஞ்ஞான ஆய்வுக்கு உட்பட வேண்டும். அதன் மூலமே இலங்கையின் பாசிசமாகிவரும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தையும் அதன் அடிப்படையான வர்க்க ஒடுக்குமுறையையும் அறியலாம். எனவே தேசிய இன விடுதலை என்பது வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக்கி முன்னெடுக்கும் தேவையைத் ஈழப் போராட்டத்தின் தோல்வி வரலாற்றுப் பாடமாகத் தமிழ் மக்களின் முன்வைக்கிறது. *(பின்னிணைப்பு-19ஐக் காண்க.)*

# 28

# இங்கிருந்து எங்கு?

"வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை" எனும் கட்டுரைத் தொடராக வெளிவந்த இந் நூலின் இறுதிப்பகுதி இது. தனித் தமிழீழக் கோரிக்கை, 1976இல் வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் பண்ணாகத்தில் நடந்த தமிழர் கூட்டணி முதலாவது மாநாட்டில், முடிந்த முடிவெனத் தீர்மானிக்கப்பட்டது. முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் மூலமும் தமிழீழத்தை வென்றெடுக்கப் போவதாகத் தமிழர் கூட்டணி சூளுரைத்தது. அது சாத்தியமற்றுப் போகவே, ஆயுத நடவடிக்கை மூலம் அதை வென்றெடுக்கப் பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் இயக்கங்கள் 1983க்குப் பின் களமிறங்கின. காலப்போக்கில், பிற யாவையும் ஒதுக்கித் தனியொரு இயக்கமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும் தனியொரு தலைவனாக வேலுப்பிள்ளை பிரபாகரனும் மேலெழுந்து முன்னெடுத்த தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் இறுதியாக 2009 மே 18இல் முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் நந்திக் கடல் ஓரத்தில் தலைவர் பிரபாகரனதும் அவரது தளபதிகளதும் அழிவுடன் தோற்றது. அத்துடன் தமிழீழக் கோரிக்கையும் மூழ்கியது. விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் நம்பிப் பின்சென்ற

மக்களிற் பல்லாயிரக்கணக்கானோரும் அழிந்தனர். 33 வருடங்கள் நீண்ட தமிழீழத்துக்கான போராட்டத்தைப் பற்றி 28 பகுதிகளில் மிகச் சுருக்கமாகவே கூறவியலும். இந் நூலிற் குறிப்பிட்டுள்ள பல்வேறு விடயங்கள் விரித்து எழுதவேண்டியன. அதற்கான தேவை தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் இன்னமும் உள்ளது.

33 வருட காலத் தமிழீழப் போராட்டத்திற் பல தமிழ் இளைஞர் இயக்கங்கள்- குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் -தமது போராளிகளான இளைஞர்களைக் களப்பலி கொடுத்துள்ளன. பேரினவாத இராணுவத்தின் மூலமும் சகோதரப் படுகொலை எனப்படும் உள், வெளி இயக்க அழிப்புகள் மூலமும் எல்லா இயக்கங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கொடுமையாகக் கொல்லப்பட்டனர். இவ்வாறு, தமிழீழக் கோரிக்கையின் தொடக்கமுதற் போரின் இறுதிவரையான காலத்தில் எல்லா இயக்கங்களையும் சேர்ந்த ஏறத்தாழ ஒரு லட்சம் இளைஞர்கள் களப்பலியாகினர். போராட்டத்தின் போக்கில் இறந்த பிறரையுஞ் சேர்த்துநோக்கின், வடக்கு-கிழக்கிலும் அப்பாலும் ஏறத்தாழ மூன்று லட்சம் தமிழ் மக்கள் தமிழீழப் போராட்டத்தின் பெயரால் உயிரிழந்தனர். மக்கள், பல கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களை இழந்தனர். பல ஆயிரம் பேர் அங்கவீனர்களாகி இழப்புகளை ஈடுசெய்ய முடியாது நொந்து நொடிந்த நிலையில் அவல வாழ்வு வாழ்கின்றனர். துணைவனை இழந்த துணைவியர், துணைவியை இழந்த துணைவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், உறவுகளையும் நண்பர்களையும் இழந்தோர் என வடக்கு-கிழக்கெங்கும் சோக வாழ்வு வாழ்கின்றனர். வடக்கு-கிழக்கில் கணவரை இழந்து வாழும் பெண்களின் தொகை எண்பத்தொன்பதாயிரம் என ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது. பேரினவாத ஒடுக்குமுறையின் விளைவான தமிழீழப் போராட்டமும் அதை முறியடித்த இராணுவத்தின் ஒடுக்குமுறைப் போரும், தமிழ் மக்களை மட்டுமன்றிச் சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழர்கள் ஆகிய அனைவரையும் வெவ்வேறு அளவுகளில் உயிரிழப்புக்கட்கும் சொத்து அழிவுக்கும் உள்ளாக்கியது. அதேவேளை, தமிழீழப் போராட்டத்தின் பெயரால் உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த

நாடுகளிலும் சொத்துச் சுகம் தேடிய கணிசமானோர் உள்ளமையும் நோக்கற்குரியது.

இவ்வாறு, தமிழீழத்திற்கென உருவாக்கிய கொள்கையும் போராட்டங்களும் தமிழரை அடக்கி ஒடுக்கிய பேரினவாதப் போரும் தற்செயல் நிகழ்வுகளின் தொடரல்ல. அவற்றை வரலாற்று வளர்ச்சியின் வழி நோக்குவது அவசியம். தேசிய இனப் பிரச்சினையும் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் ஒரு நூற்றாண்டு வரையான காலநீட்சியுடையன. அது, ஒருவகையிற், கொலனிய எசமானர்களான பிரித்தானிய ஆட்சியினர் தமது ஆட்சி நிலைப்பிற்கும் சுரண்டற் கொள்ளைக்கும் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஊடே நட்டு வளர்த்த நச்சு மரமுமாகும். இலங்கைக்குச் சுதந்திரம் தருவதாகக் கூறித் தமது பாராளுமன்ற அரசியலமைப்பின் மூலம் இலங்கையின் உயர்வர்க்க, உயர்சாதி மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்திடம் கொலனியவாதிகள் ஆட்சியதிகாரத்தைத் கையளித்துச் சென்றதோடு அந்த நச்சு மரம் அழியவில்லை. இலங்கையின் ஆளும் வர்க்கங்களும் மேட்டுக்குடி ஆதிக்க அரசியற் சக்திகளும் பயனடையுமாறு, அது பின்னைய இலங்கை அரசியலில் மேலும் வளர்க்கப்பட்டது. அந்நிய மேலாதிக்கவாதிகளும் அதனாற் பயனடைந்தனர். அதாவது, கொலனியத்தின் கீழ்த் தோன்றி முன்னெழுந்த தேசிய இனப் பிரச்சினை நவகொலனியத்தின் கீழும் தொடர்கிறது. இச் சிறிய தீவின் தேசிய இனப் பிரச்சினைக்கு மிக எளிதாக அரசியற் தீர்வுகாண வாய்ப்புகள் இருந்தன. ஆனால் ஆளும் வர்க்கத்தினரும் சிங்கள பௌத்தப் பேரினவாதிகளும் ஒருபுறமாகவும், தமிழ்க் குறுந்தேசியவாதிகளும் இன்னொருபுறமாகவும் அந்நிய ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்கவாதிகளும் வேறொருபுறமாகவும் அதற்கு இடமளிக்கவில்லை. அவர்கள் தேசிய இனப் பிரச்சினையைத் தத்தமக்கேற்பப் பயன்படுத்தி உச்ச நலன்களையும் பொருளாதார அரசியல் இலாபங்களையும் பெற்றனர். இன்றும் பெறுகிறார்கள்.

தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவித்து எட்டு வருடங்கள் கடந்தும் விடயங்கள் உரியவாறு அணுகி ஆராயப்படவில்லை.

1. தேசிய இனப் பிரச்சினை எவ்வாறு வரலாற்று ரீதியாகத் தோன்றி வளர்ந்து தமிழீழக் கோரிக்கையாக முன்னெழுந்தது?

2. அது எவ்வாறு ஆயுதப் போராட்டமாக வளர்ந்தது?

3. அது ஏன் தோற்றது?

4. அக் கோரிக்கை மீள எழும் வாய்ப்புண்டா?

பேரினவாதத் தரப்பினர், தேசிய இனப் பிரச்சினை இருப்பதை ஏற்றுத் தீர்வுக்குரிய ஆய்வுகளை இன்னமும் முன்வைக்கவில்லை. அவ்வாறே, தமிழ்க் குறுந்தேசியப் பழைமைவாத ஆதிக்க அரசியற் தரப்பினர், தமிழீழக் கோரிக்கை நியாயமானதா, இலங்கையின் குறிப்பான நிலைமைகளில் இயலுமானதா, அதனூடு தமிழ் மக்களின் விடுதலை கிட்டுமா என்பன பற்றிய மீள்மதிப்பீட்டுக்கோ சுயவிமர்சனத்திற்கோ துணியவில்லை.

ஒடுக்கப்படும் தேசிய இனமோ இனப்பிரிவோ சமூகமோ தனக்கெதிரான ஒடுக்குமுறைகட்கு எதிராகப் போராடுவதானால், உரிய வழிகளிற் கொள்கை வகுத்துத் தூரநோக்குடன் போராடினால் மட்டுமே தனது விடுதலை இலக்கை அடையலாம். அதற்கு வழிகாட்டும் உயராற்றல் மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனைக்கே உண்டு. மாறாக, விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குமாறு அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஐரோப்பிய வல்லரசுகளும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கவாதிகளும் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கவனிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் மாக்சிச, சோசலிச, இடதுசாரிக் கருத்துகளையும் சிந்தனைகளையும் முறியடிக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். குறிப்பாக, அமெரிக்க மத்திய புலனாய்வு முகவரகம் (சி.ஐ.ஏ.) *365* நாட்களும் இருபத்திநான்கு மணிநேர விழிப்புடன் இயங்குகிறது. ஏனைய ஏகாதிபத்திய முதலாளிய உளவு நிறுவனங்களும் அத்தகையனவே.

*33* வருடங்களாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை இனப் பிளவாகவும் போராட்டங்களாகவும் ஈற்றில் ஆயுதப் போராட்டமாகவும் வளர்த்து முன்தள்ள அமெரிக்க சி.ஐ.ஏ.யும்

இந்திய "றோ" நிறுவனமும் முன்னின்றன. தமிழீழக் கோரிக்கை உருவாக உதவி, அதற்கு உருக்கொடுத்து வளர்த்த இந்திய, அமெரிக்க, ஐரோப்பிய சக்திகளே இறுதிப் போரிற் புலிகள் இயக்கத்தையும் அதன் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவரக் கைகோத்தன. சிங்கள பௌத்தப் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறைப் போரை முன்னெடுத்து வெற்றிபெறப் பல்வகை ஆதரவையும் வழங்க அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய ஆட்சியாளர்களை விடச் சீனாவும் யப்பானும் பிற நாடுகளும் பங்காற்றின. குறிப்பாக, அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகட்கும் இந்திய பிராந்திய மேலாதிக்க வல்லரசுக்கும் தத்தமது தேவைகள் நிறைவுற்றதும் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டத்துக்கு முடிவுகட்டும் தேவை ஏற்பட்டது. எனவே தான், 2009இல் முல்லைத்தீவின் நந்திக் கடலோரம் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவரான பிரபாகரனையும் இலங்கை இராணுவம் அழிப்பதற்குப் பச்சைக்கொடி காட்டி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்குப் பூரண ஒத்துழைப்பும் உதவியும் வழங்குவதில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் ஒரே கோட்டில் ஐக்கியப்பட்டன.

அவர்களின் நிலைப்பாட்டையிட்டு வியப்புற்று, ஏன் அவ்வாறு நடந்தது என வினவுந் தேவை தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தோருக்கு இருக்கலாம். ஆனால் மாக்சிச லெனினிசவாதிகட்கு அதில் வியக்க எதுவும் இருக்கவில்லை. ஏனெனில் மோதலின் முதலும் முடிவும் அமெரிக்க, ஐரோப்பிய, இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் வேண்டியவாறே அமைந்தன. மூன்று லட்சம் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டமை கூட, அவர்கள் எதிர்பார்த்ததில் ஒரு சிறு பகுதியே. அது மட்டுமன்றி, அத் தொகையில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் உள்ளடங்கியமை ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்கவாதிகட்கு மனநிறைவான விடயமே. ஏனெனிற் பிரிவினைக்கான தமிழீழப் போராட்டத்திலும் தெற்கில் நிகழ்ந்த ஜே.வி.பி. இளைஞர் கிளர்ச்சிகளிலும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட இளையோர் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் காணாமற் போயினர். தமது வறுமை காரணமாகவும் வேலைவாய்ப்பின்மையாலும் இலங்கை இராணுவத்திற் சேர்ந்து

உயிரிழந்த இளைஞர்களின் தொகையும் பல்லாயிரமாகும். இறந்த இளைஞர்களில் ஏகப்பெரும்பாலோர் இலங்கையின் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் பிள்ளைகளாவர். அவர்கள் நாட்டின் சமூக மாற்றத்திற்கான புரட்சிகர சக்திகளாக வரக்கூடியோர். அவ்வாறான இளந்தலைமுறையின் அழிவு ஏகாதிபத்தியச் சக்திகட்கும் உள்நாட்டுப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கட்கும் மன நிறைவானதே.

33வருடத்தமிழீழப்போராட்டத்தாலும்அதைமறுத்தபோராலும் மக்களின் கவனம் திசைதிருப்பப்பட்டது. அதன் மறைவில் நாடு நவகொலனியத்தின் கீழ் நவதாராளப் பொருளாதாரத்திற்கு முற்றுமுழுதாக அடிமைப்பட்டது. உலகமயமாதலின் கீழ்த் தாராளமயமும் தனியார்மயமும் வெகுஜன எதிர்ப்பேதுமின்றி முழுமையாக நிறைவேறின. உள்நாட்டில் வளர்ந்த நுகர்வுப் பொருளாதாரமும் தரகு முதலாளியமும் தேசிய முதலாளியத்தை நலிவித்து அதன் ஒரு பகுதியை உள்வாங்கின. அவற்றை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உட்பட்ட 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புப் பாதுகாத்தது.

எனவே, தனித் தமிழீழக் கோரிக்கை தனியே தேசிய இனப் பிரச்சினையை மட்டும் குறிக்கவில்லை. இன முரண்பாடு பிரதானமானதாக இருந்த அதேவேளை, நாட்டின் அடிப்படை வர்க்க முரண்பாட்டுடன் அது பிணைந்திருந்தது. எனவே, தனித் தமிழீழக் கோரிக்கை ஏகாதிபத்தியத்துடன் தொடர்புடையதாயும் அதற்கு உதவுவதாயும் அமைந்தது.

எனவே 1976-2009 கால கட்டத்தின் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான போராட்டம் என்பதை வெறும் பிரிவினைப் போராட்டமெனப் பேரினவாத நோக்கிலோ தமிழர் பழைமைவாதக் குறுந்தேசிய நோக்கிலோ பார்ப்பதிற் பயனில்லை. அதை மாக்சிச உலகக் கண்ணோட்டத்தில் வர்க்கப் போராட்ட அடிப்படையில் பார்ப்பதே நாட்டிற்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கட்கும்- குறிப்பாகத் தமிழ்த் தேசிய இனத்திற்கும் -அவற்றின் விடுதலைக்கும் நலமானது. (பின்னிணைப்புகள் 20, 21, 22ஐக் காண்க.)

# பின்னிணைப்புகள்

## கால ஒழுங்கில் முக்கியமான கட்சி அறிக்கைகள் சில

## பின்னிணைப்பு 01

# டேவிற்சனை விடுதலை செய்!

## தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் அறிக்கை

கடந்த *30-9-82, 1-10-82* ஆகிய இரு நாட்களிலும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு கோரி ஏழு அமைப்புகளின் சார்பில் துண்டுப்பிரசுரம் அச்சிட்டு விநியோகித்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்களும் கைது செய்யப்பட்டதும் தாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதும் வடமாகாணத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டதும் மோசமான ஜனநாயக மீறல் நடவடிக்கைகளாகும். இச்செயலை எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக கண்டிக்கின்றது. இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) சார்பில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், பொலிஸ்மா அதிபர் அண்மையில் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் சட்டரீதியான, ஜனநாயக

ரீதியான அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்விதத் தடைகளும் இருக்க மாட்டாது எனக் குறிப்பிட்டிருந்தார். அப்படியாயின் சட்டரீதியாகவும் ஜனநாயகரீதியாகவும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு சுதந்திரமான கருத்தை முன்வைத்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்களும் கைது செய்யப்பபட்டு, தாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஏன்? இது அப்பட்டமான ஜனநாயக மீறல் சம்பவமாகும்.

டேவிற்சன் சார்ந்துள்ள ஸ்தாபனத்தின் கருத்துகள் பலவற்றுடன் எமது கட்சியின் கொள்கைகள் ஒத்துப்போகவில்லை. அதேவேளை அந்த அமைப்பின் மீதும் அதன் செயலாளர் டேவிற்சன் மீதும் அரசு தொடுத்துள்ள அடக்குமுறை நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோதச் செயல்களையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். டேவிற்சனையும் ஏனைய இளைஞர்களையும் உடன் விடுதலை செய்யவேண்டும். அல்லது சாதாரண சட்டங்களின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யவேண்டும் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகின்றது.

**(செம்பதாகை, 1982 ஐப்பசி)**

பின்னிணைப்பு 02

# தடையும் தடுப்புக்காவலும் கண்டிக்கப்பட வேண்டியன!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் "சுதந்திரன்" "சற்றடே றிவியூ" ஆகிய இரு பத்திரிகைகளையும் அரசு தடை செய்து அவற்றின் காரியாலயங்களையும் மூடி, சீல் வைத்துள்ளது. அதேவேளை, தமிழ் ஈழ விடுதலை அணியின் தலைவர்களாக டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங்கம், கோவை மகேசன் ஆகிய இருவரும் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவங்களை நாம் விசனத்துடன் கண்டிக்கிறோம்.

சுதந்திரன் பத்திரிகை வெளியிடும் கருத்துக்கள், கட்டுரைகள் பற்றித் துளியளவும் எமக்கு உடன்பாடு கிடையாது. அதேபோல், டாக்டர் தருமலிங்கம், கோவை மகேசன் இருவரினதும் தடுப்புக்காவலையும் ஜனநாயக மீறல் செயல்கள் என்ற வகையில் நாம் கண்டிக்கின்றோம். எனவே தடையை நீக்கி, தடுப்புக்காவலை ரத்து செய்யுமாறு கோருகின்றோம்.

**(செம்பதாகை, 1983 யூலை)**

பின்னிணைப்பு 03

# தமிழர் பிரச்சனைகளைத் தீர்க்க சகல கட்சிகளையும் கூட்டுக!

ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் மூலம் ஏற்படும் மரணங்களுக்குச் சட்ட ரீதியான மரணவிசாரணை எதுவும் தேவை இல்லை என்ற விதியும், அவ்வாறான துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமடைந்தவர்களின் சடலங்களைப் பொலிஸ் விரும்பியபடி தகனம் செய்வதற்கான விதியும் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது ஏற்கனவே பாரபட்சமான முறையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நிரந்தரப் பீதியுடன் வாழும் தமிழ்மக்களுக்கு மேலும் பயத்தையும் கவலையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பகுதி மக்களுக்கு எதிராக இவ்வாறான விதிகளையோ இராணுவ நடவடிக்கைகளையோ கொண்டு வருவதன் மூலம் அரசியல் தன்மை வாய்ந்த இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதைக் கடந்தகால அனுபவங்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அதற்கு மாறாக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மிகக் கவனமாக ஆராயப்பட்டு அதற்கான

அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும். இதுவே இன்றைய நிலையில் பதட்ட நிலையைத் தணிக்க உதவிகரமாக அமையக் கூடிய தொன்றாகும்.

அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எந்தவித ஆக்கபூர்வமான பெறுபேறுகளையும் தரவில்லை. எனவே அரசாங்கம் தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் கூறியதுபோல் சகல அரசியல் கட்சிகளையும் அழைத்துத் தமிழர் பிரச்சினை பற்றி ஆராயவும், முடிவுகள் மேற்கொள்ளவும் முன்வரவேண்டும். இது பிரச்சினையைக் குறைந்த பட்சமாவது தீர்த்து வைக்க எடுக்கப்படும் முதல் முயற்சியாக அமையும் என எமது கட்சி கருதுகின்றது.

எனவே, சகல இராணுவ நடவடிக்கைளையும் பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட அண்மையில் அமுலுக்குக் கொண்டுவந்த விசேட விதிகள் சகலதையும் வாபஸ்பெற்றுத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஓர் அரசியல் தீர்வு காணும்பொருட்டு சகல அரசியல் கட்சிகளையும் தேசபக்த பிரமுகர்களையும் பொது ஸ்தாபனங்களையும் ஒரு மாநாட்டிற்கு அழைக்கவேண்டும் என எமது இலங்கை கம்பியூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள் விடுகின்றது.

**(செம்பதாகை, 1983 யூலை)**

பின்னிணைப்பு 04

# குட்டிமணி, ஜெகன் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஜனாதிபதிக்குக் கடிதம்

குட்டிமணி, ஜெகன் ஆகிய இரண்டு தமிழ் இளைஞர்களும் அரசியற் கைதிகள் என்ற வகையில் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை இரத்துச் செய்யப்படவேண்டும். மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய குழுச் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்.

மேலும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: தற்போது தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகன் ஆகிய இரு இளைஞர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கென்று பின்பற்றிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் எமது கட்சி எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை, வேறுபட்ட

கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றும் அரசியல் கைதிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவது கம்யூனிஸ்டுகளாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே, அவ்விரு இளைஞர்களுக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என எமது கட்சி வற்புறுத்துகிறது. அத்துடன், விசாரணைக்கு உட்படுத்தப்படாமலும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமலும் சிறைகளிலும் இராணுவ முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் நாம் வலியுறுத்துகின்றோம்.

அத்துடன், அரசியல் காரணங்களுக்காகப் பாவிக்கப்பட்டுவரும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நடைமுறையில் இருந்து நீக்கிவிடும்படியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது.

**(செம்பதாகை 1983 புரட்டாதி)**

பின்னிணைப்பு 05

# பேரினவாத-அந்நிய சக்திகளுக்காகப் பிரச்சினையின் தீர்வைப் பலியிடவேண்டாம்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள்

*இன்றைய நெருக்கடியான நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஒரே வழி தமிழர் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காண்பதேயாகும். இதற்கான தனது பொறுப்பை வெறும் கண்துடைப்பு நடவடிக்கையால் அரசாங்கம் தட்டிக்கழித்துவிடாது தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல கட்சிகளையும் கொண்ட ஒரு சர்வ-கட்சி மாநாட்டை*

முன் நிபந்தனைகள் எதுவும் அற்ற ரீதியில் நடாத்துவதற்கு முன்வரல் வேண்டும். கடந்த காலத்தில் ஏனைய கட்சிகளை அழைக்காது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மட்டும் அரசு பேச்சு வார்த்தைகளை நடாத்தி வந்தது. ஆனால் இன்று தமிழர் கூட்டணியை அழைக்காது அதற்கு முன்நிபந்தனைவிதித்துவிட்டு ஏனைய கட்சிகளை அழைத்துத் தனது முடிவுகளைத் திணிக்க முயலுகின்றது. அரசின் இத்தகைய போக்கு நிலைமைகளை மேலும் சிக்கலாக்கி பிரச்சினைகளை மோசமடையவே செய்யும் என்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டியின் சார்பாக அதன் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கை குறிப்பிடுவதாவது, இன்றைய நிலையில் மேலும் பிரச்சினைகளைச் சிக்கலாக்கி நிலைமைகளை மோசமடையச் செய்யும் நோக்குடன் பேரினவாத சக்திகளும் அந்நிய வல்லரசுகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வலுப்படுத்த விரும்புவோரும் செயலாற்றி வருகின்றனர். இத்தகைய தீய சக்திகளின் நலன்களுக்காகவோ அன்றித் தேவைகளுக்காகவோ தேசியப் பிரச்சினையாகிவிட்ட தமிழர் பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்து வைக்கும் வழிவகைகளைப் பலியிட்டுக் கொள்ளவேண்டாம் எனவும் எமது கட்சி கோருகிறது.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் அதன் நேரடிப் பார்வையின் கீழ் நான்கு தடவைகள் திட்டமிட்ட இனவாத வன்செயல்களால் தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டுள்ளனர். இவற்றின் தாக்கங்களினால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பிரிவினைக்கோரிக்கையின்பக்கம்செவிசாய்க்கும்சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டனர். இன்றைய நிலையிலும் கூடத் தங்களது பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படுவதையே தமிழ்மக்கள் மனதார விரும்புகின்றனர். ஆனால் அரசாங்கம் தனது பிடிவாதத்தாலும் வேறுபல உள் நோக்கங்களாலும் தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் முயற்சிகளில் கடுமையான தயக்கத்தைக் காட்டி வருகின்றது. அரசின் தயக்கப் போக்கும்

தட்டிக்கழித்துவிட முயலும் தன்மையும் நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை என்பனவற்றுக்கு அபாயத்தை விளைவிக்கும் அந்நிய வல்லரசுகளின் தலையீட்டுக்கே வழிவகுத்துவிடும்.

ஆதலால் இவ் அபாயத்தை உணர்ந்துகொள்ளும் சகல தேசிய, ஜனநாயக முற்போக்கு சக்திகளும் மக்களும் முன்னிபந்தனை அற்ற ரீதியில் தமிழர் கூட்டணி உட்பட சர்வகட்சிகளின் மாநாட்டைக் கூட்டித் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் கோரிக்கையை வற்புறுத்தும் இயக்கத்தை முன்னெடுக்க முன்வரல் வேண்டும். இது இன்று அவசியமான ஒரு தேசியத் தேவையாகும். அதேவேளை, இதுவரை தடை நீக்கப்படாது இருக்கும் இரண்டு கட்சிகளையும் உடன் தடைநீக்கம் செய்யவேண்டும் என எமது கட்சி வற்புறுத்துகின்றது.

**(செம்பதாகை 1983 ஐப்பசி)**

பின்னிணைப்பு 06

# பணயக் கைதிகளாயுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய்

உலகில் உள்ள மிக மோசமான அடக்குமுறைச் சட்டங்களில் இலங்கையின் பயங்கரவாதத் தடை சட்டமும் ஒன்று என்பது உலகறிந்த உண்மையாகிவிட்டது. ஐந்து வருடங்களுக்கு முன்பு ஜே.ஆர். அரசு இச் சட்டத்தைக் கொண்டுவந்த போது அதன் எதிர்கால விளைவு எப்படி இருக்கப் போகின்றது என்பதைப் பலரும் சுட்டிக்காட்டினர். தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதுடன் மட்டும் இச் சட்டம் நிற்கப் போவதில்லை, இந்த அரசுக்கு எதிராகக் கை தூக்கும் ஒவ்வொருவரையும் அது பதம் பார்த்தே தீரும் என்பதை நாம் தெளிவு படுத்திக் கூறியிருந்தோம். இன்று அவ்வாறே நடைபெறுகின்றது.

இன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமார் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் இராணுவ முகாம்களிலும் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர். பயங்கரவாதத்துடன்

தொடர்புடையவர் என்று ஒருவரை ஆயுதப் படையினர் சந்தேகித்தால் அவர் தடுப்பு முகாமுக்கோ, இராணுவ முகாமுக்கோ அனுப்பப்படுவார். சில வேளைகளில் சிறைகளுக்கு மாற்றப்பட்டு அடைக்கப்படுவர்கள். மாதங்கள் வருடங்கள் சென்றும் கூட விடுவிக்கப்படாது வைத்திருக்கப்படுகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி ஒரு சந்தேக நபரைப் பதினெட்டு மாதங்களுக்கு மேல் விசாரணை இன்றி வைத்திருக்க முடியாது. ஆனால், நான்கு ஐந்து வருடங்களாக விசாரணையும் இன்றி விடுதலையும் இன்றி, குற்றச்சாட்டுகள் எதையும் சுமத்தமுடியாத நிலையிலே பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் ஜே.ஆர். தனது பாராளுமன்ற கொள்கை விளக்கப் பேச்சின் போது தன்னுடைய “அரசியல் தீர்வு” யோசனைகளைத் தீவிரவாத இளைஞர்கள் ஏற்றுக் கொண்டால் குற்றம் சுமத்தப்படாத நிலையில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்கத் தயாராக உள்ளதாக அறிவித்தார். அப்படியாயின் குற்றச்சாட்டுக்கள் அற்ற தமிழ் இளைஞர்களை இன்றைய போராட்டத்தில் பணயக் கைதிகளாகவே தாங்கள் வைத்திருப்பதை ஜே.ஆரே பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார். பணயக் கைதிகளை விடுவிக்காது வைத்திருப்பவர்கள் மோசமான பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். அதன்படி பார்த்தால் இலங்கையின் அதி உன்னத பயங்கரவாதிகள் ஜே.ஆரும் அவரது கூட்டாளிகளுமாவார்.

**(புதியபூமி 1987 பங்குனி)**

## பின்னிணைப்பு 07

# பிராந்திய யுத்தகளம்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பது ஏதோ நடக்க முடியாத பெரிய விடயமல்ல. இந்நாட்டில் வாழ்ந்து வரும் சகல இன மக்களினதும் வரலாற்றுப் பாரம்பரியங்களை உரியபடி கணக்கிற் கொண்டு இனவெறி - மதவெறி - பேரினவாத அகங்காரம் என்பவற்றை விட்டெறிந்து இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண முடியும். ஆனால் ஜயவர்தன தலைமையிலான யூ.என்.பி அரசு அவ்வாறான ஓர் அரசியற் தீர்வுக்கு வருவதை விடாப்பிடியாக நிராகரித்தே வந்துள்ளது. அதற்கான உள்ளார்ந்த காரணம் சிங்கள இனத்தின் மீது அவர்கள் கொண்ட பற்றோ அன்றி பவுத்தத்தின் மீது பூண்ட அன்போ அல்ல. மேலெழுந்தவாரியான பார்வைக்கு அவ்வாறு தோன்றினாலும் அடிப்படையானது அவர்களது ஏகாதிபத்திய- முதலாளித்துவ-ஆளும்வர்க்க நலன்களும் தேவைகளுமேயாகும்.

இத்தகைய நிலையிலேயே யூ.என்.பி அரசின் இராணுவ நடவடிக்கையானது திட்டமிட்ட வழிகளில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக முடுக்கி விடப்பட்டு வந்துள்ளது. அதன் உச்ச நிலையின் ஒரு பகுதியை அண்மையில் குடா நாட்டின் ஒரு பிரதேசமான வடமராட்சியில் காண முடிந்தது.

மேற்படி வடமராட்சி இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து யூன் மாதம் 4ம் திகதியன்று இந்திய விமானங்கள் இலங்கையின் ஆகாய எல்லைக்குள் அனுமதியின்றிப் புகுந்து உணவுப் பொதிகளைக் குடா நாட்டிற்குள் போட்டுச் சென்றன. இந்தியாவின் இச்செயல் சரியானது என்றும் தவறனது என்றும் விவாதங்கள் கிளம்பியுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளாக ஆயுதப்படைகளின் அத்துமீறிய செயல்களால் உயிர், உடைமை, இருப்பிடம் என்பவற்றை இழந்த நிலையில், மேலும் அதிகரித்த இராணுவ அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ள தமிழ்மக்கள் மத்தியில் இந்தியாவின் செயல் நியாயமானது போலத் தென்படலாம். குண்டுகளல்ல உணவுப்பொதிகளே போடப்பட்டனவென்றும் "இது ஒரு மனிதநேயப் பயணம்" என்னும் பாராட்டையும் பெறலாம். ஆனால் எழுந்தமான நிலையில் அன்றி பிராந்திய ரீதியிலும் சர்வதேச நிலையிலும் விஷயங்களை ஆழ்ந்து நோக்கின் இந்தியாவின் விமானப் பொதிகள் இறக்கிய செயல் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உணவு, உடை மருந்து போன்ற நிவாரணப்பொருட்களை அனுப்ப முன்வந்த இந்தியாவின் நிலை சரியானதே. அதை இலங்கை அரசுடன் கலந்து பேசி முடிவு செய்து உரிய வழிகளில் தற்போது காணப்பட்டுள்ள இணக்கத்தின் அடிப்படையிற் செய்யாது தன்னிச்சையாக முடிவுசெய்து விமானத்தில் இருந்து போட்ட முறையே தவறானதாகும். இந்தப் பொதியிறக்கலின் பின்னால் இந்தியாவின் பிராந்திய வல்லரசு நோக்கம் நிறைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்தியாவும் இலங்கையும் பூரண இறைமையும் சுயாதிபத்தியமும் தன்னதிக்கமும் கொண்ட இரு அயல் நாடுகள். வரலாற்றுத் தொடர்புகளால் பின்னிப் பிணைந்துள்ள இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் இறைமையையும் சுயாதிபத்தியத்தையும் மதித்து நடக்கவேண்டும். இதில்பெரிய நாடு, சிறிய நாடு என்ற பேசுச்க்கு இடமிருக்க முடியாது.

இந்தியாவின் அத்துமீறிய செயல் சரியல்ல என நாம் சுட்டிக்காட்டும்போது இறைமை, தன்னாதிக்கம், சுயாதிபத்தியம்

என்ற சர்வதேசக் கோட்பாட்டைக் கவசமாகக் கொண்டு தனது சொந்த மக்களில் ஒரு பிரிவினரான தமிழ் மக்களைக் கொன்று அழித்து வரும் இலங்கை அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு எவரும் சப்பை கட்டிவிட முடியாது.

இந்திய விமானங்கள் பொதி இறக்கிய சம்பவத்தால் மட்டும் இலங்கையின் இறைமைக்கு ஆபத்து வந்துவிடவில்லை. ஏற்கனவே அமெரிக்க, பிரித்தானிய, இஸ்ரேல், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆயுதங்களும் ஆலோசகர்களும் இராணுவப் பயிற்சியாளர்களும் கூலிப்படைகளும் இந்த அரசினால் வரவழைக்கப்பட்ட அன்றே இலங்கையின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்தப்பட்டது. எனவே இலங்கையை விபசாரத்தனமாக ஏகாதிபத்திய-முதலாளித்துவ-பிற்போக்கு சக்திகளுக்குக் கையளித்து அதன் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் விலை பேசிய முதற் குற்றவாளிகள் யூ.என்.பி அரசும் அதன் தலைவரான ஜே.ஆருமே ஆவர். அதேபோல இந்தியத் தலையீட்டுக்கு வழிவகுத்துக் கொடுத்து வருபவர்களும் அவர்களேயாவர்.

இவ்வாறு தென்னாசியப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியச் சக்திகளதும் வல்லரசு-மேலாதிக்கச் சக்திகளதும் பிராந்திய யுத்த களமாக இலங்கை மாறக்கூடிய அபாயத்தைத் தேடிக்கொண்டுள்ளது. ஒரு புறத்தால் அமெரிக்காவும் பிரித்தானியாவும் இஸ்ரேலும் பாக்கிஸ்தானும் கைகோர்த்து நிற்க, மறுபுறத்தால் இந்தியாவும் அதன் நேச சக்திகளும் இணைந்து நிற்க, இலங்கை மற்றொரு லெபனான் ஆகக்கூடிய ஆபத்தே மேலோங்கி நிற்கிறது.

**(புதிய பூமி, 1987 வைகாசி-ஆனி இதழ்)**

பின்னிணைப்பு 08

# இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஊடக அறிக்கை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்தியகுழு, இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான "சமாதான ஒப்பந்தத்தின்" மீதான தனது ஆழமான ஆய்வைத் தொடர்கிறது. இவ்வொப்பந்தம் தமிழ் மக்களுடைய அவலங்களுக்கு ஒரு வரையறைக்குட்பட்ட முடிவினை வழங்கியிருப்பினும், இரு அரசாங்கங்கட்கிடையிலான இவ் உடன்பாடு குறுகியகால அடிப்படையிலோ நீண்டகால அடிப்படையிலோ தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டுவராது என்பதே கட்சியின் மத்திய குழுவின் கருத்தாகும். ஏனெனில், தமிழர் பிரச்சினையில் இடைக்காலத் தீர்வைச் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரதும் பங்கேற்புடனும் ஒத்துழைப்புடனும் விருப்பத்துடனும் மட்டுமே அடையமுடியும். ஒருதலைப்பட்சமானதும், பலவந்தமானதும், அச்சுறுத்தல்கள் மூலமானதுமான முறைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளை அம் மக்கள் மீது திணிக்கக் கூடாது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைத் தடுத்துவைப்பதனூடாகத் தமது விருப்பங்களுக்கு

உடன்படும்படியாக அவரைக் கட்டாயப்படுத்தும் இந்திய அரசாங்க முயற்சிகளை எமது கட்சி முற்றாக நிராகரிக்கிறது. தீர்வொன்றை அடைதற்கான பேச்சுவார்த்தைகளில் திரு. வே. பிரபாகரனும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் தமது கருத்துக்களை முன்வைப்பதையும் சுதந்திரமாகப் பங்கெடுப்பதையும் தமது சொந்த நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்த இரு அரசாங்கங்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, அனைத்து இளைஞர் போராளி அமைப்புக்களும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரும் இலங்கை அரசாங்கமும் பேச்சுவார்த்தைகள் மூலமே ஓர் அரசியற் தீர்வைக் கண்டடைய வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வலியுறுத்துகிறது.

மேற்கூறியவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இனது மத்தியகுழு சார்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் கே.ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[02-08-1987 அன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதியின் தமிழாக்கம்]**

பின்னிணைப்பு 9

# இந்தியப் படை வெளியேற்றம்

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

### அறிக்கை

கடந்த முப்பத்திரண்டு மாதங்களாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் இம்மாதம் இருபத்தி நான்காம் திகதியுடன் முற்றாக வாபஸ் பெறப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்குப் பாரிய உயிர்ச்சேதங்களையும் உடைமை நாசங்களையும் ஏற்படுத்தி இலங்கையின் சுதந்திரம்-சுயாதிபத்தியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவந்த இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டமையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மனப்பூர்வமாக வரவேற்கிறது. இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு

வெளியேறிச் சென்றுள்ளபோதிலும் இந்திய மேலாதிக்கச் சக்திகளின் உள்ளார்ந்த எண்ணங்களும் செயற்பாடுகளும் அற்றுப்போகவில்லை என்பதை நம்நாட்டின் சகலதரப்பு மக்களும் உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்தியகுழு, இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டமை குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது, மேற்படி அறிக்கையைக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றொரு நாடு இராணுவத் தலையீட்டை நடத்துவதன் மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்க முடியாதென்பதுடன் புதிய பிரச்சினைகளை உருவாக்கிக் காரணப்படுத்தவே அத்தகைய தலையீடு வழிவகுக்கும் என்பதனை இலங்கை மீதான இந்திய இராணுவத் தலையீடு கடந்த முப்பத்திரண்டு மாதங்களாக எடுத்துக்காட்டியுள்ளது. இத்தகைய இராணுவத் தலையீடு ஏற்படுவதற்கு இனப் பிரச்சினையை மோசமான நிலைக்கு வளர்த்துவந்த அனைத்து ஆளும் வர்க்க அரசியல் சக்திகளும் பொறுப்பாளிகள் என்பதை யாரும் தட்டிக்கழித்துவிட முடியாது. ஆதலால், இலங்கையின் இனப் பிரச்சினையை சாட்டாக வைத்து இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தொடர்ந்தும் தலையீடு செய்வதைத் தடுக்கக்கூடிய ஒரே வழி, இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்குச் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நின்றதுபோல் இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியற் தீர்வைக் காண்பதிலும் ஐக்கியப்பட்டு விரைவான தீர்வைச் சாத்தியமாக்குவதேயாகும். இத்தகைய தீர்வின் பிரதான அம்சமாகத் திகழ்வது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களிலான திட்டமிட்ட குடியேற்றப் பிரச்சினையேயாகும். நிலம், நீர் உள்ளிட்ட இக் குடியேற்றப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வு அவசியமாகும் என்பதனை இவ்வேளை எமது கட்சி குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது. அதேவேளை சிங்கள, தமிழ்

மக்களுக்கிடையிலான சமத்துவத்தை மதிக்கும் விதத்தில் அதற்குத் தடையாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை, நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததுபோல் உடன் நீக்குதல் வேண்டும்.

இன்று இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளது. இது தற்செயலானதொன்றல்ல. இந்திய இராணுவத்திற்குத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பும் அதன் தாக்குதல் முனையாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலும் சிங்கள மக்களின் குமுறல்களால் பிரேமதாச அரசு கொடுத்த நெருக்குதல்களும் சர்வதேசரீதியில் உருவாகி வளர்ந்த கண்டனங்களும் இந்திய மக்களிடம் காணப்பட்ட அதிருப்தியுமே இந்திய இராணுவ வெளியேற்றத்திற்கான காரணங்களாகும். இந்திய மேலாதிக்க எண்ணங்களுக்குக் கொள்கை வகுப்போர்களையும் அவர்களது அடிவருடிகளையும் தவிர்ந்த அனைத்துத் தேசபக்த சக்திகளும் இந்திய இராணுவம் வெளியேறிச் செல்வதை வரவேற்கின்றனர். அதேபோல் இலங்கையில் உள்ள இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை அகற்ற எடுக்கப்பட்ட முடிவும் வரவேற்கக்கூடியதாகும். எந்தவொரு அந்நிய சக்தியும் எமது நாட்டில் புகுந்து ஆதிக்கம் செலுத்துவதையோ அன்றித் தமது நோக்கங்களை நிறைவேற்ற முற்படுவதையோ தடுத்துநிறுத்துவதும் எதிர்த்துநிற்பதும் நம் அனைவரினதும் தேசியக் கடமையாகும்.

**(புதிய பூமி, 1990 மே)**

பின்னிணைப்பு 10

# பிரித்தாளும் பேரினவாதச் சூழ்ச்சிக்கு எண்ணெய் ஊற்றப்பட்டுள்ளது

## அவலநிலைக்கு ஆளாகியுள்ளவர்கள் சாதாரண முஸ்லிம், தமிழ் மக்களே

தமது கொலனியாதிக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருக்க பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் கையாண்டுவந்த கீழ்த்தர அரசியற் தந்திரம் பிரித்தாளும் சூழ்ச்சிமுறையாகும். அதனாலேயே இன்றும் இந்தியாவில் இந்து-முஸ்லிம் பிரிவினைவாத உணர்வுகள் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன. ஒரு நாட்டின் மக்களை இன, மத, மொழி அடிப்படையில் பிரித்து வைப்பதன்மூலம் பலனடைபவர்கள் ஆளும் சொத்துடைய வர்க்கத்தினரும் அவர்களைச் சார்ந்தவர்களுமே ஆவர். ஆனால் அத்தகைய பிரிவு உணர்வுகளால் ஏற்படும் விளைவுகளை மிகமோசமாக அனுபவித்து வருபவர்கள் சாதாரண மக்களாகவே இருப்பர்.

இலங்கையில் தமிழ்-சிங்கள மக்களைப் பிரித்து வைத்ததன் மூலம் ஏற்கனவே இலங்கையின் ஆளும் வர்க்கமாக உள்ள பேரினவாதிகள் வெற்றி பெற்றனர். அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலியாகிய சிங்கள-தமிழ் மக்கள் இன்றும்

அந்த அவல நிலையிலிருந்து ஈடேற்றம் அடையவில்லை. இந்த நிலையிலேயே பேரின ஆளும் வர்க்கத்தின் மற்றொரு சூழ்ச்சித்திட்டம் நிறைவேறியிருக்கிறது. அதுவே தமிழ், முஸ்லிம் மக்களை நிரந்தரமாகப் பிரித்துவைக்கும் சதியாகும். இது அவர்களின் நீண்டநாள் திட்டமாயினும் இப்போதுதான் அதனை நிறைவேற்றக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அவர்களது சூழ்ச்சித்திட்டம் முழு உருவம் பெற தமிழ், முஸ்லிம் மக்களிடையேயுள்ள பிற்போக்குச் சக்திகள் தகுந்தவாறு எண்ணெய் ஊற்றியுள்ளார்கள். அதனால் தமிழ்-முஸ்லிம் பிளவானது இன்று சுவாலை விட்டெரியும் நெருப்பாக மாறியுள்ளது. இதன் விளைவு சாதாரண தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்வை அதள பாதாளத்துக்கே தள்ளிவிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களும் முஸ்லிம்களும் நீண்டகாலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்திருக்கிறார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும்மதத்தாலும்மதம்சார்ந்தகலாச்சாரநடைமுறைகள் சிலவற்றாலும் வேறுபட்டிருப்பினும், மொழியாலும் பெரும்பாலானோரின் பாரம்பரியப் பிரதேசங்களாலும் மிக நெருக்கமான இரு சமூகப் பிரிவுகளாகவே வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல முஸ்லிம் தமிழ் அறிஞர்கள் வழங்கிய பங்களிப்பு மிகக் கனதியானதாகும். சிலகாலத்திற்கு முன்பு சில முஸ்லிம் முதலாளிகள் தமது சுயநல வளர்ச்சி கருதி சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முஸ்லிம்கள் தமது தாய்மொழியாகச் சிங்களத்தையே கொள்ளவேண்டும் என்று குரல்வைத்த வேளை, முஸ்லிம் மக்கள் ஏகோபித்தரீதியில் மறுத்துரைத்து தாங்கள் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்தாலும் தமது தாய்மொழி தமிழ்தான் என்று அறைந்துரைத்தனர். சிங்களம் தாய்மொழியாகவேண்டும் என்ற குரல் எவ்வகையிலும் முஸ்லிம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. இன்றும் இலங்கையில் சகல பாகங்களிலும் வசித்துவரும் முஸ்லிம் மக்கள் அன்றாட வாழ்விலும் கல்வியிலும் தமிழையே தாய்மொழியாகப் பிரயோகித்துவருகிறார்கள்.

குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலே அருகருகாகத் தமிழ் மக்களுடன் இணைந்தே முஸ்லிம் மக்கள் வாழ்ந்துவந்துள்ளனர்.

வடக்கில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பிரதான நகரங்களிலும் அவை சார்ந்த கிராமங்களிலும் முஸ்லிம்கள் தமிழர்களுடன் எவ்விதப் பிணக்குமின்றி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் பேரினவாத ஆளும் அரசுகள் திட்டமிட்ட குடியேற்றங்களையும் இன்னும் பல தமிழர் விரோதச் செயல்களையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகவே இழைத்துவந்துள்ளன. இதனாலேயே தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் தமது கோரிக்கைகளை ஒரேகுரலில் முன்வைத்தனர். இத்தகைய ஒற்றுமைக் குரலை முறியடிப்பதன் மூலமே முழுத் தமிழ் பேசும் மக்களுடைய குரலையும் நசுக்கலாம் என்பதற்காகவே தமிழ், முஸ்லிம் மக்களைப் பிளவுபடுத்தி வைக்கும் திட்டம் தீட்டப்பட்டது. முன்பு பாராளுமன்றப் பாதையிலான வழிகளில் இவ் ஐக்கியத்தைக் குலைக்கமுயன்ற இச் சக்திகள் அண்மைக் காலங்களில் ஆயுதக் குழுக்களுக்கு உற்சாகம் கொடுத்து அதன் வழிகளில் ஒருவரை ஒருவர் கொலைசெய்து இருப்பிடத்தை நாசம்செய்து அகதிகளாக்குவதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிளவுபடுத்துவதில் வெற்றி பெற்றுள்ளனர். தமிழர்-முஸ்லிம்கள் மத்தியிலுள்ள தீவிரவாதச் சக்திகள் இன்று ஒரு கொலைக்களத்தையே நடத்தி வருகின்றனர். இதற்கான பலிபீடமாகக் கிழக்கு மாகாணமே தெரிந்தெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் தமிழர், முஸ்லிம்கள் மத்தியிலுள்ள தீவிரவாத ஆயுதக் குழுக்கள் இனம் காட்டாத வகையில் மாறிமாறி இக் கொலைத்தொழிலில் ஈடுபட ஆரம்பித்தன. முஸ்லிம் கிராமங்களிலும் தமிழ்க் கிராமங்களிலும் ஒன்றும் அறியாத சாதாரண மக்கள் வகைதொகையின்றி மிருகத்தனமாகக் கொன்றொழிக்கப்படும் நிகழ்ச்சிகள் வளர்ந்து வந்தன. பள்ளிவாசல் படுகொலைகளும் வயல்வெளிப் படுகொலைகளும் பழிக்குப் பழி என்ற வழிகளிற் செய்யப்பட்டன. முஸ்லிம்கள் மத்தியில் உள்ள ஊர்காவற்படையினரும் ஜிகாத் போன்ற அமைப்புக்களும் தமிழர் கிராமங்களில் தமது வேட்டையை நடத்தின. அதேபோல் தீவிரவாதத் தமிழ்க் குழுக்கள் கூட்டம் கூட்டமாக பள்ளிவாசற் படுகொலைகளையும் வயல்வெளிப் படுகொலைகளையும் நடத்தின. இரு பகுதியினரும் பின்னால் இருந்து இயக்கப்படும் இரத்தப் பிசாசுகளின் ஏவலால் மனித

இரத்தம் குடிக்கும் மனித மிருகங்களாக மாறி நின்றனர். இந்தப் பச்சைப் படுகொலைகளுக்கு இதுவரை எந்தக் குழுவும் உரிமை கோரியது கிடையாது. ஏனெனில் அக் கொலையாளிகளுக்குக் கூட தமது செயலின் இழிவுத்தனம் தெரிந்திருந்தது. அப்படி இருந்தும் முழு உலகிற்கும் யார் இந்தக் கொலையாளிகள் என்பது அப்பட்டமாகத் தெரிந்துவிட்டது.

தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் தோன்றிய இக் கொலைவெறிக் கூட்டங்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு எத்தனை பொய்கள் எத்தனை இன-மத உணர்வுகள் கொண்ட பிரச்சாரங்கள் கட்டிவிடப்படுகின்றன. இக் கொலைகளின் திரைமறைவிலே உள்நாட்டு அரசியல் இலாபம் சம்பதிப்பவர்களும் தத்தமது முதலாளித்துவ வியாபாரப் போட்டிகளை முடுக்கி விடுபவர்களும் தத்தமது கைங்கரியங்களைச் செய்து வருகிறார்கள். அதேவேளை, வெளிநாடுகளில் நிதி-ஆயுதம் வாங்குவதற்குக் கூட இக் கொலைச் சம்பவங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் பாதுகாப்பு அமைச்சர் அரபு நாடுகளுக்குச் சென்றுவந்த செய்தியும் இவற்றோடு இணைந்ததேயாகும்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மாறிமாறிக் கொலைசெய்து வந்தவர்கள் இப்பொழுது அம் மக்களை அவர்களது சொந்த இருப்பிடங்களிலிருந்தே அகற்றும் புதிய திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர். இதனால் கிழக்கின் பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து தமிழர்கள் முஸ்லிம் தீவிரவாதிகளினால் துரத்தப்பட்டுள்ளனர். அதற்குப் பழிதீர்ப்பது போல முஸ்லிம் மக்களும் துரத்தப்பட்டு வருகின்றனர். இது கிழக்குடன் மட்டும் நிற்கவில்லை. எவ்விதப் பிரச்சினையுமின்றி வாழ்ந்துவந்த வட மாகாணத்து முஸ்லிம் மக்களும் துரத்தப்பட்டுள்ள அவலநிலை உருவாகியுள்ளது. உடுத்த உடுப்புக்களுடனும் கையளவான பொருட்களுடனும் மட்டும் துரத்தப்பட்டுள்ள இம் மக்கள் சகலதையும் விட்டுச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் இந்தியாவில் இந்து வெறி, முஸ்லிம் வெறி எவ்வகை சார்ந்தது என்பதை அறியாத நமது மக்களுக்கு இன்றைய கோரச்

சம்பவங்கள் கண்முன்னே எடுத்துக்காட்டுகின்றன. அல்லது யூதர்கள் கொல்லப்பட்ட, துரத்தப்பட்ட காட்சிகள் இன்று நமக்கு நிதர்சனமாகத் தென்படுகின்றன.

இவ்வாறு ஒரே பிரதேசத்தில் ஒரே மொழியைப் பேசி சகோதரர்களாக வாழ்ந்துவந்த மக்கள் பிரிந்து எதிரிகளாகி ஒருவரை ஒருவர் துரத்திக் கலைத்துவரும் கேடுகெட்ட நிலை தோன்றியுள்ளதை மனித நேயம் கொண்ட எவருமே நல்லதோர் அறிகுறியாகக் கொள்ளமாட்டார்கள். அத்தகைய ஒவ்வொருவரின் நெஞ்சங்களையும் துக்க அமுக்கமே தாக்கியுள்ளது. இவ் இழிநிலைக்கு மாற்று வழி காண ஒவ்வொரு இதயமுள்ள மனிதரும் சிந்திப்பதும் செயற்படுவதும் அவசியமாகும்.

தமிழ், முஸ்லிம் மக்களைப் பிளவுபடுத்தி தமது பேரினவாத வெறிக்கு வலுவூட்ட பிரேமதாச-யூ.என்.பி அரசு கொளுத்திய கொடிய நெருப்புக்கு இன்று போதிய எண்ணெயை தமிழர்-முஸ்லிம் தீவிரவாத ஆயுதக் கூக்களும் அவர்களது இயக்குநர்களும் ஊற்றி மேலும் சுவாலையாக எரியவைத்துள்ளனர். இதன் விளைவு மேலும் கோர அழிவுகளுக்கும் நிரந்தரப் பிளவுகளுக்குமே வழிவகுக்கும். இதனால் ஆளும் பேரினவாதிகள் மட்டுமே முழு இலாபத்தையும் பெற்றுக்கொள்வார்கள். சாதாரண தமிழ், முஸ்லிம் மக்கள் மோசமான கொடுமைகளுக்குள்ளும் துன்பத்திற்குள்ளும் வீழ்த்தப்பட்டுள்ளனர். ஆனால் இறுதியில் உண்மையும் நீதியும் நியாயமும் வெற்றிபெற்றே தீரும். அதற்கான மக்கள் இயக்கம் உருவாகியே தீரும்.

**(புதிய பூமி, 1990 கார்த்திகை)**

பின்னிணைப்பு 11

# யுத்தத்தை நிறுத்தவும்! தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யவும்!

## புதிய ஜனநாயகக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

வடக்கு-கிழக்கை அழிவிலிருந்து மீட்க, எமது நாடு வல்லரசுகளினதும் பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும் பலப்பரீட்சைக் களமாக மாற்றப்படாமலிருக்க, கடந்த ஒரு வருடமாக அழிவுகளையே மீதமாக்கியிருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் மௌத்தைக் கலைத்து தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்யும் வகையிலான தீர்வொன்றை அரசாங்கம் விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கில் கடந்த யூன் மாதம் 11ஆம் திகதி தொடங்கி ஒரு வருடமாகியும் இன்னும் யுத்தம் தொடர்வது குறித்து

ஜனாதிபதி அவர்களுக்கு புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எழுதிய கடிதத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த வருடம் யூன் மாதம் 11ஆம் திகதி யுத்தமொன்று திணிக்கப்பட்டு இன்றுடன் (11-06-1991) ஒரு வருடமாகியும் அழிவுகரமான துரதிஷ்டவசமான அந்த யுத்தம் இன்னும் தொடர்கிறது. இவ் வேளையில் எமது கட்சி பல விடயங்களைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றது.

கடந்த ஒரு வருடமாக நடைபெறும் யுத்தத்தினால் வடக்கு-கிழக்குப் பகுதி ஒரு யுத்தப் பிரதேசமாக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரதேச மக்களுக்கும் நாட்டிற்கும் அழிவுகளையே மீதமாக்கியுள்ளது. அப் பிரதேசத்தில் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு மிகவும் கொடுமையான பஞ்ச நிலைமையே நிலவுகிறது. அங்கு விதிக்கப்பட்டுள்ள எரிபொருள், மின்சாரம், விவசாயப் பசளை, கிருமிநாசினித் தடைகள் உட்பட ஏனைய பொருளாதாரத் தடைகளும் போக்குவரத்துச் சீர்குலைப்பும் வேலையின்மையும் அப் பிரதேச மக்களின் அன்றாட வாழ்வையே சீர்குலைத்துச் சின்னாபின்னமாக்கியுள்ளன.

யுத்தம் காரணமாகப் பாடசாலைகள் தாக்கப்பட்டுள்ளதாலும் பாடசாலைகளில் அகதிகளின் தொகை அதிகரித்துள்ள மையாலும் வடக்கு-கிழக்குப் பிரதேசக் கல்விநிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அப் பிரதேசத்திற்கு மருந்து வகைகளை எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளமையால் நோயாளிகள் அவதிப்படுகின்றனர். பலர் இறந்துள்ளனர். அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் எவ்வித வசதியுமின்றி பலவகைப்பட்ட துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

மேலும், இந்தியப் படைகள் இங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுவிட்டதாலும் இந்திய அரசியலில் தற்போது சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாலும் சில தலைவர்கள் இந்தியா இலங்கையில் இராணுவத் தலையீட்டைச் செய்யாது என்று கூறிவருவதாலும் இந்தியா இலங்கையில் தலையீட்டைச்

செய்யாதென்றோ, இந்தியாவின் தலையீடு எப்போதும் இராணுவரீதியாக மட்டுமே இருக்குமென்றோ நாம் அசட்டையாக இருந்துவிடலாகாது.

இந்தியாவிலுள்ள மேலாதிக்கச் சக்திகளும் ஏனைய வெளிநாட்டுசக்திகளும் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பயப்படுத்துவதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றன. பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும், வல்லரசுகளினதும் பலப் பரீட்சைக் களமாக இலங்கை மாறிவிடுமா என்ற அச்சம் நீங்கி விட்டதென்று கூறிவிட முடியாது.

கடந்த மாதம் நடைபெற்ற எமது கட்சியின் தேசிய மகாநாட்டில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட சில விடயங்களைத் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

அரசியல் தீர்வொன்றின் மூலம் யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர முடியும். தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான ஓர் இடைக்காலத் தீர்வை முத்தரப்பு பேச்சுவார்த்தையின் அடிப்படையில் காண்பதற்குக் காலதாமதமின்றிச் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படல் வேண்டும். இலங்கை அரசும் அரசியல் கட்சிகளும் ஒரு தரப்பாகவும், விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ் அமைப்புகளும் மறு தரப்பாகவும், இந்தியா அதனது பிராந்திய மேலாதிக்க நலனை முன்தள்ளாத வகையில் மூன்றாவது தரப்பாகவும் செயற்பட்டு முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலான அரசியல்தீர்வே தேசிய இனப்பிரச்சினைகளுக்குக் குறைந்தபட்சத் தீர்வைக் கொண்டுவரவுள்ள சரியான வழிமுறையாகும்.

இத் தீர்வானது வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் தேசிய இனத்திற்காக பூரண அதிகாரம் கொண்ட பிரதேச சுயாட்சியை வழங்குவதாகவும், இப் பிரதேச சுயாட்சியின் கீழ் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலான சுயாட்சி உள்ளமைப்புக்களைச் சுயநிர்ணய உரிமை

அடிப்படையில் உருவாக்கி அவர்களது தனித்துவ வளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும், அதேபோன்று மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரசாவுரிமையைப் பூரணப்படுத்தி அவ்வப் பிரதேசங்களில் அவர்களுக்கான நிலத்தை வழங்கிச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி உள்ளமைப்புக்களை உருவாக்கி அவற்றுக்கான அதிகாரங்களை வழங்கி நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களது தனித்துவத்தையும் பொருளாதார, கல்வி, சமூக, கலாச்சார விருத்திகளை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைய வேண்டும்.

இவை யாவும் அரசியலமைப்பு வாயிலாக உறுதியையும் உத்தரவாதத்தையும் கொண்டிருக்க வேண்டும். மேலும் வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கோர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர், உடைமை, இருப்பிட, தொழில் இழப்புக்களைப் பெற்ற அனைத்து மக்களுக்கும் பூரண நஷ்ட ஈட்டையும் தகுந்த புனர்வாழ்வையும் குறுகிய காலஎல்லைக்குள் வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

**(ஊடக அறிக்கை, 11-06-1991)**

பின்னிணைப்பு 12

# தொடரும் படுகொலைகள் நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து

அரசியற் படுகொலைகளின் உச்சத்தில் எமது நாடு ஜனாதிபதியையே பறிகொடுத்துவிட்டது. இதற்குமேலும் தனிநபர், அரசியற் படுகொலைகள் இடம்பெற்றால் எமது நாடு தாங்காது. இவ்வாறான அரசியற் படுகொலைகள் தொடருமாயின் நாம் எமது நாட்டையே இழக்க நேரிடும் என்று புதிய ஜனநாயக கட்சி, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் படுகொலையை அடுத்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக கட்டத்திலாவது அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் நாட்டுப் பிரஜைகளும் ஒன்றுபட்டு நல்லதொரு ஜனநாயக சூழ்நிலையைக் கட்டி வளர்ப்பதன் மூலம் அநாகரிகமான அரசியற் படுகொலைகளைத் தடுத்துநிறுத்தப் பாடுபட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மாகாணசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தேனீர் கோப்பைச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி இ. தம்பையா விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நாட்டின் ஜனாதிபதியையே பலியெடுக்கும் அளவிற்கு அரசியல், தனிநபர் படுகொலைகள் தலைவிரித்தாடுகின்றன. இவ்வாறான அரசியற் படுகொலைகளினால் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையே ஏற்படும்.

அரசியற் படுகொலைகள் அநாகரிகமான தவறான வழிமுறை என்பதால் புதிய ஜனநாயகக் கட்சி அரசியற் படுகொலைகளைக்

கண்டித்தே வந்திருக்கிறது.

நாகரிகமற்ற அரசியற் சமூகத்தில்தான் அரசியற் படுகொலைகள் இடம்பெறும். அவற்றைத் தடுத்துநிறுத்தவும் அரசியல் மாற்றங்களுக்காக ஜனநாயக வழிமுறைகளையும் நெறிமுறையான வழிகளையும் கையாளக்கூடிய சாத்தியமான அரசியற் சூழ்நிலையை ஏற்படுத்தவும் அதன் மூலம் ஒரு நாகரிகமான அரசியற் சமூகத்தைக் கட்டிவளர்க்கவும் பாடுபட வேண்டும்.

தனிநபர், அரசியற் படுகொலைகள் நடைபெற்ற போதெல்லாம் அவற்றை கண்டித்து வந்ததுடன், அவை ஏற்படுவதற்கான சூழ்நிலையைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் எமது கட்சி வலியுறுத்தி வந்துள்ளது.

ஆனால், அவ்வாறான அரசியற் படுகொலைகளைத் தடுக்க அரசாங்கமோ நாட்டின் அரசியற் கட்சிகளோ நாட்டின் பிரஜைகளோ ஆக்கபூர்வமான பங்களிப்பு எதனையும் செய்யவில்லை. குறிப்பாக நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. நிலவும் ஜனநாயக மறுப்புச் சூழ்நிலையை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான அரசியற் படுகொலைகள் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையையே தோற்றுவிக்கும். அந்நிய நாடுகளாலும் அந்நிய சக்திகளாலும் எமது நாட்டின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம் என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படவுமே வழியேற்படும்.

எனவே ஆரோக்கியமான ஜனநாயக சூழ்நிலையை ஏற்படுத்தவும், இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் சகலரும் பாடுபட வேண்டும்.

**(புதிய பூமி, 1993 பங்குனி-வைகாசி)**

## பின்னிணைப்பு 13

# பரந்த மக்கள் போராட்டத்தில் அணிதிரள்வீர்!

கடந்த பதினைந்து வருட கால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேச விரோதக் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராகத் தமது வன்மையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்ள இவ்வருட மே தினத்தில் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்கள் அனைவரும் முன்வரல் வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது வாக்குகளைஇன்றைய அரசுக்குஎதிராகஅளிப்பதன்மூலம்மக்கள் தமது வன்மையான எதிர்ப்பு உணர்வலைகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கும் இம் மே தினத்தில் உறுதியெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

அவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு சார்பாக அதன் தேசிய அமைப்பாளர் திரு. இ. தம்பையா மே தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த அரசாங்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வரும் தாராளவாதப் பொருளாதாரக் கொள்கையும் தனியார்மயப்படுத்தலும் கடும் நிபந்தனைகளுடன் கூடிய அந்நியக் கடன்களும் நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக, கலாசாரத்துறைகள் அனைத்

தையும் நாசம் செய்துள்ளன. இவற்றின் பாதகங்களை மறைக்கவும் நாட்டு மக்களின் கவனத்தை அவற்றின் மீது திரும்பாது வைத்திருக்கவுமே வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் மீதான கொடூர யுத்தம் நீடிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை மறுத்து இராணுவத் தீர்வை நாடி நிற்கும் இந்த அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை நாளாந்தம் யுத்தத்திற்குக் கொட்டித்தீர்ப்பதுடன் பெறுமதி மிக்க உயிர், உடமைகளை அழித்து மக்களை அநாதைகள் ஆக்கும் நிலையைத் தொடர்கிறது. ஜனநாயக, மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டு வருகின்றன. இதுவரை ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற பாரதூரமான உண்மை மிகச் சாதாரணமானதொன்றாகத் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் இன்றைய அரசு பதவியில் இருப்பதற்கு எவ்வித அருகதையும் கொண்டதாக இல்லை என்பதையே மக்கள் கண்டுகொள்கின்றனர். எனவே இவ்வாட்சியை அதிகாரத்தில் இருந்து அகற்றும் பரந்த மக்கள் போராட்டங்களின் ஐக்கியப்பட்ட வெளிப்பாடாக எதிர்வரும் மேதினத்தில் அணிதிரள்வதுடன், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது வன்மையான எதிர்ப்பினை வெளிக்காட்டும் வகையில் தமது வாக்குகளை வழங்கவேண்டும் என்பதை எமது புதிய ஜனநாயக் கட்சி மேதின வேண்டுகோளாக விடுக்கின்றது.

**(புதிய பூமி, 1993 பங்குனி-வைகாசி)**

## பின்னிணைப்பு 14

# பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்குவோம்

கடந்த பதினேழு வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் தேச விரோத, மக்கள் விரோத, தேசிய இன விரோத ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு மாற்றுச் சக்தியாக பொதுத் தேர்தல் அரங்கின் முன்னெழுத்து நிற்பது பொதுசன முன்னணியேயாகும். ஆதலால் தேசியப் பொருளாதாரத்தையும் தேசிய ஜனநாயகத்தையும் மீட்டெடுத்து நிலைநிறுத்துவதற்கும் தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான அரசியல் தீர்வினைக் கொண்டுவருவதற்குமான ஒரு மாற்றுச் சக்தியாக, பொதுத் தேர்தல் அரங்கின் முன்னெழுந்து நிற்பது பொதுசன முன்னணியேயாகும். ஆதலால் தேசியப் பொருளாதாரத்தையும் தேசிய ஜனநாயகத்தையும் மீட்டெடுத்து நிலைநிறுத்துவதற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வினைக் கொண்டு வருவதற்கும் வாய்ப்பாக, சகல-தரப்பு மக்களும் பொதுசன முன்னணிக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்வது அவசியமாகும்.

நாட்டில் சுபீட்சத்தையும் மக்களுக்கு நல்வாழ்வையும் ஏற்படுத்தி ஒரு நீதியான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ளதாகக் கூறிக் கொண்டே ஐக்கிய தேசியக்

கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. ஆனால் கடந்த பதினேழு வருடங்களாகத் தனிக் கட்சி, தனிநபர் சர்வதிகாரப் பாதையில் ஆட்சி நடாத்தியதன் மூலம் தேசியப் பொருளாதாரம் முற்றாகச் சிதைக்கப்பட்டு அந்நிய பல்தேசிய நிறுவனங்களுக்கு நாடு இரையாக்ப்பட்டது. ஏகாதிபத்திய சக்திகளின் விருப்புக்கு இசைவாகப் பெருந்தோட்டத் தொழில் துறை உட்பட அரச, கூட்டுத்தாபன, பொதுத்துறைகள் தனியார்மயத்துக்கு உள்ளாக்கப்பட்டன. பொருளாதாரத் துறைகள் மட்டுமன்றிக் கல்வி, கலாசார, சமூகத் துறைகள் அனைத்தும் முற்றாகவே சீரழிக்கப்பட்டன. அரசியல், தொழிற்சங்கத் துறைகளில் தொழிலாளர்விரோதச்சட்டங்கள்கொண்டுவரப்பட்டுஜனநாயக மனித உரிமைகள் யாவும் காலிற்போட்டு மிதிக்கப்பட்டன. அரசியல் கொலைகள், பரவலான பழிவாங்கல்கள், ஆட்கடத்தல்கள் போன்றன பல்லாயிரக்கணக்கில் இடம் பெற்றன. இவை யாவற்றையும் மறைத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காகத் தமிழ் பேசும் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறை திட்டமிட்டவகையில் ஏவப்பபட்டது. அது இன வன்செயல் வடிவில் ஆரம்பித்து இன்றைய கொடூர யுத்த வடிவினதாக வளர்க்கப்பட்டது.

இவ்வாறு நாட்டையும் மக்களது அன்றாட வாழ்வையும் கடந்த பதினேழு வருடங்களாக நாசத்திற்கும் அழிவிற்கும் உள்ளாக்கிவந்த ஒரு கேடுகெட்ட ஆட்சியை அதிகாரத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்ற மக்களது விருப்பு மேலோங்கியுள்ளதொரு சூழலிலேயே பாராளுமன்றத்திற்கான பத்தாவது பொதுத்தேர்தல் இடம்பெறுகின்றது. எனவே இத் தேர்தலில் புதிய ஜனநாயக கட்சி தனது ஐக்கிய தேசியக் கட்சி விரோத, ஏகாதிபத்திய விரோத நிலைப்பாட்டிற்கிணங்க பொதுசன முன்னணிக்குத் தனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி நிற்கின்றது. அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக விரோதமாகவும், போலித்தனமாகவும் இராணுவத் தில்லுமுல்லுகளுடனும் நடத்த முற்பட்டிருக்கும் தேர்தலை கட்சி வன்மையாகக் கண்டித்து நிராகரிக்கின்றது.

ஏதிர்வரும் தேர்தலில் ஒரு முற்போக்கான ஜனநாயக மாற்றுச் சக்தியாக தன்னை வெளிப்படுத்தி நிற்கும் பொதுசன முன்னணி தமது தேர்தல்விஞ்ஞாபனத்தில்முன்வைத்துள்ளவற்றைமக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப எதிர்காலத்தில் தனது ஆட்சியில் நிறைவேற்ற வேண்டும் என்பதே நமது வற்புறுத்தலாகும். குறிப்பாக, இன்று நாட்டின் யுத்த சுவாலையாக எரிந்து கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலமான அரசியல் தீர்வு காணப்படும் என்றும், அதற்குரிய திடமான திட்டம் தம்மிடம் இருப்பதாகவும் பொதுசன முன்னணி உறுதியளித்துள்ளது.

கடந்த காலத் தவறுகளின் பட்டறிவாகத் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான வழிகளில் அரசியல் தீர்வு காணப்படுவதற்கு இன்றைய சூழலில் பொதுசன முன்னணிக்கு ஓர் இறுதிச் சந்தர்ப்பத்தைத் தமிழ் பேசும் மக்கள் வழங்க வேண்டும். மேற்கூறியவாறு எதிர்காலத்தில் பொதுசன முன்னனி தனது ஆட்சியில் மக்கள் சார்பாகவும் தொழிலாள வர்க்க நலன்கள் சார்பாகவும் அதே போன்று தேசிய இனங்களுக்கு நீதியான வகையிலும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே எமது கட்சி வற்புறுத்துகின்றது. அவ்வாறான நிலை ஆட்சியதிகாரத்தைப் பெற்ற பின் மறுக்கப்படுமானால் தொழிலாள வர்க்கமும் அனைத்து மக்களும் தேசிய இனங்களும் தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடத் தயாராகுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்ற முன்னெச்சரிக்கையும் புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

**(புதிய பூமி, 1994 ஓகஸ்ட்)**

## பின்னிணைப்பு 15

# பொது இடதுசாரி வேட்பாளர் வேண்டும்

### புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது

பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, பேரினவாதம், யுத்தம், பூகோளமயமாதல், தாராளமயம், தனியார் மயம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை என்பவற்றுக்கு எதிரான பொது வேலைத்திட்டத்தை முன்வைக்கக்கூடிய இடதுசாரி வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு புதிய ஜனநாயக கட்சி ஏனைய இடதுசாரி கட்சிகள் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது. யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சித் தீர்வைக் கொண்டு வருவதற்கு முன்னுரிமை அளிக்காத வேலைத்திட்டத்தைக் கொண்ட எந்தவொரு வேட்பாளரையும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு நமது கட்சி ஆதரவு வழங்க மாட்டாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால இருண்ட ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து அதற்குப் பதிலீடாகவே பொதுசன ஐக்கிய முன்னணியை மக்களும் இடதுசாரி சக்திகளும் பதவிக்குக் கொண்டுவந்தனர். ஆனால் நாடும் மக்களும் எதிர்பார்த்த எதையும் பொதுசன முன்னணி அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி சென்ற அதே பாதையில் தான் கடந்த ஐந்து ஆண்டுகளில் பயணம் செய்துவந்துள்ளது. ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி யுத்தத்தையும் தனியார்மயத்தையும் விரிவாக்கி முன்னெடுத்து வந்துள்ளது. அதன் மூலம் வடக்கு கிழக்கு யுத்த

பூமியாக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் சகல மக்களும் தாங்க முடியாத சுமைகளையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. அந்நிய பல்தேசியக் கம்பனிகளினதும் உள்நாட்டு முதலாளிகளினதும் இரும்புப் பிடிக்குள் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சாசனம் சட்டமாக்கப்படவே இல்லை. இவற்றினால் சகல தரப்பு மக்களதும் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சி ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்குப் பொதுசன முன்னணிக்கு முழுமையான ஆதரவை வழங்கிநின்றது. தேசிய இனப் பிரச்சினையைக் குறைந்த பட்சமாவது தீர்த்துவைப்பதற்கும் ஜனநாயக மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலைநிறுத்தவும் ஓர் இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்குமாறு மக்களை வேண்டிக்கொண்டோம். அதன் மூலம் வெற்றி பெற்ற சந்திரிகாவும் பொதுசன முன்னணியும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவில்லை. யுத்தத்தை விரிவாக்கி வேகப்படுத்தியதன் மூலம் மக்களையும் இடதுசாரி சக்திகளையும் ஏமாற்றியுள்ளனர். அதே வேளை பேரினவாதிகள், யுத்த வெறியர்கள், அந்நிய பல்தேசியக் கம்பனிகள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போன்றோரது விருப்பங்களை நிறைவேற்றி வந்துள்ளனர்.

எனவே தான் மேற்கூறிய அடிப்படையில் பொது இடதுசாரி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு எமது கட்சி ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. அதன் மூலம் உறுதியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஒரு மாற்று அரசியல் சக்தியையும் புதிய அரசியல் கலாச்சாரத்தையும் மக்கள் மத்தியில் தோற்றுவிக்க முடியும் என்று புதிய ஜனநாயக கட்சி நம்புகின்றது. இன்றைய சூழலில் அதுவே நாட்டிற்கும் மக்களுக்கும் விமோசனம் தரக் கூடியதாகும்.

**(புதிய பூமி, 1999 ஒக்டோபர்-நவம்பர்)**

## பின்னிணைப்பு 16

# அந்நிய சக்திகளின் தயவை நாடாது அரசியல் தீர்வுக்கு முன்வர வேண்டும்

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையையும் போர்க்காலப் பிரகடனத்தின் கீழான அவசரகால விதிகளையும் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத சக்திகள் தத்தமது நலன்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்தி வருகின்றன. அதேவேளை, பிரச்சினைகளின் பன்முகப் பாதிப்புக்களையும் தாங்கிநிற்கும் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். தமது அன்றாட அவலங்கள் நிறைந்த வாழ்க்கை பற்றிய எந்தவித உணர்வுகளையும் வெளிகாட்ட முடியாதவாறு இன்றைய போர்க்காலப் பிரகடனச் சூழலால் அமுக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், அந்நிய சக்திகள் தமது உள் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு இதுவரை காத்திருந்தமைக்கான காலம் கனிந்துள்ளது எனும் மகிழ்ச்சியில் தருணத்தைப் பயன்படுத்தி இலங்கைக்குள் புகுந்துகொள்வதற்கு விரைந்து செயலாற்றி வருகின்றன. ஆதலால் அரசாங்கம் தனது முடிவுகளில் தூரநோக்கில் தான் செயற்படுகின்றதா என்பதையிட்டு ஆழ்ந்து நோக்கிச் சிந்திப்பது அவசியமாகும்.

யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கும் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கும் அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதற்கும் இப்பொழுது காலம் கடந்துவிடவில்லை என்பதை அரசாங்கம் தனது கவனத்திறகு எடுத்துக் கொள்ளத் தவறுவது துரதிர்ஷ்டமாகும். அதவேளை தற்போதைய போர்ச் சூழலுக்குள் சிக்கியுள்ள குடாநாட்டின் ஐந்து லட்சம் மக்கள் நாட்டின்

ஏனைய பிரதேசங்களின்று சகல வழிகளிலும் தொடர்புகளை இழந்த நிலையில் உள்ளனர். அவர்களுக்கான உணவு, மருந்து, இருப்பிடம், பாதுகாப்பு போன்றவற்றிற்கான உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கவேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்குக் கடந்தகாலங்களில் நியாயமானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வு காணப்பட்டிருந்தால் இன்றைய கொடூர யுத்த நிலை வளர்ந்திருக்கமாட்டாது. தேசிய இனப் பிரச்சினையை நாட்டில் வளர்த்தவர்கள் சாதாரண சிங்கள, தமிழ் மக்கள் அல்லர், ஆளும் வர்க்கச் சக்திகளான நிலவுடைமை, முதலாளித்துவ வர்க்கத்தினராகவே இருந்து வந்துள்ளனர். தாங்கள் உருவாக்கி வளர்த்த பாறாங்கல்லின் மீதே இன்று தங்களது தலைகளை மோத வேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே இன்றைய சூழலிலாவது நாட்டையும் மக்களையும் முதன்மைப்படுத்தித் தூரநோக்குச் சிந்தனையுடன் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஏனைய அரசியல், சமூகச் சார்பு சக்திகளும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரல் வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படைகளைக் கொண்டிருத்தல் அவசியமானதாகும் என்பதை எமது கட்சி வற்புறுத்துகின்றது.

இன்றைய இக்ககட்டான நிலையில் நியாயமான அரசியல் தீர்வைப் பேச்சுவார்த்தை மூலம் காணத் தவறி வல்லரசுகளின் தயவை நாடிநிற்க முற்பட்டால் அதன் விளைவு நாட்டை அவர்களது ஆதிக்கப் பிடிக்குள் தள்ளுவதாகவே அமைந்து விடும் என்பதையும் எமது கட்சி மிகுந்த எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

**(புதிய பூமி, 2000 மே-யூன்)**

## பின்னிணைப்பு 17

# புதிய ஜனநாயகக் கட்சியின் 30வது ஆண்டு நினைவாக

### புதிய ஜனநாயகக் கட்சி மத்திய குழுவின் அறிக்கை

கொடிய யுத்தத்தை முன்னெடுத்து வருவதாலும் நவதாராள பொருளாதார முறைமையை நடைமுறைப் படுத்துவதாலும் முழு நாடும் மக்களும் அதல பாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டு வருகின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எதனையும் முன்வைக்க மறுக்கின்ற பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ நிலைப்பாட்டினால் யுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது. அதே வேளை தாராள தனியார்மயப் பொருளாதாரம் ஏகாதிபத்திய உலகமயமாதலினால் வழி நடத்தப்படுகின்றது. இவ்விரண்டு பாரிய பிரச்சினைகளையும் அவற்றின் மோசமான விளைவுகளையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தி உரிய தீர்வுகளை முன்னெடுக்காதுவிட்டால் யுத்த அழிவுகளும் வறுமையின் கொடுமைகளும் மேன் மேலும் அதிகரித்துச் செல்லும் அபாயமே தோன்றியுள்ளது. இதனைத் தடுத்துநிறுத்தவேண்டிய தலையாய பொறுப்பும் கடமையும் இந்நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் உரியதாகும். தவறான அரசியல் பொருளாதார இராணுவக் கொள்கைகளை முன்னெடுக்கும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போருக்கும் அதே கொள்கைகளை வெவ்வேறு வடிவங்களில் நடைமுறையாக்கிக் கொள்ள அதிகாரத்திற்குவர எத்தனிப்போருக்கும் எதிராகப் பாரிய எதிர்ப்பு அழுத்தங்களைக் கொடுக்கும் மக்கள் இயக்கங்கள் உருவாக வேண்டும். இதற்கான பொது வேலைத்திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்க நேர்மையான இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் முன்வரல் வேண்டும். இவ்வாறு தோற்றுவிக்கப்படும்

சக்திமிக்க மக்கள் இயக்கத்தினால் மட்டுமே நாட்டையும் மக்களையும் எதிர்நோக்கியுள்ள அபாயகரமான சவால்களை முறியடித்து முன்செல்ல முடியும் என்பதைப் புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகின்றது.

கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகத் தொடரும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாமலும் பொருளாதார நெருக்கடிக்களுக்கு முகம் கொடுக்க இயலாமலும் மகிந்த சிந்தனை அரசாங்கம் திணறி நிற்கிறது. இத்தகைய அவல நிலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தினால் மட்டும் உருவாகிய ஒன்றல்ல. கடந்த மூன்று தசாப்த காலத்தில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அரசியலமைப்பினதும் அதன் கீழான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினதும் மோசமான எதிர்விளைவேயாகும். 1978இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கி வைத்த தனிக்கட்சி தனிநபர் சர்வதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் இரண்டு ஆளும்வர்க்க ஆண்டபரம்பரைக் கட்சிகளும் அதிகாரத்தில் இருந்து வந்துள்ளன. இத்தகைய கட்சிகளாலும் அவற்றின் தலைமைகளாலும் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் காண இயலவில்லை. அதற்கு அவர்களது பௌத்த சிங்களப் பேரினவாத நிலைப்பாடு இடமளிக்கவில்லை. அதேபோன்று உலகமயமாதலின் நிர்பந்த வற்புறுத்தலால் பொருளாதார முறைமைகளை வரவேற்று நடைமுறைப்படுத்தினர். அதற்கு இவர்களது ஏகாதிபத்திய அரவணைப்பும் விசுவாசமும் காரணமாகியது. இவை அனைத்தினதும் ஒட்டுமொத்தப் பாதிப்புகளையும் பிரச்சினைகளையும் நாட்டின் சாதாரண உழைக்கும் மக்கள் யுத்த அழிவுகளாகவும் பொருளாதார நெருக்கடிக்களாகவும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பாகவும் அனுபவித்து வருகின்றனர்.

அதேவேளை, யுத்தத்தின் மறைவில் ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றால் அதிகாரத்தில் இருந்தவர்களும் இருப்போரும் அவர்களது நெருக்கமானவர்களாகிக் கொண்டனர். ஆனால் தெற்கின் சாதாரண தொழிலாளர்கள்

விவசாயிகளின் பிள்ளைகள் யுத்தத்தில் பீரங்கித்தீனியாகி மாண்டுவந்துள்ளனர். இந்நிலை இன்றுவரை நீடிக்கிறது. அவ்வாறே வடக்கு-கிழக்கில் நாளாந்தம் யுத்தத்தாலும் போராட்டத்தாலும் மடிந்து வருவோர் சாதாரண உழைக்கும் மக்களும் அவர்களது பிள்ளைகளுமாகவே உள்ளனர்.

மறுபுறத்திலே அந்நிய பல்தேசியக் கம்பனிகள் நாட்டின் வளங்களை கொள்ளையிட்டுச் செல்வதுடன் தொழிலாளர்களின் உழைப்பையும் சுரண்டிச் சென்றவண்ணம் உள்ளன. நாட்டின் விவசாயம் சீரழிக்கப்பட்டு இறக்குமதி நுகர்வுச் சந்தை விரிவாக்கப்பட்டது. அதனால் விவசாயிகளைப் பெருபான்மையாகக் கொண்ட எமது நாட்டில் அவர்கள் ஓட்டாண்டிகளாக்கப்பட்டுள்ளனர். அரிசி முதலாய அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக வெளிநாட்டுக் கப்பல்களை எதிர்பார்த்து நிற்பதுடன் மக்கள் அவற்றுக்கு அதிகவிலை கொடுத்து வாங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான உண்மைகள் மறைக்கப்பட்டு எண்ணெயினதும் உணவுப் பொருட்களினதும் உலகச் சந்தை விலை உயர்வாலேயே நமது நாட்டில் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதாக ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி வருகின்றனர். அத்துடன் யுத்தத்திற்கு நாளாந்தம் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவிடப்படுவதாலும் பணவீக்கமும் பொருட்களின் விலை அதிகரிப்பும் இடம்பெறுவது மறைக்கப்படுகிறது. வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பள உயர்வை வழங்க முடியாத நிலையில் அரசாங்க தனியார் துறைத் தொழிலாளர்களின் எதிர்ப்பைச் சமாளிக்கும் விதத்தில் அற்ப சம்பள உயர்வை (அரசாங்க ஊழியர்களுக்கு யூலை முதல் 625 ரூபாவை) அளித்துள்ளது அரசாங்கம். இது யானைப் பசிக்குச் சோளப்பொரி போன்றதாகும்.

யுத்தம் கோரத்தனத்துடன் நீடித்துச் செல்வதால் அழிவுகளும் இடப் பெயர்வுகளும் தொடர்வதுடன் மோசமான மனித உரிமை மிறல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற் போதல்கள் கட்டுப்படுத்த முடியாதவாறு

தொடர்கின்றன. ஜனநாயக, தொழிற்சங்க உரிமை மறுப்புகள் புதியபுதிய வடிவங்களில் மேற்கொள்ளப்பபடுகின்றன. அத்துடன் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வருகிறார்கள். அரசியல் கைதிகள் நீண்ட காலமாக விசாரணை இன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தாராளவாத தனியார் பொருளாதாரத் தளங்களில் அமெரிக்க மேற்குலக யப்பானிய பல்தேசியக் கம்பனிகள் புகுந்து நிற்கின்றன. அவ்வாறே இந்தியக் கம்பனிகளும் வந்து கொண்டன. அமெரிக்க இந்திய ஆதிக்க சக்திகள் அன்று முதல் இன்றுவரை யுத்தத்தை முன்னெடுப்பதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சகலவகைப் பங்களிப்புகளையும் வழங்கி வந்துள்ளன. அதேவேளை அவர்களது இலங்கை மீதான ஆதிக்கப் போட்டி தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்விரு சக்திகளும் ஒரு நேரடித் தலையீட்டிற்கு தயாராகி வரும் போக்கே காணப்படுகிறது.

எனவே பயங்கரவாதம் எனப் பெயர்மாற்றி அழைக்கப்படும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேவேளை அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்தி வாழ்க்கைச் செலவின் சுமையைக் குறைக்கத் தேசிய பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டுள்ள அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படுவது அவசியமானதாகும். இவற்றுக்கான உறுதிமிக்க மக்கள் இயக்கம் பாராளுமன்ற ஆசனங்கள் பதவிகள் என்ற நோக்கங்களுக்கு அப்பால் கட்டி வளர்க்கப்படுவதையே புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்தி நிற்கின்றது.

**(புதிய பூமி, 2008 யூலை)**

## பின்னிணைப்பு 18

# வன்னி மக்களை வாட்டி வதைக்காதே

### புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்தல்

வன்னிப் பிரதேச மீது நடாத்தப்பட்டுவரும் தரை, ஆகாயத் தாக்குதல்களால் சுமார் இரண்டரை லட்சம் வரையான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி அல்லற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு உணவுப் பொருட்களும் மருந்து வகைகளும் அவசியத் தேவைகளாக உள்ளன. குழந்தைகள் பால்மா இன்றித் தவிக்கின்றனர். நோயாளர்கள் உரிய சிகிச்சைகள் கிடைக்காமையால் அவதியுறுகின்றனர். மக்கள் மரங்களின் கீழும் வயல் வெளிகளிலும் காடுகளிடையேயும் அன்றாடவாழ்வைக் கழித்துவருகின்றனர். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக உணவையும் மருந்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் வன்னி மக்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்கும் செயற்பாட்டை அரசாங்கம் உடன் நிறுத்தி அவர்களுக்குரிய அத்தியாவசிய உணவு, மருந்து, பால்மா என்பவற்றை அவசரமாக அங்கு அனுப்பி வைக்க வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதிலும் வன்னியை மீட்பதிலும் யுத்தம் முனைப்பாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் அதனை நியாயப்படுத்துவதில் முழு மூச்சாக உள்ளனர். ஆனால் இதுவரையான படை நடவடிக்கைகளின் உக்கிரத்தினால் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் இடம்

பெயர்ந்து உணவு உடை இருப்பிடமின்றி குழந்தைகளுக்குப் பால்மா கொடுக்க முடியாமலும் நோயாளர்களுக்கு உரிய மருந்துகள் இன்றியும் நிர்க்கதிக்குள்ளாகி நிற்கின்றனர். பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இந்த மனித அவலம் பற்றி அக்கறை காட்டாது இருந்து வருகின்றனர். வன்னிக்குள் பரிதவிக்கும் தமிழ் மக்கள் இந் நாட்டுப் பிரசைகள் இல்லையா? அவர்களைப் பட்டினிபோட்டுப் பழிவாங்க நிற்பதனை ஜனநாயகம் என்பதா அல்லது பௌத்த தர்மம் எனக் கொள்வதா? மகிந்த சிந்தனை என்பது இன்று யுத்தச் சிந்தனையாகி நிற்பதையே காணமுடிகின்றது. எனவே வன்னி மக்கள் படும் அவலம் நீக்கவென ஊருக்குப் பெயருக்காக ஒரு சில லொறிகளில் குறைந்தளவு உணவுப்பொருட்களை அனுப்பாது அம் மக்களுக்குத் தேவைப்படும் போதிய அத்தியாவசிய உணவு, மருந்துவகைகளை அனுப்ப அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையையே வற்புறுத்துகின்றோம்.

அதேவேளை, கிளிநொச்சியைக் கைப்பற்றவும் வன்னியை மீட்கவும் நடாத்தி வரும் யுத்தத்தின் மூலம் யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம். சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய விரிவான பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு காணப்படும் நியாயமான அரசியல் தீர்வே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உள்ள வழிமுறையாகும். அத்தகைய அரசியல் தீர்வே தமிழ் மக்களுக்கும் அவசியமாகின்றது. அதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கையில் பல்லினங்களும் சமாதானத்துடனும் அமைதியுடனும் இணைந்து வாழும் புதிய சூழல் தோன்றமுடியும் என எமது கட்சி திடமாக நம்புகின்றது.

**(புதிய பூமி, 2008 ஒக்டோபர்)**

## பின்னிணைப்பு 19

# தமிழ் மக்களின் அவல நிலையைப் போக்கப் பொது இணக்கப்பாடு அவசியம்

## புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

தமிழ் மக்களின் தற்போதைய அவல நிலையை மாற்றியமைக்க, அவர்களுக்கு இயல்பு வாழ்க்கையை உறுதி செய்வதுடன் அவர்களது தேசிய அபிலாக்ஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சுயநிர்ணய அப்படையிலான சுயாட்சிக்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இவற்றை வென்றெடுக்க கடந்தகால ஆதிக்க அரசியல் போட்டியைப் புறந்தள்ளி பன்மைத்துவ அடிப்படையிலான மக்கள் ஜனநாயக அரசியல் சூழ்நிலையை உருவாக்கி இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு, தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அமைப்புக்களும் பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கான கலந்துரையாடல்களைச் செய்ய வேண்டுமென புதிய ஜனநாயக கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

போருக்குப் பிந்திய இக் காலகட்டத்தில் மூன்று லட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் தாங்க முடியாத வேதனைகளுடன் அவலவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். கடந்த முப்பது வருடப் போர் அனர்த்தங்களுடன் வாழ்ந்த தமிழ் மக்கள் இன்றைய சூழலில் மோசமான அரசியல் வெறுமையுடனும் அச்ச உணர்வுகளுடனும் இருந்துவருகின்றனர். இத்தகைய நிலையிலிருந்து மக்களை மீட்பதற்குரிய செயற்பாட்டை மக்கள் சார்புக் கட்சிகளும் அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டும்.

அதற்கான கலந்துரையாடல்களும் பொது இணக்கப்பாடும் இடதுசாரிகள், ஜனநாயக முற்போக்கு சக்திகள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்துகின்றது.

இதனைத் தாமதமின்றி மேற்கொள்வதற்காக கீழ்வரும் பத்து அம்சங்களைப் புதிய ஜனநாயகக் கட்சி முன்வைக்கின்றது. இவை நேர்மையும் மக்கள்சார்பும் கொண்ட கட்சிகள், அமைப்புகளால் கலந்துரையாடப்படவும் பொது இணக்கப்பாடு காணப்படவும் கோரிக்கைகளாக வற்புறுத்தப்படவும் வேண்டும் என வேண்டுகிறோம்.

1. மாகாணசபை முறையின் கீழ் அரசியலமைப்பிற்கான **13**வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களைத் தவிர்த்து இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஆகக்கூடிய சுயாட்சியை உறுதி செய்யத்தக்கவாறு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

2. இடம்பெயர்ந்து தடுப்பு முகாம்களிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் வெகுவிரைவில் அவர்களின் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். அத்துடன் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, கல்வி சுகாதார சீரமைப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும். தொடர்ந்தும் மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறுவதையோ விவசாயம், மீன்பிடி, பிற தொழில்களில் ஈடுபடுவதையோ பாதுகாப்பு வலயக் காரணங்களைச் சொல்லித் தடுக்கக்கூடாது.

3. ஏ-9 வீதி மக்களின் சுதந்திரமான போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்படவேண்டும். வடக்கிற்கான புகையிரதப் பாதை விரைவில் சீரமைக்கப்பட வேண்டும்.

4. போக்குவரத்தில் இருக்கும் பாஸ் முறை நீக்கப்பட்டு சுதந்திர நடமாட்டம் உறுதி செய்யப்பட வேண்டும். அதன் மூலம் விவசாயய, மீன்பிடி, கைத்தொழில் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

5. அவசரகாலச் சட்ட விதிகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும்.

6. அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

7. வடக்கு, கிழக்கில் பூரணமான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு உயிர்வாழும் சுதந்திரம் உட்பட ஜனநாயகமும் மனித உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படுவதுடன் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் நிலைநாட்டப்பட வேண்டும்.

8. நாடெங்கும் தமிழ்மொழியும் அரசகரும மொழியாக நடைமுறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

9. வடக்கு கிழக்கில் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களை நிறுவ எடுக்கப்படும் முயற்சிகள் கைவிடப்படவேண்டும்.

10. வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்படாமல் இனரீதியான பாரபட்சங்களுக்குட்படாமல் அவர்களின் சுதந்திரமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்.

(புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழு முன்வைத்துள்ள மேற்படி தீர்மானத்தை அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ளார்.)

**(புதிய பூமி, 2009 மே-யூன்)**

பின்னிணைப்பு 20

# இராணுவ வெற்றி முழக்கத்தால் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## புதிய ஜனநாயகக் கட்சி மத்திய குழு அறிக்கை

போரை உக்கிரமாக முன்னெடுத்து வடக்கு கிழக்கின் நகரங்களையும் கிராமங்களையும் உள்ளடக்கிய நிலப்பரப்பைக் கைப்பற்றி வெற்றி முழக்கமிடுவதன் மூலம் போருக்கு மூலகாரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது. போர் முனைப்பால் பெறப்படும் வெற்றிகள் ஆட்சி அதிகாரத்தின் நீடிப்பிற்கும் எதிர்கால நிலைப்பிற்கும் உதவுமே தவிர நாட்டின் சுபீட்சத்திற்கும் வடக்கு கிழக்கின் ஜனநாயகம், சமாதானம், இயல்பு வாழ்க்கை என்பவற்றுக்கும் வழிகாட்டமாட்டாது. எனவே தேசிய இனப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சுயாட்சித் தீர்வுப் பொதியை முன்வைப்பதும் போருக்குள் அகப்பட்டுள்ள நாலரை லட்சம் மக்களின் உயிருக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதும் அரசாங்கத்தின் உடனடிக்

கடமையாகும். இன்று வன்னியில் மக்கள் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் ஆகியவற்றைப் பெறமுடியாத நிலையில், உயிர்வாழ்வுக்கு அஞ்சிய நிலையில் பரிதவித்து நிற்கிறார்கள். அவர்கள் தமிழ் மக்கள் என்பதுடன் இலங்கையின் பிரசைகளும் ஆவர். ஆதலால் அவர்கள் எவ்வகையிலும் பழிவாங்கப்படக் கூடாது. அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பும் அடிப்படைத் தேவைகளும் ஆறுதலும் வழங்குவது அரசின் கடமையாகும் என்பதை எமது புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்திநிற்கிறது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையானது கடந்த நூற்றாண்டு முழுவதும் பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டின் ஊடாக வளர்க்கப்பட்டுப் போராக மாற்றப்பட்டது. ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இரு தரப்புக் கட்சிகளும் தமது நிலவுடைமை முதலாளித்துவ வர்க்க நலன்களுக்காகவும் ஏகாதிபத்திய அரவணைப்புக்காகவும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களின் ஜனநாயக வாழ்வுரிமைகளையும் இன, மொழி, பிரதேச அபிலாசைகளையும் மறுத்து இன ஒடுக்குமுறையினை மேற்கொண்டு வந்தன. கடந்த முப்பது வருடக் கொடிய போருக்குப் பின்புகூட, இனப் பிரச்சினையின் அரசியல் யதார்த்தத்தை மறுத்துப் போர்மூலம் தீர்வுகாணவே முயற்சிக்கப்படுகிறது. தற்போது அடைந்து வரும் இராணுவ வெற்றிகள் மூலம் இனப் பிரச்சினையின் அடிப்படைகளும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளும் அற்றுப் போய்விடும் என நம்பப்படுகின்றது. இத்தகைய தவறான அரசியல் மதிப்பீடுகள் தொடருமானால் இந்த நூற்றாண்டு முழுவதும் போருக்கான சூழல் மீண்டும் மீண்டும் நீடிக்கவே செய்யும் அதனால் பேரினவாதிகளும் முதலாளித்துவ அதிகார வர்க்கத்தினரும் அந்நிய சக்திகளும் இலாபம் பெற முடியுமே தவிர சிங்கள மக்கள் உட்பட்ட அனைத்து தேசிய இனங்களும் எவ்வகையிலும் மீட்சி பெறப் போவதில்லை. நாடும் மக்களும் மேன்மேலும் அழிவுகளையும் துயரங்களையும் சுமந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடரவே செய்யும்.

எனவே நாட்டையும் மக்களையும் மீட்டெடுத்துச்செல்வதற்குரிய ஒரே வழி இராணுவமயப்படுத்தல் அல்ல. அதற்குப் பதிலாக,

தேசிய இனப் பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் பாரம்பரிய பிரதேசத்தில் சுயாட்சியை வழங்கித் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை சமத்துவம், ஜனநாயகம், சமாதானத்துடன் வாழவைப்பதற்கான அரசியல் தீர்வை முன்வைப்பதே இன்றைய அவசரமான முதன்மைப் பணியாகும். இதனை விடுத்து இராணுவ வெற்றிகளையும் இராணுவ வழிகாட்டல்களையும் அரசாங்கம் பிரதானப்படுத்தி முன்னெடுப்பதானது சிங்கள மக்கள் உட்பட அனைத்து மக்களினதும் எதிர்காலத்திற்கு அபாயங்களைக் கொண்டுவரவேசெய்யும். இன்று நாடும் மக்களும் எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் அன்றாட வாழ்க்கைத் துயரங்களுக்கும் யுத்தமும் இராணுவ வெற்றிகளும் சாட்டாகக் காட்டப்படுகிறது. ஆனால் இதனை நீண்ட காலத்திற்கு ஆளும் அதிகார வரக்கத்தால் முன்னெடுத்து மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே தான், தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வுப் பொதியை முன்வைத்து அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலம் உரிய தீர்வு காணப்படவேண்டும் என எமது புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது.

**(புதிய பூமி, 2009 ஜனவரி-பெப்ரவரி)**

பின்னிணைப்பு 21

# ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி வென்றெடுக்கப்பட வேண்டும்

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இருபது மாதங்களுக்கு மேலாகியும் அக் கொடிய யுத்தத்திற்குக் காரணமாக நீடித்து வந்த தேசிய இனப் பிரச்சினைக்கு மகிந்த சிந்தனை அரசாங்கத்தினால் தீர்வு எதனையும் முன்வைக்க இயலவில்லை. அதற்கான அடிப்படைக் காரணம் பேரினவாத முதலாளித்துவ ஆளும்வர்க்க நிலைப்பாடேயாகும். இதன் மூலம் இன முரண்பாடும் இன ஒடுக்கு முறையும் நீடித்துச் செல்கின்றன. அதனால் இலங்கை அரசியலில் தேசிய இனப் பிரச்சினை என்பது இன்றும் பிரதான இடத்தில் இருந்து வருகின்ற அரசியல் யதார்த்தத்தை ஜனநாயக மறுப்பு, சலுகைகள், அபிவிருத்திகள் போன்றவற்றால் மூடிமறைத்துவிட முடியாது. அதனாலேயே ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி

மூலமாக நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வற்புறுத்தி வருகின்றது.

இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஐந்தாவது வடபிராந்திய மாநாடு கடந்த 26.02.2011 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் கூறினார். ஐந்து பேர் கொண்ட (தோழர்கள் க. தணிகாசலம், கா. பஞ்சலிங்கம், கா. கதிர்காமநாதன், த. ஸ்ரீ பிரகாஷ், ந. பிரதீபன்) தலைமைக் குழுவின் தலைமையில் நடைபெற்ற முழுநாள் மாநாட்டில் தோழர் செந்திவேல் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

யுத்தத்தின் கொடூரத்தாலும் போராட்டத்தின் தவறான கொள்கை வழிமுறைகளாலும் தமிழ் மக்கள் வரலாறு காணாத பேரழிவுகளையே அனுபவித்தனர். இதற்கான முழுப் பொறுப்பையும் தெற்கின் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினரும் வடக்கில் தமிழ்த் தேசியவாதம் பேசிவந்த குறுந்தேசியவாதிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நாட்டிற்கான தேசியத்தையாயினும் அல்லது ஒரு இனத்திற்கான தேசியத்தையாயினும் இரண்டு தளங்களில் முன்னெடுக்க முடியும். ஒன்று, முற்போக்கான தேசியம் இரண்டாவது, பிற்போக்கான தேசியம். சுதந்திரத்திற்கு முன்பிருந்தே பேசப்பட்டு வந்த நாட்டுத் தேசியம் பிற்போக்குத் தளத்தில் பேரினவாதமாகவே வளர்க்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறே தமிழ் இனத் தேசியம் என்பதும் பிற்போக்குத் தளத்தில் நின்று குறுந் தேசியவாதமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இவற்றால் சிங்கள ஆளும் வர்க்க சக்திகளும் தமிழ் மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சக்திகளுமே பயன்கள் பெற்று வந்தன. ஆனால் அவலங்களையும் இழப்புக்களையும் சாதாரண உழைக்கும் தமிழ் மக்களே அனுபவிக்க வேண்டியவர்களாக ஆனார்கள்.

ஆதலால், இனிமேலும் தமிழ்த் தேசியம் என்பதனை வாக்குகள் பெறுவதற்கு வெறும் உணர்ச்சிக்குரியதாகக் கொண்டு பழைய செக்கிழுத்த பாதையில் பிற்போக்கான

தமிழ்க் குறுந்தேசியவாதமாக முன்னெடுத்துச் செல்லும் இரத்தக்கறைபடிந்த கொள்கைகளைத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும். தமிழ்த் தேசிய ஆதிக்க அரசியற் போக்கை இளம் தலைமுறையினர் இனங்கண்டு முற்போக்கான தமிழ்த் தேசியத்தைக் கைப்பிடிக்க முன்வரவேண்டும். தமிழ்த் தலைமைகள் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கும் அடிபணிந்து சென்றதன் விளைவை இறுதி யுத்த காலகட்டத்தில் தமிழ் மக்கள் இரத்தம் பெருகி உயிர்கள் இழந்தபோது அனுபவித்தனர். இத்தனைக்குப் பின்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவையும் அமெரிக்காவையும் அடிமை விசுவாசத்துடன் அரசியல் தீர்வுக்காகக் காத்திருப்பது தமிழ் மக்களை மீண்டும் தமது பிற்போக்கான தமிழ்க் குறுந்தேசியவாதப் பாதையில் ஏமாற்றி அழைத்துச் செல்வதற்கேயாகும்.

தமிழ்த் தேசியம் என்பதை உரத்துக் கூவிக்கொண்டு கடந்த நூற்றாண்டில் தமிழ்த் தலைமைகள் யாவும் முன்னெடுத்த கொள்கைகளும் போராட்ட வழிமுறைகளும் முற்றுமுழுதான தோல்விகளையே கண்டுவந்துள்ளன. இன்று அவற்றை வேறுவேறு பெயர்களில் முன்னெடுக்கவே அத் தலைமைகள் முன்னிற்கின்றன. வாக்குகள் பெறுவதற்காகத் தமிழ்த் தேசியவாத அரசியலை மீண்டும் தூசுதட்டி மக்கள் முன் வைக்கின்றனர். இவர்களில் சிலர் முற்றிலும் அடிபணிந்த அரசியலை விழுந்தாலும் மிசையில் மண்படவில்லை என்ற தோரணையில் முன்னெடுக்கின்றனர். மற்றும் சிலர் "நாடு கடந்த தமிழீழ அரசு" என்பதனை நம்பி "அவலை நினைத்து உரலை இடிப்பது" போன்று அரசியல் செய்ய முன்நிற்கின்றனர். ஆனால் தமிழ் மக்கள் பட்டது போதும் என்ற நிலையில் அரசியல் மௌனத்தில் உறைந்து காணப்படுகின்றனர். இதற்கு ஜனநாயக மறுப்பும் இயல்பு வாழ்வுச் சிதைப்பும் அரசியல் தீர்வினை முன்வைக்காமையும் அடக்குமுறை அச்சம் பீதி என்பனவும் மட்டும் காரணமல்ல. தமிழ்த் தேசியவாதம் பேசி தமிழீழத்தை அடைய நின்ற அனைத்துத் தலைமைகளின் மீதான அரசியல் மார்க்கம் வெகுஜனப் போராட்டப் பாதையாக மட்டுமே எஞ்சிநிற்கிறது. நமக்கான கொள்கை நிகழ்ச்சிநிரலை தயாரிப்போம் நாமே அணி

திரள்வோம். எமக்கான தலைமையை நாமே உருவாக்குவோம். அத்தகைய கொள்கையானது கடந்தகாலப் பட்டறிவில் இருந்து முற்றிலும் ஏகப் பெரும்பானமையான உழைக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக இருப்பதை உறுதி செய்து கொள்வோம். தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சாதிய ஏற்றத் தாழ்வுகள், சமூகநீதி மறுப்புக்கள், பெண்கள் மீதான ஒடுக்குதல்கள் மற்றும் பாரபட்சங்களை அகற்றக் கூடிய ஒரு பொது வேலைதிட்டத்தின் அடிப்படையில் பரந்துபட்ட மக்களை ஐக்கியப்படுத்துவோம். அந்நிய சக்திகள் மீதான அடிமை விசுவாசத்தைத் தகர்த்தெறிவோம். குறுகிய இனவாதத்தைக் கைவிட்டுச் சிங்கள உழைக்கும் வர்க்க மக்களோடு இணைந்து நிற்போம். ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் பற்றி சிங்கள மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களையும் எமது வெகுஜனப் போராட்டப்பாதையில் ஐக்கியமுறச் செய்வோம். இதுவே தமிழ் மக்களின் முன்னால் உள்ள சரியான அரசியல் தெரிவாக இருக்கமுடியும்.

இதுவரை தமிழ் மக்கள் மத்தியில் மூன்று கட்டங்களில் முன்னெடுக்கபபட்டு வந்த கொள்கைகள் வழிமுறைகள் தோல்வியடைந்து அழிவுகள் எஞ்சியுள்ள சூழலில் மேற் கூறியவற்றின் அடிப்படையில் நான்காவது போராட்ட முனை திறக்கப்படுவது மட்டுமே சரியானதாக உறுதியானதாக தூர நோக்குடையதாக அமையமுடியும். தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய புதிய மாற்று அரசியல் கொள்கையும் நடைமுறை வழிமுறைகளும் சிந்திக்கப்படாது விட்டால் விடுதலைக்கான மார்க்கம் எதுவும் திறக்காது.

எனவே, எமது கட்சி தனது சொந்தக் கொள்கை நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் அதே வேளை முற்போக்கான தமிழ் தேசியம் என்பது குறுந் தமிழ்த்தேசியவாதத்தை நிராகரித்து முகிழ்த்தெழுமானால் அவற்றுடன் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயல்படவும் தயாராக இருக்கிறது என்பதையும் இப் பிராந்திய மாநாட்டின் ஊடாக வெளிப்படுத்தி நிற்கின்றது என்றும் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் கூறினார்.

இப்பிராந்திய மாநாட்டில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் வருகைதந்திருந்தனர். மாநாட்டிற்கான அறிக்கையை வடபிராந்தியச் செயலாளர் கா. கதிர்காமநாதன் முன்வைத்தார். அறிக்கை விவாதத்தில் மாநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விரிவான கருத்துக்களை முன்வைத்தனர். அத்துடன் மாநாடு பதின்நான்கு தீர்மானங்களை நிறைவேற்றியது. க. தணிகாசலம், சோ. தேவராஜா ஆகியோர் ஆரம்ப உரையையும் சிறப்புரையையும் ஆற்றினர். மறைந்த கட்சி உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மூத்த தோழர்கள் மூவர் மாநாட்டில் செஞ்சால்வை அணிவிக்கப்பட்டும் கட்சியின் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் வட பிராந்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. யுத்தம் முடிவடைந்து இரண்டாவது ஆண்டை நெருங்கியபோதும் அந்த அவலங்கள், தாக்கங்களிலிருந்து மக்கள் முற்றாக மீளவில்லை. இந்நிலையில் இனமுரண்பாடும் ஒடுக்குமுறையும் நீடிக்கின்றன. எனவே, தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைக் காலத்தை நீட்டாது முன்வைப்பதை வற்புறுத்துகிறோம். அத்தகைய தீர்வு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கையில் பூரண சுயாட்சி உடையதாக அமைய வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

2. மீள்குடியேற்றம், புனரமைப்பு, புனர்வாழ்வு என்பன வெறும் பெயரளவில் அன்றி மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் எவ்விதத் தலையீடும் அச்சுறுத்தலும் நெருக்கடிகளும் இன்றிச் சுதந்திரமாகவும் இயல்பாகவும் வாழ்வதற்கு ஏற்ப இயல்புச் சூழலை விரைவாக ஏற்படுத்தவேண்டும்.

3. வலி வடக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் இருந்துவரும் உயர்பாதுகாப்புவலயப் பகுதிகளில் மீள் குடியேற்றம் துரிதப்படுத்தப்படவேண்டும்.

4. அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்படுவதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டமும் அகற்றப்பட வேண்டும்.

5. அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதுடன் காணாமற்போனோர் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவேண்டும்.

6. இனம் தெரியாதோர் என்னும் பெயரில் முன்னெடுக்கப்பட்டுவரும் கொலைகள் கொள்ளைகள் ஆட்கடத்தல்கள் நிறுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் வேண்டும்.

7. ஜனநாயகம், இயல்பு வாழ்வு என்பன மீண்டும் தோற்றுவிக்கப்பட வேண்டும். முழுமையான சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

8. அடிப்படை ஜனநாயக, மனித உரிமைகளும் தொழிற்சங்க உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். ஊடக, கருத்துச் சுதந்திரம் நிலைநிறுத்தப்படவேண்டும்.

9. பொருட்களின் விலை உயர்வு தடுத்து நிறுத்தப்படுவதுடன் வாழ்க்கைச் செலவின் உயர்வு கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு ஏற்ப சம்பள உயர்வு சகல தரப்பினருக்கும் வழங்கப்படவேண்டும்.

10. விவசாயிகள், அன்றாடத் தொழிலாளர்கள், மீனவர்கள் தத்தமது தொழில்களைச் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் முன்னெடுப்பதற்கு ஏற்ற இயல்புச் சூழல் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

11. ஏகாதிபத்திய உலகமய திறந்த பொருளாதாரத்தின் விளைபயனான நுகர்வுக் கலாச்சாரத்தின் நச்சுத்தனமான பாதிப்புக்களுக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்து அணிதிரட்டவேண்டும்.

12. இலங்கையின் இறைமைக்கும் இனங்களின் ஐக்கியத்துக்கும் வேட்டு வைத்துவரும் அமெரிக்க ஏகாதிபத்திய, இந்தியப்

பிராந்திய மேலாதிக்க வல்லரசுகளின் ஊடுருவல்களுக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்யவேண்டும்.

13. இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக உழைக்கும் வர்க்கத்தின் நலன்களுக்கான அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் மக்களை அணிதிரட்டி ஐக்கியம், சமத்துவம், சுதந்திரம், சுபீட்சமுள்ள புதிய இலங்கையைக் கட்டி எழுப்புவோம்.

14. உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளினதும் மக்களினதும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்களுடன் ஒன்றிணைந்து முன் செல்வோம்.

**(புதிய பூமி, 2011 மார்ச்)**

## பின்னிணைப்பு 22

# கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும்?

## புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி அறிக்கை, 23.12.2011

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, போர்க் குற்ற விசாரணை, மனித உரிமை மீறல்கள் போன்ற முக்கியமான பிரச்சனைகளை மழுப்பியும் மறைப்புச் செய்தும் பூசிமெழுகிச் சமாளித்துமே, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளி வந்துள்ளது. இவ் அறிக்கையானது அழிவுகளையும் அவலங்களையும் அனுபவித்து பாதிப்புகளுடன் வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்களையோ புனரமைப்பு, புனர்வாழ்விற்கான அர்த்தமுள்ள முன்மொழிவுகளையோ முன்வைக்கவில்லை. இதன் மூலம் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாட்டையும் அதன் யுத்தகாலச் செயற்பாடுகளையும் நியாயப்படுத்தி நிலை நிறுத்தும் போக்கையே ஆணைக்குழு அறிக்கை வெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க

ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த ஆணைக் குழு பெரிதாகச் சாதித்துவிடப் போவதாக அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டு வந்த போதிலும், அதன் ஆணைக்கு உட்படாத விடயங்களில் மூக்கை நுழைத்துப் பேரினவாத மேலாதிக்கத்தைக் கேள்விக்கு உட்படுத்தாத விதத்திலேயே கருத்துக்களை முன்வைத்துள்ளது. அதாவது, சமாதான நடவடிக்கைகளின் தோல்வியும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுமே அதன் ஆணைக்கு உட்பட்ட விடயங்களாகும். ஆனால் அதற்கும் அப்பால் சென்று போர்க் குற்றங்கள் பற்றிய பக்க சார்புக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளதுடன் அரச பாதுகாப்பு படைகளினால் போர்க் குற்றங்கள் இழைக்கப்படவில்லை என்ற தீர்ப்பையும் வழங்கியுள்ளது. இதன் மூலம் அரசாங்கத்திற்கும் அதன் ஆயுதப் படைகளுக்கும் நற்சாட்சிப் பத்திரம் கொடுத்துள்ளது. அதேவேளை கடத்தப்பட்டும் காணாமற் போயும் உள்ள ஆயிரக்கணக்கானோர் பற்றிய நழுவலான கருத்துக்களையே ஆணைக்குழு கூறியுள்ளது. அத்துடன் கடத்தல்கள், காணாமற் போனமை, கைதுகள் பற்றி இவ் ஆணைக்குழுவின் முன் அளிக்கப்பட்ட சாட்சியங்களை முறையாகப் பரிசீலித்து உரிய சிபாரிசுகளை வழங்க ஆணைக்குழு தவறியுள்ளது.

பொத்தம் பொதுவாக தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறும் அறிக்கையில் அவை எவை என்பன பற்றியன்றி அவற்றின் பாரதூரத் தன்மை பற்றிய ஒன்றே உள்ளதாகும். அதற்கப்பால் இவ் ஆணைக்குழுவின் அறிக்கையானது எவ்வகையிலும் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒன்றல்ல. அத்துடன் காலத்தையும் பொது மக்கள் பெருந் தொகைப் பணத்தையும் விரயமாக்கிக் கொண்டதற்கு அப்பால் இவ் அறிக்கையில் கற்றுக் கொள்வதற்கு எதுவுமே இல்லை.

தமிழ் தேசிய இனத்தினதும் ஏனைய ஒடுக்கப்படும் முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களினதும் உரிமைகளையும்

கோரிக்கைகளையும் மறுத்து இன மத மொழி முரண்பாடுகளை மோதல்களாக கூர்மைப்படுத்தி வந்ததன் விளைவாகவே நாட்டிற்கும் மக்களுக்கும் அழிவுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது உரிய பாடங்களைக் கற்கவோ நல்லிணக்கத்தை ஏற்படுத்தவோ இயலாது. உண்மையான நல்லிணக்கம் நாட்டில் ஏற்பட வேண்டுமாயின் சமத்துவம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்பவற்றின் அடிப்படையில் சகல தேசிய இனங்களினதும் உரிமைகள் உறுதி செய்யப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும்.

இதை விடுத்து, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள மழுப்பல்கள், நியாயப்படுத்தல்கள், கண்துடைப்புகள், திசை திருப்பல்கள் போன்றவற்றை முன்னெடுத்தால் தேசிய இனப் பிரச்சினைத் தளத்தில் மேலும் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் மட்டுமன்றி மக்களின் எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் சந்திக்க வேண்டியே ஏற்படும். அத்தகைய நிலையினை உலக, பிராந்திய மேலாதிக்க வல்லரசு சக்திகள் தமக்கான வாய்ப்புகளாகவும் தலையீடுகளாகவும் மாற்றிக்கொள்ளவே எத்தனிப்பார்கள். இது முழு நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் பெரும் அபாயத்தையே கொண்டுவந்து சேர்க்கும் என்பதை எமது கட்சி முன்னெச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகிறது.

**சி.கா. செந்திவேல்**

**பொதுச் செயலாளர்**

**(புதிய பூமி, 2012 ஜனவரி-பெப்ரவரி)**




## ஆசிரியர் பற்றி

இந்நூலின் ஆசிரியர் சி.கா. செந்திவேல் இலங்கையின் இடதுசாரி இயக்கப் பரப்பின் மாக்சிச லெனினிசப் போராளியாக நன்கு அறியப்பட்டவர். கடந்த 52 வருடங்களாகப் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முழு நேர அரசியல் ஊழியராக பணியாற்றி வருபவர். புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயலாற்றி வருபவர். கட்சிப் பத்திரிகைகளாக வெளிவந்த தொழிலாளி, பாட்டாளி; செம்பதாகை புதிய பூமி ஆகியவற்றின் ஆசிரிய குழுக்களிலும் புதிய பூமியின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர். புதிய நீதி பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வருபவர். இந்நூல் அவரது பத்தாவது வெளியீடாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாகவும், போராகவும் முன்னெடுக்கப்பட்ட 33 வருடகாலப் பகுதியில் அடக்குமுறைகள், நெருக்கடிகள், உயிரெடுப்புக்கள், உயிர் அச்சுறுத்தல்கள் மத்தியில் மாக்சிசம் லெனினிசம் மா ஓ சேதுங் சிந்தனையை இறுக்கப்பற்றி நின்று புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பதாகையை உறுதியாக உயர்த்தி முன் நின்ற தோழர்களில் ஒருவர். தமிழீழக் கோரிக்கையின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் மாக்சிச அனுகுமுறை ஊடாகக் காண்பதே இந் நூலாகும்.